# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

# Manonmaniam Sundaranar University

# Tirunelveli

## தொலைநெறி தொடர்கல்வி இயக்ககம்

## Directorate of Distance and Continuing Education

## முதுகலை வரலாறு

## இரண்டாம் ஆண்டு

# சீன வரலாறு (1839 – 1964 A.D.)

# பாடத்திட்டம்
# சீன வரலாறு (1839 – 1964 AD)

அலகு I சீனாவின் புவியியல் அமைப்பு – பண்டைய சீன வரலாறு – ஆரம்பகால மஞ்சு மன்னர்கள் - மஞ்சுக்களின் ஆட்சியின் கீழ் சீனாவின் நிலை

அலகு II சீன ஐரோப்பியத் தொடர்பு – முதல் அபினிப் போர் - நான்கிங் உடன்படிக்கை - இரண்டாவது அபினிப்போர், தைப்பிங் கிளர்ச்சி, தைப்பிங் சீர்திருத்தங்கள் - முதல் சீன – ஜப்பானியப் போர் - செல்வாக்கு மண்டலங்கள்.

அலகு III திறந்த வெளிக் கொள்கை – நூறுநாள் சீர்திருத்தங்கள் - பாக்சர் கலகம், தோவேஜர் பேரரசி சூசி 1911-ம் வருட சீனப் புரட்சி – டாக்டர் சன்-யாட்சென்

அலகு IV யுவான்-ஷி-கே - இருப்பத்தோரு கோரிக்கைகள் - சீனாவும் முதல் உலகப் போரும்.
மே நான்காம் நாள் இயக்கம் - வாஷிங்டன் மாநாடு – கோமின்டாங் கட்சி

அலகு V சீனப் பொது உடைமைக் கட்சி - இரண்டாம் சீன – ஜப்பானியப் போர், சீனாவும் இரண்டாம் உலகப் போரும் மாசேதுங் - நீண்ட நடைப்பயணம், பண்பாட்டுப் புரட்சி, சீனாவின் வெளிநாட்டுக் கொள்கை

# அலகு I

**சீனாவின் புவியியல் அமைப்பு**

சீனா இந்தியாவைப் போன்று ஏராளமான செல்வச் செழுமையுடனும், பண்பாட்டு வளர்ச்சியினையும், இயற்கை வளங்களையும் பெற்றிருந்தது. சீனாவின் நாகாரிகம் உலகின் மிக பழமையான நாகரிகமாகும். தூரக் கிழக்கு நாடுகளுக்கு பண்பாட்டு வளர்ச்சியினை எடுத்துரைக்கும் உயர்ந்த நாடாகவே இருந்தது. சீனா தனக்கு அருகாமையில் உள்ள நாடுகளிடையே பெரும் மதிப்பினை பெற்றிருந்தது. சீனாவின் சாதனைகளை வரிசைப்படுத்தி விவரித்துக் கொண்டு செல்லும் வண்ணம் மிக அதிகமான செயல்களைக் கொண்டு இருந்தது. கி.மு. பதினாறாம் நூற்றாண்டு முதல் பதினொன்னாவது நூற்றாண்டு வரை சீனாவின் கீழ் உலகம் முழுவதும் கொடிகட்டி பறந்தது என்றே சொல்லலாம். சீனாவின் கல்வி அறிஞர்கள் சீனாவின் பண்பாட்டு மேன்மைகளை உலக நாடுகளுக்கு அறிமுகம் செய்தனர் என்று கூறலாம். மிக அதிகமான மக்கள் தொகையினைக் கொண்டு இருந்தாலும் பலதரப்பட்ட பண்பாடுகளை இம்மக்கள் பின்பற்றி இருந்தாலும் சீனாவின் ஒருமைப்பாடு என்றுமே பாதிக்கப்படவில்லை. சீனா ஒன்றுப்பட்ட உயர் பொன் நாடு என சீனா அறிஞர்கள் அழைப்பர். வெண்கலத்தால் செய்யப்பட்ட பொருள்களையே அதிகம் பயன்படுத்தி இருந்தனர்.

ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவைகள் எல்லாம் மாறிப்போனது என்றே கூறலாம். காணரம் சீனாவின் பண்பாட்டினைக் கட்டிக் காக்க கூடிய வலிமை பெற்ற பேரரசர் இல்லை. ஆட்சியாளர்கள் வலிமையின்றி, பலவீனமாக, மிகவும் பின் தங்கி இருந்தனர். ஆட்சி பீடத்திற்கு பொருத்தமில்லாத ஆட்சியாளர்களே ஒன்றன் பின் ஒன்றாக ஆட்சிக்கு வந்தனர். சமுதாய

அமைப்புகள் பழைமையான முறையில் நன்கு பகுக்கப்பட்டு தலைவர்கள், போர் வீரர்கள், கவிஞர்கள் மற்றும் சிந்தனையாளர்கள் போன்றவர்கள் தங்கள் கடமைகளை செய்த வண்ணம் இருந்தனர். ஆனால் இம்முறையில் இன்று மாறி எல்லா இனத்தவரும் இணைந்து செயல்படக் கூடிய வகையிலும், சமுதாயத்தில் இருந்து யாரையும் பகுக்க முடியாத வகையில் இருந்தது. சீனாவின் மொத்த மக்கள் தொகையில் பெரும்பான்மையானவர்கள் சாதாரண வேலைகளை செய்யக் கூடிய பாமர மக்கள் இடம் பெற்று இருந்தனர். இவர்கள் அரசர் விதிக்கும் வரியினை செலுத்த முடியாமலும், அதிக பசி, பிணியாலும் அவதியுற்றனர். இச்சூழ்நிலையில் சீனாவின் பண்டைய மேன்மைகள் அனைத்தும் நம்ப முடியாத கற்பனை காலமாகவே இம்மக்களுக்கு இருந்தது. பொருளாதாரத்திலும் அரசியலிலும் இச்சாதாரண குடியானவர்கள் ஒரு நிழல்கள் போன்று செயல்பட்டனர். இவர்கள் தங்கள் வளர்ச்சியையும், சக்தியையும் காட்ட முடியாமல் மிகவும் களைப்படைந்தவர்களை போன்ற நிலைகளிலும் செயல்பட்டனர். அவர்களது குறைகளை நிவர்த்தி செய்யும் படியான நல்லாட்சியாளர்கள் சீனாவில் இல்லாமல் போயிற்று.

இந்த இக்கட்டான சீனாவின் சமுதாயச் சூழ்நிலையில் சீனாவின் தனிமைப்படுத்தப்பட்ட மனப்பான்மை பலவீன முறை செயல்பாடுகள் அனைத்தும் மேலை நாட்டவர்களோடு தொடர்பு கொள்ளும் காலம் ஏற்பட்டது. முதன்முதலாக சீனாவுக்கு மேலை நாட்டவருக்கும் இடையே தொடர்பு ஏற்பட்டது. கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் கால் நூற்றாண்டு காலத்தில்தான். இதன் விளைவாக மேலை நாட்டின் சமுதாய சூழ்நிலைகளின் தாக்கம் வியக்கத்தகு வளர்ச்சியினைப் பெற்றிருந்தனர். மேலும் மேலை நாட்டவர்களில் அரசியல் எண்ணங்கள், மக்களாட்சி முறைகளின் தாக்கமும்

சீனாவில் ஏற்பட ஆரம்பித்தது. சீனாவை மேலை நாட்டவர்களின் ‘‘வியாபாரம் முதலில் ஆட்சி இரண்டாவது’’ என்ற திறந்த கொள்கையினை சீனாவிலும் செயல்படுத்தி முழு சீனாவிலும் தங்களின் ஆதிக்கத்தை செயல்படுத்தினர். இவர்களின் இச்செயலை தட்டிக் கேட்க இயலாத வலிமை இல்லாத மன்னர் ஆட்சியினை செயல்படுத்தினர். இவர்களின் இச்செயலை தட்டிக் கேட்க இயலாத வலிமை இல்லாத மன்னர் ஆட்சியினை சீனா கொண்டிருக்கின்றது என்ற உறுதியான நம்பிக்கையில் சீனாவின் அண்டை நாடான ஜப்பானும் கூட சீனாவில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற எண்ணம் கொண்டு இருந்தது.

பண்டைய காலத்தில் உலக வரலாற்றில் மிகச் சிறந்த இடம் பெற்றிருந்த சீனா வெளிநாட்டவர்களின் வருகையினாலும் ஆதிக்கத்தினாலும் பின்தங்கிய நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டது. இதற்கான காரணம் வலிமையற்ற மஞ்சு அரசர்களே என உறுதி கொண்ட சீனர்கள் அவர்களுக்கு எதிராக கலகம் செய்து ஆட்சியில் இருந்து விரட்ட சித்தம் கொண்டனர். இதன் விளைவாகவே 1911-ஆம் ஆண்டு சீனப்புரட்சி ஏற்பட்டது எனலாம். அடிக்கடி சீனாவில் கலகங்களும், புரட்சிகளும் ஏற்பட்டபடியால் சீனாவை கலக நாடு அல்லது புரட்சி நாடு என்று அழைத்தார்கள். மஞ்சு அரசாங்கம் ஆட்சியில் இருந்து நீக்கப்பட்டது. குடியாட்சி முறையானது அறிமுகப்படுத்தப்பட்டது. இக்குடியாட்சி அமைக்கப்படாதபடி பல்வேறு எதிர்ப்புள் அரச குடும்பத்தில் இருந்தும், வெளிநாட்டில் இருந்தும் வந்த போதிலும் மனிதன் நினைத்தால் மலையையும் மண்ணாக்குவான் என்பது போல சீனர்கள் குடியாட்சி அமைப்பதில் வெற்றி கண்டனர். அதே வேளையில் பொதுவுடைமை கருத்துக்கள் சோவியத் யூனியன் மூலமாக சீனாவில் பரவியது. இதனை தடுக்கும் முயற்சியில் பல

அரசியல் தலைவர்கள் சீனாவிலும் மேலை நாட்டிலும் இருந்து செயல்பட்டாலும் எந்த நோக்கத்திற்காக மஞ்சு அரசு ஆட்சியை ஆட்சி பீடத்தில் இருந்து நீக்கினார்களோ அதனை பொதுவுடைமை கருத்தின் மூலமாக செயல்படுத்த முடியும் என்று உறுதி கொண்டு சோவியத் யூனியனின் பொதுவுடைமையில் சில மாறுதல்களை செய்து சீனர்கள் பின்பற்றி வெற்றி கண்டு, இன்றைய உலகில் ஐந்து வல்லரசுகளின் ஒன்றாக வளர்ந்துள்ளது.

**சீனாவின் பூகோள அமைப்பு**

எந்த ஒரு நாட்டின் வளர்ச்சியும் அந்நாட்டின் பூகோள அமைப்பை பொருத்தே அமைந்துள்ளது. சீனாவில் நாகரீகம் உலகில் சிறப்பான இடத்தைப் பெறக் காரணம் சீனப் பூகோள அமைப்புதான் மூலக் காரணமாகும். சீனாவில் நிலபிரிவு, ஆறுகள், தீவுகள், மலைகள் போன்றவைகள் சீனாவின் அரசியலில் ஆதிக்கம் பெற்று இருந்தன. சீனாவின் தன்னம்பிக்கையான பண்பாட்டு வளர்ச்சியடையக் காரணம் சீன நில அமைப்பேயாகும். சீனா உலகில் மிகப் பெரிய நாடு என்ற அளவில் பரந்து விரிந்துள்ளது. சீனாவில் அரசியல் மாநில எல்லைகள் நூற்றாண்டு காலமாகவே தொடர்ந்து விரிவடைந்து வந்தது. சீனா அதன் இடப்பரப்பினை போன்று மக்கள் தொகையிலும் உலகில் முதல் இடத்தினை பெற்றுள்ளது. இவர்களின் கலாச்சார பண்பாட்டு நிகழ்ச்சிகள் அனைத்தும் அருகாமை நாடுகளிடமும் செல்வாக்கு பெற்றிருந்தது.

பூகோள முறையில் பசிபிக் பெருங்கடலின கிழக்கு பகுதியில் சீனா அமைந்துள்ளது. சீனாவிற்கு மேற்கு பகுதியில் சோவியத் யூனியனும், வட பகுதியில் கோடி பாலைவனமும், தெற்குப் பகுதியில் இந்தியாவும் இந்தோசீனாவும் இடம் பெற்றுள்ளது. சீனா மூன்று முக்கிய பிரிவுகளைக் கொண்டுள்ளது. சீனப் பெருஞ்சுவருக்கு வட பகுதியில் மஞ்சூரியாவும், புதிய

காலணி நாடுகளும் இடம் பெற்றுள்ளன. சீனாவின் பதினெட்டு மாநிலங்களும் சீனப்பெருஞ்சுவருக்கும் தென் பகுதியில் உள்ளது. மேலும் இப்பெருஞ்சுவரின் மாநிலங்களை ஆறுகள் பலபகுதிகளாகப் பிரிக்கின்றன. சீனாவின் மஞ்சள் நதி வட மாநிலங்களை வளம் கொழிக்கச் செய்கின்றது. மத்திய பகுதியில் யாங்ஷி நதி பாய்ந்து வளம் பெறச் செய்கிறது. சீனாவின் தென் பகுதியில் இடம் பெற்றுள்ள ஆறு மாநிலங்களின் நான்கு மாநிலத்தை மேற்கு நதியும் அதன் கிளை நதியும் பாய்ந்து வளம் பெறச் செய்கிறது.

மேலும் மஞ்சுக்களின் காலம் பேரரசை விரிவாக்குவதில் பேரார்வம் காட்டிய காலமாகும். அது புகழின் உச்சியில் இருந்த போதும், மேலை நாட்டவர்கள் அதன் கதவுகளை தட்டிய போதிலும் அதில் கீழ்க்கண்ட பகுதிகள் அடங்கியிருந்தன என்பதைக் காணலாம்.

1. 18 மாநிலங்களைக் கொண்ட சீனா
2. மூன்று மாநிலங்களைக் கொண்ட மஞ்சூரியா
3. திபெத், மங்கோலியா
4. பெயரளவுக்கு அடிமை நாடுகளான கொரியா அன்னம்

அடிமை நாடுகளை தவிர்த்து சீனாவின் மொத்த பரப்பளவு ,277,170 சதுர மைல்களாகும். காணிக்கை செலுத்தும் நாடுகளுக்கு நடுவாக சீனா அமைந்திருந்ததால் அதற்கு “நடுவண் பேரரசு” என்று அழைத்தனர்.

சீனாவின் மூன்று வளமிக்க நதிகளான மஞ்சள் நதி, யாங்சிக், சிக்சியாங் மற்றும் மேற்கு நதி போன்றவைகள் மாறுபட்ட தட்பவெட்பநிலைகளைக் கொண்டுள்ளது. மஞ்சள் நதி சமவெளியும் மலைப்பபாங்கான சீனப்பகுதிகளும் போதுமான அளவு மழையைப் பெறவில்லை கோடைக்காலத்திலும், கடும் குளிர் மிகுந்த காலத்திலும் வறட்சியினை பெற்றிருக்கும். யாங்சியாங் நதி சமவெளி

பகுதியில் மிதமான காலநிலை உள்ளது. கோடைக்காலத்தில் வெப்பமும், குளிர்காலத்தில் குளிர்ந்த காலநிலையையும் பெற்றுள்ளது. மேற்கு நதிச் சமவெளியில் கோடைக் காலத்தில் கடுமையான வெப்ப காலநிலையும் பெற்றுள்ளது.

மேற்கு சீனப் பகுதியானது சீனாவின் பிற பகுதிகளைக் காட்டிலும் தனித்து இருக்கின்ற நிலை உள்ளது. திபெத் மற்றும் கோக்கனூர் பகுதிகள் கிழக்கு சீனப் பகுதியில் இருந்து பிரிந்து காணப்படுகின்றது. மலை தடுப்பானது வடசீனா, தென் சீனா எனப் பிரிக்கின்றது. அது போல் மேற்கு சீனா, கிழக்கு சீனா எனவும் பகுக்கின்றது. மொத்தத்தில் முழு சீனா திசைகளின் அடிப்படையில் இயற்கையினால் நான்கு பங்குகளாகப் பிரிக்கப்பட்டு அதனை மேலும் அழகுப்படுத்தி செல்கிறது என்றால் மிகையாகாது. பலவகைப்பட்ட முறைகளின் சீன மொழி பேசும் மக்கள் தனித்து வாழுகின்ற சூழ்நிலை இருந்தாலும் அவரவர் சீனாவின் முன்னேற்றத்திற்காக உழைக்கின்ற செயல் பாராட்டத்தக்கதாய் அமைகிறது. பூகோள ரீதியில் சீனா இணைவுபட்டு இருக்கவில்லை. மேலும் பிரதேச நிலப்பகுதிகளும் நெருங்கி இருக்கவில்லை. இதனால் ஒரே சீனாவில் பல சிறிய நாடுகளை இடம் பெற்றிருப்பது போன்று தோற்றம் கொடுக்கின்றது. பலதரப்பட்ட குணாதிசியங்களைக் கொண்டு சீனர்கள் இருந்தாலும் பண்பாட்டின் அடிப்படையில் ஒன்றுபட்ட சீனாவாகக் உலகிற்கு நாகரீகத்தினை வெளிப்படுத்தும் மாதிரிகளாக இருக்கின்றார்கள் என்றால் இச்சீனர்களை பாராட்ட வேண்டியது அவசியம்.

சீனாவின் விவசாய குடிமக்கள் பல்வேறு காலநிலைகளினால் முற்றிலும் பாதிக்கப்படுகின்றனர். வட சீனாவில் கோடைகாலத்தில் தரக்கூடிய தரக்கூடிய மழையினை நம்பி இருக்க வேண்டும். குளிர்காலத்தில் கடுமையான

குளிரினாலும் மாறுபட்ட காலநிலைகளினாலும் விவசாய நிலங்களை விவசாயிகள் முற்றிலுமாக பயன்படுத்த முடியாத நிலை இருந்தது. வடபகுதியில் வளம்பெற துணை புரியும் மஞ்சள் நதியினை, சீன விவசாயிகள் சீனாவின் துயரம் என்று அழைப்பார்கள். காரணம் இந்நதிக்கு நிலையான வழியில்லை. இது அடிக்கடி தனது பாதையினை மாற்றிக் கொள்ளும் இதனால் இந்நதிக்கரையில் வேளாண்மை செய்யும் விவசாயிகள், குடியிருக்கும் குடியானவர்கள் போன்றவர்கள் ஆற்றின் வெள்ளப் பெருக்கு வேளையில் தங்கள் உடைமைகளை இழந்து தவிக்கின்றனர். இதனால் சீனர்கள் தங்கள் சீன நாட்டின் துயரம் என்று கருதுகின்றனர்.

சீனாவின் காலநிலை மாற்றங்கள், இயற்கைச் சீற்றங்கள் போன்றவைகள் சமயத்தில் உள்ள கருத்துக்களின் பெயரில் இடம் பெறுகின்றன. மனிதனின் பாவச் செயல்கள் பெருகும் போது இவ்விதம் நடக்கின்றது என உறுதியாக நம்புகின்றனர். இயற்கையினால் கொடுக்கப்படும் நன்மைகளும், தீமைகளும் எல்லா இடத்திலும் எல்லோருக்கும் சமமாக கொடுக்கப்படுகிறது. பாகுபாடு இல்லை. உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஏழை, செல்வந்தர், படித்தவன், பாமரன் என்ற வித்தியாசம் இன்றி செயல்படுவது மனிதன் தன்னலமின்றி வாழ வேண்டும் என்பதற்காக சான்றாக இருக்கின்றது என்று சீன மதநூல் தெரிவிக்கின்றன.

சீன இயற்கையினால் அமைக்கப்பெற்ற பெரிய வீட்டில் அழகிய இணைந்த பண்பாடு முறைகளும் ஒன்றுபட்ட பழக்க வழக்கங்களை பின்பற்றும் விதத்தில் அமைந்துள்ளது. சீனா செழிப்பான சமவெளிகளையும் பள்ளத்தாக்குகளையும் கொண்டுள்ளது. சீனாவில் பல்வேறு வேற்றுமைகள் இடம் பெற்றிருந்தாலும் அதனில் செழுமையான தாவரங்களின் கொடுப்பிளையும் சீனாவிற்கு மேலும் சிறந்த முத்திரையாக அமைந்துள்ளது. சீனர்களுக்கு தேவையான உணவு,

உடை, இருப்பிடம் முதலிய அடிப்படை தேவைகளை தாங்களே நிறைவேற்றும் வண்ணம் போதுமான இயற்கை செல்வங்களை தன்னகத்தே பெற்றுள்ளது. சீனாவில் பலதரப்பட்ட விலங்குகளும் பறவைகளும் இடம் பெற்று இருக்கின்றது. சீனாவின் கனிம வளங்கள் சீன கனிமங்களின் மூலமாக மேலும் தன்னம்பிக்கையுடன் செயல்படுகின்றது. சீனாவில் உள்நாட்டில் இயற்கை அமைப்புகளான மலைகள், ஆறுகள், பாலைவனம் போன்றவைகள் பகுத்து பிரிந்து இருப்பது போன்ற வெளித்தோற்றம் இருந்தாலும் சீனாவின் அறிவியல், விஞ்ஞான வளர்ச்சி, உயர்வடைந்ததினால் சீன மக்களிடையே செய்தி தொடர்பு மற்றும் தபால், தந்தி தொடர்புகள் பரந்த சீனாவை மேலும் நெருக்கி ஒன்றுப்படுத்துகின்றன. சீனாவில் பல்வேறு பிராந்தியங்களில் பல்வேறு மொழிகளைப் பேசும் மக்கள் இருந்தாலும் அரசியல், கலாச்சார பண்பாடு ஒற்றுமை சீனாவை பலப்படுத்துகின்றன. சீனாவில் வாழ்ந்த ஆதி மக்கள் பழங் கற்கால இனத்தினை சேர்ந்தவர்களாக இருக்கலாம் என சீனாவின் பூகோள ஆய்வு தெரிவிக்கின்றது. சீனாவில் மூன்று முக்கிய பெரிய ஆறுகளும், இதன் கிளை ஆறுகளும் ஜீவநதியாக ஓடிக் கொண்டு இருப்பதால் இவ்வாறுகளில் போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மீன் பிடித்தல், மின்சாரம் தயாரித்தல், பாசன வேலைகள் இவற்றிற்கு மிகவும் உதவியாக உள்ளது. மேலும் உள்நாட்டு வாணிகம் இவ்வாறு போக்குவரத்தினை நம்பியே உள்ளது. இதனை “யாங்சி முறை” என்று வாணிக அதிகாரிகள் அழைக்கின்றனர். இதனால் சீனாவின் பூகோளம் சீனர்களுக்கு மிகச் சாதகமாகவே உள்ளது என்றும் பாதகமான இயற்கை அமைப்பினை சீனர்கள் மாற்றி வெற்றிக் கண்டுள்ளார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகிறது.

சீனா சிறந்த வளங்களையும், கனிமங்களையும் பெற்றதினால் இதன் பொருளாதார நிலை தன்னிறைவினை பெற்றிருக்கின்றது. சீனர்கள் தங்கள் நாட்டின் வளங்களை கொண்டு சீனாவினை மேலும் உயர்ந்த நாடாக மாற்றுவதில் வெற்றிக் கண்டுள்ளனர். சீனாவின் பாதுகாப்பிற்கு தேவையான எல்லா ஆயுதங்களையும், கருவிகளையும் தானே தயாரிக்கும் மனோ பலனினைக் கொண்டு செயல்படுகின்றது. சீனாவில் ஒன்று பட்ட கலாச்சார முறைகள் பின்பற்றபப்பட்டு வந்தாலும் பூகோள அடிப்படையில் ஏராளமான வேற்றுமைகள் கொண்டுள்ளது. அடிக்கடி மாறுபட்ட சீனா என அறியும் வகையில் பிரித்து செயல்படும் குறைபாடுகளையும் பெற்று இருக்கின்றது. மிகப்பெரிய பரந்த சீனாவில் ஒற்றுமை கருத்தானது நிலை பெற வாய்ப்பு இன்றி போவதற்கு காரணமும் இப்பூகோள முறைகளே, இதனால் மாநிலங்களின் எண்ணமே சீனா என்ற எண்ணத்தைக் காட்டிலும் மேலோங்கி இருக்கின்றது. சீனாவின் நிலங்கள் பலதரப்பட்ட கலைநிலைகளைக் கொண்டு வாழும் மக்கள் இணைந்து ஒன்றுபட்ட சீனர்களாக மாற்றியது. சீனர்களின் நாகரீகமே. மேலும் பல்வேறு புவியியல் அமைப்புகளை சீனா பெற்றுள்ளதால் சீனாவில் பல விசித்திரமான குணாதிசயங்களைக் கொண்ட சீனர்களை இங்கு காணப்படவும் சிறப்பு பெற்றுள்ள ஒன்றாகும்.

**பண்டைய சீனா வரலாறு**

சீனாவில் பாரம்பரிய ஏடுகள் சீனாவில் பண்டைய வரலாற்றினை நமக்கு தெரிவிப்பதில் மிக முக்கிய இடம் பெறுகின்றது. இவ்வரலாற்று பாரம்பரிய இலக்கியங்கள் வானத்திலிருந்து பூமி பிரிக்கப்பட்டு உலகம் தோன்றியது. இவ்வுலகம் முழுவதும் முதன்முதலாக ஆட்சி செய்தது. வானத்திலிருந்து வந்த பன்னிரண்டு பேரரசர்கள்தான் 18,000 ஆண்டு காலம் ஆட்சி செய்தனர்.

இவர்களை தொடர்ந்து இவ்வுலக அரசர்கள் பதினோரு பேர் ஆட்சி செய்தனர். இவர்களும் தலா 18,000 ஆண்டு காலம் ஆண்டு வந்தனர். இவர்கள் மொத்தமாக 45,000 ஆண்டுகாலம் ஆட்சி செய்தனர். இவர்களை தொடர்ந்து பதினாறு பேரரசர்கள் ஆண்டனர். இவர்களின் எல்லாப் பெயர்களும் தெரியவில்லை என்றாலும் மூன்று முக்கியமானவர்களின் நாமங்கள் பியுஷி ஷன்னங் மற்றும் சூயாங் வழி ஆவன. இவர்களே இவ்வுலகின் நிலங்களை பண்படுத்தி பயிர் செய்தனர். டுயாங்ஷி பேரரசர் மஞ்சள் பேரரசர் இவரிடம் இருந்து சீனாவின் எல்லா மன்னர்களும் வாரிசுகளாக தோன்றிக் கொண்டு இருந்தனர். இப்பேரரசர்கள் ஆட்சியாளர்களுக்கு பல்வேறு தொழில் மற்றும் கலைகளுக்கான பயிற்சியினை கற்றுக் கொடுத்தனர். இவர்கள் அரசாங்கத்தின் பல துறைகளை நிறுவினர். தங்கள் கடவுள்களுக்கு பலியிடுவதையும் வழக்கமாகக் கொண்டு இருந்தனர். கடவுள் இருப்பிடம் மலைகள், நதிகள் என கருதி இங்கு பலிகளை செலுத்தி வழிபட்டனர்.

பண்டைய சீனாவில் கிறிஸ்து தோன்றுவதற்கு முன் மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக சிறந்த பேரரசு நிறுவப்பட்டது. இதனை பொற்கால ஆட்சி என்கின்றனர். ஆரம்பத்தில் சில நகரங்களைக் கொண்டு ஆண்டும் அந்நகரங்களை காலம் செல்லச் செல்ல இணைத்து சிறந்த சீனப் பேரரசானதாக தெரிவிக்கின்றன. இப்பண்டைய சீனப் பேரரசு மூன்று முக்கிய வம்சமாக ஆளப்பட்டு வந்தது. அவர்களுள் முதன்மையான வம்சம் ஷியா வம்சமாகும். இவ்வம்சத்தினை யு என்ற அரசன் தோற்றுவித்தார். இவ்வம்சம் கி. மு. 2205 முதல் 1557 வரை பதினெழு மன்னர்களை கொண்டு ஆளப்பட்டு வந்தது. ஷியா மன்னர்களின் தலைநகரமாக சீனாவின் தென்மேற்கு பகுதியில் இடம் பெற்றுள்ள ஷான்சி மாநிலமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. ஷியா

வம்சத்தின் கடைசி மன்னர் கொடுங்கோலாட்சி மன்னரை பதவி நீக்கம் செய்தனர். இதனைத் தொடர்ந்து ஷனங் வம்சம் சீனாவில் ஆட்சி செய்தது. இவ்வம்சத்தின் கடைசி மன்னர் சூயு சின் என்பவர் இவருடைய ஆட்சியில் நீதி நியாயங்கள் இல்லாத கடுமையான ஆட்சி நிலவியது. இதனால் பிரபுக்கள் பலர் இணைந்து இக்கொடுங்கோலாட்சியினை நீக்க கோர் தொடுத்து வெற்றிக் கண்டனர். இதனால் 'ஊயு' என்பவரது 'சூயு' வம்சம் தோற்றுவிக்கப்பட்டது என்று பண்டைய சீன இலக்கியங்கள் விளக்குகின்றது என்றாலும் பிற வரலாற்று ஆதாரங்கள் குறைந்து காணப்படுவதால் இதனை உண்மை என உறுதி செய்ய இயலாத நிலை உள்ளது.

**சிந்தனைவாதிகள் - தத்துவ ஞானிகள்**

கி.மு. 5ஆம் நூற்றாண்டில் பல்வேறு சிந்தனைகள், தத்துவங்கள் சீனாவில் இடம் பெற்றது. இந்தியாவில் கி. மு. ஆறாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சிந்தனை வளர்ச்சியின் விளையாக புத்த மதம் சமணமதம் தோன்றியது போல் சீனாவிலும் தோன்ற ஆரம்பமானது காரணம் சீனாவின் அதிக சமுதாயச் சிக்கல்களும், காரணமில்லாத வெறுப்புணர்ச்சியும் இடம் பெற்றிருந்தது. மக்களிடையே வாழ்க்கை மீது பற்றற்ற நிலை அடிக்கடி கோபப்படும் நிலை அதிகமானது. ஆகவே சீன குடும்பங்களில் அமைதியற்ற போராட்டமான சூழ்நிலை நிலவியதால் இந்நிலைக்கு காரணம் என்ன என்பதை சிந்திக்கும் சிந்தனைவாதிகள் விளக்கமாக தத்துருவமாக எடுத்துரைக்கும் தத்துவ ஞானிகளும் தோன்ற ஆரம்பித்தனர். இவர்களின் நோக்கம் சமுதாயத்தில் உள்ள இக்கசப்பான எண்ணங்களை நீக்க வேண்டும் என்பது ஆகும். இதற்கான தீர்வுகள் மதத்தின் மூலமாக அமைய விரும்பினர். சீன நாகரிக முறை பிற நாகரிகத்தில் இருந்து மாறுபட்டமையால் சீனர்களே தங்களது

பிரச்சனைகளை தீர்வு காண விரும்பினர். இதன் விளைவாக மூன்று விதமான சிந்தனைகள் தோன்றின. அவைகள் தான் கன்பூசியனிசம், தாவோயிசம் மற்றும் லிகலிசம் என்பனவாகும். இந்த எல்லா சிந்தனைகளும் மனித சமுதாயத்தில் உள்ள பிரச்சனைக்களுக்கு தெளிவான தீர்வு கொடுத்தன.

மனிதனுக்கும், மனிதனுக்கும் இடையே உள்ள பிரச்சனைகள், மனிதனுக்கும் அரசுக்கும் இடையே செய்ய வேண்டிய கடமைகள் போன்றவற்றை இவைகள் தெளிவுப்படுத்தின. கன்பூசியனிசம் சீன குடும்பங்களில் காணப்படும் சமுதாய தொடர்புகளைப் பற்றி தெளிவான ஒற்றுமைகளையும் சமுதாயத்திற்கும் அரசுக்குமிடையே உள்ள தொடர்பினையும் தெளிவுப்படுத்தியது. தாவோயிசம் தனிப்பட்ட மனிதன் இயற்கையோடு ஒன்றுபட்டு வாழவும் சமுதாயத்தில் அமைதியை நிலைநாட்டவும் வேண்டியவற்றை தெளிவாக்கியது. லிகலிசம், அரசு மனிதனை ஒழுங்குபடுத்த வேண்டும். தேவைப்பட்டால் தண்டனைகளையும், வெகுமதிகளையும் வழங்கலாம் என தெளிவுப்படுத்துகின்றது. இம்மூன்று கருத்துகளையும் தனித்தனியே பகுத்துப் பார்ப்பது அவசியம்.

**கன்பூசியஸ் 551 – 479**

கன்பூசியஸ் என்ற சீன மதத்தினை தோற்றுவித்த தத்துவ ஞான கன்பூசியஸ் ஆவார். சீனாவின் முதன்முதலாக சிறப்பு பெற்ற தத்துவ ஞானியாவார். இவருடைய சிந்தனையின் விளைவாக உருவாக்கப்பட்ட எழுத்தோவியங்கள் சமுதாய சமய எண்ணங்களில் சிறப்பினைக் கொடுத்தது. இவர் தனது வாழ்க்கை நடைமுறைகளை மிகவும் கவனமாக கொண்டு வாழும்படியாக எல்லா சொல்களையும், செயல் வடிவமாக்கி மற்றவர்களுக்கு ஒரு மாதிரியாக வாழ்ந்தார். இவருடைய போதனைகள் மக்கள் கற்றுக்

கொள்ளும் விதத்தில் மிகவும் திறமையாக எளிய நடையில் அச்சிட்டு பிரசுரமாக செய்து பரவச் செய்தார். இவரது சிந்தனை சீன மக்களுக்கு மலைப்பாக தோன்றினாலும் மக்கள் மனநிறைவை பெற முடிந்தது. கன்பூசியஸ் சீனாவில் உள்ள லூ என்ற மாநிலத்தில் பிறந்தார். இவர் நான்கு வயதினை அடையும் போது இவரின் தந்தை மரித்துப் போனார். அதன் பிறகு இவருடைய குடும்பம் பசியாலும், பட்டினியாலும் மிகவும் பரிதாபப்பட்டு இருந்தது என்ற போதிலும் கன்பூசியத்தின் ஏழைத்தாய் மிகவும் கவனமாக படிக்க வைக்க ஏற்பாடுகளைச் செய்தார். எத்தனை வறுமைகளிலும்கோர பயங்கர பசியலும் கன்பூசியஸ் கல்வியை விட்டுவிடவில்லை. இவரது படிப்பு சிறப்பாக தொடர்ந்தது. இதனால் இவருடைய சமகாலத்து சீன மாணவர்களில் மிகச் சிறப்பான மாணவராக கன்பூசியஸ் திகழ்ந்தார். இவருக்கு கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கும் இவர் மீது மிகுந்த நல்லெண்ணம் கிடைத்தது. இதன் விளைவாக கன்பூசியஸ் அறிவு, இவரது ஞானம் மாணவனைக் கடந்து ஆசிரியரை அடைவதாய் உள்ளது என வர்ணிக்கின்றார். அவரது தனிப்பட்ட மற்றும் பொது வாழ்க்கை மற்றவர்களை கவரும் விதத்தில் மிகவும் தெளிவுள்ளதாய் இருந்தது. இவர் சிறந்த அரசு சீனாவில் நிலை பெற வேண்டும் என விரும்பினார். இவருடைய காலத்தில் இருந்த அரசியல், பொருளாதார, சமுதாய பாகுபாடான தன்மைகளை முற்றிலும் மாறிடவும் பண்டைய காலத்தில் சீனா பெற்றிருந்த மேன்மையினையும் மக்களுக்கு எடுத்துரைத்தார். அரசு பணிகள் திறம்பட நிகழ வேண்டுமானால் சிறந்த கல்விமான்களை அரசு பதவியில் நியமனம் செய்ய வேண்டும் இல்லை என்றால் இருக்கின்ற அரசு அதிகாரிகளுக்கு பல உயர் பயிற்சியினை கொடுக்க வேண்டும் என வலியுறுத்தினார். சீன மக்கள் அனைவரும் ஏற்கும் வகையில் நல்ல தாராளமான கல்வியினை செயல்படுத்தவும் அவா தெளிவுபடுத்தினார்.

கல்வி மனித மனதில் உள்ள அறியாமை இருளைப் போக்கும் சிறந்த ஒளி விளக்கு என்பார்.

கன்பூசியஸ் கருத்துப்படி ஐந்து விதமான மனித தொடர்புகள் இவ்வுலகில் உண்டு எல்லா தொடர்புகளும் சமத்துவம் உடையதாக இல்லை. சமத்துவ உறவு நண்பனுக்கு நண்பன் மாத்திரம் உண்டு மற்ற நான்கு உறவுகளும் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்பதில் உள்ளது. கணவனும், மனைவியும், தந்தையும், மகனும், மூத்த சகோதரன், இளைய சகோதரன், அரசனும், மக்களும் என்பனவாகும். இதில் உயர்ந்தோர் தாழ்ந்தவர்களை அரவணைத்துக் காக்க வேண்டியது கடமையாகும். இதில் அரசன் மட்டும் முன்மாதிரி அல்லது பிற குடியானவர்களும் தங்களது உறவுகளை நியாயப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வுறவினை அனைவரும் சிறப்பாக செயல்படுத்தினால் பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு இல்லை என்கிறார். ஆட்சியாளர்களுக்கு மிகப் பெரிய பொறுப்பு உள்ளதால் அவர்களது செயல்முறைகள் மக்களின் நலனுக்காகவே அமைய வேண்டுமே தவிர தன்னலத்திலற்காக அமையக் கூடாது. கன்பூசியஸ் கருத்தின்படி சீன நாகரிகத்தின் நிலைத்துவமும், தொடர் இணைப்பும் இருக்க வேண்டும் என்பார்.

**தாவோயிசம்**

தாவோயிசம் பண்டைய சீனக் கலாச்சாரத்தின் முடிவு பெறாத எளிதான கோட்பாடு ஆகும். இதில் மனிதன் இயற்கையோடு ஒன்றி வாழ வேண்டிய கருத்துக்கள் பலவற்றை நமக்கு தெளிவுப்படுத்துகின்றது. இயற்கை மனிதனுக்கு நலனையே கொடுக்கின்றது என்றாலும் மனிதனின் செயல்பாடுகள் மாறி சென்று தீமையையே நடப்பிக்க முற்பட்டால் இயற்கை தனது சீற்றத்தினால் மனிதனுக்கு கேடு உண்டாக்கின்றது. மனித சமுதாயம் நலமுடன்

வாழ்வது மனிதனிடம் தான் உண்டு என்ற உயர்வான நோக்கினை இச்சமுதாயத்திற்கு எடுத்துரைக்கின்றது. தாவோ என்பது வழி என்பதனைக் குறிக்கும். தாவோயிசம் இந்திய சமுதாயத்தின் பாரம்பரிய எண்ணத்தினை போன்று உள்ளது இது இயற்கைக்கு மாறுபட்ட செயல்களை செய்யக் கூடாது என்கிறது.

**லிகலிசம்**

லிகலிசம் மாறுபட்ட கொள்கையினை கொண்டு சமுதாயத்தையும், அரசியலையும் சீர்படுத்தும் முயற்சியில் ஓரளவுக்கு வெற்றி கண்டது. இது கல்வி அறிவு பெற்ற மனிதனும், ஆறறிவினை உடைய எல்லா மனிதர்களும் தங்களது பிரச்சனைகளை சமாளித்து வெற்றி கொள்ளாதிருப்பதை குறை கூறுகின்றது. ஆட்சியாளன் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப வேளாண்மை நிலங்களை விரிவுப்படுத்த வேண்டும் இல்லை என்றால் பிரச்சனைகள் தானாகவே உதயமாகும் என்கிறது. இத்தலையான கடமையில் இருந்து அரசன் தவறினால் பஞ்சம், வறட்சி, போர் இயற்கை சாபங்கள் தோன்றும். இதனால் அரசு நாட்டு பொருளாதார முறைகளை கட்டுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம். தனிப்பட்ட மனித தேவையினை விட நாட்டின் மிக முக்கியம் என பொதுநலன் பெற வேண்டுமென்கிறது.

**சின் பேரரசு 221 – 207 கி.மு.**

சின் பேரரசின் ஹி வான் ங்ஷி என்ற பிரிவினால் ஆரம்பிக்கப்பட்டது. இவரது பேரரசின் மிக முக்கியமான ஆட்சி பொறுப்பில் அங்கம் வகித்தவர் முதன்மை அமைச்சர் லீ சான் என்பவராவார். அவர் இப்புதிய பேரரசினை உருவாக்க அரும்பாடுபட்ட மிக உயர்ந்த இராஜதந்திரியாவார். இவர் அரசாங்கத்தின் எல்லா அவைகளையும் பண்பாட்டு சின்னங்களையும்

ஒன்றிணைத்து சீனப் பாரம்பரிய வளர்ச்சிக்கு உதவிய முக்கிய பிரமுகர்களில் இவரும் ஒருவர். இவருடைய செயலாற்றல் பிற எல்லா பிரபுக்களை காட்டிலும் பாராட்டும் வகையில் இருந்தது. அரசியல் சிக்கல்களை சந்திக்க வேண்டிய நிலையிலும் அவற்றினால் மனம் தளராது நன்கு செயலாற்ற முழு முயற்சி எடுத்தவர் இவர். சின் பேரரசு உருவாக்கப்பட்ட காலக் கட்டத்தில் உருவாக்கப்பட்ட செயல்பாடுகளால் சின்னாபின்னமாக இருந்த சீனப்பேரரசினை கட்டிக் காக்க முடிந்தது. சீனப் பேரரசினை விரிவுப்படுத்துவதில் இப்பேரரசு சிறந்த பணியாற்றியது எல்லைப் பகுதியில் இருந்த சிறிய ஆட்சியாளர்களை ஒடுக்கி சீனப் பேரரசின் அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளச் செய்தனர். சீனர்கள் அல்லாத பிற பண்பாட்டு மக்கள் சீனர்கள் மதிக்கும் வகையில் வகையில் இவர்களது செயலாற்றல் ஒற்றுமையான ஒன்றுபட்ட அளவு முறையும், எடைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. சீனாவில் தனியாள் வியாபாரத்திற்கு முதன்முதலில் அரசு அனுமதி கொடுக்கப்பட்டது. வேளாண்மை வசதி பொருட்டு ஏராளமான கால்வாய்களை இப்பேரரசர்கள் வெட்டினார்கள். இதுவரை பராமரிக்கப்படாதிருந்த போக்குவரத்து சாலைகள் சீர் அமைக்கப்பட்டு முக்கிய இடங்களில் மேலும் பல புதிய சாலைகள் போடப்பட்டன. சீனாவின் முழு தேசத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்பினை இவர்கள் காலத்தில் செய்து கொடுத்தது பாராட்டப்பட வேண்டியதாகும்.

பேரரசர் சின் ஹி வான்ங்-ஷி தனது அரசு ஆணை ஒன்றினை வெளியிட்டார். அதன்படி சீன அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்படாத கருத்துக்களை உடைய எல்லா கட்டுரைகளும் எழுத்தோவியங்களையும் தீயிலிட்டு அழிக்க வேண்டும் என்றும், எல்லாப் பாரம்பரிய கவிதைகளும் வரலாற்று குறிப்புகளும் விவாதிக்கப்படக் கூடாது. அவ்வாறு விவாதிக்கும்

ஆசிரியர்களையும் தீயில் இட வேண்டும் என்றும் இதனை ஏற்றுக் கொள்ளாது வளர்க்க விரும்புகின்ற எந்த சீனரும் மரண தண்டனைக்கு இலாக்காவார்கள் என்பதுமாகும். இதனால் இதுவரை பராமரிக்கப்பட்ட பண்டைய சீன இலக்கியங்களை முற்றிலும் அழிக்கப்பட்டுவிட்டன. இப்பேரரசர் இறந்தவுடன் இப்பேரரசு தனது பெருமையை இழந்தது. அண்டை நாடுகளில் இருந்து தாக்குதல் வந்தது. இதனால் இவரால் உருவாக்கப்பட்ட நல்ல சட்டமுறைமைகள் முற்றிலும் மாறியது. இவரோடு இவரது பேரரசு அழிவுகண்டது.

**ஹம் வம்சம் 202 கி.மு. 20 கி.பி.**

ஹம் வம்ச ஆட்சி நீண்டகாலமாக சீனாவை சிறப்போடு ஆட்சி செய்த மிக முக்கியமான செல்வ வளம் பொருந்திய வம்சமாகும். ஹன் வம்ச ஆட்சியில் சீன கலாச்சாரம் மேலும் புகழ் பெற்றது. இலக்கியங்கள், கலைகள் அனைத்து முறைகளிலும் முன்னிலை பெற்றிருந்தது. பல புதிய வளர்ச்சி மாறுதல்களை சீனாப் பெற்றிருந்தது. அரசாங்கம் அறிவியல் மற்றும் ஆலைகள் சீனாவில் செயல்பட ஆரம்பித்தது. சீனாவின் புதிய செயல்முறைகள் இவ்வம்ச ஆட்சியில் மேலோங்கி இருந்தது. லூனார் காலெண்டர் இவர்களது ஆட்சியில் தான் கண்டுபிடிக்கப்பட்டது. சீன கணிதம் வளர்ச்சியடைந்ததும் இவ்வாட்சியில்தான். சீஸ்மோகிராப் என்ற மாடல் கருவி நில அதிர்ச்சியினை முன்னறிவிக்கும் இதனை சீனர்கள் சிந்தனையின் வாயிலாக உருவாக்கப்பட்டது. சில்க் துணிகளுக்கு வண்ணமிடுதல் அதற்கான அலங்காரமிடுதல் போன்ற வேலைகளும் அறிமுகமாயின. கண்ணாடியினால் ஆன பாண்டங்களை தயார் செய்தனர். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாணிபம் பெருகிறது. இவற்றில் காணப்பட்ட கட்டுப்பாடுகளை தளர்த்தப்பட்டன. சீனா பெண்கள் முகத்திற்கு

பயன்படுத்தப்படும் வாசனை பவுடர்களையும் தயாரித்தனர். அழகு சாதனப் பொருட்கள் பல தயாரிக்கப்பட்டது. சீன இலக்கியங்கள் பல உருவாக்கப்பட்டது. சீன வரலாறு முதன்முதலாக தாளில் எழுதப்பட்டது. சீனாவில் வாணிபத்திற்கு புதிய மார்க்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சீனாவில் இந்தியாவில் வளர்ந்த புத்தமதத்தின் செல்வாக்கு புகுந்தது. மகாயான புத்தமதம் இந்தியாவில் புத்தமத குழு சீனா சென்றது. இக்குழுவினை சீனப் பேரரசர் ஏற்றுக் கொண்டு சங்கம், சரணம், தர்மம் என்ற உயர்ந்த கோட்பாட்டினை மேற்கொள்ள அரசன் முதல் ஆண்டி வரை தயாரானார்கள். காரணம் சீனாவில் பல சமயங்கள் இருந்தாலும் அவற்றினை சீனர்கள் பின்பற்றி வந்தாலும் காலங்காலமாக மக்களின் மனதில் இருந்த துன்பங்களுக்கும் மன பாரத்திற்கும் நிரந்திரமான தீர்வான ஆசையை நீக்கிவிட்டால் துன்பத்தில் இருந்து விடுபடலாம் என்ற மனிதநேய ஆசைக்கட்டுப்பாடு சீன மக்களுக்கு புத்த மதத்தின் மீது நல்ல செல்வாக்கினை பெற்றது. குஷாணர்கள் இந்தியாவின் வடமேற்கு எல்லையில் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்தனர். இவர்களது செயலால் புத்தமதத்திற்கான பிரச்சாரம் இந்தியாவிலும் சீனாவிலும் மேலோங்கி இருந்தது. இதன் செல்வாக்கு 4 முதல் 9 நூற்றாண்டில் இங்கு புத்தமதம் மிக வேகமாக பரவியது. சீனர்கள் இந்தியா சென்று அங்கு இருந்த புத்தரின் புனித இடங்களையும் அவர் சிந்தனை செய்த புனித போதி மரத்தினையும், அவர் முதலாவது சமய பொழிவு செய்த இடத்தினையும் பல மக்கள் புத்த மதத்தினையும், அவர் முதலாவது சமய பொழிவு செய்த இடத்தினையும் பல மக்கள் புத்த இலக்கியங்களை கற்றும் வந்தனர். இதனால் புத்தரின் புனித மதம் மிக செல்வாக்கு பெற்றது. சீனர்களின் மனதில் இம்மதம் புத்துணர்வினை கொடுத்தது. சீனர்கள் இம்மதத்தினால் மனித சமுதாயத்தை

மதிக்கும் நிலை உள்ளது. சீனாவில் இருந்து ஜப்பானுக்கும் புத்தமதம் பரவுவதற்கான ஏற்பாடுகளை செய்தது. மொத்தத்தில் புத்தமதத்தின் செல்வாக்கினால் சீனா புனித ஆன்மீக நாடானது. இவ்வம்ச ஆட்சிக்காலத்தில் இதன் துவக்கம் உருவானது. இவ்வம்சத்திற்கு மேலும் பெருமை சேர்த்தது.

**டங் வம்சம் 618 – 906 கி. பி.**

டங் வம்ச ஆட்சியில் சீனாவினை வழக்கமாக நாம் அழைப்பது மிக அதிகமான ஞான வளர்ச்சி காலம் என்பதாகும். சீனாவில் கல்வி முறை சீர் செய்யப்பட்டு அதற்கான செயல்பாடுகளை அரசே செய்தது. சிவில் சர்வீஸ் தேர்வுகள் முதன்முதலில் அறிமுகம் செய்யப்பட்டது. பல மதங்கள் சீனாவில் இருப்பதால் சீனர்களிடையே மத சகிப்பு தன்மை உண்டானது. வணிக சட்டமுறைகளை ஒழுங்குபடுத்தப்பட்டன. கால்வாய் பாசனமுறைகளுக்கு ஊக்குவிப்பு செய்யப்பட்டது. டாங் வம்சம் சீனாவினை அதை பண்டைய பேரரசின் எல்லைகள் சிதைக்கப்படாமல் ஆட்சி செய்தது. சீனாவின் தென்பகுதி மஞ்சூரியா மற்றும் மேற்கு பகுதிகள் அனைத்தும் மை அரசின் நேரடி ஆட்சி கண்காணிப்பில் வந்தது. டங் வம்ச ஆட்சியாளர்கள் புத்த மதத்தினை பின்பற்ற தடையேதும் விதிக்காவிட்டாலும் புத்த மதத்தவரின் செல்வாக்கு அரசியலில் இருக்கக் கூடாது என்பதை வலியுறுத்தினார். கட்டிடக்கலை சிற்பக்கலை போன்றவர்கள் இவ்வம்ச ஆட்சியில் புகழின் உச்சநிலையை அடைந்தது. டாங் வம்ச சகாப்தம் சீன புலவர்களின் சிறப்பு பெற்ற காலமாயிருக்கிறது. இக்காலத்தில் தான் வண்ணம் பூசும் முறைகள் அதிகம் பயன்படுத்தப்பட்டன.

**சூங் வம்ச பேரரசு 960 – 1279 கி.பி.**

டாங் வம்சம் வீழ்ச்சியடைந்ததும், சீனாவில் அரசியல் குழப்பம் காணப்பட்டது. இதனால் சீனாவில் நிலையற்ற அராஜகமான மன்னர்கள்

தோன்றி சீனாவின் அரசியல் குழப்பத்தினை மேலும் அதிகப்படுத்தியது. அரசியல் பொருளாதார வாழ்க்கையில் சீனர்களுக்கு வளர்ச்சியில் தடையேற்பட்டது. அதிக குழப்பங்கள் ஏற்பட்டு இதற்கான தீர்வு தேவை என்ற வேளையில் சூங் பேரரசு சீனாவில் தோன்றியது. சூங் பேரரசு சீனர்களின் வாழ்க்கை முறையையும் தரத்தினையும் உயர்த்துவதே நோக்கமாக கொண்டிருந்தது. கட்டுரைகள் எழுதுதல் சிறப்பிடம் பெற்றன. சீன சமுதாயத்தில் காணப்பட்ட முறைகளை அரசுக்கு எடுத்து எழுதும் போது முக்கியத்துவம் பெற்றது. அக்குறைபாடுகள் நீக்கப்பட்டது. ஓவியம் நன்கு வளர்ச்சி கண்டது. பலதரப்பட்ட முறைகளில் ஓவியங்களை வரையும் பழக்கம் சீனர்களிடம் காணப்பட்டது. கறுமை நிறங்களில் ஓவியம் தீட்டுவதில் சீனர்கள் புகழ் பெற்றிருந்தனர். சூங் வம்ச பேரரசு சீனாவை ஆண்ட பொழுது பிற உலக நாடுகள் சீனாவின் வளர்ச்சியினை உற்று நோக்கி அவற்றினை பின்பற்ற தயாராயின. இதனால் சீனா சமக்காலத்தவரின் தலைமையாக செயல்பட்டது.

**மங்கோலியர்கள் 1216 – 1368 கி.பி.**

சூங் வம்சம் சீனாவை முன்னேற்ற பாதையில் கொண்டு சென்றதைத் தொடர்ந்து மங்கோலியர்களுக்கு தங்களது ஆட்சியினை சீனாவின் வளர்ச்சிக்காக அர்பணித்து ஆண்டு வந்தனர். பதின்மூன்றாம் நூற்றாண்டின் கடைசி பகுதியில் மங்கோலியர்களின் ஆட்சி சீனாவில் நிலை கொண்டது. மங்கோலியர்களின் பேரரசு சீனாவின் கிழக்கு கடற்கரை எல்லையாகவும் மேற்கு பகுதியில் அரேபியா எல்லையாகவும் இருந்தது. மங்கோலியர்கள் 1206-ம் ஆண்டு மங்கோலியாவையும், 1231-ல் கொரியாவையும் கட்டுப்படுத்தி தங்களது மேலாண்மையை ஏற்கச் செய்தனர். 1264-ம் ஆண்டு சீனாவின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள பீகிங் நகரினை தங்களது குளிர்கால தலைநகரமாகக்

கொண்டனர். மங்கோலியர்களின் தலைவர்களுள் ஒருவரான குப்ளாய்க்கான் தலைமையில் யானம் கைப்பற்றப்பட்டது. அன்னம் சீனாவின் அடிமை நாடாக மாற்றப்பட்டது. ஜப்பானுக்கு எதிராக மங்கோலியர்கள் இருமுறை படையெடுத்தனர். இவ்விரண்டு முறையும் தோல்வியில் முடிவடைந்தது. சீனா உலகத்தின் ஒரு அங்கம் வகித்த பேரரசு என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டது. பீகிங் நகரில் இருந்து சீனாவில் பிற பகுதிகளை இணைக்கும் வகையில் சாலைகள் உருவாக்கப்பட்டன. இதனால் சீனாவில் எங்காவது கலகம் ஏற்படுமாயின் அவற்றினை கட்டுப்படுத்தும் வகையில் நிர்வாக அமைப்பினை வழி நடத்திச் செல்ல முடிந்தது. மங்கோலியர்களின் ஆட்சிகாலம் சீனாவின் வல்லமை நிரம்ப பெற்ற காலம் ஆகும். இவர்கள் மேற்கொண்ட படையெடுப்புகள் அனைத்தும் ஜப்பானைத் தவிர வெற்றியில் தான் முடிவடைந்தது. தோல்வி அடைந்த நாடுகளிடம் இருந்து ஏராளமான போர் இழப்பீடு தொகையினை வசூல் செய்தனர். அந்நாடுகளில் உள்ள மதிப்பு மிக்க பொருட்களை கொண்டு வந்து தங்கள் நாட்டின் நகரங்களை அலங்கரித்தனர். தவறாமல் திறை செலுத்தாத சிற்றரசுகளுக்கு அபராத தொகையினையும் முதன்முதலில் வசூல் செய்தவர்கள் மங்கோலியர்களே ஆவார்.

**மிங் வம்சம் 1368 – 1644 கி. பி.**

மங்கோலியர்களின் ஆட்சி முடிவு பெற்றபின் மிங் என்ற சீன வம்சம் சீனாவை ஆட்சி செய்தது. சீனாவை பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின் சீனாவின் மக்கள் வம்சத்தால் ஆளப்படுவது சீன வரலாற்றின் திருப்புமுனை என ஆசிரியர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். மிங் வம்ச அரசியல் அணுகுமுறையில் இதுவரை ஆண்ட சீன வம்சங்களைக் காட்டிலும் சிறந்து மேலோங்கி இருந்தது. முழு சீனாவையும் கட்டுப்படுத்த சீனாவின் அனைத்து

மாநிலங்களிலும் தங்களது பிரதிநிதிகளை நியமனம் செய்தனர். தங்கள் அடிமை நாடுகளில் தங்களது பிரதிநிதிகளை தங்கி இருக்கச் செய்து அன்றாட அரசியல் நிலைமையை பேரரசருக்கு தெரிவிக்க வேண்டும் என்று நிபந்தனை இட்டனர். மிங் வம்சம் எல்லை மிக்க மங்கோலியரின் ஆட்சியை நீக்கியது என்றால் இவ்வம்சத்தின் சக்தியை சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இவர்களது மாவீர தீரச் செயல்களால் பல கிழக்கு ஆசிய நாடுகளை தமது ஆட்சிக்கு கீழ் கொண்டு வந்தனர். குறிப்பாக அன்னம், தென் மஞ்சூரியா, கொரியா, ஜப்பான் மற்றும் இலங்கை போன்றவைகளாகும். நீண்டகாலமாக இந்நாடுகள் சீன பேரரசருக்கு திரை செலுத்தி வந்தனர். கடல் மார்க்கமாக வாணிப தொடர்பு நீடித்து வந்தது. கலாச்சார முறையில் மிங் வம்சம் சீன பண்டைய பாரம்பரியங்களை கட்டி காத்தது என்றால் மிகையாது. இதனால் சீனர்கள் இவர்களது ஆட்சியால் வந்த ஆட்சி காலத்தை விடச் சாலச் சிறந்தது எனவும் வரப்போகும் ஆட்சிக்கு ஒரு முன் உதாரணமாக அமைய வேண்டும் எனவும் மக்கள் தங்கள் வழிபாடு நிகழ்ச்சியில் இறைவனிடம் மன்றாடுவது போன்ற சித்திரங்கள் இதற்கு ஆதாரமாக உள்ளது.

**ஆரம்ப மஞ்சு மன்னர்களின் கீழ் சீனா**

மூன்று நூற்றாண்டுகளாக இந்த வம்சம் சீனாவை ஆட்சி செய்தது. இவர்களது ஆட்சியின் போது சீனா முழுமை பெற்ற பேரரசாக இருந்து வந்தது. இதற்கு முன் இருந்திராத வகையில் சீனாவின் பேரரசு விரிவாக்கம் பெற்றிருந்தது. இந்த வம்சம் தங்கள் வல்லமையின் உயர்நிலையில் இருந்த சமயத்தில் சீனா நிலப்பகுதி முழுவதும் மஞ்சூரியா, மங்கோலியா, சிங்கியாங் மற்றும் திபெத் நாடுகளும் சீனாவின் கீழ் இருந்தது. சீனாவின் அடிமை நாடுகளாக நேபாளம், பர்மா, லவோஸ், சியாம், அன்னம் மற்றும் கொரியா

போன்ற நாடுகள் இருந்தன. மஞ்சுக்களின் ஆட்சிக்காலத்தினை இரு பகுதிகளாக பிரிக்கின்றனர் வரலாற்று ஆசிரியர்கள் ஒன்று ஆரம்பகால மஞ்சு மன்னர்கள் மற்றொன்று பிற்கால மஞ்சு மன்னர்கள் என்பதாகும். மஞ்சுக்களின் ஆட்சியில் சீனா மிகவும் வளமை பெற்ற நாடானது. சீனாவை கவர வேண்டும் என்ற எண்ணம் கொள்ளச் செய்தது. மஞ்சுக்களின் ஆட்சிக்காலம் சீன அரசியலில் மாறுதல்களை அடையும் காலமாயிருந்தது. சீனாவின் செயல்பாடுகள் அனைத்தும் மேலை நாடுகளின் பாணியில் தனது அடிமை நாடுகளிடம் நடந்துக் கொள்ள முடிவு செய்தது. சீனாவின் படைக்கலன் கருவிகள் பழைய முறைகளில் இருந்து விடுபட்டு புதிய விஞ்ஞான அடிப்படையிலான படைகலன் கருவிகள் இராணுவத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. இவ்வளர்ச்சி சீனாவின் சிறப்புக்கு காரணமாயின.

**மஞ்சுக்களின் வளர்ச்சி**

மஞ்சு மன்னர்களின் பிறப்பு பகுதி சீனாவின் மஞ்சூரியாவாகும். இவர்கள் மங்கோலிய இனத்தினை சார்ந்தவர்கள். இவர்களுடைய பிறப்பு இடத்தினை கொண்டு மஞ்சூக்கள் என்று அழைக்கப்பட்டனர். மஞ்சூக்கள் சீனாவை கைப்பற்றிய சூழ்நிலை மாறுபட்டதாகும். இங்கு ஏராளமான திடீர் நிகழ்ச்சிகள் நடைபெற்ற வேளையில் மஞ்சூக்களின் செல்வாக்கும் இங்கு ஆரம்பமானது. மஞ்சூக்கள் வட சீன பகுதியினை எவ்வித சிரமமும் இன்றி எளிதாக தங்கள் படைகளைக் கொண்டு தாக்கினார்கள். இத்தாக்குதலில் வெற்றிப் பெற்று வடசீன பகுதியை எளிதில் கைப்பற்றி படிப்படியாக தங்கள் ஆதிக்கத்தை தென் சீனப்பகுதிகளிலும் ஏற்படுத்தினர். இத்தருணத்தில் மிங் வம்ச நிர்வாகம் முறையில்லாமல் சீர்கெட்டு காணப்பட்டது. இதனால் மஞ்சுக்கள் தங்கள் திட்டத்தின்படி பல துறைகளை எளிதில் தங்கள் செல்வாக்கின் கீழ் கொண்டு

வந்து முழு சீனாவையும் தங்களது கட்டுக்குள் கொண்டு வந்தனர். மிங் வம்ச அரசனை தென் சீனாவின் அரசனாக மஞ்சுக்கள் துவக்கத்தில் ஏற்றுக் கொண்டுஅவருக்கு எந்த இடையூறும் இன்றி வட சீன மற்றும் மேற்கு, கிழக்கு சீன பகுதியை ஆண்டு வந்தனர். இதனால் இவர்களது ஆட்சிக்கு மிங் வம்சத்தில் இருந்து எவ்வித எதிர்ப்பு இல்லை. பதினெட்டாம் நூற்றாண்டில் தென் சீனப் பகுதிகளையும் மஞ்சூக்கள் எளிதாக சீனாவை கைப்பற்றிய போதிலும் ஏராளமாக கலகங்களும், புரட்சிகளும் இவர்களுக்கு எதிராக எழுந்தது. சீனர்கள் மஞ்சூக்கள் வெளிநாட்டவர்கள் இவர்கள் அரசு அதிகாரத்தினை கவர்ந்துக் கொண்டவர்கள் என்று வெறுப்புடன் நோக்கினர். இதனால் சீனர்கள் மஞ்சூக்களின் அரசு ஆணைகளை மீறியும் அரசு குருமார்களுக்கு எதிராக கோஷங்களை எழுப்பியும் மஞ்சூ குடும்பங்களுக்கு தொந்தரவு செய்தனர். பல சீன அரசியல் அமைப்புகள் மஞ்சூக்களுக்கு எதிராக உருவானது இவற்றுள் வெண் தாமரை என்ற அமைப்பு மஞ்சூக்களை நேரடி புரட்சி செய்து எதிர்த்தது. ஏறத்தாழ பத்து ஆண்டுகாலம் மஞ்சூ ஆட்சியை எதிர்த்து பிரச்சாரம் செய்து சீன மக்களை திரட்டி ஆயுதங்களை கொடுத்தும் எளிதாக மஞ்சூக்களை நாட்டை விட்டு விரட்டி விடலாம் என்ற நம்பிக்கையினை சீனர்களுக்கு ஊட்டி செயல்பட்டனர் என்றாலும் அதிகார வல்லமை பெற்ற மஞ்சூ அரசு பல தடவைகள் ‘வெண் தாமரை’ இயக்கத்திற்கு தண்டனை கொடுத்தது. இதன் தலைவர்கள் தேச விரோத தண்டனையாக மரண தண்டனை பெற்றனர். இதன் உறுப்பினர்கள் சித்திரவதை செய்து அடக்கப்பட்டனர்.

**காங்ஹரி கி. பி. 1662 – 1722**

மஞ்சூக்களின் முதல் அரசன் ஷான்சி ஆவார். இவர் சீனாவை 1644 முதல் 1662-ம் ஆண்டு வரை வந்தார். இவர்க சிறந்த போர்வீரர் மட்டுமல்ல. புகழ்பெற்ற நிர்வாகியும் ஆவார். இவரது ஆரம்ப காலம் சீனாவில் தங்கள் வம்ச ஆட்சியினை நிலைப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டு அவற்றை நிறைவேற்றி வெற்றியும் கண்டார். இவரை தொடர்ந்து இரண்டாவது மன்னராக காங்ஹசி கி.பி. 1662 முதல் 1722 வரை ஆட்சி செய்தார். இவருடைய சமகாலத்து உலக பேரரசர்கள் பிரான்சில் பதினான்காம் லூயி, ருஷ்யாவில் மகா பீட்டர், இங்கிலாந்தின் மூன்றாம் வில்லியம், இந்தியாவில் ஔரங்கசீப் போன்றவர்களாவார்கள். இதன் மூலம் சீனாவின் ஆட்சிக்காலத்தை பிரான்ஸ், ருஷ்யா, இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகளின் அரசியல் நிலைகளோடு தொடர்புபடுத்தி காண இயலும். காங்ஹசி மன்னன் தென் சீனாவில் உள்ள அனைத்து சிற்றரசர்களையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் வெற்றிக் கண்டார். நிர்வாகத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். பிரதேச அதிகாரிகளையும், முக்கிய பிற அதிகாரிகளையும் சீனாவின் அரசியல் மற்றும் அதிகாரிகளையும் சீனாவின் அரசியல் மற்றும் சமுதாய நிகழ்ச்சிகளை தெரிவிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். அதன்படி இரவு நேரத்தில் அரசு அவையின் முன் பேரரசரிடம் இவ்வாதிகாரிகள் சீனாவின் முழு விபரத்தையும் பேரரசருக்கு தெரிவிப்பது வழக்கமானது. ஆட்சியின் குறைபாடுகள் உடனே சரிசெய்யப்பட்டது. பார்மோசா தீவு இவருடைய காலத்தில் தான் சீனாவிடம் கொண்டு வரப்பட்டது.

மேலும் காங்ஹசி மன்னர் காலத்தில் ருஷ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையே பகைமை உறவு அமுர் பள்ளத்தாக்கின் மூலமாக தோன்றியது.

ருஷ்யர்கள் தங்களது சிறிய கோட்டைகளையும், காலணி ஆதிக்கத்தையும் மஞ்சூரியப் பகுதியில் நிலைப்படுத்த தயாரானார்கள். அமுர் பள்ளத்தாக்கின் இரு பகுதியிலும் ருஷ்ய மற்றும் சீனப்படைகள் தாக்குதல் நடத்த திட்டமிட்டனர். இவ்வேளையில் உடன்படிக்கை தயாரானது. 1689-ம் ஆண்டு நெர்ஷின்க் நகரில் நடைபெற்ற உடன்பாட்டினால் இருநாடுகளும் அமுர் பள்ளத்தாக்கினை வாணிப முறையில் பயன்படுத்தலாம் என்றும், இருநாடுகளும் தங்களின் தூதுக்குழுக்கள் வாயிலாக அமுர் பள்ளத்தாக்கு பிரச்சனைகள் நேரடி பேச்சு வார்தையால் தீர்வு காண வேண்டும் என்றும் இரு நாடுகளும் ஏற்றுக் கொண்டன. இதன் பொருட்டு பேரரசின் எல்லைப்பகுதியில் நிலையான பாதுகாப்பு படைகள் சீனாவில் நிலைப்படுத்தப்பட்டது.

**யுங் செங் கி.பி. 722 – 1735**

காங்ஹசி என்ற மஞ்சு பேரரசனை தொடர்ந்து யுங்செங் கி.பி. 1722 ஆம் ஆண்டில் சீன சிம்மாசனம் ஏறினார். இவர் ஆட்சி பொறுப்பினை பெறும் பொழுது அதிகமான ஆர்வத்துடன் செயல்பட்டார் என்றாலும் இவருடைய எல்லா எண்ணங்களும் நிறைவேற்றப்படவில்லை. இவர் உருவாக்கிய திட்டங்கள் அனைத்தும் முடிவு பெறாமல் போனது. நிர்வாகத்தில் காணப்பட்ட ஊழல்களை நீக்கினார். நிர்வாகத்தினை முறைப்படுத்தப்பட்ட பேரரசின் நேரடிக் கட்டுக்குள் கொண்டு வந்தார். ரகசிய சேவைகளும் உருவாக்கப்பட்டது. இவர் ரஷ்யாவுடன் கி.பி. 1727-ல் மீண்டும் மற்றொரு உடன்படிக்கை செய்து கொண்டார். இவ்வுடன்படிக்கை காஹா உடன்படிக்கை என்று அழைக்கப்பட்டது. இதன் மூலம் ருஷ்யாவும் சீனாவும் தங்களது இராஜரீக உறவுகளை பயன்படுத்திக் கொண்டன.

**சின் லூங் கி.பி. 1735-1795**

மன்னர் யுங் செங் ஆட்சிக்கு பின் சின் லுங் என்ற மன்னர் அரியணையேறினார். இவர் அறுபது ஆண்டுகாலம் சீனாவில் நிலையான ஆட்சியை காங்ஹரி ஆண்டது போன்று ஆட்சி செய்தார். இவர் கொள்கைகள் திட்டங்கள், நோக்கங்கள், எண்ணங்கள், செயலாக்கங்கள் அனைத்துமே சீனாவில் மேம்பாட்டிற்காகவே இருந்தது. இவர் தனது ஆட்சி பொறுப்பினை 1795-ல் முடித்துக் கொண்டாலும் இவருடைய இறப்பு ஆண்டான 1799 வரையிலும் இவரின் ஆதிக்கமே சீன அரசியலில் மேலோங்கி இருந்தது. இவர் சிறந்த ஆட்சியாளர் மட்டுமல்ல சிறந்த அரசியல் சிந்தனைவாதி, அறிஞர், கவிஞர், ஓவியர் மற்றும் கலைகளை ஆதரிப்பவராகவும் இருந்தார். இவருடைய காலகட்டத்தில் சீனா வளமை பெற்றதோடு மக்கள்தொகை பெருக்கத்திலும் முதலிடத்தை பெற்றது. இவருடைய காலத்தில் மஞ்சூக்களின் ஆட்சிகாலம் பொற்காலம் என்ற நிலையில் இருந்தது. இவரது மறைவுக்குப் பின் மஞ்சூக்களின் ஆட்சி காலம் வீழ்ச்சியடையும் நிலை உருவானது.

இவரது காலத்தில் அதிகமான படையெடுப்புகள் நிகழ்ந்தன. திபெத் நாட்டில் நடந்த கலவரங்களும், சீனாவின் மேலாதிக்கத்திற்கு எதிரான புரட்சிகளும் ஒடுக்கப்பட்டன. சீனா வல்லமை பெற்ற நாடு என்பதை இவரது ஆட்சி நிருபித்தது. இழந்து போன பெருமைகள் இவரால் மீட்கப்பட்டது. ரஷ்யா சீனாவினை வல்லமை நாடாக ஏற்றுக் கொள்ளக் கூடிய அணுகுமுறை செயல்பட்டது. இதனால் நேபாள மன்னர் தவறாது சீனாவிற்கு திறை செலுத்தி வந்தார். தென் சீனாவிலும் மஞ்சூக்களின் அரசு நிர்வாகம் நிலைப்படுத்தப்பட்டது. இவருடைய வெளிநாட்டு அணுகுமுறை நல்ல வரவேற்பினை கொடுத்தது. கி.பி. 1793ல் இங்கிலாந்தின் தூதுக்குழு சீனாவுக்கு

வருகை புரிந்தது. இதன் தலைவராக மெக்கார்டினே பிரபு இருந்தார். ஆனால் இக்குழுவை இவர் பெருமை பெற்ற நாட்டின் தூதுக்குழுவாக ஏற்றுக்கொள்ளலாம். தமக்கு திறை செலுத்தும் நாடுகளின் பிரதிநிதிகளை மதித்தார். இதனால் இங்கிலாந்து தூதுக்குழு எந்தவித பேச்சுவார்த்தை நலன் இன்றி இங்கிலாந்திற்கு தோல்வியில் திரும்பியது. 1795-ம் ஆண்டு வருகை புரிந்த டச்சு தூதுக்குழுவின் வேண்டுதல்களை நிறைவேற்றுவதற்காக உறுதி அளித்தார். இவருடைய காலத்தில் சீன வெளிநாட்டவர்களுக்கு தங்களது வாணிப கதவினை திறக்காமல் இருந்தது. இவ்வாறு இருப்பதை சீனர்களின் மேன்மையாக கொண்டனர். இதனால் சின்லுங் மன்னரும் தங்களது பாரம்பரியத்தை விட்டு கொடுக்காமல் இருந்தது. சீன மக்களிடையே செல்வாக்கினை பெருக்கியது என்றாலும், வெளிநாட்டில் சீனாவை வசப்படுத்தும் முறையில் ஆயுதங்களை பயன்படுத்த முடிவு செய்யும் நிலைக்கு இவரது செயல்பாடுகள் அமைந்திருந்தன. சின்லுங் ஆயுதங்களை பயன்படுத்த முடிவு செய்யும் நிலைக்கு இவரது செயல்பாடுகள் அமைந்திருந்தன. சின் லுங் காலம் சீனர்களின் அரச மேன்மையில் காலமாய் இருந்தது. ஆனால் இவருடைய காலம் முடிவடைந்தபோது சீனாவின் நிலை மாறியது. பல வெற்றிகரமான நிர்வாகம் இவருடைய ஆட்சிக் காலத்தில் இருந்தாலும் நிர்வாகத்தில் இருந்து ஊழல்களை இவரால் கட்டுப்படுத்த இயலவில்லை. இதனால் சீனாவின் பல பகுதிகளில் ஏற்பட்ட குழப்பங்களை இவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. காரணம் வெளிநாட்டினர் தங்களது பண பலத்தால் சீனாவின் ஊழியர்களை விலைக்கு வாங்கியதுதான், என்றாலும் சின் லுங் மஞ்சூ மன்னர்களுள் சிறந்த பேரரசர் ஆவார்.

**சியாசிங் 1796 – 1820**

சின் லுங் ஆட்சிக்கு பின் சீனாவை ஆண்ட சியாசிங் ஆவார். இவருடைய ஆட்சி கி.பி. 1769 முதல் கி.பி. 1820 வரை நீடித்தது. இவர் ஆட்சி வந்ததும் சீனாவில் காணப்பட்ட புரட்சிகளை ஒடுக்குவதில் மும்முரமாக தனது ஆரம்ப வாழ்க்கையைக் கழித்தார். இவருடைய ஆதிக்க ஆளுமை வல்லமை வெளிப்படும் பொருட்டாக பிரபுக்களின் மேலாண்மைகளை கலைத்து புதிய பிரபுக்களை நியமனம் செய்தார் என்றாலும் சீன மக்களிடம் புகழ் பெற இயலவில்லை. இவர் திறமையற்றவர் என்றோ அல்லது திறமையுள்ளவர் என்றோ கூற இயலாது காரணம் இவருடைய திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு பல மாறுபட்ட விளைவுகளை கொடுத்தன. இவர் தனது உறவினர்களை ஒதுக்கி நண்பர்களின் செல்வாக்கினை ஏற்படச் செய்தது. இவருக்கு குறைபாடாக அமைந்தது. பல அரசியல் திட்டங்களை சிறப்பாக முடித்த இவருடைய முன்னோர்களின் பாதையில் செல்லாமல் புதிய வழியினை நாடியதும் இவருடைய செல்வாக்கு பாதிப்புக்கு காரணமாயிருந்தது எனலாம். அடிக்கடி பல இடங்களில் கலவரங்கள் ஏற்பட்டமையால் சீன படைக்கு அதிக வேலைகளையும் சேதங்களையும் கொடுத்தது. இதன் விளைவாக சீனப் பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டியச் செயல்களை செய்யாது படைபலத்தை பெருக்குவதிலேயே நாட்டின் வருமானத்தை செலவு செய்தது சீன பொருளாதார சீர்குலைவுக்கு காரணமானது. கடற்கொள்ளையர்கள் தென் சீன கடல்பகுதியில் கொள்ளையடித்தனர். மஞ்சூக்களுக்கு எதிராக ரகசிய கழகங்கள் தோன்றின. இக்கழகத்தில் அரசு அதிகாரிகளும் இடம் பெற்றிருந்தனர்.

இவருடைய வெளியுறவுக் கொள்கை சீனாவிற்கு பாதகமான விளைவுகளை கொடுத்தது. இவர் வெளிநாட்டவரிடம் கடுமையாக நடந்து கொண்டார்.

இதனால் எதிர்பாராத பல விளைவுகளை சீனா சந்திக்க நேரிட்டது. ருஷ்யாவின் தூதுவர்கள் சீனாவில் இருந்து ருஷ்யாவுக்கு அனுப்பப்பட்டனர். இத்தருணத்தில் இங்கிலாந்தில் இருந்து வந்த தூதுக்குழுவுக்கு தலைமையாக பிரபு அம்கஸ்ட் என்பவரின் நோக்கம் சீனாவின் கதவுகள் இங்கிலாந்து வியாபாரத்திற்காக திறக்க வேண்டும் என்பதாகும். இவர்களை 1816-ம் ஆண்டு நடந்த பேச்சு வார்த்தைகளில் எவ்வித முன்னேற்றமும் இல்லாமல் திருப்பி அனுப்பியது. சீன மன்னர்களின் தொடர்ச்சியான மறுப்பு மேலை நாட்டவரை அதிகம் பாதித்தது. இதனால் சீனாவின் எல்லா துறைமுகங்களையும் இந்நாடுகள் பெற வேண்டும் என்று உறுதி கொண்டு சவால்களை மனதில் கொள்ளச் செய்தது. பின்னர் இது சீனாவுக்கு ஆபத்தாகவே முடிந்தது.

**டாவோகுவாங் 1820 – 1850**

1820-ம் ஆண்டு சியாசிங் மன்னர் மறைவுக்கு பின் அவரது மகன் டாவோ குவாங்கை சீன அரசாங்கம் அமர்த்தியது. இவர் ஆட்சியில் வந்ததும் மக்கள் சிறந்த ஆட்சியினை எதிர் நோக்கினர். ஆனால் இவர் தனது தந்தையைப் போலவே ஆட்சியில் தகுந்த முன்னேற்றமின்றி இருந்தார். இவருடைய காலத்தில் நேரடியாக அரசனுக்கு எதிர்புரட்சி தோன்றியது. அவைகளை இவரால் கட்டுபடுத்தி சீனாவின் வளமையினை காக்க முடியாமல் போனது. இவர் காலம் மஞ்சூ வம்சம் வீழ்ச்சியின் பாதையில் சென்று கொண்டிருந்தது. வெளி உலகிற்கு சீனா வளமையுள்ள நாடாகவும் மக்கள் தொகை அதிகம் உள்ள நாடாகவும் சீனா தெரிந்தது. ஆனால் தலைமையை வழி நடத்த வேண்டிய மன்னன் போதிய பலமின்றி இருப்பது மக்களுக்கு மட்டுமே தெரிந்தது. இதனால் வெளிநாட்டு தாக்குதலைக் காட்டிலும் உள்நாட்டு கலவரங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தது. இவருடைய ஆட்சிக் காலத்தில் சீனா

இங்கிலாந்துடன் போரிட்டு படுதோல்வி கண்டதன் மூலம் சீனாவின் வலிமையற்ற ஆட்சியை உலகிற்கு எடுத்துக்காட்டியது. இதனை தொடர்ந்து மஞ்சூக்களுக்கு விரோதமாக சீனர்களே புரட்சி செய்ய ஆரம்பித்தனர். சீன வரலாற்று ஏடுகளில் புரட்சிகளே மேலோங்கி இருந்தற்கு காரணம் டாவோ குவாங் என்றால் மிகையாகாது.

டாவோ குவாங் மற்றும் இவருடைய வாரிசுகளின் காலம் பிற்கால மஞ்சூக்களின் காலம் என்று அழைக்கப்படுகிறது. இக்காலத்தில் புகழ்பெற்ற மஞ்சூ வம்ச வீழ்ச்சியை காணத் தொடங்கியது. கி.பி. 1850-ல் சியன்பெங் என்பவர் அரியணை ஏறினார். இவருடைய காலத்தில் சீனாவில் மேலை நாட்டவரின் வருகை அதிகமானது. குறிப்பாக இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் நாடுகள் சீனாவில் மேலை நாட்டவரின் வருகை அதிகமானது. இதன் விளைவாக சீன மண்ணில் இங்கிலாந்துக்கும் பிரான்சிற்க்கும் ஏற்பட்ட போரால் சீனாவிற்கு பலத்த சேதம் ஏற்பட்டது. இவர்களின் ஆதிக்க வளர்ச்சியைக் கண்ட மன்னர் உயிர் வல்லமை பெற்ற பேரரசி ஆண்டு வந்தார். இவர் சூஹசி என்ற பட்டப் பெயருடைய பகடை ஆட்சியாளராக பொறுப்பேற்று ஆண்டு வந்தார். இவருக்கு தோவாஜா என்ற பெயரும் உண்டு.

**மஞ்சூக்களின் ஆட்சியின் கீழ் சீனாவின் நிலை**

**சீனாவின் மஞ்சூக்களின் ஆட்சி**

சிங் வம்சம் என்று அழைக்கப்படும் மஞ்சூ வம்சம் சீனாவை ஏறக்குறைய 300 ஆண்டுகள் ஆண்டு வந்தது. அக்காலத்தில் பேரரசு மிகவும் விரிந்து பரந்து காணப்பட்டது. அப்போது அதில் சீனாவின் முழுப்பகுதி மஞ்சூரியா, மங்கோலியா, சின்சியங், திபெத் ஆகியவை அடங்கியிருந்தன. நேபாளம், பர்மா, பாவே, சயாம், அஸ்ஸாம், கொரியா ஆகிய நாடுகளிடமிருந்து காணிக்கை

பெற்று பெரும் கௌரவத்துடன் ஆட்சி செய்து வந்தது. அவர்களது ஆட்சியின் போது நாடு பல்லாற்றலும், வளமும் நலமும் பெற்று விளங்கியது. 17-ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 18-ம் நூற்றாண்டின் முழுமையான காலத்திலும் உலகின் ஏனைய பகுதிகளைக் காட்டிலும் சீனா செழிப்புற்று விளங்கியது என்றால் மிகையாகாது. மஞ்சூ வம்சத்தின் ஆட்சியின் ஆரம்பத்தில் தான் சீனா பழைய பாணியிலிருந்து விடுபட்ட புதிய பாணிக்கு அடியெடுத்து வைத்தது. அப்பொழுதுதான் மேலை நாட்டின் போர்வலிமையினையும் அவர்களின் சமயத்தினையும் சீனர்கள் உணரலாயினர்.

பீகிங்கில் ஆட்சி செய்த முதல் மன்னர் ஷீன் ஷி என்பவன் ஆவான். அவனுக்குப் பின் அவனுடைய மகன் காங்கி என்பவன் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றான். அவன் 60 ஆண்டுகாலம் ஆட்சி பொறுப்பில் இருந்தான். பின்னர் சின் லுங் 1735 முதல் 1796 வரை ஆட்சியில் இருந்தான். அவனுடைய ஆட்சியின் போது நாட்டில் மக்கள் தொகை பெருகியது. செல்வம் மிகுந்து காணப்பட்டது. இது ஏனைய நாடுகளை விட இங்கு ஏற்பட்ட மாறுதல்களாகும். அவனுக்கு பின் அவனுடைய மகன் சியா செங் 1796-ல் அரியணை ஏறினான். அவன் 1820 வரை ஆட்சி செய்தான். அவன் உறுதியுடனும் மன வலிமையுடன் செயல்படவில்லை. அவன் திறமையற்றவற்றவனாக காணப்பட்டான். அவன் 1820-ல் இறந்த போது அவனுடைய மகன் தவோகுவாங் அரியணை ஏறினான். அவன் தந்தையைப் போலவே செயல் திறமையற்றவனாக காணப்பட்டான். அவனுடைய ஆட்சியின் போது அலுவலகங்களில் கையூட்டு வழங்குதல் மலிந்து இருந்ததாலும் ஊழல் மலிந்து காணப்பட்டதாலும், திறமையற்ற நிர்வாகத்தாலும், இராணுவத்தின் பிற்போக்கான நிலையாலும், நிதிநிலை சீர்கேட்டாலும் மஞ்சு வம்சம் வீழ்ச்சியை நோக்கி விரைந்து சென்று கொண்டிருந்தது. வெளி

தோற்றத்தால் மட்டுமே அதன் பழம் பெருமை காணப்பட்டாலும் விரைந்து சென்று கொண்டிருந்தது. வெளித் தோற்றத்தால் மட்டுமே அதன் பழம் பெருமை காணப்பட்டாலும் விரைந்து சென்று கொண்டிருந்தது. வெளித் தோற்றத்தால் மட்டுமே அதன் பழம் பெருமை காணப்பட்டாலும் விரைந்து சென்று கொண்டிருந்தது. வெளித் தோற்றத்தால் மட்டுமே அதன் பழம் பெருமை காணப்பட்டாலும் அதன் உள்புறத்தில் பார்க்கும் போது அதன் பெருமை மறைந்துக் காணப்பட்டது என்பது அதன் உள்புறத்தில் பார்க்கும் போது அதன் பெருமை மறைந்துக் காணப்பட்டது என்பது உண்மையேயாகும். அச்சமயத்தில் மேலைநாட்டவர்கள் வணிகத் தலங்களை சீனாவில் திறக்க முற்பட்டார்கள். அவர்களது இராஜ தந்திரமும் இடம் பெற முற்பட்டது. எனவே புதிய வரலாறு ஆரம்பமாயிற்று.

**பேரரசின் பரப்பு**

மஞ்சூக்ககளின் காலம் பேரரசை விரிவாக்குவதில் பேரார்வம் காட்டிய காலமாகும். அது புகழ் ஏணியின் உச்சியில் இருந்த போதும், மேலைநாட்டவர்கள் அதன் கதவுகளை தட்டிய போதும் அதில் கீழ்க்கண்ட பகுதிகள் அடங்கியிருந்தன என்பதைக் காணலாம்.

1. 18 மாநிலங்களை கொண்ட சீனா
2. மூன்று மாநிலங்களை கொண்ட மஞ்சூரியா
3. திபெத், மங்கோலியா
4. பெயரளவிற்கு அடிமை நாடான கொரியா, அஸ்ஸாம்

அடிமை நாடுகளை தவிர்த்து சீனாவின் மொத்த பரப்பளவு 42, 77, 170 சதுர மைல்களாகும். காணிக்கை செலுத்தும் நாடுகளுக்கு நடுவாக சீனா அமைந்திருந்தால் அதற்கு ‘நடுவண் பேரரசு’ என்று பெயர் வழங்கப்பட்டது.

**சமுதாயம்**

பண்டைய சீனா புவியியல் அடிப்படையிலும், மக்கள் தொகையிலும் மிகப்பெரிய நாடாகும். குறிப்பாகவும், சிறப்பாகவும் மஞ்சூக்களின் ஆட்சியின் போது மக்கள் தொகை பெருக்கம் நாட்டின் வளமை என்று நம்பி வரவேற்றனர். சீனாவினள் மக்கள் தொகை 100,00,000 ஆகும். 1812-ல் அத்தொகை 362 மில்லியனாகும். 1850-ல் அது 430 மில்லியன்களாகும். மக்கள்தொகை பெருக்கத்தினால் பொதுவாக மக்களின் பொருளாதார நிலை மிகவும் மோசமாகவே இருந்தது. சீன மக்களிடையே பல இனத்தவர்கள் காணப்பட்டனர். அவர்கள் அனைவரும் மஞ்சு ஆட்சியில் தான் ஒருங்கிணைந்து ஒரே மாதிரியான பண்பாட்டைப் பின்பற்றலானார்கள். சீன சமுதாயம் செய்யும் தொழிலின் அடிப்படையில் 5 வகைகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. அவையாவன

1. உயர்வகுப்பினரான அறிஞர்கள் - அதாவது கற்றவர்கள் அப்பிரிவிலிருந்து அதிகாரிகள் ஏனைய அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
2. குடியானவர் மக்கள் தொகையின் பெரும் பகுதியினர் ஆவர். சீனாவின் பொருளாதார தன்னிறைவுக்கும் பாடுபடுவார்கள்.
3. கைத்தொழில்களில் ஈடுபட்டிருந்த கைவினைஞர்கள்.
4. சமுதாயத்தில் பின்தங்கிய வணிகர்களும் வியாபாரிகளும்
5. ஏவலர்களும் வீரர்களும்

இவ்வாறு நாட்டின் பொருளாதார வாழ்வு அமைக்கப்பட்டு இருந்தது. தன்னிறைவு கொண்டிருந்தது. கிராமப்புறங்களில் வாழ்ந்து வந்த குடியானவர்களும், கைவினைஞர்களும், வாணிபக் குழுக்களில் இடம் பெற்ற வியாபாரிகளும், சங்கங்களில் அங்கம் வகித்த வணிகர்களும், பொருளாதார வாழ்வு பொலிவு பெற பாடுபட்டனர். நீர் வழிகளில் மூலம் வணிகம்

நன்முறையில் நடைபெற்று வந்தது. ஆனால் நல்ல சாலைகளும் போதுமான தொடர்பு கொள்ளும் சாதனங்களும் இல்லாததால் உள்நாட்டுப் போக்குவரத்து முறைகளில் தொல்லைகள் இருந்தன.

**மஞ்சூக்களின் அரசியல் முறை**

**கன்பூசியக் கோட்பாடுகள்**

பண்டைய சீனாவின் அரசியல் முறையில் கன்பூசியஸ் கோட்பாடுகளின் செல்வாக்கு மேலோங்கி இருந்தது. அவருடைய அரசியல் கோட்பாட்டில் சில திட்டவட்டமான போதனைகளைக் காணலாம். அவைகளில் ஒன்று சமுதாய அரசியல் ஐக்கியத்தை பற்றியதாகும். விண்ணில் எவ்வாறு இரண்டு ஞாயிறுகள் இருக்கமுடியாதே அவ்வாறே மக்களுக்கும் இரண்டு மன்னர்கள் இருக்க முடியாது என்று போதித்தனர். இதனால் பேரரசில் அரசியல் பிரிவுகள் இல்லை. மற்றொரு போதனை மென்சியஸ் என்பவருடையது. அதன்படி பேரரசர் தெய்வத்தால் தன் பதவியைப் பெற்றுள்ளார் என்றும் அவர் விண்ணின் மைந்தன் என்றும் அவர் தெய்வத்தின் கட்டையின் பேரில் ஆட்சி செய்து வந்தார் என்று புலப்படுகிறது. ஒரு திறமையற்ற அல்லது கொடூரமான அரசன் அரியணை ஏறும் போது தெய்வம் தன் கட்டளையை விலக்கிக் கொள்கிறது. இதை நேர்மையான ஒரு பிரபுவின் வசம் ஒப்படைக்கிறது. அவர்கள் மன்னனை எதிர்த்து கிளர்ச்சி செய்து தானே அப்பொறுப்பினை ஏற்றுக் கொள்வாராம். இக்கோட்பாட்டின்படி தான் புரட்சி செய்வது என்பது நியாயப்படுத்தப்படுகிறது. தவறான ஆட்சி நடைபெறும் பகுதிகளை வெற்றி கொள்வதற்கும் இக்கோட்பாடு வழிவகுத்தது.

**முடியாட்சி**

பேரரசர் எல்லையற்ற அதிகாரங்களைக் கொண்டு விளங்கினார். இது கோட்பாட்டளவில் காணப்பட்டது அல்லாமல் செயல்முறையில்

காணப்படவில்லை. வரைத் தடைப்படுத்தவும் எல்லையற்ற அதிகாரங்களை செயல்படுத்த முடியாத அளவிற்கு நாட்டின் பழக்க வழக்கங்கள் தன் முன்னோர்கள் கையாண்ட முறைகள் பின்பற்ற வேண்டிய நிலைகள் அமைந்திருந்தன. அவர் தன்னுடைய அமைச்சர்களின் ஆலோசனைப்படி நடத்தி வந்தார். பொதுவாக நோக்குவோமேயானால் பேரரசின் அதிகாரம் பேரரசால் மட்டும் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் அது தளபதிகளாலும் வசதி பெற்ற குடும்பங்களாலும் அவரது உறவினர்களாலும் கொண்டு செலுத்தப்பட்டது எனலாம்.

**அமைச்சர்களும் துறைகளும்**

பேரரசின் நிர்வாகம் ஆறு அமைச்சங்கங்கள் மூலம் நடைபெற்று வந்தது. அவைகள் முறைப்படுத்தப்பட்டவைகளாக இருந்தன.

1. சிவில் அலுவலகம் - அதிகாரிகள் நியமிப்பது
2. வருவாய்த்துறை
3. சடங்குகள்
4. போர்த்துறை
5. தண்டனைகள்
6. பொதுப்பணிகள் குறிப்பாக கால்வாய்கள், வெள்ளத்தடுப்பு முதலியன ஆகும். அவைகளைத் தவிர அரசாங்கத்தின் தன்னிச்சையாக விளங்கிய இரண்டு குழுக்கள் இருந்தன. அவைகள் முறையே,

1. **இராணுவ முறைகளை நிர்வகிப்பது**

**சிவில் சர்வீஸ் தேர்வுகள்**

போட்டித் தேர்வுகள் மூலம் அலுவலக ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அத்தேர்வில் மிக முக்கியமான தாளான ப.குவென்

என்பதை ஒவ்வொருவரும் எழுதி தேர்வு பெறுதல் வேண்டும். அதற்கு எட்டு கால் கட்டுரைத்தாள் என்று பெயருண்டு.

**மாநிலங்கள்**

சீனப்பேரரசு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மாநிலங்களின் கவுண்டிகளாகப் பிரிக்கப்பட்டன. மாநிலத் தலைவர்கள் பேரரசால் அமர்த்தப்பட்டனர். அவர்கள் ஓரளவிற்கு தன்னிச்சையாகச் செயல்பட்டு வந்தனர். அவர்கள் மாநிலங்களைக் கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பினை பெற்றுள்ளார்கள். மாநிலத்தில் அமைதியைப் பேணுவது, மைய ஆட்சிக்குரிய வருவாயைப் பெருக்குவது ஆகியவற்றைக் கவனித்து வந்தனர். படிப்படியாக ஒன்பது பிரிவுகளைக் கொண்ட அதிகாரிகளால் மாநில நிர்வாகம் நடைபெற்று வந்தது. மாநிலங்களுக்கு சுய ஆட்சி அதிகாரங்கள் பதவி உயர்வு செய்வதும், மாற்றம் செய்வதும், பதவியில் இருந்து விலக்குவதும் மைய அரசாங்கமே, பிறப்பால் உயர்ந்தவர்கள் பெரும் அதிகாரிகளாக அமர்த்தப்பட்டனர். அதிகாரிகள் செவ்வனே செயல்படுகின்றனரா என்பதை கண்காணிக்கவும், அவர்களிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றுவதைச் சீர் செய்யவும் அப்போதைக்குப்போது அவைகளைக் களைந்து ஏறியவும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

மாநில அரசாங்கத்தின் தலைவர் வைஸ்ராய் அல்லது மாநில ஆளுநராவார். அத்துடன் மஞ்சூக்களின் படைப்பிரிவினைக் கண்காணிக்க தளபதி ஒருவரும் இருந்தார். வருவாய் வசூலிக்கவும் அதைப் பங்கீடு செய்யவும் ஒரு பொருளாளர் இருந்தார். பீகிங் நகரில் ஒரு நீதிபதி. ஒரு உயர் ஆணையாளர், தானிய ஆணையாளர் ஆகியோர் இருந்தனர். சிவில் சர்வீஸ் தேர்வுகளை மேற்பார்வையிட ஒரு கல்வி அதிகாரி அமர்த்தப்பட்டார்.

**தல அரசாங்கம்**

மாநிலம் பல கவுண்டிகள் என்ற மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மாவட்டத்தில் பல நகரங்களும், கிராமங்களும் அடங்கியிருந்தன. மாவட்டம் என்பது மாஜிஸ்ரேட் என்ற அதிகாரிகள் கீழ் கொண்டு வரப்பட்டது. அவர் பல்வேறு பணிகளை மேற்கொண்டிருந்தார். அவருடைய பணிகளாவன.

1. வரிவசூலித்தல், வருவாயைப் பெருக்குதல்
2. நிதி நிர்வாகம் செய்தல்
3. நிலங்களைப் பயிர் செய்தல்
4. அலுவலகக் கட்டிடங்கள் பாதுகாத்தல்
5. சட்டம், ஒழுங்கு அமைதியை நிலைநாட்டுவது

அவருக்குக் கீழ் பல தல அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் உயர் குடிமக்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் நன்முறையில் பணிகளை மேற்கொண்டனர். மஞ்சு அரசாங்கம் மையத்தில் ஒருமுகமான அதிகாரங்களை வைத்து இருந்தாலும், மாநில மாவட்டங்களும் ஒரு சில அதிகாரிகளை கொடுத்திருந்தது என்றால் அதில் எவ்வித மாற்றமும் இல்லை எனலாம். அவர்களுடைய ஆட்சி முறையில் சர்வாதிகாரப் போக்கின் கூறுகளும், மக்களாட்சித் தன்மைகளும் கலந்து காணப்பட்டன என்பதில் ஐயமில்லை. மைய ஆட்சி உண்மையான அதிகாரத்தில் குறைந்த அளவை மட்டுமே பயன்படுத்தியது. ஆனால் குடும்பம் குழு அமைப்பு முறை மக்களின் எல்லாச் செயல்களையும் கட்டுப்படுத்தி வந்தது எனலாம்.

**உயர்குடிமக்கள் அல்லது நற்பண்புள்ளவர்கள்**

மஞ்சு ஆட்சியின் போது சமுதாயத்தில் முக்கியப் பங்கினைப் பெற்றவர்கள் அறிஞர்கள் பெருமக்களான உயர்குடி மக்களாவார்கள். அவர்கள்

சிறப்புமிக்க உரிமைகளைப் பெற்றிருந்தனர். நடை, உடை, பாவனைகளில் அவர்கள் உடலுழைப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டனர். குழப்பம், அமைதியின்மை ஏற்படும் போது மாஜிஸ்ரேட்டிற்கும் மக்களுக்குமிடையே இடைத்தரகராக இருந்து வந்தனர். சில சமயங்களில் அவர்களே தலைமை தாங்கி போரிடச் செய்வதுண்டு. பாரம்பரியப் பண்பாட்டினைப் பாதுகாக்கும் பாதுகாவலர்களாக அவர்கள் விளங்கி வந்தார்கள். நாட்டில் முரண்பாடு ஏற்பட்டால் அதைத் தீர்த்து வைக்கும் பணியினை மேற்கொண்டிருந்தனர். சிவில் சர்வீஸ் தேர்வில் நன்கு இலக்கியத்தில் பட்டம் பெற்றவர்களே அப்பொறுப்பினை பெற்றனர். சீன சமுதாயத்தில் ஒரு தனிப்பட்ட பிரிவினர் மிகச் சிறந்த இடத்தினை பெற்றிருந்தனர் என்றால் அது உயர்குடிமக்கள்தான் என்பதை உறுதியாகக் கூறலாம். ஆகவே சீனா சில சமயங்களில் உயர்குடிமக்களின் அரசு அல்லது அறிஞர்கள் அரசு என்று அழைக்கப்பட்டது. பொது நல அரசாக செயல்பட வேண்டிய அவசியம் ஆனால் சீனாவில் தனிப்பட்ட உயர்குடி மக்களுக்கு மட்டும் பயன்பெற்று வந்தால் அதனை நாம் குறை கூறத்தான் செய்ய வேண்டும். பெரும்பான்மையான சதவிகிதம் மக்கள் பாமரர் இவர்களின் சேவையே சீனாவின் தன்னிறைவிற்கு காரணம் ஆகும் போது இம்மக்களும் நலம் பெறக்கூடிய அரசு சீனாவில் இல்லாமல் போனது சீநாவின் பிற்போக்குக் கொள்கையைதான் நமக்குக் காட்டுகிறது.

**இராணுவ நிர்வாகம்**

அந்நியர்கள் சீனாவில் வன்முறையில் பன்முறை புகுந்தபோது அவர்களது இராணுவம் அவ்வளவு திறமையுள்ளதாக இல்லை. மஞ்சுக்கள் இரண்டு இராணுவப் பிரிவுகளை வைத்திருந்தனர். அவைகளி, ஒன்று கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட அமைப்பு முறை மற்றொன்று பச்சை நிலையின் கீழ் உள்ள

இராணுவ வீரர்கள். முதல் வகையில் வடக்கு எல்லைப்புற மனிதர்கள் இடம் பெற்றிருந்தனர். அவர்கள் மஞ்சுக்களுக்கு உண்மையுள்ளவர்களாக நடந்து வந்தனர். அந்த இராணுவம் சிறப்பு உரிமை பெற்று விளங்கி வந்தது. அது ஜப்பானில் தோகுகுவா காலத்தில் சாமுராய் என்ற பிரிவினர் பெற்றிருந்த இடத்திற்கு ஒப்பிடுகின்றது. அவர்கள் நீண்ட நாட்களாக அமைதியாக நாடியதின் விளைவாக சோம்பேறிகளாக மாறினர். பச்சை நிலையின் கீழ் உள்ள இராணுவத்தில் சீனர்கள் பெரிதும் இருந்தனர். அது புரட்சியை நசுக்க பயன்படுத்தப்பட்டது. அத்துடன் அது கொள்ளைக் கூட்டத்தினரின் கொட்டத்தை அடக்கவும் பிற குற்றங்கள் நிகழா வண்ணம் கண்காணிக்கவும் பயன்படுத்தப்பட்டது. அது ஏறக்குறைய காவல்துறையினரைப் போல் பணிபுரிந்தது.

மஞ்சூக்களின் வீழ்ச்சி என்னும் பாதையில் விரைந்து சென்ற போது இராணுவத்தினரின் ஒழுக்கம், கட்டுப்பாடு சீர்கெட்டது. அவ்வம்சம் நாட்டை நடத்த முடியாததால், அதிகாரிகளும் தங்கள் இராணுவத்தை நடத்திச் செல்ல முடியவில்லை என்று கிளைடு என்பவர் குறிப்பிட்டுள்ளார். ஆகவே பிற்காலத்தில் இராணுவ நிர்வாகம் மிகவும் சீர்கேடான நிலையில் இருந்தது. கொடிப்பிரிவினர் ஒன்றுக்கும் உதவாத சோம்பேறிகளாக மாறிய போது பச்சை நிலையின் கீழ் இருந்தவர்கள் தக்க பயிற்சியும், மிக்க ஆயுதங்களும் இன்றி ஒழுக்கக் கேட்டில் சிக்கி ஊழலில் உழன்று கையூட்டில் கண்டபடி சீரழிந்து காணப்பட்டனர்.

**ஐரோப்பியர்களின் தொடர்பு**

பண்டைய காலம்தொட்டே சீனாவை நாடி வணிகர்களும் கடற்பணிகளும் வரலானார்கள். ஐரோப்பிய நாட்டவர்களின் முதன்முதலாக சீனாவிற்கு

வந்தவர்கள் போர்த்துக்கீசியர்களாகும். அவர்களை தொடர்ந்து ஸ்பெயின் மக்கள் டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள், அமெரிக்கர்கள் அங்கு வரமுற்பட்டனர். போர்த்துக்கீசியர்கள் 1557-ஆம் ஆண்டு மாகோ என்ற இடத்தில் வணித தலங்களை ஏற்படுத்தினர். இது 16-ம், 17-ம் நூற்றாண்டு முழுவதும் நடைபெற்று வந்தது. 18-ஆம் நூற்றாண்டில் சீனர்களுடன் அவ்வித உறவினை மேற்கொள்ள நல்லதொரு சூழ்நிலையினை ஸ்பானிய டச்சுகளால் ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை. அனைத்து ஐரோப்பிய நாட்டினர்களும் ஆங்கிலேயர்கள் சீரிய இடத்தினை பெற்றனர். ஐரோப்பியர் அனைவரும் தென் சீனாவின் வழியாக வாணி உறவினை ஏற்படுத்திக் கொண்டனர்.

**காண்டனில் வாணிகம்**

சீன வாணிபத்தின் மூலம் அந்நிய நாட்டவர்கள் பெரும் லாபம் அடைந்தனர். அவர்கள் மேன்மேலும் வாணிபத்தை பெருக்கி அதிக சலுகைகள் பெற முற்பட்டனர். அவர்கள் மூலம் புரட்சி கருத்துக்கள் சீனாவில் வேறூன்றி தங்களுக்கு எதிராக திரும்பி பிடுமோ என மஞ்சுக்கள் அஞ்சினர். அதனால் அந்நியர் வாணிபத்தில் பல கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டன. அதன் விளைவாக பேரரசர் சின் லுங் காண்டனின் நடைபெற்று வந்த அந்நியர் வாணிபத்தை கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்.

**சமூகக் கட்டுபாடுகள்**

சீனர்கள் வாணிபத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. வணிகர்கள் நன்முறையில் நடத்தப்படவில்லை. அவர்கள் அறிஞர்கள், குடியானவர்கள், கைவினைஞர்கள் ஆகியோரை விடவும் மோசமாக நடத்தப்பட்டனர். அவர்கள் மொழியினைக் கற்றுக் கொள்ள

அனுமதிக்கப்படவில்லை. சீனர்கள் வேலையாட்களாக வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படவில்லை. ஆலைகளில் பெண்கள் அனுமதிக்கப்படவில்லை. அந்நியரின் பயணத்திற்கு தடை கொண்டு வரப்பட்டது. சீனர்களுக்கு வேண்டிய அனைத்தும் சீனாவில் உள்ளது என்பதை சீனர்கள் உணர்ந்தனர். ஆகவே அந்நியர் வாணிகம் அவசியமற்ற, ஆடம்பரமான செயல் என்றனர்.

**சீனர்களின் உயர்ந்த மனப்பான்மை**

உலகம் முழுவதும் சீனர்களே மிகவும் நாகரீகமானவர்கள் என்ற பண்டைய காலம் தொட்டே அவர்கள் கருதி வந்தனர். அவர்களது அரசு தெய்வீகப் பேரரசு என்றும் அவர்களை ஆட்சி செய்பவர் தெய்வீப் பேரரசர் என்றும் கருதி வந்தனர். பிற மக்கள் எல்லோரும் நாகரீகமற்றவர்களாக சீனர்களின் கண்களுக்குப் புலப்பட்டது. எனவே அந்நியர்கள் சமமாக நடத்தப்படாமல் கீழானவர்களாக மதிக்கப்பட்டனர். அவர்கள் பேரரசர் முன் கௌடோ என்று மண்டியிட்டு வணங்கு முறையினை அறவே வெறுத்தனர்.

சிங் வம்சம் வீழ்ச்சியின் பாதையில் இருந்தாலும் ஓரளவிற்கு பேரரசின் பழம்பெருமையினைக் காத்து வந்தது. அது சீனாவின் நடுநிலையான தன்மையைக் கண்டு உள்ளம் மகிழ்ந்தது. உலகத்திலேயே அது உயர்ந்த நாடு என்றும் ஏனைய நாடுகள் அதற்கு கப்பம் கட்ட வேண்டும் என்று கருதியது. ஐரோப்பியர்கள் பன்னாட்டு முறையில் உறவு மேற்கொள்ளவில்லை. எனவே, அவர்களுக்கும் மேலை நாட்டினருக்குமிடையே தொடர்ந்து போராட்டம் நடைபெற்றது. அது இறுதியில் மஞ்சுப் பேரரசின் மாட்சிமைக்குத் தீங்காக அமைந்தது.

## அலகு –II

**சீன – ஐரோப்பிய தொடர்பு**

ரோமானியப் பேரரசு காலந்தொட்டே சீனாவிற்கும், ஐரோப்பாவிற்குமிடையே தொடர்பு இருந்திருக்கின்றது. சீனத்துப் பட்டும், நுண்ணிய வேலைப்பாடு கொண்ட பல்வேறு பொருள்களும் ரோமர்களின் அரச குலத்தினரையும், அரசவையையும் அலங்கரித்திருக்கின்றன.

**சீன ஐரோப்பிய வர்த்தக தொடர்பு**

பின்னர், பதின்மூன்றாம் நூற்றாண்டில் மத்திய ஆசியாவில் ஏற்படுத்தப்பட்ட மங்கோலியப் பேரரசு, ஐரோப்பாவையும் சீனாவையும் எல்லைகளாகக் கொண்டிருந்தது. இதன் விளைவாக ஐரோப்பிய – சீன நேரடி வர்த்தகத் தொடர்பு தரை வழியாக ஏற்பட்டிருந்தது. 1246-ல் ஜான்-டி-பிளானோ கார்ப்பினி (John de Plano Carpini) என்பவர் சீனாவில் மங்கோலியப் பேரரசராக இருந்த குப்ளாய்கான் காலத்தில் சீனாவிற்கு வந்தார். பிரான்சின் அரசன் ஒன்பதாம் லூயியால் அனுப்பப்பட்ட இரு தூதுக்குழுக்களும் சீனாவை (1249, 1252) அடைந்தன. 1264-ல் வெனிஸ் நகர வணிகர்களான நிக்கோலோ போலோவும், மா∴பியோ போலோவும் சீனப் பேரரசன் குப்ளாய்கானால் வரவேற்கப்பட்டனர்.

**சீனாவில் மார்க்கோ போலோ**

பின்னர் 1275-ல் மார்க்கோ போலோ, சீனாவில் பதினெழு ஆண்டுகள் தங்கியிருந்த பின்னர், கிழக்கிந்தியத் தீவுகள், மலேயா, தென்னிந்திய வழியாக வெனிஸ் நகரை அடைந்தார். அவர் எழுதி வெளியிட்ட புத்தகம் ஐரோப்பியர்களை வெகுவாகக் கவர்ந்தது. சீனாவை அடைந்து, அதன் செழிப்பில் பங்கு கொள்ள வேண்டும் என்ற பேரார்வத்தைத் தூண்டியது.

**சீனாவில் போர்ச்சுக்கீசியர்கள்**

போர்ச்சுகீசிய மாலுமி வாஸ்கோடகாமா, இந்தியாவிற்குக் கடல் வழி கண்டுபிடித்ததன் காரணமாக, 16-ஆம் நூற்றாண்டில் போர்ச்சுக்கீசியர் கிழக்காசிய நாடுகளுடன் வர்த்தகம் செய்யும் உரிமை பெற்றனர். போர்ச்சுகீசிய கப்பல் 1516-ல் சீனாவிலுள்ள காண்டன் துறைமுகத்தை அடைந்தது. ஆரம்பத்தில் போர்ச்சுகீசியர்களைச் சீனர்கள் வரவேற்றனர். ஆனால், விரைவில் போர்ச்சுகீசியரை அமாய், நிங்போ போன்ற துறைமுகங்களிலிருந்து விரட்டியடித்தனர். போர்ச்சுகீசியர்கள் நாடு பிடிக்கும் எண்ணங்கொண்டிருக்கின்றனர் என்ற செய்தி, சீனாவிலிருந்த ‘மிங்’ குல பேரரசுக்கு எட்டியதே, அவர்கள் விரட்டப்படுவதற்குக் காரணமாகும்.

**சீனாவில் கத்தோலிக்க திருச்சபையினர்**

போர்ச்சுகீசியர்களைத் தொடர்ந்து கத்தோலிக்கத் திருச்சபையினர் சீனாவிற்கு வந்தனர். ∴பிரான்சிஸ் சேவியர் (Francis Xavier) 1549-ல் ஜப்பான் வழியாகச் சீனா வந்தடைந்தார். சீனாவில் கத்தோலிக்க சமயம் புகுத்தப்பட்டது. 1552-ல் சேவியர் இறந்தார். அவருக்குப் பின்னர் 1582-ல் வந்த மேத்தியோ ரிக்கி (Matheeo Ricci) என்ற கத்தோலிக்கப் பாதிரியார் சீனாவில் கிருஸ்துவ சமயத்தைப் பரப்ப முயன்று ஆரம்ப வெற்றியும் கண்டார்.

கத்தோலிக்க பாதிரிமார்களின் அறிவுத் திறமையையும் செயலாற்றலையும் உணர்ந்த காங் சி என்ற மஞ்சுகுலப் பேரரசர் கத்தோலிக்க சமயத்திற்கு ஆதரவளித்தார். கத்தோலிக்க திருச்சபைகள் சீனா முழுவதிலும் நிறுவப்பட்டன. கத்தோலிக்கர்களைப் பின்பற்றி சீனாவில் நுழைந்த மற்றக் கிருஸ்தவ சமயப் பிரிவினர், கத்தோலிக்கர்களின் வெற்றியைக் கண்டு பொறாமையடைந்தனர். கிருஸ்துவர்களுக்கிடையே சீனாவிலும் சமயப்போட்டி ஆரம்பமானது. கிருஸ்துவ சமயத்திற்கு ஆதரவளித்துப் போற்றிய, காங்-சி பேரரசர் கிருஸ்தவர்கள்

அனைவரையும் வெளியேற்றினார். இதன் பின்னர் சீனாவில் கிருஸ்துவ சமயத்திற்குப் பேரரசின் எதிர்ப்பு தொடர்ந்து இருந்தே வந்தது.

**சீனாவில் டச்சுக்காரர்கள்**

டச்சுக்கள் 1604-ல் சீனாவையடைந்தனர். ஆனால், 1604-லிலும் 1607-ஆம் ஆண்டிலும், போர்ச்சுகீசியரின் தூண்டுதல் காரணமாக டச்சுக்களுக்கு வர்த்தக உரிமை மறுக்கப்பட்டது. 1624-ல் பாஸ்கபோர் தீவிலும், பின்னர் பார்மோசா தீவிலும் டச்சுகள் வர்த்தக உரிமைகள் பெற்றனர். 17,18 ஆம் நூற்றாண்டுகளில் டச்சு அரசு நான்கு தூதுக் குழுக்களைச் சீனாவின் மஞ்சுகுலப் பேரரசர் அவைக்கு அனுப்பி, வர்த்தக உரிமை கோரியது. இத்தூதுக் குழுக்கள் அனைத்தும் சீனப் பேரரசரை மண்டியிட்டு வணங்கும்படி வற்புறுத்தப்பட்டன. கோ-டோ (Know-Tow) என்ற சீன முறைப்படி, சீனப் பேரரசர் முன்போ, அல்லது அவரது உருவப் படத்தின் முன்போ ஒன்பது முறை விழுந்து வணங்க வேண்டும். இருப்பினும் டச்சு வர்த்தக் குழுக்கள், சீனப் பேரரசரை வணங்கி வர்த்தக உரிமைகள் பெற்றனர். 1729ஆம் ஆண்டு முதல் காண்டன் நகரில் தங்கி, டச்சுகள் நிலையான வர்த்தகத் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டனர்.

ஆங்கிலேய வர்த்தகக் கப்பல் 1637-ல் காண்டன் நகரை அடைந்தது. முதலில் ஆங்கிலேயர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டாலும், பின்னர் வர்த்தக உரிமைகள் வழங்கப்பட்டது. 1699-க்கு பின்னர் ஆங்கிலேய-சீன வர்த்தகம் தொடர்ந்து நடைபெறத் தொடங்கியது. ஆங்கிலேயரைப் பின்பற்றி பிரெஞ்சுக்காரர்கள் 1698-லும், டென்மார்க் நாட்டினர் 1731-லும், ஸ்வீடன் நாட்டினர் 1732-லும், ரஷ்யர்கள் 1753-லும், அமெரிக்கர்கள் 1784-லும், சீனாவை அடைந்து வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர்.

**சீன ரஷ்ய தொடர்பு**

ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் கடல் வழியாகச் சீனத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதில் ஈடுபட்டிருந்தபோது, ருஷியர்கள் தரை வழியாக வர்த்தகத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முயன்றனர். சீனாவின் வடக்கு எல்லையாக ரஷ்யா அமைந்திருப்பதால் ரஷ்ய-சீனத் தொடர்பு ஏற்படுவது எளிதாக அமைந்தது. ஆயினும் ஆரம்ப நிலையில் ரஷ்ய வர்த்தகர்கள் சீனாவுடன் வர்த்தக உறவு கொள்ள முயன்ற போது தோல்வியடைந்தனர். சீன-ரஷ்ய எல்லைப் போர்களும் ஆரம்பமாயின.

ஆனால், சீனப் பேரரசர் காங்-சி, ரஷ்யப் போரைத் தவிர்க்க எண்ணி, உடன்படிக்கையொன்று செய்து கொள்ள விரும்பினார். அதன் விளைவாக 1689-ல் நெர்ச்சின்ஸ்க் உடன்படிக்கை (Treaty of Nertchinsk) ஏற்பட்டது.

**ஐரோப்பிய – சீன வர்த்தக உறவின் ஆரம்பம்**

சீனாவின் மஞ்சுகுலப் பேரரசர்கள், ஆரம்ப நிலையில் ஐரோப்பிய வர்த்தர்களையும், கிருத்துவ சமயப் பரப்பாளர்களையும் வரவேற்றனர். ஆனால் 18ஆம் நூற்றாண்டின் தொடக்கதிலிருந்து கிருத்துவ சமயத்தினரையும், ஐரோப்பிய வர்த்தகர்களையும் சீனாவிலிருந்து வெளியேற்ற முற்பட்டனர்.

ஐரோப்பியர்கள் வர்த்தக உரிமைகளை வற்புறுத்திய போது, சீனப் பேரரசு காண்டன், மக்காவோ (Macao) நகரங்களில் மட்டும் தங்கி வாத்தகம் செய்யும் உரிமைகளை வழங்கியது (1757). காண்டன் நகரிலும் ஐரோப்பிய வர்த்தகர்களுக்கு ஏராளமாகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

**கோஹாங் : Co-Hong**

சீனர்களை வெளி உலகத்துடன் தொடர்பு கொள்வதைத் தடுக்க வேண்டும் என்ற முறையிலும், வெளி உலகச் செல்வாக்கினைத் தடை செய்ய வேண்டும்

என்ற நிலையிலும் மஞ்சுப் பேரரசர்கள் செயல்பட்டனர். இதனால்தான் ஐரோப்பிய வர்த்தகர்களைக் காண்டன் நகர் ஒதுக்குப்புறத்தில் தங்கச் செய்தனர். கோ-ஹாங் (Co-Hong) என்றழைக்கப்பட்ட பதின்மூன்று சீன வர்த்தக நிறுவனங்களை மட்டுமே ஐரோப்பியருடன் வர்த்தகம் செய்ய அனுமதித்தனர். குறிப்பிட்ட இந்த பதின்மூன்று நிறுவனங்களைத்தவிர மற்றச் சீனர்கள் ஐரோப்பியர்களுடன் எவ்விதத் தொடர்புகளும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று தடுக்கப்பட்டனர்.

**சீனாவின் உயர்வு மனப்பான்மை**

ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழிற்புரட்சியின் காரணமாகப் பெருகிவிட்ட உற்பத்திப் பொருள்களை விற்பதற்கும், தேவையான மூலப் பொருள்களைப் பெறுவதற்கும் சீனாவை மிகச் சிறந்த சந்தையாக ஐரோப்பியர்கள் கருதினர். எனவேதான் எப்பாடு பட்டாகினும் சீனாவுடன் வர்த்தகத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முயன்றனர்.

**சீனாவில் ஐரோப்பிய வர்த்தகர்களின் ஆதிக்கப் போக்கு**

வர்த்தகத் தொடர்பின் ஆரம்ப காலத்தில் சீனப் பேரரசின் தாறுமாறான சட்டங்களுக்குப் பணிந்த ஐரோப்பியர்கள், நாளடைவில் சீனாவின் குறைபாடுகளையும், சீனப் பேரரசின் திறமையற்ற போக்கினையும் உணர்ந்து, படைவலிமையைப் பயன்படுத்தி, சமாதான முறையில் மறுக்கப்பட்ட வர்த்தகம் மற்றும் சிறப்புரிமைகளைத் துப்பாக்கி முனையில் பெற்றனர்.

**அபினி வியாபாரத்தின் ஆரம்பம்**

ஆரம்ப காலத்தில் ஐரோப்பியர்கள் ஏராளமான பொருள்களைச் சீனாவிலிருந்து ஏற்றுமதி செய்தார்கள். ஏற்றுமதி செய்கின்ற அளவுக்குத் தங்கள் உற்பத்திப் பொருள்களைச் சீனாவில் விற்க முடியவில்லை. ஆனால்,

அபினி வியாபாரம் தொடங்கியவுடன் ஐரோப்பியர்களின் வர்த்தகம் நல்ல நிலையை அடைந்தது.

இந்த அபினி வியாபாரத்தில் ஈடுபட்டவர்களில் முதன்மையானவர்கள் ஆங்கிலேயர்களே ஆவர். சீனர்களுக்கு அபினி புகைக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி, கொள்ளை லாபமடைந்து பெருமையடைந்தவர்கள் ஆங்கிலேயர்களே ஆவர். அபினி புகைப்பதனால் ஏற்படுகின்ற தீமையினை உணர்ந்த சீன அரசு அபினி வியாபாரத்தைத் தடை செய்ய முயன்றது. ஆனால், பெரும் லாபமடைந்த ஆங்கிலேயர்கள் அபினி வியாபாரத்தைக் கைவிடுவதாக இல்லை. இதன் விளைவாக ஏற்பட்டதே ‘முதல் அபினிப் போர்’ ஆகும்.

**முதல் அபினிப் போர்**

1839- 1842-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஆங்கிலேய சீனப்போர் அபினிப் போர் என்று அழைக்கப்படுகிறது. ‘தெய்வீகப் பேரரசை’ தாக்கி ‘நடுவண் பேரரசில்’ ஒரு விரிசலை ஏற்படுத்தியது அப்போர் என்றால் அது மிகையாது. பொருளாதாரச் சுரண்டலை ஏற்படுத்தும் வகையிலும், குடியேற்றங்கள் மூலம் வாணிபத்தலங்களை ஏற்படுத்தும் நோக்குடனும் வரிசையாக ஏற்பட்ட மேலை நாடுகளின் தாக்குதல்களுக்கு முதல் தாக்குதலாக அமைந்தது எனலாம்.

**போருக்கான காரணங்கள்**

**1. வெளிநாட்டு வாணிபத்தின் மீது சீனா கொண்டிருந்த கொள்கை**

உலகின் ஏனைய நாடுகளை விட உயர்ந்த அதிகாரம் வாய்ந்த நாடாக தன்னை, சீனா கருதிக் கொண்டிருந்தது. பரந்து விரிந்துள்ள நடுவண் பேரரசுக்கு அயல்நாட்டுப் பொருள்கள் தேவையில்லை என்று எண்ணியது. அவர்கள் ‘பொருளாதார தன்னிறைவு’ என்ற கோட்பாட்டில் மிகவும் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தனர்.

1793-ல் இங்கிலாந்து மன்னரான மூன்றாம் ஜார்ஜ் என்பவருக்கு சின்லுங் என்ற சீனப் பேரரசர் தன் நாட்டின் வணிகக் கொள்கையை திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளார். நாங்கள் எல்லாப் பொருள்களையும் பெற்றிருக்கின்றோம், புதிய அல்லது நுட்பமான பொருள்கள் மீது எங்களுக்கு விருப்பம் கிடையாது, உங்கள் நாடு உற்பத்தி செய்யும் பொருள்களை நாங்கள் பயன்படுத்தவும் விரும்பவில்லை' என்று குறிப்பிட்டுள்ளார். ஆகவே அயல் நாட்டினர் பெரும் முயற்சி எடுத்து சீனாவுடனான வணிக உறவு வளமடையப் பாடுபட்டனர்.

**2. அயல்நாட்டு உறவுகளைப் பற்றிய சீனரின் அறியாமை**

அயல்நாடுகளை சமமாகப் பாவித்து நடத்த வேண்டும் என்று சீனாவிற்கு தெரியவில்லை. மஞ்சுக்கள், வீழ்ச்சியின் விளிம்பில் நின்று விழித்துக் கொண்டிருந்தாலும் பழைய கோட்பாட்டில் மாறாப் பற்றுக் கொண்டிருந்தனர். அத்துடன் தங்களுடைய 'நடுவண்' பேரரசுதான் உலகத்திலுள்ள நாகரிக நாடுகளின் நடுநாயமாக உள்ள பேரரசு என்று கருதி வந்தனர். பேரரசின் தலைநகரான பீகிங்கில் அயல்நாட்டுத் தூதரகங்களைத் திறக்க அது அனுமதிக்கவில்லை. அவைகளுக்குச் சம அந்தஸ்து கொடுக்கவும் அது மறுத்தது.

**1. சீனர்களின் உயர்வு மனப்பான்மை**

உலகத்திலேயே சீனர்கள் தான் நாகரிகமானவர்கள் என்ற எண்ணத்தில் அவர்கள் இருந்தனர். அவர்களுடைய அரசு 'தெய்வீக பேரரசு' அவர்களுடைய அரசர் 'தெய்வீகப் பேரரசர்' என்றனர். ஏனைய மக்கள் சீனர்களுடைய கண்களுக்கு அநாகரிமானவர்களாகத் தென்பட்டார்கள். ஆகவே எல்லா வெளிநாட்டவர்களும் சமமாக நடத்தப் படாமல் அவர்களைவிடக் கீழானவர்களாக நடத்தப்பட்டார்கள். அத்துடன் வெளிநாட்டவர்கள் 'கோ-டோ' என்ற மண்டியிட்டு

வணங்கும் முறையினை பேரரசர் முன் செய்ய வேண்டியதிருந்தது. இம்முறையினை மேலை நாட்டவர்கள் அறவே வெறுத்தனர்.

**2. காண்டன் வணிக முறை**

சீனர்கள் மேலை நாட்டவர்களை சந்தேகக் கண்கொண்டு பார்த்தனர். மஞ்சு அரசாங்கமும் அவ்வாறே கருதியது. அயல்நாட்டு வணிகர்களைக் கொள்ளைக்காரர்களாகக் கருதினர். எனவே சீனாவின் தென்கோடியிலுள்ள காண்டனில் மட்டும் அவர்களுடைய வாணிபம் நடைபெற ஒப்புக் கொள்ளப்பட்டது. அதனால் அந்த காண்டனில் நடைபெற்ற வாணிபம் அயல் நாட்டவர்களுக்குச் சாதகமாகவோ அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலோ அமையவில்லை.

**1) கோ-ஹாங் :**

காண்டன் துறைமுகத்தின் வழியாக நடைபெற்று வந்த வாணிபத்தின் முக்கியத் தன்மைகளில் ஒன்று அதன் முற்றுரிமையாகும். சீன அரசாங்கம் 13 பேர் கொண்ட ஒரு வணிகக் குழுவினை ஏற்படுத்தியது. அதற்கு 'கோ-ஹாங்' என்று பெயர். இவர்கள் மூலமே வாணிபம் நடைபெற்று வந்தது. அயல்நாட்டு வணிகர்கள் அவர்கள் மூலம்தான் வாணிபம் செய்ய வேண்டும். தனிப்பட்ட சீன வியாபாரிகளுடன் அவர்கள் வாணிபம் மேற்கொள்ளக்கூடாது.

2) **சுங்க வரிவிதிப்பில் முரண்பாடுகள்**

நிலையான சுங்க வரிவிதிப்புக் கொள்கையில்லாததால் மேலைநாட்டு வணிகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். ஒழுங்கான சுங்கவரி 2 விழுக்காடு மதிப்பின் பேரில் 4 விழுக்காடும் இருந்தது. ஆனால் தல அதிகாரிகள் அடிக்கடி அவ்வரிகளை உயர்த்தி வந்தனர். சில சமயங்களில் பீகிங் அதிகாரிகள் மூலம்

குறிப்பிடப்பட்டிருந்த அளவை விட 10 மடங்கு அவர்கள் வசூல் செய்தனர். இவ்வாறு தல அதிகாரிகளால் அயல்நாட்டு வணிகர்கள் கசக்கிப் பிழியப்பட்டனர்.

**3) சமுதாயக் கட்டுப்பாடுகள்**

சீனர்கள் வாணிபத்திற்கு மிகக் கீழான மதிப்பையே கொடுத்து வந்தனர். வணிகர்களுக்கு சமூக அந்தஸ்து ஏதும் இல்லை. அவர்கள் நாட்டிலுள்ள அறிஞர்கள், குடியானவர்கள், கைவினைஞர்கள் ஆகியோருக்கும் கீழ்நிலையில் வைக்கப்பட்டனர்.

**4) வாணிபத்தில் ஏற்றத்தாழ்வு**

18-ஆம் நூற்றாண்டில் காண்டனில் நடைபெற்று வந்த வாணிபம் சீனாவிற்கே அனுகூலமாக இருந்தது. தங்கள் நாட்டுப் பொருட்களை வெளிநாட்டினர் வாங்க வேண்டும் என்று விரும்பினர். அதே சமயத்தில் வெளிநாட்டுப் பொருட்களை வாங்குவதில ஆர்வம் காட்டவில்லை. இதனால் வெளிநாட்டு நாணயம் சீனாவில் கொட்டப்பட்டது.

**5) அயல்நாட்டவர்கள் மீதான கட்டுப்பாடுகள்**

அயல்நாட்டவர்கள் சில விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருந்தது. அவைகளை மீறும் போது வாணிபம் தடைப்படுத்தப்பட்டது. அவர்கள் மீதான விதிமுறைகளாவன:

- காண்டனுக்கு அருகில் உள்ள போக் என்ற இடத்துக்கு அருகில் எந்தவொரு வெளிநாட்டுக் கப்பலும் வருதல் கூடாது.
- அயல்நாட்டுப் பெண்களோ அல்லது துப்பாக்கிகளோ தொழிற்சாலைகளுக்குள் அனுமதிக்கப்படக்கூடாது.
- அயல்நாட்டுக் கப்பல்கள் சீனர்களுடன் நேரிடையான தொடர்பு கொள்ளுதல் கூடாது.

- ❖ சீனப் பெண்களை அயல்நாட்டுத் தொழிற்சாலைகளில் பணியில் அமர்த்துதல் கூடாது.
- ❖ கோ-ஹாங் மூலம் தான் அயல்நாட்டவர்கள் சீனர்களுடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்.
- ❖ அயல்நாட்டவர்கள் நதிகளில் படகு ஓட்ட அனுமதி கிடையாது.
- ❖ வாணிபகாலம் முடிவடைந்த பின் அயல்நாட்டவர் காண்டனில் தங்குதல் கூடாது.
- ❖ அயல்நாட்டவர்கள் சீன நூல்களை வாங்கக் கூடாது. அவர்கள் சீன மொழியினைக் கற்றுக் கொள்ளக்கூடாது.

மேற்கண்ட கட்டுப்பாடுகளால் அயல் நாட்டவர்கள் பெரிதும் துன்பப்பட்டனர்.

**2. நீதிவிசாரணை முரண்பாடுகள்**

அயல் நாட்டவர்கள் சீன மண்ணில் குற்றம் புரிந்தால் சீனச் சட்டப்படி விசாரிக்கப்படுதல் வேண்டும் என்று சீனர்கள் வலியுறுத்தினர். சீனர்களின் தண்டனை கொடுமையாக இருந்ததால் அயல்நாட்டவர்கள் அதை எதிர்த்தனர். மேலும் அவர்கள் ஐரோப்பிய முறையிலான விசாரணை வேண்டுமெனக் கோரினர்.

**3. சமயப்பரப்புக் குழுவினரின் பேராசைத் திட்டங்கள்**

தெய்வீகப் பேரரசின் மூலை முடுக்கெல்லாம் கிறிஸ்துவ சமயத்தைப் பரப்ப வேண்டுமென அக்குழுவினர் பேராசை கொண்டனர். அவர்கள் அவ்வாறு பரப்புவதை அவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த நடமாடும் தடைச்சட்டம் முட்டுக்கட்டை போல் தடுத்து நிறுத்தியது எனவே அவர்கள் ஆத்திரமடைந்தனர்.

4. **பிரிட்டிஷாரின் அரசியல் அடிப்படையிலான உறவு ஏற்பட முயற்சி**

பீகிங்கிற்கு 2,000 மைல் தொலைவிலுள்ள காண்டனில் நடைபெறும் சீர்கேடுகள் சீன அரசிற்கு தெரியாது என்று பிரிட்டிஷ் அரசாங்கம் எண்ணியது.

எனவே வாணிபத்தைச் சீராக்க சீனாவின் தலைமையுடன் நேரிடையான தொடர்பு கொள்ளுதல் வேண்டுமென அவர்கள் நினைத்தார்கள். ஆகவே லண்டனிலிருந்து அரசு தரப்பில் ஒரு குழு சீனாவிற்கு சென்றது.

**i) மெக்கார்ட்னே குழு :**

1792-ல் மெக்கார்ட்னே என்ற பிரபுவின் தலைமையில் ஒரு குழு சீனாவிற்கு கீழ்க்காணும் நோக்கங்களுக்காக அனுப்பப்பட்டது.

அ) பிரிட்டிஷ் வணிகர்கள் தங்குவதற்கு ஒன்று அல்லது இரண்டு இடங்களைப் பெறுதல்.

ஆ) சீனா முழுவதிலும் வாணிபம் மேற்கொள்ள ஒரு உடன்படிக்கையினைச் செய்து கொள்வது.

இ) காண்டனில் நடைபெற்று வரும் சீர்கேடுகளிலிருந்து விடுபடுதல்.

ஈ) பீகிங்கில் அரசியல் ரீதியில் ஒரு பிரதிநிதி தங்குவதற்கு வழி செய்தல்.

**ii) அமர்ஸ்ட் குழு**

மேலே குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்காக இந்தியாவில் ஆளுநராகப் பணியாற்றிய அமர்ஸ்ட் பிரபுவின் தலைமையில் தூதுக்கோஷ்டி சீனாவிற்குச் சென்றது மனதைப் புண்படுத்தும்படியான சடங்குகளையும் மண்டியிட்டு வணங்கும் முறையையும் அமர்ஸ்ட் பிரபுவும் அமைதிப் பேச்சு வார்த்தைகளின் மூலம் நோக்கங்களை அடையத் தவறிவிட்டனர்.

**iii) நேப்பியர் தூதுக்குழு**

1833-ம் ஆண்டின் பட்டயச் சட்டப்படி கிழக்கிந்திய வர்த்தக் கம்பெனி பெற்றிருந்த சீனாவின் வணிக முற்றுரிமையானது நீக்கப்பட்டதால் சீனாவிற்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்படலாயிற்று. கிழக்கிந்திய கம்பெனிக்குப் பதிலாக அரசு அதிகாரிகளின் மூலம்

நேரிடையான வாணிபத்திற்கு வழி வகுக்கப்பட்டது. அப்போது நாட்டின் மதிப்பையும், மரியாதையையும் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணம் வாணிப ஆர்வத்தை விட மேலோங்கி நின்றது. இதன் முக்கியத்துவத்தைச் சீனர்கள் உணரவில்லை. இந்தச் சூழ்நிலையில்தான் நேப்பியர் பிரபு காண்டனின் பிரிட்டிஷ் வணிகத் தலைமைக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அவரும் 1834-ம் ஆண்டு அங்கு சென்றார். சீனர்களின் வணிக விதிமுறைகளை அவர் மீறவே, அவர் உடனே சீனாவை விட்டு வெளியேறும்படி ஆயிற்று.

**அபினி வாணிபம்**

சீனர்கள் விரும்பி வாங்கக்கூடிய ஒரு பொருளை ஆங்கிலேயர்கள் வியாபாரம் செய்ய முன்வந்தனர். அப்பொருள் தான் அபினியாகும். அதன் மூலம் வணிகத்தில் ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வினை சரிக்கட்டினர். இந்தியாவிலிருந்து சீனாவிற்கு ஏராளமான அபினி ஏற்றுமதி செய்யப்பட்டது. இதனால் சீனர்களின் பொருளாதாரம் பெரிதும் பாதித்தது. சீனாவில் தொடர்ச்சியாக அபினி விற்பனை செய்ததன் விளைவாக அங்கிருந்து தொடர்ந்து சீன வெள்ளி நாணயங்கள் விடைபெற்றுக் கொண்டு வெளியேறின.

1729-ல் மஞ்சு மன்னராக வீற்றிருந்த யுங் செங் அபினி வாணிகத்தை தடை செய்ய முடிவு செய்தார். அதன் பின் ஆட்சி பொறுப்பேற்ற சியா சிங் அபினி ஏற்றுமதியை சட்டத்திற்குப் புறம்பானது என்று அறிவித்தார். 1800-இல் சீன அரசாங்கம் மற்றொரு ஆணையை வெளியிட்டு அபினியைத் தடை செய்ய முற்பட்டது. இதற்கிடையில் அபினி வணிகத்திற்கு எதிராக பல ஆணைகள் வெளி வந்த போதிலும் கள்ளக்கடத்தல் மூலமாக அபினி வாணிபம் நடைபெற்று வந்தது.

**காண்டன் ஆணையாளர் லின்னின் செயல்கள்**

காண்டனில் நடைபெற்று வந்த கள்ளக்கடத்தல் அபினி வியாபாரத்தைக் கட்டுப்படுத்த 1838-இல் லின் சேசு என்பவர் பதவியில் அமர்த்தப்பட்டார். அவர் வன்முறையில் பல ஆணைகளை வெளியிட்டு அதை அடக்கலானார். அவர் சீன அபினி வியாபாரிகளையும் தரகர்களையும், அபினிப் பழக்கமுள்ளவர்களையும் கடுமையாக நடத்தினார்.

லின் என்ற ஆணையாளர் அயல்நாட்டு வணிகர்களிடமிருந்து அபினி இருப்புகளை உடனடியாகக் கொண்டு வந்து சரணடையச் செய்தார். இனி எதிர்காலத்தில் இது போன்ற கள்ளத்தனமான வியாபாரத்தில் ஈடுபடுவதில்லை என்ற உறுதி மொழியையும் வாங்கிக் கொண்டார். அவருடைய ஆணைகளை மீறுபவர்கள் மரண தண்டனைக்கு ஆட்படுவார்கள் என்றும், அவர்களுடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும் அவர் கூறினார். பிரிட்டிஷ் கண்காணிப்பாளரான எலியட் அவைகளை ஏற்றுக்கொள்ள முதலில் மறுத்தார். அவர் அபினிப் பெட்டிகளை கொடுத்துவிட்டு உறுதிமொழிப் பத்திரம் கொடுக்க முடியாதென மறுத்தார். அதன் விளைவாக உணவு, தண்ணீர், பணிபுரிய ஆட்கள் ஆகியவற்றை லின் தடுத்து நிறுத்தினார். எனவே பிரிட்டிஷ்காரர்கள் மாக்கோவிற்குச் செல்ல நேர்ந்தது.

**உடனடிக் காரணங்கள்**

கௌலுன் என்ற இடத்தில் ஏற்பட்ட கைகலப்பில் ஆங்கிலேயர்கள் ஒரு சீனக் கிராமவாசியைக் கொன்றுவிட்டனர். குற்றவாளியைச் சரணடையும்படி லின் கூறினார். எலியட் அதை மறுத்தார். மாறாக அவர் அந்தக் குற்றவாளிக்கு எளிய தண்டனை வழங்கினார். இதனால் ஆத்திரமும், வெறுப்பும் கொண்ட லின்

மாக்கோவிலிருந்து பிரிட்டிஷ்காரர்களை வெளியேற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டார். அதனால் போர் ஏற்பட்டது.

**போரின் போக்கு**

1839-இல் ஏற்பட்ட முதல் கடற்போரில் பிரிட்டிஷ், சீனக் கடற்படையினை முறியடித்தது. காண்டன் முற்றுகையிடப்பட்டது. 1841-ல் அதுவும் பிடிபட்டது. அதன் பின் நிங்போ, சுமாய், கிங் கியாங் ஆகிய இடங்களும் கைப்பற்றப்பட்டன. யாங்சி நதியின் பெரும் இடங்கள் அவர்களிடம் வந்து சேர்ந்தன. ஒவ்வொரு நகரமும் ஒன்றன்பின் ஒன்றாக வீழ்வதைக் கண்ட சீனர்கள் பீதி அடைந்தனர். இறுதியில் அமைதியை நாடலானார்கள். 1842-ஆம் ஆண்டு நான்கிங் உடன்படிக்கையின்படி முதல் அபினிப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

**நான்கிங் உடன்படிக்கைகளின் முக்கியத்துவம்**

1842-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பிரிட்டனுக்கும் சீனாவிற்கும் இடையில் இந்த உடன்படிக்கை ஏற்பட்டது. 1843-ல் துணை உடன்படிக்கையான போக் உடன்படிக்கையும் ஏற்பட்டது. இந்த இரு உடன்படிக்கைகளுமே பிரிட்டனின் ஆக்கிரமிப்பு வணிகக் கொள்கையை எடுத்துக் காட்டுகின்றன.

1. பிரிட்டிஷ் வணிகர்களும், பிரிட்டிஷ்காரர்களும் தங்கி வாழவும், வியாபாரம் செய்யவும் ஐந்து துறைமுகங்கள் திறந்துவிடப்பட்டன. ஹாங்காங் பிரிட்டனுக்குக் கிடைத்தது. கோ-ஹாங் முறை நீக்கப்பட்டது. சீனர்கள் பெரும் இழப்பீட்டுத் தொகை தரவேண்டியதாயிற்று.
2. சீனா சுங்கவரி விதிப்பில் தன்னாட்சி அதிகாரத்தை இழந்தது.
3. இந்த உடன்படிக்கையால் சீனாவின் இறைமை பாதிக்கப்பட்டது.
4. அபினி வாணிபத்தைப் பற்றி இவ்வுடன்படிக்கை ஏதும் கூறவில்லை.

5. பிரிட்டனுக்குச் சாதகமான சலுகைகள் கொடுக்கப்பட்டன இதன் விளைவாக மற்ற நாடுகளான பிரான்சும், அமெரிக்காவும் அது போன்ற சலுகைகளை சீனாவிடமிருந்து பெற வழி ஏற்பட்டது.

6. நான்கிங் உடன்படிக்கை உள்ளபடியே சீனாவைப பெரிதும் பாதித்தது. இதனால் நெடுங்காலமாக தனிமையில் இனிமை கண்டு கொண்டிருந்த சீனா துண்டிக்கப்பட்டது. அதன் மூலம் சீனா மேலைநாடுகளுக்குத் தன் கதவுகளைத் திறந்துவிட நேரிட்டது.

7. சீனப் பொருளாதாரம் பொலிவிழந்தது. அபினி சீனர்களின் உடலைக் கெடுத்தது, உள்ளத்தைக் கெடுத்தது, செல்வத்தைப் பாதித்தது போரில் தோல்வி கண்டதால் நாடெங்கும் ஒழுங்கீனம் தலைகாட்டியது உள்நாட்டு வியாபாரம் ஸ்தம்பித்து நின்றது.

8. இதனால் ஆணையாளர்களின் பதவி நீக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டனர். அதற்குக் காரணம் அவருடைய திறமையின்மையே எனலாம்.

**நான்கிங் உடன்படிக்கை**

முதல் அபினிப்போரின் மூலம் சீனாவானது மேலை நாட்டவர்களுக்குத் திறந்து விடப்பட்டது. அவர்கள் பொருளாதாரச் சுரண்டலையும் குடியேற்றங்களையும் ஏற்படுத்துவதற்கு வழிகண்டனர். இது வரையில் 'தெய்வீகப் பேரரசு' என்ற சீனா தன்னுடைய கதவுகளை மூடிக் கொண்டு தனிமையிலே இருந்து வந்தது. முதல் அபினிப் போரின் விளைவாக நான்கிங் உடன்படிக்கையின் மூலமும், பிற உடன்படிக்கைகள் மூலமும் அயல்நாட்டவர்கள் சீனாவில் நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்டனர். ஆனால், அவர்கள் கேட்டது கிடைக்கவில்லை. நான்கிங் உடன்படிக்கையின் விதிமுறைகளை ஆராய்ந்தால அதன் தன்மை நன்கு புலனாகும்.

**விதிமுறைகளாவன.**

1.ஹாங்காங் தீவு பிரிட்டனுக்குக் கொடுக்கப்பட்டது.

2.காண்டன், ஆமோய், பூசௌ, நிங்போ, ஷாங்கை ஆகிய ஐந்து துறைமுகங்கள் அயல் நாட்டவர்கள் வாணிபத்திற்கும், வாழ்வதற்கும் திறந்துவிடப்பட்டன.

3. கோ-ஹாங்குகள் அனுபவித்து வந்த முற்றுரிமை நீக்கப்பட்டது. சீனக்குடிமகன் ஒவ்வொருவரும் அயல்நாட்டு வியாபாரிகளுடன் வணிகம் செய்ய அனுமதி கொடுக்கப்பட்டது.

4. ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களுக்கு நியாயமான ஒழுக்கமான சுங்கவரி நிர்ணயிக்கப்பட்டது. இரு நாடுகளும் சேர்ந்து வரியினை அதிகப்படுத்துவது பற்றி ஆலோசனை செய்யும்.

5. இழப்பீட்டுத் தொகையாக 12 மில்லியன் டாலர்களைச் சீனா இங்கிலாந்திற்குக் கொடுக்க ஒப்புக் கொண்டது. நாசாமாக்கப்பட்ட அபினிக்காக 86 மில்லியன் டாலர்களை இங்கிலாந்து பெற்றுக் கொண்டது.

6. பிற நாடுகளை சமமாகப்பாவிக்கும் கோட்பாட்டை சீனா ஒப்புக்கொண்டது. அலுவலகத் தொடர்புகளிலும் சமத்துவமுறையானது பின்பற்றப்பட்டது. நீண்ட நாட்களாக இருந்து வந்த கோ-டோ என்ற ஒன்பது முறை சீனப் பேரரசரை மண்டியிட்டு வணங்கும் முறை அகற்றப்பட்டது.

**போக் உடன்படிக்கை 1843**

அதற்கு அடுத்த ஆண்டிலேயே சீனாவிற்கும், இங்கிலாந்திற்கும் இடையே போக உடன்படிக்கை ஏற்பட்டது. அதன் விதிகளாவன:

**1. விசேஷப்பிரதேச உரிமை**

உடன்படிக்கையில் கண்ட துறைமுகங்களில் இருக்கும் பிரிட்டிஷ் குற்றவாளிகள், பிரிட்டன் நீதிமன்றங்களால் இது முதல் விசாரிக்கப்படுவர். சீன நீதித்துறையில் ஏற்பட்ட ஒரு பெரும் தலையீடு இது என்று சீனர்கள் எண்ணினர்.

**2. மிகவும் சலுகை பெறத்தக்க நாட்டு அந்தஸ்து**

பிற நாடுகளுக்கு கொடுக்க விரும்பும் அனைத்து சலுகைகளையும் சீனா பிரிட்டனுக்குத் தர முன் வந்தது. எனவே இக்கொள்கையால் பிரிட்டன் எல்லாச் சலுகைகளையும், உரிமைகளையும், அதிகாரங்களையும் சீனாவில் பெற்றது.

**3. சுங்க வரிகளை நிர்ணயித்தல்**

இந்த உடன்படிக்கையால் இறக்குமதி வரி 13 விழுக்காடு ஆக்கப்பட்டது.

**4. சீன நீர்பகுதியில் பிரிட்டிஷ் கடற்படை தங்க அனுமதித்தல்**

வாணிபத்தினை பாதுக்காக்கவும் மாலுமிகளை கட்டுப்பாட்டுடன் கொண்டு செல்லவும் பிரிட்டிஷ் போர்க்கப்பல்கள் ஐந்து துறைமுகங்களில் தங்க அனுமதிக்கப்பட்டது.

**உடன்படிக்கைகளின் விளைவுகள்**

**1. பகுதிகள் இழப்பு**

சீனாவுடன் சேர்ந்திருந்த ஹாங்காங் பிரிட்டனுக்கு கொடுக்கப்பட்டது. இது மேன்மேலும் பிரிட்டன் பல பகுதிகளைப் பெற வழி செய்தது. சீனாவில் ஐந்து துறைமுகங்கள் திறந்து விடப்பட்டதால் அயல்நாட்டவரின் செல்வாக்கு சீனாவின் கிழக்குக் கடற்கரை முழுவதிலும் பரவ ஆரம்பித்தது.

**2. இறைமையின் இழப்பு**

சுதந்திர நாடுகளின் அதிகாரங்களில் ஒன்றான நீதித்துறையின் இறைமை மிகவும் கட்டுப்படுத்தப்பட்டது. இந்த விசேஷப் பிரதேச உரிமையின்படி அன்னியர்கள் சீனாவில் நீதிமன்றங்களை நடத்தும் உரிமை பெற்றனர்.

**3. பொருளாதார உரிமைகள் பாதிப்பு**

பொருளாதார ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட சுங்கவரிகள் சீனாவின் பாதுகாப்பு வரிக் கொள்கையினை மிகவும் பாதித்தது. அயல்நாட்டுப் பொருள்கள் குவிந்ததால் சீனாவில் கைத்தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டது. பாதுகாப்பு இல்லாமல் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள் நசிந்தன. கள்ளக் கடத்தல் மூலம் அபினி வியாபாரம் தொடர்ந்து நடைபெற்று சீனாவின் செல்வத்தைச் சுரண்டி எடுத்துக் கொண்டிருந்தது. மூடிய கதவுகள் கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு, திறந்த வெளிக்கொள்கையானது பின்பற்றப்பட்டதால் சீனாவில் மேலை நாட்டவரின் பொருளாதார ஆதிக்கம் ஏற்றம் பெற்றது.

**4. சமுதாயப் பாதிப்புகள்**

ஐந்து பெரிய துறைமுகங்களில் அயல்நாட்டவர்களுக்கு வாணிபம் செய்ய அனுமதி கொடுக்கப்பட்டதால் செல்வாக்குடன் விளங்கிய வியாபாரிகள் இனம் அந்த சமுதாயத்தில் தோன்றலாயிற்று, மஞ்சு அரசாங்கத்தின் மீதிருந்த நம்பிக்கை குறையலாயிற்று.

**5. அரச தந்திர உறவிலான பாதிப்பு**

சீனா தன்னுடை இறைமையை இழந்தது. ஏனைய நாடுகளை சமமாக பாவிக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டது. மேலை நாடுகளுடன் சீனா

அலுவலகத் தொடர்பினைப் பெற்றதோடு பன்னாட்டு சமுதாயத்தில் ஒரு புதிய இடத்தைப் பெற வழி ஏற்படுத்திக் கொண்டது.

**6. பிறநாடுகளுடன் சீனா செய்து கொண்ட உடன்படிக்கைகள்**

பிரிட்டிஷ்காரர்கள் பெற்ற சலுகைகளை ஏனைய நாடுகள் பெற வேண்டிய சீனாவை அவைகள் கேட்டன. இச்சூழ்நிலையை பயன்படுத்திக் கொண்ட அந்த நாடுகள் மூலம் புதிய சிக்கல்கள் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக சீனா அன்னிய நாடுகளை ஒன்றன்மேல் ஒன்றை ஏவிவிட, முயற்சி செய்தது. அவைகளிடத்தில் பிரிவை ஏற்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டு 'பிரித்துதான் வாழ வேண்டும்' என்ற கொள்கையைப் பின்பற்றியது.

**i) நாங்கியா உடன்படிக்கை : 1884, ஜூலை 13**

பிரிட்டனுடன் செய்து கொண்ட உடன்படிக்கையைப் போல அமெரிக்காவுடன் நாங்கியா உடன்படிக்கையைச் செய்து கொண்டது. அதன்படி அபினி வாணிபத்தை தடைசெய்ய ஒப்புக்கொண்டது. விசேஷசப் பிரதேச உரிமை அளிக்கப்பட்டது. மிகவும் சலுகை பெறத்தக்க நாட்டு அந்தஸ்து அமெரிக்காவுக்கு அளிக்கப்பட்டது. பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அந்த உடன்படிக்கையினை புதுப்பித்துக் கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

**ii) வாம்போவா உடன்படிக்கை : 1844, அக்டோபர் 24**

வாம்போவா என்ற இடத்தில் பிரான்ஸ் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டது. நாங்கியாவின் விதிமுறைகள் அதற்கும் என்றனர். அத்துடன் கிறிஸ்தவ சமயத்தை தடையின்றி பரப்ப அனுமதி அளிக்கப்பட்டது.

**iii) பெல்ஜியம், நார்வே, சுவீடன் : 1840, மார்ச் 20**

போர்ச்சுக்கல் ஆகிய நாடுகளும் இது போன்ற உடன்படிக்கைகளைச் செய்து கொண்டு அந்த நாடுகள் பெற்ற எல்லாச் சலுகைகளையும் பெற்றன.

**3. துறைமுக உடன்படிக்கை முறையின் ஆரம்பம்**

பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளால், துறைமுக உடன்படிக்கை முறை ஆரம்பமாயிற்று. அவைகள் பின்னால் ஏற்படப் போகின்ற ஒப்பந்தங்களுக்கு வலிவும், பொலிவும் தந்தன. இந்தச் சமமற்ற உடன்படிக்கைகள் சீனாவின் இறைமையைப் பெரிதும் பாதித்தன. இதனால் அவர்கள் குடிறேற்ற உரிமைகளைப் பெற்று ஒரு அரசினுள் மற்றொரு அரசாக வளர்ச்சி பெற்றனர்.

**இரண்டாவது அபினிப்போர்**

நான்கின் உடன்படிக்கையும் அதன் துணை உடன்படிக்கையான போக் உடன்படிக்கையும் மேலை நாடுகளுக்கும் சீனாவிற்கும் இடையில் ஏற்பட்ட மிக முக்கியமான பிரச்சனையைத் தீர்க்கவுமில்லை, அவ்விரு தரப்பினரையும் திருப்திப்படுத்தவுமில்லை. அயல் நாட்டவர்கள் சீனாவை எவ்வளவுக்கெவ்வளவு கசக்கிப் பிழிய முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு பிழிய விரும்பினர். அவர்களுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்ட சலுகைகள் மிகவும் அதிகமானவை என்று சீனா கருதியது. இதனால் சீனாவிற்கும், பிரிட்டனுக்கும் இடையிலான உறவு முறையில் விரிசல் ஏற்படலாயிற்று. இது போட்டியில் முடிவுற்றது. போட்டி போரில் கொண்டு போய்விட்டது.

**போருக்கான காரணங்கள்**

**1. சீனாவில் ஏமாற்றுத்தந்திரங்கள்**

மேலை நாடுகளுக்கும் கீழை நாடுகளுக்கும் தொடர்ந்து ஏற்பட்ட போட்டிகளின் விளைவாக இரண்டாவது அபினிப்போர் ஏற்பட்டது எனலாம். ராணுவ வெற்றிகளை எட்டியபோதிலும் சீனர்கள் வெளிநாட்டவர்களை அநாகரிமானவர்கள் என்றே கருதி வந்தனர். அவர்கள் வெளிநாட்டவரின்

நாகரிகத்தை வெறுத்தனர். கால தாமதம் செய்வதன் மூலம் தப்பிக்கப் பின்பற்றும் ஏமாற்று பதில்களும் தான் இழந்த நிலையினை அடைய உதவி செய்யும் என சீனா கருதியது.

**2. அபினி வாணிபம்**

அபினி வாணிபப் பிரச்சனை இன்னும் தீர்ந்தபாடில்லை. ஒழுக்கம் அடிப்படையில் அபினி அவர்களைப் பாதித்தது. அபினி வாணிபத்தை சீனா தடை செய்த போதிலும், கள்ளக்கடத்தல் மூலம் அந்த வியாபாரம் நடைபெற்றுக் கொண்டுதானிருந்தது. அதற்கு அயல் நாட்டவர்கள் ஆதரவு கொடுத்து வந்ததை சீனா வெறுத்தது,

**3. கூலிகளின் பிரச்சனை**

சீனாவிலிருந்து ஏராளமான கூலிகள் கலிபோர்னியா, ஆஸ்திரேலியா, கியூபா, பெரு, சிலி அமெரிக்காவின் மேற்குக் கடற்கரைப்பகுதி ஆகிய இடங்களில் வேலை செய்து வந்தனர். அவர்கள் மிகவும் சொற்பமான கூலி பெற்றனர். அவர்கள் நிலை மிகவும் மோசமாக இருந்தது. அந்தக் கூலிகள் அடிமைகளாகக் கருதப்பட்டனர்.

**4. கடற்கொள்ளை**

சீனாவிற்கு அடிக்கடி வந்த வெளிநாட்டுக் கப்பல்கள் கள்ளக்கடத்தல் வியாபாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்தன. போர்த்துக்கீசியக் கப்பல்கள் அடிக்கடி கொள்ளையடித்தலில் ஈடுபட்டன. இதை சீன அரசாங்கம் அறவே வெறுத்தது.

**5. காண்டன் நகரப்பிரச்சனை**

காண்டன் துறைமுகத்திலும் தொல்லைகள் ஏற்பட்டன. தல வியாபாரிகள் காண்டனில் இருந்த வெளிநாட்டவர்களை விரோதிகளாகப் பாவித்தனர்.

அதிகாரிகள், அன்னியர்களை காண்டனில் தங்கி வாழ அனுமதிக்கவில்லை. சீன வணிகர்களே வியாபாரத்தை கவனிக்க முயற்சி செய்தனர். தங்கள் நகரில் பிரிட்டிஸ்காரர்கள் நுழைந்ததை அவமானமாக கருதினார்கள். பிரிட்டிஷ்காரர்கள் சிலரை அவர்கள் கொலையும் செய்தனர். எனவே சீன, ஆங்கிலேய உறவு மிக வேகமாகச் சீர்கெட்டு வந்தது.

**6. விசேஷப் பிரதேச உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்துதல்**

போக் உடன்படிக்கையின்படி மேலே நாட்டவர்கள் விசேஷப் பிரதேச உரிமைகளைப் பெற்றனர். துறைமுக உடன்படிக்கைகளின்படி தங்களுக்கென நீதிமன்றங்களையும், சிறைகளையும் வைத்துக் கொள்ள உரிமை பெற்றனர். அதன் விளைவாக அந்த உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்தலானார்கள்.

**7. யேமின் சின்னின் பிடிவாதமான செயல்கள்**

1852-ல் யே மின் சின் என்பவர் காண்டனின் ஆணையாளராக அமர்த்தப்பட்டார். அவர் அன்னியருக்கு எதிரான போக்குக் கொண்டவர். தெய்வீகப் பேரரசின் மதிப்பை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் அன்னியர்களை மதித்து வரவேற்கக் கூடாதென அவர் எண்ணினார். பதினைந்து மாதங்களாக பிரான்சின் அமைச்சர் காத்திருந்தும் அவரை சந்திக்க முடியவில்லை.

**8. உடன்படிக்கைகளை புதுப்பித்தலில் எழுந்த பிரச்சனை**

1844-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அமெரிக்கா, பிரெஞ்சு நாடுகளுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளில் 1856-ம் ஆண்டில் புதுப்பிக்க வேண்டுமென குறிப்பிடபட்டிருந்தது. 1842-ஆம் ஆண்டில் ஏற்பட்ட நான்கிங் உடன்படிக்கைகளில் அது போன்ற விதிமுறை இல்லை என்றாலும்

அவைகளுக்குக் கொடுக்கப்பட்ட சலுகைகளை குறிப்பாக உடன்படிக்கையினைப் புதுபிப்பது தங்களுக்கும் நீடிக்கப்பட வேண்டுமென பிரிட்டன் கோரியது.

### 3. லோர்ச்சோ ஆரோ கப்பல் நிகழ்ச்சி

போருக்கு மற்றொரு மிக முக்கியமான காரணம் ஆரோக்கப்பல் நிகழ்ச்சியாகும். இது சீனர்களுக்குச் சொந்தமான கப்பலாகும். இக்கப்பல் ஹாங்கிங்கில் பதிவு செய்யப்பட்டிருந்தது. இது ஆங்கிலக் கொடியுடன் ஆங்கிலேயத் தலைவனின் கீழ் இயங்கி வந்தது. காண்டனில் அது தங்கியிருந்த போது சீனர்கள் அதில் புகுந்து அதிலிருந்து மாலுமிகளைக் கொள்ளையர்கள் எனக் குற்றம் சாட்டிக் கைது செய்தனர். பிரிட்டிஷ் தூதுவர் அது தங்களுக்குச் சொந்தமான கப்பல் என்றும் கைது செய்தவர்களை உடனே விடுதலை செய்ய வேண்டுமென்றும் கோரினார். ஆளுநர் யேமின் எவ்வித மன்னிப்பும் கோராமல் அவர்களை விடுதலை செய்தார். பிரிட்டிஷ் தூதுவர் ஹோரி பார்க்ஸ் என்பவர் தங்களுடைய கொடியானது சீனர்களால் கிழித்து எறியப்பட்டதென்றும் அது தங்களது அரசனுக்கும், தங்களுடைய மணிமுடிக்கும் ஏற்பட்ட அவமானமாகும் என்றும் கூறினார். எனவே அதற்கு நஷ்டஈடு தரவேண்டுமென அவர் கேட்டார். சீனர்கள் மறுக்கவே போர் ஆரம்பமானது.

### போரின் போக்கு

ஆங்கிலேய-பிரெஞ்சுப் படைகள் 1858இல் காண்டன் நகரைத் தாக்கி கைப்பற்றிக் கொண்டன. தற்பெருமையுள்ள ஆளுநரான யேமின் கைது செய்யப்பட்டு கல்கத்தாவிற்கு கொண்டு செல்லப்பட்டார். அவர் கைதியாகவே காலம் கழித்து அங்கேயே மாண்டு போனார். காண்டன் வீழ்ந்தவுடன் நேசப்படைகள் பீகிங்கை நோக்கி பீடு நடைபோட்டன. பேய்ஹோவின் முகத்துவாரத்தைப் பாதுகாத்துக் கொண்டிருந்த தாகூர் கோட்டைகள்

தகர்க்கப்பட்டன. அதுவும் வீழ்ந்தவுடன் படைகள் மேலும் முன்னேறிச் சென்றன. இவ்வாறு அப்போர் சீனாவிற்கு நீரிலும் நிலத்திலும் படுதோல்வியைக் கொடுத்தது. இதனால் சீனர் அமைதி நாடி வலுக்கட்டாயமாக வரவேண்டியதாயிற்று.

**டியன்சின் உடன்படிக்கைகள்**

போரில் இங்கிலாந்தும் பிரான்சும் பங்கு பெற்றன. மீதி நாடுகள் போரின் பயனை அடையக் காத்திருந்தன. மிகவுழம் சலுகை பெறத்தக்க நாடு என்ற விதியின்படி எல்லா நாடுகளும் சீனாவிடமிருந்து சலுகைகள் பெற தகுதி பெற்றிருந்தன. அமைதிப்பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து 1856-ஆம் ஆண்டு ஜூன் மாதம் பல உடன்படிக்கைகள் சீனாவிற்கும் மேலை நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டன.

**பிரிட்டனுடனான உடன்படிக்கை**

இந்த உடன்படிக்கையில் 50-க்கு மேற்பட்ட விதிகள் இருந்தன. அவைகளில் முக்கியமானவற்றைக் கீழே காணலாம்.

**1. அதிக துறைமுகங்களைத் திறந்து விடுதல்**

மேலும் பத்து துறைமுகங்கள் திறந்துவிட சீனா ஒப்புக் கொண்டது. 1842-ல் ஆக மொத்தம் 15 துறைமுகங்கள் தற்போது மேலை நாட்டவர்களுக்குத் திறந்து விடப்பட்டன.

**2. அரசாங்கப் பிரதிநிதி தங்க அனுமதி**

பீகிங்கில் அரசாங்கப் பிரதிநிதி ராஜதந்திர உறவுமுறைகளை ஏற்படுத்திக் கொண்டு தங்கி வாழ அனுமதி தரப்பட்டது. இது தூதரங்கள்திறக்கப்பட வழி வகுத்தது.

**3. சமயப் பரப்பு குழுவினர்களுக்கு உரிமை**

எவ்விதத் தடையுமின்றி சீனாவில் உட்பகுதியில் கிறிஸ்துவ சமயத்தைப் பரப்பிக் கொள்ள சமயப் பரப்பு குழுவினருக்கு உரிமை அளிக்கப்பட்டது. அவர்களின் உயிருக்கும், சொத்துக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

**4. தடையின்றிச் செல்ல உரிமை**

அயல் நாட்டவர்கள் தங்கள் தூதுவரின் கையொப்பமிட்ட அனுமதிச் சீட்டைப் பெற்றுக் கொண்டு, சீன அதிகாரிகளின் மேற்கையொப்பமுடன் சீனாவின் எல்லாப் பகுதிகளிலும் சுற்றிவர அனுமதி பெற்றனர்.

**5. சுங்கவரிகள்**

ஐந்து விழுக்காடு நிர்ணயம் செய்யப்பட்ட சுங்கவரி இனி இரு நாடுகளின் ஒப்புதலின் போரில் புதுப்பிக்கப்பட்ட விதி வழி செய்தது. அதாவது சீனா தன் விருப்பப்படி அதை மாற்ற முடியாது. பிரிட்டனின் அனுமதியுடன்தான் அது செய்ய முடியும். இதனால் சீனாவில் பொருளாதாரக் சுதந்திரம் குறைக்கப்பட்டது.

**6. யாங்சிக்கியாங் பள்ளத்தாக்கில் உரிமை பெறுதல்**

சீன அரசாங்கத்திடமிருந்து வளமான யாங்சிக்கியாங் பள்ளத்தாக்கைப் பயன்படுத்திக் கொள்ள பிரிட்டன் உரிமை பெற்றது.

**7. அபினி வாணிபத்தைச் சட்டரீதியாக்குதல்**

அபினி வாணிபம் சட்டபூர்வமாக்கப்பட்டது. திருட்டுத்தனமாக அந்த வியாபாரம் நடைபெறத் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டது.

**8. இழப்பீடு**

பிரிட்டனுக்குப் பெரும் இழப்பீடு தர சீனா ஒப்புக்கொண்டது.

**9. உடன்படிக்கைகளை உறுதிப்படுத்துதல்**

உடன்படிக்கை முடிவு பெற்ற ஒரு ஆண்டிற்குப் பிறகு மீண்டும் பீகிங்கில் இது உறுதி செய்யப்படுதல் வேண்டும் என்பதும் முடிவு செய்யப்பட்டது.

**மீண்டும் பகைமை ஏற்படுதல்**

உடன்படிக்கையை உறுதிப்படுத்த வேண்டி அனைவரும் பீகிங்கில் அவர்கள் கூடினர். மேலை நாட்டுத் தூதுவர்கள் பீகிங்கில் தங்குவதற்கு சீனா நொண்டிச் சாக்குகள் கூறி அதைத் தவிர்க்க முற்பட்டது. மேலும் அதை காண்டன் அல்லது ஷாங்காய் அல்லது டியன்சின் ஆகிய இடங்களில் செய்ய வேண்டுமெனக் கோரியது. இது டியன்சின் உடனபடிக்கையை மீறிய செயல் என பிறநாடுகள் அங்கு வர மறுத்துவிட்டன. இந்த விதமான மீண்டும் பகைமை ஏற்பட்டது.

**கோடைக்கால அரண்மனை தாக்கப்படல்**

ஆங்கிலேய பிரெஞ்சுப்படைகள் பீகிங்கை நோக்கி முன்னேறின. சீனா பேரரசரும் அவரது அமைச்சர்களும ஜெஹோலுக்கு ஓட்டம் பிடித்தனர். எல்ஜின் பிரபுவின் ஆணைப்படி சீனப் பேரரசரின் கோடைக்கால அரண்மனை தாக்கப்பட்டது. அதன் வனப்பு மிக்க எல்லாச் சொத்துக்களும் அழிந்தன. இதனால் சீனர்கள் அடிபணிந்தனர். 1860-ல் ஏற்பட்ட பீகிங் ஒப்பந்தப்படி போர் முடிவுற்றது. மனக்கசப்புடன் அந்த ஒப்பந்தத்தை சீனா ஏற்றுக் கொள்ள நேரிட்டது.

**பீகிங் ஒப்பந்தம் 1860**

1) பீகிங் ஒப்பந்தம் டியன்சின் உடன்படிக்கையினை உறுதிப்படுத்தியது.

2) இதற்கு முந்தைய ஆண்டில் தாகூவில் ஏற்பட்ட மனவேறுபாட்டிற்கு பேரரசர் வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

3) பீகிங்கில் நிலையான பிரிட்டனின் தூதர் தங்கிக் கொள்ள பேரரசர் அனுமதித்தார்.

4) இழப்பீடு தரவும் இசைந்தார்.

5) டியன்சினை, உடன்படிக்கையின் பாற்பட்ட துறைமுகமாக ஏற்றுக்கொண்டார்.

6) ஹாங்காங்கிற்கு எதிரே அமைந்திருந்த கௌலூன் பிரிட்டனுக்கு அளிக்கப்பட்டது.

7) பிரான்சிற்கும், பிரிட்டனுக்கும் முறையே எட்டு மில்லியன் சீன நாணயங்கள் இழப்பீடாகத் தர அது ஒப்புக் கொண்டது.

**ரஷ்யா பெற்ற பலன்கள்**

சீனாவிற்கும் தேசநாடுகளுக்கும் இடையில் பீகிங் ஒப்பந்தம் ஏற்பட ரஷ்யத்தூதுவர் இக்னேஷியவ் பணிபுரிந்தார். அதற்குக் கைமாறாக ரஷ்யா உஸ்ஸுரி ஆற்றிற்குக் கிழக்கேயுள்ள பகுதியைப் பெற்றுக்கொண்டது. அத்துடன் மிக முக்கிய துறைமுகமான விளாடிவாஸ்டாக் கிடைத்தது. இவ்வாறு ரஷ்யா தன் எல்லையை சீனா, கொரியா வரை நீட்டிக் கொண்டது.

**விளைவுகளும் மதிப்பீடும்**

**1. சீனாவின் செயலின்மை வெளிப்படுதல்**

மேலை நாடுகளுடன் ஏற்பட்ட மோதலில் அடித்தளமே ஆட்டம் காண நேரிட்டது. மஞ்சு அரசாங்கத்தின் வலிமையற்ற நிலை இதனால் உலகுக்குத் தெரிய ஆரம்பித்தது. அதைப் பயன்படுத்திக் கொண்டு மேலை நாடுகள் சீனாவை சுரண்ட ஆரம்பித்தன.

**2. இறைமையை இழத்தல்**

சீனா தன் இறைமையை இழந்து தவிக்கலாயிற்று. சீனாவின் உட்பகுதிகளிலும் அன்னிய போர்க் கப்பல்கள் நடமாட அனுமதி வழங்கியது.

சுங்கவரியை 5 விழுக்காடு நிர்ணயிக்க ஒப்புக்கொண்டதோடு அதில் மாற்றம் செய்ய முற்படும் போது பிரிட்டன் அனுமதியுடன் செய்ய வேண்டுமென்று அவர்கள் கோரியதையும் ஏற்றுக்கொண்டது. தன்னுடைய உள் நாட்டு விவகாரங்களில் சீனா சுதந்திரமாக செயல்பட முடியாமல் இவைகள் தடையாக நின்றன.

**பொருளாதாரத்தின் பாதிப்பு**

சுங்கவரி மிகவும் குறைவாக இருந்ததால் மேலை நாடுகளுக்கு அது போட்டி போட முடியவில்லை. சீனாவின் தொழில்கள் பாதுகாப்பின்றி மிகவும் பாதிக்கப்பட்டன.

**மேலை நாட்டவரின் ஆக்ரமிப்பு அதிகரித்தல்**

சீனாவின் வலிமையற்ற கையாலாகாத நிலையினைப் புரிந்து கொண்ட மேலை நாட்டவர்கள் மேலும் ஆக்கிரமிப்பில் ஈடுபடலாயினர், அதன் விளைவாக சீனாவை பல செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்தனர்.

**5. மேலை நாட்டவரின் வாணிபமும் கருத்துக்களும் புகுதல்**

சீனாவுடன் தனிமைக் கொள்கைக்கு விடை கொடுக்கப்பட்டது மாற்றம் என்னும் காற்று சீனாவில் வேகமாக வீசலாயிற்று. பழைய கருத்துக்கள் பரவின. மேலை நாட்டுப்பாணியில் இராணுவ நிர்வாகமும், குழுக்கள் நாட்டின் கருத்துக்களிலும் அமைக்கப்பட்டன.

**6. தொழில் மயமாதல் ஆரம்பம்**

தொழில் மயமாதல் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டு 1878-ல் கெய்ப்பிங் சுரங்கங்கள் தோண்டப்பட்டன. டோங்ஷான் இருப்புப் பாதை கட்டப்பட்டது. 1873-ல் சீனாவின் முதல் தீவிரப் போக்குவரத்துக் குழுமம் ஏற்படுத்தப்பட்டது. அதன்பின் ஹான்யாங் இரும்புத் தொழிற்சாலை திறக்கப்பட்டது.

**மதிப்பீடு**

இவ்வாறு 1860-ல் சீனாவில் பண்டைய நாகரிகமானது தோற்கடிக்கப்பட்டுவிட்டது என்று எவ்வித ஐயமுமின்றிக் கூறலாம். சீனா முழுமையாக மேலைநாடுகளுக்கு திறந்து விடப்பட்டது. ஐரோப்பிய நாடுகள் காண்டனிலிருந்து படிப்படியாக வடக்கு நோக்கி முன்னேறின. ரஷ்யா, சைபீரியன், மஞ்சூரியா எல்லையிலிருந்து பீகிங்கை நோக்கி முன்னேறியது. அவைகளின் முன்னேற்றம் மஞ்சுவம்சத்தின் வீழ்ச்சியை விரைவுபடுத்தியது.

**தைப்பிங் கிளர்ச்சி**

1842-ல் முதல் அபினிப்போர் முடிவுற்ற பின் சீனாவில் ஏற்பட்ட அயல்நாட்டவர்களின் ஊடுருவல்களால் அங்கு உள்நாட்டுச் சிக்கல்கள் விசுவரூபமெடுத்தன. 19-ஆம் நூற்றாண்டில் எழுந்த கிளர்ச்சிகளில் முதன்மையான தைப்பிங் கிளர்ச்சியாகும். அயல்நாட்டினரான மஞ்சு வம்ச அரசர்களைப் பதவிநீக்கம் செய்து சீனாவில் அமைதியை நிலை நாட்ட சீனர்கள் மேற்கொண்ட கிளர்ச்சியே தைப்பிங் கிளர்ச்சியாகும்.

தைப்பிங் என்ற சொல்லுக்கு அமைதி என்று பொருள். மஞ்சு வம்சத்தரசர்கள் அபினிப் போரில் பெற்ற தோல்வியின் விளைவாக சீனாவில் ஏற்பட்ட குழப்பங்களைக் களைந்து அரசியல், சமூகம் மற்றும் பொருளாதார அடிப்படைகளில் அமைதியை நிலைநாட்ட எழுந்ததே இக்கிளர்ச்சியாகும். சீனக் குடியானவர் ஒருவர் தலைமையில் உருவானதாகையால் இதனைக் குடியானவர் கிளர்ச்சி என்றும் கருதலாம். இக்கிளர்ச்சியானது 1850-ல் தொடங்கியது.

**காரணங்கள்**

**1. அரசியல்**

1. சீன மக்களால் அயல் நாட்டவர்கள் என்று கருதப்பட்டும், தமது திறமையின்மை காரணமாகவும் மக்களின் வெறுப்புக்குள்ளான மஞ்சு வம்ச ஆட்சியாளர்களே இக்கிளர்ச்சிக்கு அடிப்படைக் காரணமாயிருந்தனர்.

2. மஞ்சு வம்ச வழித்தோன்றல்கள் திறமையற்றவர்கள் சீனாவில் எழுந்த உள்நாட்டு, வெளிநாட்டுச் சிக்கல்களுக்குத் தீர்வுகாண முடியாமல் தத்தளித்த போது கிளர்ச்சி ஏற்பட்டது.

3. மஞ்சு வம்ச ஆட்சியின் போது கையூட்டு, லஞ்சம் வாங்குதல் ஆகியன பெருகிப் பொருளாதாரம் சீர்குலைந்தது, அத்துடன் மக்களுக்குப் பாதுகாப்பும் அமைதியும் கிட்டவில்லை. அதனால் குழப்பங்கள் மிகுந்த போது கிளர்ச்சிகள் உருவாயின.

**2. இரகசியக் கழகங்கள்**

1. நடுவண் அரசினை மேற்கொண்டிருந்த மஞ்சு மன்னர்கள் திறமையற்றவர்களாக இருந்ததால் ரகசியக் கழகங்கள் பல எழுந்து வேகமாகச் செயல்பட்டு கிளர்ச்சிகளுக்குத் தூண்டுகோலாக இருந்தன.

2. மஞ்சுகளுக்கெதிராகக் கிளர்த்தெழுந்து 'மிங் வம்சத்தை மீட்க' என்ற கோஷங்களையும் மக்களுக்கு வழங்கி விறுவிறுப்பினை ஊட்டினார்கள். அவர்களது பிரச்சாரங்களில் தேசிய உணர்வுகள் மிளிர்ந்தன. அவை அரசுக்குப் பல இன்னல்களை அளித்தன.

3. 1831-ல் 'டிரெயாட் (Triad) மற்றும் 'யே' (Yae) ஆகிய கழகங்கள் ஹீனானில் அமைதியின்மையை உருவாக்கிய போது 'வெள்ளைத் தாமரைக் கழகம்'

(White Lotus Society) ‘சொர்க்கம் மற்றும் பூமிக்கழகம்’ (Heaven and Earth Society) ஆகியனவும் மக்களைக் கிளர்ச்சிக்குத் தூண்டித் தயார்படுத்தின.

**2. பொருளாதாரம்**

1. அப்போதைய சீனாவில் தடுமாறிக் கொண்டிருந்த பொருளாதாரக் குழப்பம் தைப்பிங் கிளர்ச்சிக்கு வழிகோலியது.

2. விவசாயத்தைப் பெரிதும் நம்பியிருந்த சீனாவில் குடியானவர்களின் நிலை இரங்கதக்கதாயிருந்தது.

3. உணவுத் தேவை, வேலையின்மை ஆகிய சிக்கல்களும் மக்களைக் கிளர்ந்தெழச் செய்தன.

4. வாணிபப் பெருக்கம் காரணமாக விவசாயத்தின் மீதான கவனம் குறைந்தது. பயிர் நிலங்கள் பாழடையலாயின. உற்பத்திக் குறைவுடன், வரிக்கோட்பாடுகளும் விவசாயிகளையும் மக்களையும் பாதித்தனர். அதனால் உண்டான வெறுப்புணர்வு கிளர்ச்சியாக மலர்ந்ததில் வியப்பொன்றும் இல்லை.

5. அயல்நாட்டவரின் வாணிப ஆதிக்கப் பெருக்கம் காரணமாக சீனக் கைத்தொழில்கள், குடிசைத்தொழில்கள் ஆகியவை பாதிக்கப்பட்டன.

6. அபினி வர்த்தகம் சீனாவின் பொருளாதாரத்திற்குப் பெருந்தீங்காக விளங்கியது. செம்பு நாணயங்கள் மதிப்பிழந்து, வெள்ளி நாணயங்கள் அந்நிய வர்த்தகர்களின் கையில் அடைக்கலம் புகுந்தபோது பணவீக்கம் ஏற்பட்டது. மக்கள் துன்பமடைந்தனர்.

7. வெளிநாட்டு வணிகர்களின் சுரண்டல்களுடன் வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பித் தருவதில் ஏற்பட்ட செலுத்து நிலைச் சிக்கல்களும் சீனப் பொருளாதாரத்தைச் சிதைவுறச் செய்தன.

8. விவசாயிகளுடன் கடும் வரிச்சுமைகளுக்கு வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பித் தருவதில் ஏற்பட்ட செலுத்துநிலைச் சிக்கல்களும் சீனப் பொருளாதாரத்தைச் சிதைவுறச் செய்தன.

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கிச் சிதறுண்டு கொண்டிருந்தபோது மன்னர் மக்களின் நலனில் நாட்டமற்றவராக ஆடம்பர வாழ்க்கையுடன் மகிழ்வுற்றிருந்தார். எனவே சீர்கேடடைந்த பொருளாதாரம் மக்களைக் கிளர்ச்சி செய்யத்தூண்டியது.

**4. படையெடுப்பு**

1839 முதல் 1842 வரை நடைபெற்ற முதல் அபினிப் போரின் போது உருவாக்கப்பட்ட படைமானிய அடிப்படையிலான படை வீரர்களிடம் இந்த ஆயுதங்களை அரசு திரும்பப் பெறவில்லை. எனவே முதல் அபினிப் போருக்குப்பின் சீனாவில் ஏற்பட்ட சிக்கல்களின் போது அவ்வீரர்கள் அந்த ஆயுதங்களைப் பயன்படுத்திக் கொண்டு தம்மை வறுமை நிலையில் இருந்து மீட்டுக்கொள்ள கொள்ளை, திருட்டு ஆகியவற்றில் ஈடுபட்ட போது கிளர்ச்சிகள் பெறலாயின.

**5. சமூகச் சிக்கல்கள்**

1. போர் இழப்பீட்டுத் தொகையைச் செலுத்துதல், போர்களினால் ஏற்பட்ட பொருளாதார இழப்பினைச் சரிக்கட்டுதல் ஆகிய காரணங்களுக்காக அரசு வரிகளைச் சுமத்தியபோது, நவீன முறைகளில் இல்லாமலும் வேறு பல காரணங்களாலும் ஏற்கனவே வறுமையில் உழன்று கொண்டிருந்த, விவசாயிகள் பாதிக்கப்பட்ட போது அவர்கள் கிளர்ச்சியில் ஈடுபடலானார்கள்.

2. ஐரோப்பியத் தொழிற்புரட்சியும், வாணிபப் பெருக்கமும் சீனர்களைப் பாதித்தன. அத்துடன் வெளிநாட்டவர் சீனாவில் தாராளமாக நடமாட

அனுமதிக்கப்பட்ட போது சீனப் பண்பாடும் பாதிப்பிற்குள்ளானது. இக்காரணங்களால் சீனச் சமுதாய அமைப்பு சீர்குலைந்தது.

3. ஹுவாங்டுங் மற்றும் ஹுவாங்ஷி ஆகிய பகுதிகளி குடியேறி ஹக்கா என்னும் பிரிவினா் அப்பகுதியில் வாழ்ந்த மக்களுடன் அடிக்கடி சண்டையிட்ட போது சமூக ஒற்றுமை குலைந்து அமைதியின்மை அதிகரித்தது.

4. 1846-47ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளமும், கடும் பஞ்சங்களும் மக்களைத் துயர வெள்ளத்தில் ஆழ்த்தின.

5. மன்னரின் தவறான போக்குகளும் திறமையின்மையுமே மக்களின் இன்னல்களுக்குக் காரணமெனப் பொதுமக்கள் எண்ணலாயினா். குறிப்பாக நான்கிங் உடன்படிக்கையின் மூலம் சீனா்களின் மதிப்பு குறைக்கப்பட மன்னரே காரணமென அவா்கள் கருதினா்.

**6. சமயச் சிக்கல்கள்**

பொருளாதாரம், அரசியல், சமூகக் குறைபாடுகள் ஆகியவற்றுடன் சமய அடிப்படையிலான சிக்கல்களும் தைப்பிங் கிளா்ச்சிக்குக் காரணமாயிருந்தன.

1. ஹுங்சியு சுவான் என்பவா் வாழ்க்கையில் தமக்கு ஏற்பட்ட தோல்விகள் காரணமாக அப்போது செல்வாக்குப் பெற்றுக் கொண்டிருந்த கிறித்தவ சமயத்தைத் தழுவினாா். அத்துடன் 'இறைவழிபாட்டுக் கழகம்'' (God Worshipping Society) என்ற அமைப்பு ஒன்றினை நிறுவி 'பெரும் அமைதியான இறையியல் அரசு' (Heavenly Kingdom of Great Peace)தனை உருவாக்க முயன்றாா். ஏசுபிரானுக்கு அடுத்த இடம் பெற்றவராகத் தம்மை வா்ணித்துக் கொண்ட அவா் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றாா். அமைதியற்ற குழப்பமான நிலையிலிருந்து மக்களுக்குத் துயரங்களிலிருந்து விடுவித்துக் கொள்ள ஒரு வழிகாட்டியாக அவா் விளங்கினாா். தனிநபா் செல்வாக்கைப்

பயன்படுத்தி அரசியல் மாற்றத்திற்கு அவர் முயன்றபோது மக்கள் அவர் ஆதரவுடன் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர்.

**தைப்பிங் கிளர்ச்சியின் போக்கு**

இப்பூலகிலிருந்து அனைத்துத் தீமைகளையும் அகற்றக் கடவுள் தம்மைப் பூமிக்கு அனுப்பியுள்ளார் எனக் கருதிய ஹீங் சியு சுவான் தம்மை 'இறைமன்னர்' என்றழைத்துக் கொண்டதுடன் 'முழுமையான அமைதி' (தைப்பிங்) என்ற அமைப்பினையும் உருவாக்கினார். 1850-ல் தோற்றுவிக்கப்பட்ட அவ்வமைப்பு மூன்றாண்டுகட்குள்ளாக வே ஹுனான், ஹீபோ, ஹீவாங்சி போன்ற மாநிலங்களில் செல்வாக்குப் பெற்றது. ஹான்யாங், வூஹி போன்ற பிற மாநிலங்கள் 'அவர்களுடைய கட்டுப்பாட்டில்' வந்தபோது 1853-ல் அவர்கள் நான்கிங்கைத் தமது தலைமையிடமாக ஆக்கிக் கொண்டனர்.

தம்மை 'டியென்வாங்' அல்லது கடவுள் தூதமன்னர் என்றழைத்துக் கொண்ட அவர் தமக்குக் கீழ் இயங்கிவரப் பல சிறு மன்னர்களையும் நியமனம் செய்தார். அவர்கள் மஞ்சு வம்சத்தின் மன்னரது புகழினைப் பலவழிகளிலும் தாழ்வுறச் செய்ததுடன் தென் சீனப் பகுதிகளில் தமது செல்வாக்கினைப் பெருக்கிக் கொண்டார்கள்.

பீகிங் நகரைக் கைப்பற்றும் எண்ணத்துடன் கிளர்ச்சியாளர்களின் படை முன்னேறியபோது மஞ்சு அரசு அவர்களது உண்மையான நோக்கத்தைப் புரிந்து கொண்டது. தைப்பிங் அபாயத்தைத் தடுக்கக்கூடிய முயற்சிகளில் அரசு ஈடுபடலாயிற்று.

ஏறத்தாழ பதினோரு ஆண்டுகள் காலத்திற்கு நான்கிங் அவர்களது தலைநகராக இருந்த போதிலும் அவர்களால் நிலையாக எந்தச் செயலையும் சாதிக்கமுடியவில்லை. அவர்களுடைய ஆட்சி சமயத்தொடர்புடையதாக

இருந்தாலும், ஹீங் சியூ சுவானுக்குப் பின் திறமையான தலைவர்கள் இல்லாததாலும், மஞ்சு அரசு தக்க தருணத்தில் விழித்துக் கொண்டதாலும் கிளர்ச்சியாளர்கள் தோல்வியுற்றனர்.

**தைப்பிங் சீர்திருத்தங்கள்**

ஹீங் சியூ சுவானின் பத்தாண்டு கால ஆட்சியின் போது தனது ஆதரவாளர்களின் துணையுடன் பல சீர்த்திருத்தங்களை அவர் மேற்கொண்டார். அச்சீர்திருத்தங்கள் நான்கிங்கிலிருந்து செயல்வடிவம் பெற்றன. சமுதாய உடமை, சமத்துவம், சகோதரத்துவம்,பால் வேறுபாடின்மை ஆகிய கருத்துக்களின் அடிப்படையில் தைப்பிங் சீர்திருத்தங்கள் உருவாக்கப்பட்டிருந்தன.

**கிளர்ச்சியின் முடிவு**

நாட்டின் மக்கள், நிலம், பொருட்கள் ஆகிய அனைத்துமே கடவுளுக்கே சொந்தமானவையேயன்றி மஞ்சு வம்சத்து மன்னர்களுக்கு அல்ல என்ற கொள்கையில் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை வெகுகாலத்திற்கு நீடிக்கவில்லை. தைப்பிங் கிளர்ச்சியானது தோல்வியில் முடிவுற்றது. அரசியல், பொருளாதாரம் போன்ற பல நிலைகளிலும் செய்வதறியாது தவித்துத் தத்தளித்துக் கொண்டிருந்த மஞ்சு அரசுக்கு ஐரோப்பிய நாடுகளனைத்தும் ஏகோபித்த ஆதரவைத் தந்தமையால் தைப்பிங் கிளர்ச்சிகள் ஒடுக்கப்பட்டன.

**தைப்பிங் சீர்திருத்தங்கள்**

தைப்பிங் அரசு சமய அடிப்படையில் தோன்றியதேயாகும். அதில் சமய, சிவில், ராணுவ, பண்பாட்டு, சமுதாய, துறைகளின் இழைகள் ஒன்றோடு ஒன்று பின்னப்பட்டு காட்சியளித்தன. அவர்களுடைய புதிய சமய அரசியல் ‘கடவுள்

தெய்வீகத்தந்தை' என்றும் 'ஏசு தெய்வீகமூத்த சகோதரன்' என்றும் ஹங், தெய்வீக இறைவழி சகோதரன் என்றும் கருதப்பட்டனர். ஆரம்பத்தில் ஹங் 'இறைவழி சகோதரன் என்றும் கருதப்பட்டனர். ஆரம்பத்தில் ஹங் 'இறைவழி பாட்டுக் கழகம்' என்பதை நிறுவினார். அவர் ஏற்படுத்திய புதிய சமயம் கத்தோலிக்க கோட்பாட்டைக் காட்டிலும் புராட்டஸ்டண்டு கோட்பாட்டை அதிகம் பெற்றிருந்தது.

**தைப்பிங்குகளின் அரசியல் நிர்வாகம்**

ஹங்சியு சுவான் ஏற்படுத்திய அரசிற்கு 'முற்றிலும் அமைதி நிலவும் இறை அரசு' என்று பெயர் (தைபிங்தீன்குவோ). அவர் தன்னை 'தெய்வீக மன்னன் (தீன்வாங்) என்று அழைத்துக் கொண்டார். அவர்களுடைய வம்சம் 'தையிங்' என்று அழைக்கப்பட்டது. அவருடைய தலைநகரம் நான்கிங். அவருக்கு உதவியாக நான்கு மன்னர்கள் (வாங்ஸ்) நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் முறையே

1. யாங் (கீழைப் பகுதியின் மன்னன்)
2. பெங் (தென் பகுதியின் மன்னன்
3. சியாவோ (மேலைப் பகுதியின் மன்னன்)
4. வெய் (வடபுல மன்னன்)

இவர்களை தவிர 'ஷிஹ்' என்பவர் துணை மன்னராக நியமிக்கப்பட்டார். பல அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

**சமூகப் புனரமைப்பு**

மஞ்சு வம்சத்தை தூக்கி எறிய வேண்டுமென்று எண்ணியதோடு சமுதாயத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். அதன் விளைவாக அவர்கள்,

1. அபினிப் பழக்கத்தை அறவே ஒழித்தனர்.

2. சிசு வதையினை தடுத்து நிறுத்தினர்.

3. புகையிலைப் பழக்கத்திற்கு முடிவு கட்டினர்

4. மது அருந்துவது ஒழிக்கப்பட்டது.

5. விபச்சாரம் ஒழிக்கப்பட்டது.

6. கால்களைக் கட்டுவது, பெண்களை விற்பது தடுக்கப்பட்டது.

7. சூதாட்டம் நீக்கப்பட்டது.

8. பலதார மணம் தடை செய்யப்பட்டது.

9. கைரூட்டு வழங்குதல் ஊழல் குற்றமாகக் கருதப்பட்டது.

10. மொத்தமாகத் தண்டனை வழங்குவதும், கொடுந்தண்டனைகளும் நீக்கப்பட்டன.

11. அடிமைத்தனம் அகற்றப்பட்டது.

12. ஆசை நாயகிகளை வைத்துக் கொள்வது ஒழிக்கப்பட்டது.

13. தைபிங்குகள் ஆரம்பத்தில் தூய்மைக் கொள்கையைப் பின்பற்றினர். பெண்களுக்கு முழுச் சுதந்திரம் வழங்கப்பட்டது. அவர்களுக்கு அரசாங்க, ராணுவப்பதவிகள் கொடுக்கப்பட்டன. கலைகள் ஊக்குவிக்கப்பட்டன.

14. கைவேலை, பின்னல் வேலை, நெசவு சிற்ப வேலை ஆகியவை ஊக்குவிக்கப்பட்டன.

15. அயல்நாட்டவர்கள் சகோதரர்களாகப் பாவிக்கப்பட்டனர். அநாகரிக மாணவர்களாகக் கருதப்படவில்லை.

**பொருளாதார சீரமைப்பு**

பொதுநல நோக்குடன் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு பங்கீட்டுமுறைப் பொருளாதாரம் அமுலாக்கப்பட்டது. ஆண்கள் வாணிபம்,

விவசாயம் போன்ற தொழில்களில் ஈடுபட்டபோது பெண்கள் பட்டுப்பூச்சி வளர்த்தல், கோழி வளர்த்தல் போன்ற வீட்டுப் பணிகளில் ஈடுபட்டு ஓய்வு நேரத்தைப் பயனள்ளதாகக் கழிக்க வகை செய்யப்பட்டது.

**நிலச்சீர்திருத்தங்கள்**

தனிப்பட்டோர் நிலம் சொத்து உரிமைகளை ஒழித்து பொதுவுடமையினைப் புகுத்தியது தைப்பிங்குளின் சீர்த்திருத்தங்களிலேயே தலையானதாகும். ஒவ்வொரு குடியானவனும் தன் வாழ்க்கைக்குத் தேவையான நிலத்தைப் பெற ஒரு புரட்சிகரமான நிலப்பங்கீட்டினை அவர்கள் கொண்டுவந்தனர். 1853-ல் குடியானவர்களுக்கான சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது. அதன்படி விண்ணின் கீழுள்ள எல்லா நிலங்களும் விண்ணின் கீழுள்ள எல்லோராலும் பயிர் செய்யப்பட வேண்டும் என்பது அறிவிக்கப்பட்டது.

**கம்யூன் முறை**

இந்த எளிய சமத்துவக் கோட்பாடு செயல்முறைப்படுத்தப்பட்டது. அந்தச் சட்டப்படி பதினாறு வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு ஆணும், பெண்ணும் நிலப்பங்கினைப் பெற தகுதியுள்ளவர்களாவார்கள். பதினாறுக்கும் கீழுள்ளவர்கள் அந்த நிலப்பங்கில் பாதியைப் பெற்றனர். செழிப்பைப் பொறுத்து நிலமானது ஒன்பது வகைகளாகப் பிரிக்கப்பட்டது. நிர்வாகத்தின் சிறிய அளவு குடும்பமாகும். ஒவ்வொரு குடும்பமும் ஐந்து பெட்டைக் கோழிகளையும் இரண்டு பெண் பன்றிகளையும் வைத்திருத்தல் வேண்டும். இருபத்தைந்து குடும்பங்கள் சேர்ந்து ஓர் சமுதாயப் பிரிவாக அமைக்கப்பட்டது.

அவர்களுக்கென பொதுவான ஒரு கிடங்கு, ஒரு திருச்சபை, அவர்களுடைய சமய மற்றும் பிற சடங்குகளை கவனிக்க ஒரு தலைவர்

ஆகியோர் இருந்தனர். அந்தத் தலைவர் அந்த 25 குடும்பங்களில் சிவில், கல்வி, சமயநிதி, நீதி சார்பான விஷயங்களைக் கவனித்து வந்தார்.

**இராணுவ சிவில் நிர்வாகத்திற்கு இடையிலான உறவு**

தைபிங்குகளின் ஆட்சியில் சிவில், ராணுவத்துறைகள் இணைந்து செயல்பட்டது ஒரு சிறப்பு அம்சமாகும். அதிகாரிகள் சிவில் ராணுவக் கடமைகளைச் செய்ய பணிக்கப்பட்டனர். ராணுவத்தில் கடுமையான ஒழுக்கம் கடைப்பிடிக்கப்பட்டது. கொள்ளையடித்தலையும், ஊழலையும் தடை செய்தார்கள். மஞ்சு அதிகாரிகளை கடுமையாக நடத்தினர். பெரும் நிலப்பிரபுக்களும், வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களும் வாட்டி வதைக்கப்பட்டனர். பெண் படைப்பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது. ராணுவத்தில் நான்கில் ஒரு பங்கு பெண்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

**பண்பாட்டிற்கும் சமயத்திற்கும் உள்ள தொடர்பு**

தைபிங் அரசியல் கிறிஸ்தவக் கோட்பாடுகள் முக்கிய இடத்தைப் பெற்றன. 478 வாக்கியங்களைக் கொண்ட இலக்கியம் ஒன்று புதிதாகப் படைக்கப்பட்டது. அது ஹங்கின் விவிலிய நூலைப் பற்றிய திறனாய்வின் அடிப்படையில் எழுதப்பட்டது. அது குழந்தைகளுக்காக எழுதப்பட்டதாகும். அந்த நூலின் ஆரம்பப் பக்கத்தில் ‘கடவுள் நம் தலைவர்’ என்றும் ‘அவர் விண்ணையும், மண்ணுலகையும், மலைகளையும், கடல்களையும் படைத்துள்ளார்’ என்றும்,‘அதில் எல்லாப் பொருள்களும் உள்ளனவென்றும் அவைகள் ஆறு நாட்களில் உருவாக்கப்பட்டன’ என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. பத்துக் கட்டளைகளே அவர்களுடைய கோட்பாட்டின் அடிப்படையாகும்.

**சிவில் சர்வீஸ் தேர்வு**

நிர்வாக அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்க தைபிங்குகள் சிவில் சர்வீஸ் தேர்வுகளை நடத்தினர். மஞ்சு ஆட்சி முறையில் தேர்வில் இலக்கிய நடை எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தைபிங்குகள் எளிய மொழியில் எழுதலாமென அறிவித்தனர். கன்பூசிய கோட்பாடுகள் தேர்வில் கேட்கப்படவில்லை. பைபிளிலிருந்து சில கோட்பாடுகள் தேர்வுகளில் கேட்கப்பட்டன.

**பிற சீர்திருத்தங்கள்**

ஒரு ஆண்டுக் கணக்கு முறை (காலண்டர்) புகுத்தப்பட்டது. அது சந்திரன், சூரியன் ஆகியவற்றைக் கொண்டு கணக்கிடப்படும் முறையல்ல. பல சமூகச் சீர்திருத்தங்கள் பல புகுத்தப்பட்டன. நோயால் பீடிக்கப்பட்டவர்கள், விதவைகள், அனாதைகள் ஆகியோர் பயன் பெறும் வகையில் அவைகள் அமைந்தன. நீர்ப்போக்குவரத்து வளர்ச்சி பெற்றது. இருப்புப் பாதைகள் போடப்பட்டன. வெள்ள, பஞ்ச நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**முதல் சீன-ஜப்பானியப் போர்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரையில் ஜப்பானை ஒரு பிற்பட்ட நாடாகவே சீனா கருதி வந்தது. அந்த எண்ணம் அந்நூற்றாண்டின் பிற்பகுதியில் மாற்றப்பட்டு விட்டது. சீனா மேலை நாடுகளால் அவமானப்படுத்தப்பட்டு துன்பத்திற்குள்ளாக்கப்பட்டதாலும், உள்நாட்டுக் கிளர்ச்சி ஏற்பட்டு அரசை நிலைகுலையச் செய்தாலும், ஜப்பான் தன் வலுவையும் பொலிவையும் காட்ட ஆரம்பித்தது. காலத்திற்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டு மேலை நாடுகளின் தொடர்பையும் ஏற்படுத்திக் கொண்டு அது பெரும் சக்தி வாய்ந்த நாடாக எழுச்சி பெற்றது.

**போருக்கான காரணங்கள்**

**லி ஈடோ ஒப்பந்தம் 1871**

மெய்ஜியின் மீட்சிக்குப் பிறகு ஜப்பான் தன்னம்பிக்கை பெற்ற நாடாக விளங்கி, சீனாவுடன் நல்லுறவினை ஏற்படுத்திக் கொள்ள விழைந்தது. வாணிபத்தில் மேலை நாடுகள் பெற்ற சலுகையைத் தானும் அங்கிருந்து பெற விருப்பம் கொண்டது. சீனர்கள் அவ்வாறு கொடுக்க மறுத்தனர். மேலும் சீனாவில் ஜப்பானியர்கள் தடையின்றி செல்ல தடைவிதிக்கப்பட்டது. எனவே சீன ஆளுநரான லிஹுங்சன் என்பவருடன் பேச்சுவார்த்தைகள் மூலம் ஒரு உடன்பாடு செய்து கொள்ள ஜப்பானிலிருந்து, புகழ் வாய்ந்த கவுண்ட்ஈடோ என்பவரின் தலைமையில் குழு ஒன்று சென்றது. அதன்படி ஒரு உடன்பாடு செய்யப்பட்டது. அதன் விதிகளாவன

1. ஒருவருக்கொருவர் தங்கள் பகுதிகளில் ஆக்கிரமிப்பில் ஈடுபடுதல் கூடாது.
2. மூன்றாவது நாடு ஆக்கிரமிப்பில் அல்லது போரில் ஈடுபட்டால் இந்த இரு நாடுகளும் உதவி செய்து கொள்ளுதல் வேண்டும்.
3. பரஸ்பரம் தூதரகங்களை நிறுவிக் கொள்ள வேண்டும்.
4. உடன்படிக்கையில் கண்ட துறைமுகங்களில் வாணபம் செய்யவும், சங்கவரியினை நிர்ணயம் செய்யவும் உரிமை வழங்க வேண்டும்.
5. ஜப்பானிய வணிகர்களுக்கு தூதுவர்களை சீனாவில் அமர்த்துதல் கூடாது.

**லூச்சோ தீவுப் பிரச்சனை**

சீனாவிற்கும் ஜப்பானுக்கும் இடையிலான உறவில் 1874-ல் விரிசல் ஏற்பட்டது. அதற்குக் காரணம் லூச்சோத் தீவில் ஒரு கப்பல் தரை தட்டிய போது அதன் பிரயாணிகளை பார்மோசா தீவிலிருந்த காட்டுமிராண்டிகள் கொன்று விட்டனர் என்பதேயாகும். அத்தீவை சீனாவும், ஜப்பானும் தங்களுடைய திறை

செலுத்தும் பகுதியென நீண்ட வருடங்களாக உரிமை கொண்டாடி வந்தன. அது மாறிமாறி இருவர் கைகளிலும் இருந்து வந்தது. அப்போது ஜப்பானிடமிருந்தால் அது இழப்பீடு கோரியது. சீனா அதன் உரிமையை உதாசீனம் செய்ததால் இரு நாடுகளுக்கிடையில் கைகலப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டது. பிரிட்டன் அதில் தலையிட்டு அதை நிறுத்தியது. 1879-ல் ஜப்பான் லூச்சோத் தீவைத் தாக்கிப் பிடித்துக் கொண்டதால் அதன் அபாயத்தை சீனர்கள் நன்கு உணரலானார்.

**ஜப்பானின் கொரியாக் கொள்கை**

ஜப்பானின் கொரியாக் கொள்கை மூன்று நோக்கங்களில் அமைந்திருந்தது. முதலாவதாக, எந்த ஒரு பகைமை நாடும் கொரியாவை பிடித்துக் கொண்டு அதைத் தளமாக அமைத்துக் கொண்டு ஜப்பானைத் தாக்கக்கூடாது. இரண்டவதாக, ஜப்பான் ஒரு பேரரசை ஏற்படுத்தப் பேரவா கொண்டது. அதற்குக் கொரியா முதற்படியாக இருக்க வேண்டும் என அது விரும்பியது. மூன்றாவதாக, ஜப்பான் ஒரு தொழில் வளம் நிறைந்த நாடாக வளர்ச்சி பெற்றதால் தன்னுடைய வாணிபத்திற்கும் அமிதமான மக்கள் தொகைக்கும் ஒரு இடமாக கொரியா அமையும் என அது எண்ணியது.

**ஜப்பானுக்கும் கொரியாவிற்கும் இடையிலான உடன்பாடு**

ரஷ்யா ஒரு பெரும் வல்லரசாக வளர்ந்து வருவது கொரியாவிற்கு ஆபத்து என்றும், கொரியாவை அது தன் மார்பை நோக்கி குறி வைக்கும் துப்பாக்கி போன்றது என்றும் ஜப்பான் கருதியது. கொரியாவை தன் கீழ் கொண்டு வர வேண்டும் என ஜப்பான் 1876-ல் ஒரு குழுவை அங்கு அனுப்பியது. அதன்படி அவ்விரு நாடுகளுக்கு இடையில் கிங்லா உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி கொரியாத் துறைமுகங்களில் வாணிபம் செய்து கொள் உரிமையினையும்

விசேஷ பிரதேச உரிமைகளையும் ஜப்பான் பெற்றுக் கொண்டது. அந்த உடன்பாட்டில் கொரியா சுதந்திர நாடு என்று அறிவிக்கப்பட்டது. சீனா அதை சற்றும் கவனிக்கவில்லை.

**லி-ஈடோ ஒப்பந்தம் (1885)**

கொரியாவில் சிக்கலை சீராக்க ஜப்பானின் புகழ் வாய்ந்த அரசியல் நிபுணரான ஈடோ பீகிங் சென்று லியுடன் பேசலானார். 1885-ல் லி-ஈடோ ஒப்பந்தம் டியன்சினில் கையெழுத்தாயிற்று. அது சீன-ஜப்பானிய உறவு முறையில் ஒரு புதிய கட்டத்தை ஏற்படுத்தியது. அந்த ஒப்பந்தத்தின்படி,

1. சீனாவும், ஜப்பானும் தங்கள் படைகளை கொரியாவிலிருந்து விலக்கிக் கொள்ள ஒப்புக்கொண்டன.

2. கொரியாவின் உள்நாட்டு விவகாரங்களில் எந்த நாடும் தலையிடக் கூடாதென ஒப்பந்தம் கூறியது.

3. நெருக்கடி ஏற்படும் போது முன் அறிவிப்பின்படி இருநாடுகளும் தங்கள் படைகளை அங்கு அனுப்ப வேண்டும். இந்த லி-ஈடோ ஒப்பந்தமானது சீனாவிற்கு ஏற்பட்ட அரசியல் தந்திரத் தோல்வியாகும்.

**பிற காரணங்கள்**

1. கொரியாவின் இராணுவம் அயல்நாட்டு மேற்பார்வையில் சீராக்கப்பட்டது. அப்பணியில் ரஷ்யர்கள் ஈடுபட்டனர். அப்பணிக்கு ஈடாக அதற்கு லாசரோவ் துறைமுகம் அளிக்கப்பட்டது. அது பணியற்ற கப்பற்படைத் தளமாகும். சீனா அதற்கு எவ்வித மறுப்பும் தெரிவிக்கவில்லை. ஆனால் ஜப்பான் தன்னுடைய பாதுகாப்பிற்கு பங்கம் ஏற்படும் என்று கருதியது. 1891-ல் ஏற்கனவே ரஷ்யா,பிரான்ஸ், சைபீரியன் இருப்புப் பாதையினைக் கட்ட ஆரம்பித்தது ராணுவ

பீதியை ஏற்படுத்தியது. வளர்ந்து வரும் ரஷ்ய செல்வாக்கைத் தடுத்து நிறுத்த எதிர் நடவடிக்கைகளில் ஜப்பான் ஈடுபட்டது.

2. ஜப்பான் பொருளாதார ரீதியில் கொரியாவை நாட ஆரம்பித்தது. கொரியா வளமும் நலமும் கொண்ட நாடு, நெல் ஏராளமாக விளைந்தது. உணவுப் பஞ்சத்தால் வாடிய ஜப்பானுக்குக் கொரியாவைத் தன் கீழ் கொண்டு வந்தால் அந்நிலையினை மாற்ற முடியும் என்று எண்ணியது.

3. ஜப்பானில் ஈடோவற்கு எதிராக எதிர்ப்புகள் மலை போல் பெருகின. அதனால் அவர் மக்களின் கவனத்தைத் திருப்ப வேண்டி போரில் ஈடுபட நினைத்தார்.

4. கொரியாவில் ஏற்பட்ட கலவரம் ஜப்பானின் வணித்திற்கு தீங்காக அமைந்தது. கொரியாவின் அரசியல் கட்சிகளுக்கு இடையில் ஏற்பட்ட சண்டைகளை நிறுத்தி அமைதி கண்டால்தான் தன் வாணிபம் வளமடையும் என ஜப்பான் எண்ணியது.

5. சீனா போரில் ஈடுபட தனக்கென சில காரணங்களை பெற்றிருந்தது. இதுவரையில் அது கொரியாவில் அமைதிக் கொள்கையைப் பின்பற்றியது. இதனால் அது தன் இறைமையை இழக்க நேர்ந்தது. இந்தத் தருணத்தில்தான் அந்த கொள்கையினை சீராக்க கொள்ள முடியும் என அது திட்டமிட்டது. எனவே போரில் ஈடுபட்டது.

**உடனடிக் காரணம்**

**டோங்காக் கிளர்ச்சி**

கொரியாவின் சமயவாதிகளான டோங்காக்குகள் என்பவர்கள் அரசியல் நிறுவனமாக மாறி செயல்படலானார்கள். அவர்கள் கீழைநாட்டுக் கல்விக் கழகத்தவர் என்று அழைக்கப்பட்டனர். அவர்களின் இயக்கம் அயல் நாட்டவர்களுக்கு எதிரானது. கிறிஸ்தவர்களுக்கு மாறானது.

ஜப்பானியர்களுக்கும் எதிரானதாகும். அவர்கள் ஊழல் அதிகாரிகளை ஒழிக்க வேண்டும் என எண்ணினர். ஆகவே அலுவலகங்களில் புகுந்து அவர்களைக் கொன்று குவித்தனர். அவர்களால் ஏற்படுத்தப்பட்ட கலகத்தில் ஜப்பானிய ஆதரவு பெற்ற முன்னேற்றக் கட்சியின் தலைவரான கிமாலுக்கி என்பவரும் கொலை செய்யப்பட்டார்.

இதனால் குழப்பம், கொந்தளிப்பும் எங்கும் பரவலாக ஏற்பட்டது. இக்கிளர்ச்சியை அடக்க முடியாமல் திணறிய கொரியா சீனாவின் உதவியை நாடியது. டியன்சினில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி இதை ஜப்பானுக்கு சீனா தெரிவித்துவிட்டுத் தன் படைகளை அங்கு அனுப்பியது. சீன ஜப்பானியத் துருப்புகள் கொரியாவை வந்தடைவதற்குள் டோங்காக் கலகம் அடக்கப்பட்டு விட்டது. கொரியாவிலிருந்து சீனா தன் துருப்புக்களை விலக்கிக் கொள்ள மறுத்தது. ஜப்பான் அதை எதிர்த்தது. எனவே ஜப்பான் 1894-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் நாள் சீனா மீது போர்த்தொடுத்தது.

**போரின் போக்கு**

சீனாவிற்கும், ஜப்பானுக்கும் ஏற்பட்ட போரில் சீனா தோற்கடிக்கப்பட்டது. ஜப்பான் வெற்றி பெற்றது. சீனா பெரிய நாடாக இருந்தாலும், பல ஆயிரக்கணக்கான வீரர்களைப் பெற்றிருந்தும் படுதோல்வி அடைந்தது. ஜப்பானின் இராணுவமும், கப்பற்படையும் நன்கு மேலைநாட்டு பாணியில் பயிற்சியினையும், ஆயுதங்களையும் பெற்றிருந்தன. மஞ்சூரியா வழியாக சீனாவை தாக்க முற்பட்டபோது மஞ்சூரிய அரசாங்கம் ஜப்பானுடன் ஒரு உடன்பாடு செய்து கொண்டது.

**ஷிமொனோஷெகி உடன்படிக்கை : 1895**

1895-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ம் நாள் சீனாவிற்கும், ஜப்பானுக்கும் இடையில் ஷிமொனோஷெகி என்ற உடன்படிக்கை ஏற்பட்டது. அதன் விளைவுகளாவன

1. கொரியாவிற்கு முழுமையான சுதந்திரம் அளிக்கப்பட்டது.

2. பார்மோசா, பெஸ்கடோரஸ் தீவு, லியோடுங் தீபகற்பம், ஆர்தர் துறைமுகம் ஆகியவை ஜப்பானுக்கு அளிக்கப்பட்டன.

3. 200 மில்லியன் சீன நாணயங்கள் இழப்பீடாக ஜப்பானுக்கு அளிக்கப்பட்டது.

4. மேலை நாடுகளுடன் சீனா செய்து கொண்ட உடன்படிக்கைகளைப் போல் ஜப்பானுடனான உடன்படிக்கை அமைதல் வேண்டும்.

5. ஷென்சி, சுங்கிங், சூசௌா, ஹாங்சௌ ஆகிய நான்கு துறைமுகங்கள் ஜப்பானுடைய வாணிபத்திற்குத் திறந்து விடப்பட்டன.

**முதல் சீன ஜப்பானியப் போரின் விளைவுகள்**

**1. சீனாவின் வலிமையற்ற நிலை வெளிப்படுதல்**

சீனா-ஜப்பானியப் போர் மறுபடியும் சீனாவின் வலிமையற்ற நிலையை தெளிவாக எடுத்துக்காட்டிவிட்டது. சீனாவைத் துண்டு போடுவதற்கான பாதை நன்கு அமைக்கப்பட்டுவிட்டது. பெருமை மிகு 'நடுவண் பேரரசு' மறையத் தொடங்கியது. எவ்வித ஐயப்பாட்டிற்கும் இடமின்றி மஞ்சு அரசாங்கம் திறமையற்றது, வலிமையற்றது, ஊழலானது என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

**2. சீனாவில் சீர்திருத்த இயக்கம் வலுப்பெறுதல்**

ஜப்பானிய முறையில் தங்கள் நாட்டிலும் சீர்திருத்தங்கள் நடைபெற வேண்டுமென அவர்கள் தங்கள் தோல்விக்குப் பிறகு உணரலானார்கள். பல்வேறு கட்சிகளும் பிரிவினர்களும் சீனாவில் சீர்திருத்த இயக்கங்களை

ஏற்படலானார்கள். முன்னேற்றக் கட்சியினர் ஜப்பானில் மெய்ஜி மீட்சியின் போது ஏற்பட்ட நவீன மயமாக்குதலை சீனாவிலும் புகுத்த வேண்டும் எனக்கூறி வந்தனர்.

**ஜப்பானின் எழுச்சி**

ஜப்பான் மிக விரைவில் ஒரு வல்லரசாக எழுச்சி பெற்றது. ஜப்பானின் எழுச்சியை மேலை நாட்டவர்கள் உணரலானார்கள். அது வல்லரசாகக எழுச்சி பெற்றதால் சீனாவில் மேலும் ஆக்கிரமிப்பை தொடங்கலாயிற்று. சீனாவிடமிருந்து பெற்ற இழப்பீட்டுத் தொகையின் மூலம் தன்னுடைய இராணுவம், கப்பற்படை ஆகியவற்றை வலிவும், பொலிவும் பெற்றதாகச் செய்தது. தன் தொழில் துறையினை விரிவுபடுத்தியது.

**4. மூவர் தலையீடு**

சீனாவின் படுதோல்வி பயங்கர விளைவுகளை ஏற்படுத்தியது. சீனாவானது துண்டாகும் நிலைக்கு தள்ளப்பட்டது. மேலை நாடுகளான ரஷ்யா, பிரான்சு, ஜெர்மனி ஆகிய நாடுகள் ஜப்பானுக்கு லியோடுங் தீபகற்பம் கொடுக்கப்பட்டது. தூரக்கிழக்கில் அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தும் என்று கருதின. ஆகவே ஜப்பானை லியோடுங் தீபகற்பத்தை விட்டுவிடும்படி கட்டாயப்படுத்தின. அதற்கு ஈடாக சீனாவிடமிருந்து நஷ்ட ஈட்டுத் தொகை வாங்கித் தருவதாகக் கூறின. அவ்வாறே அது நடைபெற்றது. வெற்றிக்கனியினை தட்டிப் பறித்துக் கொள்வதற்கு காரணமாக இருந்த ரஷ்யாவின் மீது தன் வெறுப்பை நன்கு வளர்த்துக் கொண்டது.

**5. சலுகைப்போட்டி ஏற்படுத்துதல்**

இத்தோல்வி மஞ்சு வம்சத்தின் உதவியற்ற நிலையினை எடுத்துக் காட்டியது. அதனால் அயல் நாட்டவர்கள் முண்டியடித்து கொண்டு மேலும் சலுகைகள் பெற முற்பட்டனர்.

**6. உள்நாட்டுத் தொழில்கள் நசுக்கப்படுதல்**

சீனாவிற்கும், ஜப்பானுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாட்டினால் ஜப்பான் அதில் கண்ட துறைமுகங்களில் ஆலைகளையும், தொழிற்சாலைகளையும் ஏற்படுத்த உரிமை பெற்றது. அதனுடைய பெரும் மூலதனத்தாலும் தொழில் நுணுக்கத்தாலும் உரிமைகள் பல பெற்றிருந்தாலும் சீனர்களிடத்தில் மிகுந்த செல்வாக்கினைப் பெற முடிந்தது. உள்நாட்டுத் தொழிற்சாலைகள் அயல்நாட்டுத் தொழிற்சாலைகளுடன் போட்டி போட முடியவில்லை. எனவே பெரும் நஷ்டம் ஏற்பட்டது.

**செல்வாக்கு மண்டலங்கள்**

1894-95 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சீன ஜப்பானியப் போரில் சீனா அடைந்த தோல்வியானது மேற்கத்திய நாடுகளைச் சீன விவகாரங்களில் பெருமளவில் ஈடுபடத் தூண்டியது. அந்நாடுகள் ஆக்கிரமிப்புக் கோட்பாடுகளைப் பின்பற்றிச் சீனாவில் பல சலுகைகளைப் பெற்றுத் தமது நிலைமையைப் பலப்படுத்திக் கொள்ள முயற்சி செய்தது. ஜப்பான் தன்னுடைய பேரரசுக் கோட்பாட்டின் விளைவாகச் சீனாவில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட முற்பட்ட போது, ரஷ்யாவும் தன்னுடைய செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ள முயன்றது. எனவே சீனா தன்னுடைய பழைய முறைகளை மாற்றிக் கொண்டு வாழ முற்பட்டப் போது ஆதிக்கப் போட்டிகள் உருவாயின.

**பிரான்சும் சீனாவும்**

ஷிமனோஷேகி உடன்படிக்கைக்குப் பின் ஏற்கனவே காலியாக இருந்த கருவூலம் காரணமாகச் சீனாவின் பொருளாதாரக் சிக்கல்கள் மேலும் விரிவடையலாயின. எனவே வெளிநாட்டுக் கடன்களை எழுப்பி அதனைக் கொண்டு தான் தரவேண்டிய இழப்பீடுகளைச் சீனா சரிக்கட்ட முயன்றது.

அவ்வமயம், சீனாவின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்துக் கடன்களை வழங்கிய பிரான்சு சீனாவில் முதன்முறையாகச் சலுகைப் போட்டியினை ஆரம்பித்து வைத்தது. ஏற்கனவே 1884 – 1885 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட லீ-பௌரியர் உடன்பாடு மற்றும் சீன – பிரெஞ்சு உடன்பாடுகளால் பிரான்சின் மேலாண்மையை அநாமில் சீனா ஏற்றுக் கொண்டதன் விளைவுகள் வெகு விரைவில் தென்படலாயின.

**சீன பிரெஞ்சு உடன்படிக்கை 1898**

தூரக்கிழக்கில் தலையிடுவதற்கான வழியொன்றினை அமைத்துக் கொண்ட பிரான்சு சீனாவுடனான சலுகைப் போட்டியில் தனது பங்கினைப் பெறுவதன் பொருட்டு 1898-ல் பிரான்சு – சீன உடன்பாட்டினை உருவாக்கியது. அவ்வுடன்படிக்கைப்படி பிரான்சு கீழ்க்கண்ட சலுகைகளைப் பெற்றது. 1) பிரான்சின் பகுதியான டோங்கிங்கின் எல்லைகள் பிரான்சுக்கு ஆதரவாக மாற்றியமைக்கப்பட்டன. 2) டோங்கிங்கிலிருந்து யூனான் வரை இருப்புப்பாதை அமைக்கப் பிரான்சுக்கு அனைத்து உதவிகளையும் செய்வதாகச் சீனா வாக்களித்தது. 3) தென் சீனப்பகுதிகளான யூனான், ஹீவாங்ஷி, ஹீவாங்டுங் ஆகிய பகுதிகளிருந்த நிலக்கரிச் சுரங்கங்களில் பிரான்சின் ஆதிக்கம் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இவ்வாறு சீனாவில் சலுகைப் போட்டிச் சிக்கல்களைத் துவக்கி வைத்த பிரான்சு ஏராளமான சலுகைகளுடன் சீனாவின் ஆதரவினையும் பெற்றுத் தூரக்கிழக்கில் வலிமை பெற ஆரம்பித்தது.

**ரஷ்யாவும் சீனாவும்**

சீனாவில் பிரான்சு பெற்ற செல்வாக்கு, சலுகைகள் ஆகியவை சீனாவின் அண்டை நாடான ரஷ்யாவையும் இப்போட்டியில் ஈடுபடச் செய்தன. 1869-ல் முதன்முறையாக ரஷ்யா, சீனாவுடன் மேற்கொண்ட நெர்சின்ஸ்க் உடன்படிக்கைக்குப் பின் படிப்படியாகப் பல உடன்படிக்கைகளைச் செய்துகொண்டது. படிப்படியாகப் பல உடன்படிக்கைகளைச் செய்து கொண்டது. படிப்படியாகச் சீனாவின் எல்லையோரப் பகுதிகளைக் கவர ஆரம்பித்த ரஷ்யா 1881-க்குள்ளாகத் தன்னுடைய ஆதிக்கத்தைச் சீனாவில் வலுப்படுத்திக் கொண்டது. அதன் பின்னர் 19894 – 195-ல் ஏற்பட்ட சீன ஜப்பானியப் போருக்குப் பின் சீனாவில் ஜப்பானிய ஆதிக்கம் பெருகுவதைக் கண்டபோது சீனா தனக்கும் சில சலுகைகளைத் தர வேண்டுமெனச் சீனாவைக் கட்டாயப்படுத்தலாயிற்று.

**லீ-லெபனாவ் உடன்படிக்கை – 1896**

ஜெர்மனிக்கு சீனாவில் எவ்வித உடைமையுமில்லை. அமெரிக்கா பிறருடைய படை விவகாரங்களில் தலையிட முற்படவில்லை. எனவே சீனாவின் உண்மையான நண்பனாகத் திகழ்ந்தது. ரஷ்யா மட்டுமே இக்காரணத்தால் சீனத்தூதுவபர் லீ ஹங் ஷாங் 1896-ல் லீ-லெபனாவ் உடன்படிக்கையில் கையெழுத்திட்டார். அவ்வுடன்படிக்கைப்படி 1. ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிராக ரஷ்யாவும், சீனாவும் தமக்கு உதவிக்கொள்ள வேண்டும். 2. போர்க்காலங்களில் சீனாவின் துறைமுகங்களை உபயோகித்துக் கொள்ளலாம்.

3. டிரான்ஸ் சைபீரியன் இருப்புப் பாதையை சீனாவின் ஒப்புதலுடன் புதுப்பித்துக் கொள்ளலாம். 4. ரஷ்யா சீனாவின் நிலவுடைமைப் பகுதிகளை ஏற்று மதித்து நடக்க வேண்டும். இவ்வுடன்படிக்கைக்குப் பின் சீனாவின் பாதுகாவலர் என்ற அடிப்படையில் ரஷ்யா சீனாவில் மேலும் பல செயல்களில் ஈடுபட்டது.

**ஜெர்மனியும் சீனாவும்**

பிரான்சு, ரஷ்யா ஆகியவற்றின் வலிமை சீனாவில் பெருகி வளர்த்தமையால் ஜெர்மானியப் பேரரசர் இரண்டாம் வில்லியம் சீனாவில் தன்னுடைய பங்கினைப் பெறப் பேரார்வம் காட்டினார். சலுகைப் போட்டியில் காலதாமதமாகப் பங்கேற்க வந்த ஜெர்மனி ஷான்முங் மாநிலத்திலிருந்த கியாசௌ வளைகுடாப் பகுதியின் முக்கியத்துவத்தையும் அப்பகுதியின் பொருளாதார மேம்பாடு, கனிமவளப் பெருக்கம் ஆகிய காரணங்களால் உலகின் மூன்றாவது முக்கிய நாடான தமக்குரிய பங்கினைச் சீனா தரவேண்டுமென வற்புறுத்தியது. 1895-ல் நிலக்கரி மாற்றிக் கொள்ளவும், தமது படைகளை வைத்துக்கொள்ளவும் சீனாவில் ஜெர்மனிக்கு ஒரு துறைமுகம் வழங்கப்பட வேண்டுமென கெய்சர் வற்புறுத்தினார்.

இதனைப் பெறுவதற்காக சூழ்நிலை ஒன்று ஏற்பட்டது. 1897-ஆம் ஆண்டு நவம்பர் முதல்நாள் இரு ஜெர்மானியப் பாதிரிமார்கள் ஷான்டுங் மாநிலத்தில் சீனர்களால் கொலை செய்யப்பட்டனர். அந்நிகழ்ச்சியின் காரணமாக ஜெர்மானியக் கப்பற்படை ஒன்று கியாசௌ துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தது. டிசிங்டௌ சுரங்கப் பகுதி ஜெர்மனிக்குக் குத்தகைக்கு விடப்பட வேண்டும் என்றும் அம்மாநிலத்தில் இருப்புப்பாதை அமைக்கத் தனக்கு உரிமையளிக்க வேண்டுமெனவும் ஜெர்மனி கட்டாயப்படுத்தியது. எனவே 1898-ஆம் ஆண்டு

மார்ச் 6-ஆம் தேதி ஜெர்மனியுடன் சீனா ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டது அதன்படி,

1. கியாசௌவையும் அதனைச் சுற்றி 50 கிலோமீட்டர் தூரதிற்குள்ளும் அமைந்திருந்த பகுதிகளை ஜெர்மனி 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்குப் பெற்றது.

2. அக்குத்தகைப் பகுதிகளைத் தமது விருப்பம் போல் பயன்படுத்திக் கொள்ள ஜெர்மனிக்கு அனுமதி வழங்கப்பட்டது. 3) ஆனால் அப்பகுதிகளை வேறு எந்த நாட்டவருக்கும் மறு குத்தகைக்கு விடக்கூடாதென ஜெர்மனி கேட்டுக்கொள்ளப்பட்டது. 4. ஷான்டுங் மாநிலத்தில் இருப்புப் பாதையொன்று அமைக்கப்பட்டு அது சீன, ஜெர்மானியக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குமாறு செய்யப்பட்டது.

**பிரிட்டனும் சீனாவும்**

சலுகைப் போட்டிச் சிக்கல்கள் காரணமாகப் பல வெளிநாட்டவர்கள் சீனாவில் தமது ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்ட போது பிரிட்டனும் அப்போட்டிகளில் தன்னை இணைத்துக்கொண்டது. போர்ட் ஆர்தர் ரஷ்யாவின் கையிலிருக்கும் வரை வெய்ஹாய் பகுதி தனக்குக் குத்தகைக்கு விடப்பட வேண்டுமெனக் கட்டாயப்படுத்தி பிரிட்டன் பெற்றுக்கொண்டது. ஹாங்ஹாங்கிற்கு எதிராக உள்ள நிலப்பகுதி மீதான குத்தகை காலத்தையும் பிரிட்டன் நீடித்துக் கொண்டது. பிரிட்டனுக்குச் சொந்தமான பர்மிய எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டன. மேலும் பிரிட்டனின் வாணிபம் முன்னணியில் நிற்கும் காலம் வரை சீனக் கடல் வாணிபச் சுங்க இலாக்காவின் தலைமைக் கண்காணிப்பாளராக ஆங்கிலேயர் ஒருவரே இருக்கவேண்டுமெனக் கூறப்பட்டது.

இவ்வாறு பிரிட்டனும் தன்னுடைய செயல்கள் மூலம் சீனாவில் தன்னுடைய சமபலத்தை நிலைநாட்டிக் கொண்டது.

**இத்தாலியும் சீனாவும்**

1899 ஆம் ஆண்டு பிப்ரவரியில் இத்தாலியும் தன்னைச் சீனப் போட்டியில் ஈடுபடுத்திக் கொண்டு அதன் வாயிலாக சான்மன் வளைகுடாப் பகுதியிலிருந்த ஸெக்கியாங் என்ற துறைமுகத்தை தன்னுடைய கப்பற்படைகளுக்கு விட்டுக்கொடுத்துவிட வேண்டுமெனக் கட்டாயப்படுத்தியது. ஆனால் சீனா சிறிது தைரியத்துடன் செயல்பட்டு இத்தாலியின் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டது.

# அலகு – 3

## திறந்தவெளிக் கொள்கை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சீனா தன்னுடைய கதவுகளை இறுக மூடிக் கொண்டு அயல் நாட்டவர்களின் தொடர்பிலிருந்து விடுபட்டு இருக்க விரும்பியது. அதே நூற்றாண்டின் முடிவில் அயல்நாட்டவர்கள் அங்கு நுழைந்தார்கள். அவர்கள் அதன் கதவுகளை மற்றவர்களுக்கு மூடினார்கள். அப்போது அமெரிக்கா மட்டும் 'அவ்வாறு கதவுகளை மூடக்கூடாது. கதவுகளைத் திறக்க வேண்டும்' என்று கூறியது. அதன்படி சீனா அனைவருக்கும் சமமாகச் சுரண்டுவதற்கு தன் கதவுகளைத் திறந்துவிட வேண்டும். இதிலிருந்து 'சுரண்டு அல்லது மற்றவர்களைச் சுரண்டவிடு' என்ற குறிக்கோளை இக்கொள்கை கொண்டுள்ளது என்பது புலனாகிறது.

## திறந்த வெளிக் கொள்கை வெளியிடப்பட்ட சூழ்நிலை

1895-ம் ஆண்டில் ஏற்பட்ட ஷிமொனோசெகி உடன்படிக்கைக்குப் பிறகு ஐரோப்பிய வல்லரசுகள் போட்டி போட்டுக் கொண்டு சீனாவில் சலுகைகளைப் பெற முற்பட்டன. சீனா பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒரு வல்லரசின் கீழ் இருந்த போதிலும், அவற்றின் செல்வாக்கு மண்டலமாக விளங்கிய போதும் சீனாவைப் பங்கு போடுவதிலிருந்து இவ்வுடன்படிக்கை தடுத்து விட்டது எனலாம். சீனா இவ்வாறு பங்கீடு செய்யாமல் தடுக்கப்பட்டதற்கு முதல் காரணம் வல்லரசுகளுக்கிடையே ஏற்பட்ட போட்டியாகும்.

அயல் நாட்டவர் பெற்ற ஏராளமான சலுகைகளைக் கண்டு வெளிப்புற்ற சீனர்கள் அயல்நாட்டவருக்கு எதிராக உணர்வு பெற்று எழலானார்கள்.

**அமெரிக்காவும் சீனாவும்**

1897-98 ஆம் ஆண்டுகளில் ஐரோப்பிய வல்லரசுகள் சீனாவை தங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டிருந்த போது அமெரிக்கா வேறு பிரச்சனைகளில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தது. அதனுடைய உள் நாட்டுப் பிரச்சனைகள் அதன் கவனத்தை ஈர்த்துக் கொண்டிருந்தது. 1865 முதல் 1898 வரையிலான ஆண்டுகளில் அமெரிக்காவில் பெரும் மாற்றம் ஏற்பட்டு தொழில் வளமான நாடாக மாறியது. தங்கள் நாட்டின் பொருள் உற்பத்திக்கு அயல்நாடுகளின் சந்தையைப் பிடிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

**திறந்த வெளிக் கொள்கை**

இக்கோட்பாடானது அமெரிக்காவின் அயல்நாட்டு அமைச்சரான ஜான்ஹே என்பவரால் கொண்டுவரப்பட்டது. ஆனால் இது ஹேயின் கோட்பாடு என்றும் அழைக்கப்படுகிறது. அதன் முக்கிய அம்சங்களாவன.

1. சீனாவில் தன் செல்வாக்குப் பகுதியினைப் பெற்ற ஒரு வல்லரசு உடன்படிக்கை துறைமுகங்களில் தலையிடுவதில்லை என உறுதி அளிக்க வேண்டும். அது தனிப்பட்ட அதிகாரம் எதையும் காட்டக் கூடாது.
2. செல்வாக்கு மண்டலங்களைப் பெற்ற நாடுகளுக்கிடையே துறைமுகக் கட்டணங்களிலும், இருப்புப் பாதைகளின் கட்டணங்களிலும் எவ்வித வேறுபாடும் இருத்தல் கூடாது.
3. பொருள்களின் மீது விதிக்கப்பட்ட வரிகளை வசூல் செய்யும் உரிமை சீன அரசாங்கத்திடமே இருக்க வேண்டும்.
4. ஐரோப்பிய நாடுகள் சீனாவில் ஏற்கனவே பெற்றிருந்த சலுகைகளை மதித்தல் வேண்டும். இக்கோட்பாடு சீனாவில் எல்லா நாடுகளுக்கும்

சமமான வாய்ப்புத்தர வழி ஏற்படுத்தியது என அமெரிக்கர்கள் கூறினர். மேலும் சீனாவின் பகுதிகளைப் பாதுகாக்கும் காவலனாக இது அமைந்தது என்றும் அவர்கள் கூறினர்.

**திறந்த வெளிக் கொள்கையின் எதிரொலி**

தங்களுடைய மூலதனத்தை முதலீடு செய்வதற்கும், தங்களுடைய பொருள்களை விற்பதற்கும் நல்ல சந்தையாக சீனா இருந்தால் அதனை அமெரிக்காவும், பிரிட்டனும் பாதுகாக்க ஆர்வமுடன் செயல்பட்டன. இருநாடுகளும் சீனாவின் பகுதிகளைப் பெறுவதில் ஆர்வம் காட்டவில்லை. அவைகள் சீனப்பேரரசுடன் வாணிபம் செய்வதில் மட்டுமே கருத்தாக இருந்தன. பிறநாடுகள் தன்னுடன் சேர்ந்தால் பிரிட்டன் அக்கோட்பாட்டைப் பின்பற்றுவதாகக் கூறியது. பிறநாடுகள் ஒன்று சேர்ந்து கூட்டுக் கொள்கையின் மூலம் சீனாவை சுரண்ட இக்கோட்பாடு பயன்பட்டதால் அதை அவைகள் ஏற்றுக்கொண்டன. ஆனால் ரஷ்யா தன் முழு ஆதரவை இக்கோட்பாட்டிற்கு வழங்கவில்லை.

**திறந்தவெளிக் கொள்கையின் விளைவுகள்**

1. இக்கோட்பாட்டை வல்லரசுகள் ஏற்றுக் கொண்டதால் சீனாவைப் பங்கீடு செய்வது தற்காலிகமாகத் தடுக்கப்பட்டது.
2. இதன் மூலம் அமெரிக்காவானது சீனாவின் மேல் அதிக ஆர்வம் காட்டியது.
3. ஐரோப்பிய நாடுகளின் ஆக்கிரமிப்புத் திட்டங்கள் தடுக்கப்பட்டன. சீனாவின் பிரதேச ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட்டது.
4. அயல் நாட்டுக் தாக்குதல்களை சமாளிக்கும் எண்ணம் சீனர்களிடையே தோன்றலாயிற்று. சீன-ஜப்பானியப் போரின் மூலம் கிடைத்த பாடமே இந்த முடிவுக்கு வரக் காரணமானது.

இவ்வாறு திறந்த வெளிக்கோட்பாட்டினால் சீனா தன்னை பாதுகாத்துக் கொண்டது எனலாம்.

**நூறுநாள் சீர்திருத்தங்கள்**

1898-ல் பேரரசர் குவாங்கு சீனாவின் நேரடி ஆட்சியாளரான போது அவ்வாண்டின் கோடைகாலமாகிய ஜூன் முதல் ஆகஸ்டு மாதம் முடிய பல சீர்திருத்த கருத்துக்களை வெளியிட்டார். அவை நூறு நாள் சீர்திருத்தங்கள் என்றழைக்கப்படுகின்ற. நாட்டின் நலன் கருதி, அப்போது சீனாவில் பெருகி வந்த அயல் நாட்டவர்களின் பிடிகளிலிருந்து சீனாவை மீட்டுப் புதுப்பொலிவுடன் திகழச் செய்ய வேண்டுமென்பதற்காக அச்சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதற்கான காரணங்கள்**

**1. த்வாகெர் சூஸி**

1. 1860-ல் ஷின் பெங் மரணமடைந்த பின் பேராசிரியர் த்வாகெர் சூஸி சீனாவின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற போது சீனாவின் நிலை பல வழிகளிலும் மோசமானதாகவே காணப்பட்டது.
2. பேராசிரியர் த்வாகெர் சூஸி தன்னுடைய நிலையை எப்போதும் வலிமையுடையதாக வைத்துக் கொள்ளக்கூடிய வகையில் இளவயதுடைய பாலகர்களையே ஆட்சியாளர்களென அறிவித்து உண்மையான அதிகாரங்களைத் தன்னுடைய கைகளில் வைத்துக் கொண்டார். அவருடைய செயல்கள் மக்களுக்கு வெறுப்புணர்வை ஊட்டின.
3. 1875-ல் பேரரசர் டுங் ஷீயின் மரணத்திற்குப் பின்னால் த்வாகெட் சூஸியானவர் குவாங் சூ என்ற சிறுவனை ஆட்சியாளராக்கி தாம் பகர

ஆளுநராகச் செயல்பட்டார். 1898-ல் அவர் முழு ஆட்சிப் பொறுப்பினையும் பெறும் வரை த்வாகெர் சூஸிக்குக் கட்டுப்பட்டு அவரது கைப்பாவையாகவே செயல்பட்டார். 1898-க்கு பின் அவர் தன்னிச்சையாக மக்களின் நலனுக்காகப் பேரரசர் என்ற நிலையில் செயல்பட முனைந்தபோது சீர்திருத்தங்கள் பலவற்றை அறிவித்தார்.

**சீனாவின் நிலை**

1. சீனாவின் நிலை பொருளாதாரம், அரசியல் போன்ற பல துறைகளிலும் மிக மோசமானதாக காணப்பட்டது.
2. சீனாவின் அரசியலில் காணப்பட்ட குறைபாடுகள் அந்நிய நாட்டவர்களுக்குச் சாதகமானதாக விளங்கியதால் ஐரோப்பிய ஆதிக்கம் சீனாவில் வேரூன்றியதால் அந்நாடு ஆறுதலற்ற அமைதிக் காலத்தை கடந்து சலுகைப் போட்டிச் சிக்கல்களால் சீர்குலைந்தது.
3. நிலவுடமைப் போட்டிகள், பொருளாதாரச் சிக்கல்கள், வாணிபச் சலுகைகள் ஆகியவற்றால் அந்நியர் ஆதிக்கம் சீனாவில் வேரூன்றிப் பண்பாட்டுச் சிக்கல்கள் ஏற்பட்டபோது சீர்த்திருத்தங்கள் அவசியமானவையாயின.
4. ஐரோப்பியக் கிறிஸ்தவர்களின் சமயப் பரப்பு ஊழியர்களின் செயல்களால் சீனாவின் சமயத்துறையின் மாறுதல்கள் ஏற்பட்ட போது சீர்திருத்தங்களின் அவசியம் நன்கு உணரப்பட்டது.

**சீன – ஜப்பானியப் போர்**

1894-95-ல் நடைபெற்ற சீன ஜப்பானியப் போரில் சீனா அடைந்த தோல்வியும் மஞ்சு வம்சத்தரசர்களின் திறமையின்மை காரணமாக ஏற்பட்ட விளைவே என்று சீனர்கள் நம்பினர். அத்துடன் அப்போருக்குப்பின் ஏற்பட்ட

சிமனோசேகி உடன்படிக்கைப்படி சீனாவில் நிபந்தனைகள் ஏற்பட்ட போது சீனர் ஆத்திரமடைந்து பல மாற்றங்கள் எதிர்பாத்ததில் வியப்பொன்றுமில்லை.

**அறிஞர்களின் செயல்கள்**

1. 1895-ல் கான்டன் என்ற இடத்தைச் சேர்ந்த டாக்டர் சன்யாட்சென் என்ற புரட்சியாளர் தாம் கற்ற மேலைநாட்டுக் கல்வியினைப் பயன்படுத்திச் சீனாவில் சீர்திருத்தங்களைக் கொண்டு வர எண்ணங்கொண்டார்.
2. 1858-ல் குவான்டுங் மாநிலத்தில் நான்சாய் மாவட்டத்தில் பிறந்த காங்-யூ-வி (Kuang-Yu-Wei) என்பவர் சீனாவில் சீர்திருத்தக் கருத்துக்களைப் புகுத்துவதில் பேரரார்வம் காட்டினார். தம்முடைய தீர்க்கமான கொள்கைகளால் பேரரசரைத் தன்பால் ஈர்க்கக்கூடிய திறமை கொண்டிருக்கவில்லை. அதற்கு மாறாகப் படிப்படியாக அரசியலமைப்புக்கு உட்படுத்தப்பட்ட ஆட்சியை உருவாக்குவதிலும், மக்கள் மனத்தை மாற்றியமைப்பதிலும் கவனம் செலுத்தினார். மேலைநாட்டுக் கல்வி முறை, பண்பாடு ஆகியவற்றில் பற்றுடைய அவரால் 1893-ல் 'சீர்திருத்தச் சங்கம்' என்றதொரு அமைப்பினை பீகிங்கில் நிறுவினார்.
3. 1873 முதல் 1929 வரை வாழ்ந்த வியாங்ஷி என்பவரும் புதுமைக் கோட்பாடுகளில் ஆழ்ந்த பற்றுடையவராக விளங்கினார். தமது நண்பர்களின் ஆதரவுடன் காங்-யூ-வின் கருத்துக்களை மக்களிடையே பரப்பி வந்தார்.
4. சாங் ஷி துங் லியு-குன்-யி மற்றும் வாங் தவோ போன்றோரும் கன்பூஷியக் கோட்பாடுகளில் ஊறிப் பழமையைப் போற்றி வந்த சீனாவை மேலைநாட்டுக் கோட்பாடுகளின் அடிப்படையில்

புதுமைப்பொலிவு கொண்டு திகழச் செய்ய வேண்டுமென்தற்காக அயராது உழைத்தார்கள்.

**சீர்திருத்தங்கள்**

குவாங்-யூ-வெய்யின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட பேரரசர் 1898-ஜூன் மாதத்தில் சீர்திருத்தக் கருத்துக்களைப் பல ஆணைகள் மூலமாக வெளியிட்டார். அதன் மூலம் நூறு நாள் சீர்திருத்தங்கள் துவக்கி வைக்கப்பட்டன. ஆரசின் ஆணைகள் வடிவமாக வெளியிடப்பட்ட அச்சீர்திருத்தங்கள் அரசுத்துறைகள் பலவற்றிலும் மாறுதல்களைச் செய்ய முற்பட்டன.

**1. கல்வித்துறை**

கல்வித்துறையின் முக்கியத்துவம் உணரப்பட்டு அதில் உள்ள குறைகளைக் களைய கல்வி ஆணைகள் பல வெளியிடப்பட்டன. அந்த ஆணைகளின்படி 1. ஏராளமான பள்ளிகள் 2. பீகிங்கில் மத்திய பல்கலைக்கழகம் ஒன்று தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டது. 3. பெரிய நகரங்கள், மாநிலத் தலைநகர்கள் ஆகியவை பள்ளிகளோடு கல்லூரிகளையும் பெற வகை செய்யப்பட்டன. 4. மேற்கத்தியக் கருத்துக்களைப் புகுத்தக் கூடிய வகையில் பல ஐரோப்பிய மொழிகளிலும் எழுதப்பட்ட புத்தகங்கள் பலவற்றைச் சீன மொழியில் மொழிபெயர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 5. பழங்கால முறையின் அடிப்படையிலான தேர்வு முறைகளை மாற்றியமைக்க வழிகள் கையாளப்பட்டன. 6. பழங்கால மற்றும் தற்கால வரலாறுகள், தற்காலத்தில் அரசியல் கோட்பாடுகளை புரிந்துகொள்ளல், பல நாடுகளின் அரசியலமைப்புகளையும் புரிந்து கொள்ளல், கல்விஞானம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டது.

**2. ஆட்சித்துறை**

1. எதிர்ப்புகளைத் தவிர்ப்பதற்காக பழமையில் அரசியல் அலுவலர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டார்கள் 2. அறியாமை என்னும் அகஇருளை நீக்கி அறிவு ஒளிவீசச் செய்வதற்காக அரசாங்கச் செய்திகளடங்கிய குறிப்பு இதழ்கள் வெளியிடப்பட்டு அவை நாடெங்கிலும் விநியோகிக்கப்பட்டன 4. வாணிபம், விவசாயம் ஆகியவற்றைக் கண்காணிப்பதற்கெனப் புதிய அமைப்புகள் உருவாக்கப்பட்டன. 5. சீனாவின் நடுவண் அரசு மாநில அரசுகளுடன் தொடர்பு குறைகளை அரசுக்குத் தெரிவிக்கக்கூடிய வகையில் தமது தேவைகளைப் பற்றிய மனுக்களை அரசுக்கு அனுப்பவும் உரிமை பெற்றார்கள்.

**3. பிற துறைகளில் சீர்திருத்தங்கள்**

1.படைத்துறையில் மேலைநாட்டு அமைப்பு முறைகளோடு போர்க்கருவிகளும் பயன்படுத்தப்பட வசதிகள் மேற்கொள்ளப்பட்டன. 2. படைவீரர்களைத் தேர்ந்தெடுத்து தேசீயப் படையமைப்பு ஒன்றினை உருவாக்க வழி செய்யப்பட்டது. 3. நீதிமன்றங்களைச் சீராகச் செயல்படச் செயல்வழிகள் மேற்கொள்ளப்பட்டன. 4. மாதிரி மற்றும் நகலெடுக்கப் பட்ட சட்டங்கள் வெளியிடப்பட்டன. 5. புதுமையைக் கண்டறிவோருக்கும் எழுத்தாளர்களுக்கும் ஆதரவூட்டக்கூடிய வகையில் ஊக்கப்பரிசுகள் வழங்கப்பட்டன. 6. சீனத் தலைநகரைப் பல்வேறு முக்கியத் துறைமுகங்களுடன் இணைப்பதற்கான வழிகளை மேற்கொள்ள போக்குவரத்து நிறுவனம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டது.

**சீர்திருத்தங்களின் முக்கியத்துவம்**

1. வேகமாகப் பரவி வந்த ஐரோப்பியக் கோட்பாடுகளுக்கு ஈடு கொடுக்கக்கூடிய வகையில் இச்சீர்த்திருதங்கள் அமைத்திருந்தன. 2. சீனாவில் வெளிநாட்டவர்களின் ஆதிக்கப் பெருக்கத்திற்கு எதிராக எழுந்த உள்நாட்டு

எதிர்ப்புணர்வு இது எனக் கூறினாலும் மிகையாகாது. 3. 1898 ஜூன் மாதம் முதல் ஆகஸ்டு வரை மேற்கொள்ளப்பட்ட இச்சீர்த்திருத்தங்கள் சீனாவை நவீன மயமாக்க வேண்டுமென்ற அடிப்படையில் எழுந்தவையாகும். 4. பின்னர் சீனாவில் பல கால கட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பல சீர்திருத்தங்களுக்கு இவை வழிகாட்டியாக அமைந்திருந்தன. 5. கிழக்கு மற்றும் மேற்குக் கோட்பாடுகளின் இணைப்பாகச் செயல்பட்ட இச்சீர்த்திருத்தங்கள் சீனாவில் மாறுதல்களுக்கு வழி வகுத்தது.

**பாக்சர் கலகம்**

நூறு நாள் சீர்திருத்தம் தோல்வி அடைந்த பிறகு அன்னியர்களை எதிர்த்து சீனாவில் வன்முறைக் கிளர்ச்சி ஒன்று தோன்றியது. அது தான் பாக்சர் கலகம் எனப்பட்டது. பல போர்களில் சீனாவிற்கு ஏற்பட்ட தோல்வி, அதன்பின் ஏற்பட்ட அவமானம், உடன்படிக்கைத் துறைமுகங்களில் அயல்நாட்டவர்களின் கொடுமை மேலைநாடுகள் சீனாவை பல செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக் கொண்டது. சமயப்பரப்புக் குழுவினரின் தாங்க முடியாத செயல்கள் ஆகியவை அனைத்தும் சீனர்களின் கசப்பு உணர்ச்சியைத் தூண்டிவிட்டன. தானாகவே தோன்றிய அந்த புகழ் பெற்ற கிளர்ச்சிதான் பாக்சர் கலகம் எனப்படுகிறது.

**பாக்சர் கலகத்திற்கான காரணங்கள்**

**1. சமயப் பரப்பு குழுவினரின் செயல்கள்**

❖ கிறிஸ்துவ சமயப்பரப்புக் குழுவினர் சமூக, கல்வித்துறைகளில் சில பயனுள்ள பணிகளைச் செய்தபோதிலும் அவர்களை சீனர்கள் நம்பவில்லை.

❖ சீனாவில் மதம் மாறியவர்கள் தங்களை உயர்ந்தவர்கள் என்றும் உரிமை பெற்ற வகுப்பினர் என்றும் கருதி வந்தனர். அவர்கள் அரசாங்கப் பணிகளிலும், நீதிமன்றங்களிலும் தனி உரிமையும், மரியாதையும் கோரினர். நெடுங்காலமாக வழக்கத்தில் இருந்து வந்த சீன நடைமுறைகளை அவர்கள் கடைப்பிடிக்கவில்லை. மண்டியிட்ட வணங்கும் முறையினை அவர்கள் மறுத்தனர். சீனக் கிறிஸ்தவர்களின் இந்த நடவடிக்கைகள் பொதுமக்களின் கோபத்தைக் கிளறி விட்டன.

**மஞ்சு மரபின் மீது கோபம்**

ஜப்பானிடம் சீனா தோல்வி அடைந்ததாலும், சலுகைகள் கோரியதாலும் சீனாவின் பங்கீடு தவிர்க்க முடியாததாகிவிட்டது. ஏறக்குறைய எல்லா மேலைநாடுகளும் சீனாவிடமிருந்து சில பகுதிகளைப் பெற்றன. அப்பகுதிகளில் அவைகள் தங்கள் செல்வாக்கு மண்டலங்களை ஏற்படுத்திக் கொண்டன. இது சீனாவின் ஒற்றுமைக்குப் பெரிய ஆபத்தாக இருந்தது. இச்சூழ்நிலையில் நாட்டுப்பற்று கொண்ட நல்லோர்கள் கிளர்ந்தெழுவது என்பது இயற்கையே ஆகும்.

**3. நாட்டுக்கு ஏற்பட்ட அவமானத்தை உணர்தல்**

அரை நூற்றாண்டு காலமாக போரின் போதும், அமைதியின் போதும் அயல்நாட்டவரால் ஏற்பட்ட அவமானத்தை சீனர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. கடுமையும், கொடுமையும் நிறைந்த அயல் நாட்டு அமைச்சர்கள், கொடூரமான தூதுவர்கள், பேராதிக்க ஆசை கொண்ட சமயப்பரப்புக் குழுவினர், தன்னலம் கொண்ட வணிகர்கள் சீனாவைக் சூறையாடினர். இந்த அநீதி பழிவாங்கும் ஆசையை சீனர்களின் உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரியச் செய்தது.

**4. மேலைநாடுகளின் மீதான வெறுப்பு**

பாக்சர் கலகத்திற்கு மற்றொரு காரணம் பேரரசர் வாங்குவின் மேற்கத்திய மயமாக்கும் கொள்கையே எனலாம். அயல்நாட்டு நிறுவனங்களை ஏற்படுத்தியது, சீர்திருத்தத்தின் போது மேற்கொண்ட சிறிய மாற்றங்கள் ஆகியவை ஏற்கனவே இருந்த அந்நிய வெறுப்பு என்னும் தீயில் எண்ணை வார்த்தது போல் அமைந்துவிட்டன. எனவே கிளர்ச்சி மேலும் வலுவடைந்தது.

**5. அயல்நாட்டவர்களின் பொருளாதார ஆதிக்கம்**

ஆபினிப் போர்களுக்குப் பின் வந்த இறக்குமதிப் பொருள்களினால் நாட்டின் பொருளாதாரம் பொலிவிழந்தது. சீனாவின் பாதுகாப்பு வரிக்கொள்கையில் 5 விழுக்காடு சுங்கவரி நிர்ணயிக்கப்பட்டதன் விளைவாக **சீன உள்நாட்டுத் தொழில்கள் அழிந்தன.**

பலர் வேலையில்லாமல் அவதிப்பட்டனர். அயல்நாட்டு வாணிபம் வளர வளர வெளிநாட்டவர் ஆதிக்கம் குடி கொண்டது. சீனச் சந்தையில் எங்கும் அவர்களுடைய செல்வாக்கு கொடி கட்டிப் பறந்தது.

**6. வரிச்சுமை அதிகரிப்பு**

1899-ஆம் ஆண்டில் சீன வாணிபத்தில் 69 மில்லியன் சீன நாணயற்கள் பற்றாக்குறை ஏற்பட்டன. இதை ஈடு செய்ய அரசு வரிகளை அதிகரிக்கச் செய்தது. மாநில வாரியாக நன்கொடைகள் வசூல் செய்யப்பட்டன. இவைகள் அனைத்தும் மக்கள் தலையில் பெரும் பளுவாக விழுந்தன.

**7. இயற்கைச் சீற்றங்கள்**

இந்தப் பொருளாதாரத் துன்பத்தோடு இயற்கைக் கொடுமைகளும் சேர்ந்து கொண்டு வாழ்க்கையை மிகவும் மோசமாகி விட்டன. 1852-ஆம் ஆண்டு மஞ்சள் நதியானது தன் போக்கை ஹோனானிலிருந்து ஷாண்டுங் என்ற இடத்திற்கு

மாற்றிக் கொண்டதாலும், 1882-க்குப் பிறகு அடிக்கடி வெள்ளம் ஏற்பட்டதாலும், 1898-ல் மீண்டும் வெள்ளப்பெருக்கு உண்டானதாலும் மக்கள் சொல்லொண்ணாத் துன்பங்களை அடைந்தனர்.

பாதிக்கப்பட்டவர்கள் அயல்நாட்டவர்களை நிந்தித்தார்கள். காரணம் என்னவென்றால் அவர்கள் புதிய சமயத்தைப் பரப்பியதன் மூலம் சீனர்களின் பழமையான கொள்கைகளையும் தெய்வங்களையும் புண்படுத்தியதாக எண்ணினார்கள்.

**8. இரகசிய சங்களின் தோற்றம்**

சீனாவில் பல ரகசிய சங்கங்கள் தோன்றின. அவைகளில் ஒன்று 'எட்டு வரி வடிவ' சங்கமாகும். மற்றொன்று 'வெண்தாமரைச்' சங்கமாகும்.

இச்சங்கங்கள் தீவிர நாட்டுப்பற்று கொண்டும், அந்நிய துவேஷமும் பெற்றும் விளங்கின. அந்நியர்களுக்கு எதிரான முழக்கங்களை அவைகள் எழுப்பின. அச்சங்கத்தினர் தங்களுடைய கைகளில் அதிகாரமும், வலிமையும் உள்ளதாகக் கூறிக்கொண்டனர். அவர்கள் ரகசியமாக மல்யுத்தம், குத்துச்சண்டை, வாட்போர் மற்றும் பிற உடற்பயிற்சிகள் ஆகியவற்றைச் செய்து வந்தனர்.

**பாக்சர்களின் தோற்றம்**

சீனர்களின் இரகசிய சங்கமான 'ஐ ஹோ சுவான்' என்பதற்கு 'பாக்சர்கள்' என்ற பெயரினை அந்நியர்கள் வழங்கினர். பாக்சர்கள் என்றால் நேர்மையும், அமைதியும் கொண்ட குத்துச் சண்டை வீரர்கள் என்பது பொருளாகும். இது எட்டு வரி வடிவ சங்கத்திலிருந்து தோன்றியதாகும். அவர்கள் துப்பாக்கிக் குண்டுகளை தங்கள் கைமுஷ்டி மூலம் அதாவது குத்துச்சண்டை மூலம் வெல்லலாம் என்ற நோக்கத்தினைக் கொண்டிருந்தனர். அதை மந்திரத்தின்

மூலம் அடையத்திட்டமிட்டனர். அவர்கள் அதற்காக மந்திரங்களை ஓதினர். மிக உயர்ந்த சக்தியை உண்டாக்குவதற்கு பல சடங்குகள், வழிபாடுகள் ஆகியவற்றை மேற்கொண்டனர். அதன் மூலம் துப்பாக்கிகளின் வலிமையைக் குறைக்க முற்பட்டனர்.

ஆரம்பத்தில் பாக்சர்கள் மஞ்சுக்களுக்கு எதிரானவர்களாகத் தோற்றமளித்தார்கள். பின்னர் அவர்களுக்கு ஆதரவாகவும், அந்நியருக்கு எதிராகவும் மாறினர். அவர்கள் அந்நியர்களை விரட்ட வேண்டும் என முடிவு செய்தனர். அத்துடன் அவர்களுடைய சீன ஆதரவாளர்களையும் அங்கிருந்து அகற்ற பாடுபட்டனர்.

**கலகத்தின் போக்கு**

தோவேஜர் பேராசிரியர் முதலில் ரகசியமாக பாக்சர்களை ஆதரித்து வந்தார். பின்னர் வெளிப்படையாகவே ஆதரிக்கலானார். அவருடைய ஆதரவுடன் அவர்கள் மிகவும் தீவிர வன்முறையுடனும், மொழிவெறியுடனும் செயல்பட்டனர். 1900-ம் ஆண்டில் அவர்கள் படுகொலையில் இறங்கினர். ஷாண்டுகளில் பேரழிவு ஏற்பட்டது. அத்துடன் ஷிகிலி, ஷான்சி, மஞ்சூரியா ஆகிய இடங்களிலும் நாசவேலையில் ஈடுபட்டனர். அவர்கள் கோவில்களைக் கொளுத்தினர். கிறிஸ்தவ சமயப்பரப்புக் குழுவினர்களை கொன்று குவித்தனர். அவர்கள் இருப்புப் பாதைகளையும், தந்தி நிலையங்களையும் அழித்தனர்.

வடசீனா முழுவதும் வன்முறை தலைவிரித்தாடியது. 1900-ம் ஆண்டில் ஜூன் மாதம் அரசாங்கம் அனுமதி அளித்தது. பேரரசின் ஆணை எதுவும் இல்லாததால் தென் மாநிலங்கள் போரில் ஈடுபடவில்லை. இந்த விதமாக ராணுவ நடவடிக்கை வடக்கில் மட்டுமே நடைபெற்றது. அந்த முற்றுகையானது எட்டு மாதங்கள் நடைபெற்றது.

**அயல் நாட்டு ராணுவத் தலையீடு**

கலவரத்தால் பாதிக்கப்பட்ட வெளிநாட்டினா் தங்கள் கௌரவத்தையும், ரகசிய உடமைகளையும் பாதுகாக்க ராணுவ நடவடிக்கை எடுக்க முடிவு கட்டினா். அதன் விளைவாக ஜொ்மானிய தளபதி வால்டெர்சி என்பவா் தலைமையில் 18,000 போ்களைக் கொண்ட ஒரு கூட்டுப்படை பீகிங் நகரை வந்தடைந்தது. அவா்கள் அங்கு கூட்டுப்படைகளின் கொடிகளை நாட்டினா். தோவேஜா் பேரரசி மாறுவேடத்தில் தலைநகரிலிருந்து தப்பி ஓடினாா். கொடூர நடவடிக்கைகள் மூலம் அந்த பன்னாட்டுப்படை பாக்சா்களை வேட்டையாடியாது. பாக்சா் கலகம் முறியடிக்கப்பட்டது.

**பாக்சா் ஒப்பந்தம்**

நீண்ட இடவெளிக்குப் பிறகு 1901-ஆம் ஆண்டில் பாக்சா் ஒப்பந்தம் கையெழுத்தானது. அந்த விதிகளின் படி சீனா கீழ்கண்டவற்றை ஒப்புக்கொண்டது.

1. ஜொ்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கொலை செய்யப்பட்டதற்கு அரசாங்க ரீதியில் மன்னிப்பு கோர வேண்டும்.
2. 450 மில்லியன் சீன நாணயங்களை 39 தவணைகளில் இழப்பீட்டுத் தொகையாக செலுத்த வேண்டும்.
3. வன்செயல்களில் ஈடுபட்டதற்காக பாக்சா்களின் தலைவா்களையும், அதிகாரிகளையும் தண்டித்தல்.
4. பாக்சா் கலவரம் நடைபெற்ற இடங்களில் நிா்வாக பொறுப்புகளுக்கான பதவிகளுக்கு நடைபெறும் போட்டித் தோ்வுகளை 5 ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்க வேண்டும்.
5. போா்க்கருவிகளை இறக்குமதி செய்தல் நிறுத்தப்பட வேண்டும்.

6. பீகிங்கில் அயல்நாட்டுத் தூதரகங்களை பாதுகாக்க நேச நாடுகளுக்கு அனுமதி அளிக்க வேண்டும்.
7. தாக்கூ ஆற்றின் முகத்துவாரத்திலுள்ள கோட்டையை அழிக்க வேண்டும்.
8. வணிக உடன்படிக்கைகளை மறு பரிசீலனை செய்து, புதுப்பித்தல், அயல்நாட்டு அமைச்சகத்தை ஏற்படுத்த வேண்டும்.
9. தலைநகருக்கும், கடலுக்கும் இடையில் அமைந்த முக்கிய இடங்களில் ராணுவம் தங்க அனுமதி வழங்க வேண்டும்.
10. அயல் நாட்டவர்களின் இடுகாட்டில் நினைவுச் சின்னங்களை ஏற்படுத்த (கலவரத்தை இறந்தவர்களுக்கு) அனுமதி வழங்க வேண்டும்.

**பாக்சர் கலகத்தின் தன்மை**

பாக்சர் கலகமானது மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. முதல் கட்டத்தில் பாக்சர்கள் அன்னியர்களை வெறுத்து அவர்களை விரட்ட முற்பட்டனர். அவர்கள் மஞ்சுக்களுக்கு எதிராகவும், அன்னியர்களை வெறுப்பவர்களாகவும் இருந்தனர். இரண்டாவது கட்டத்தில் அவர்கள் மஞ்சுக்களுக்கு ஆதரவாக இருந்தனர். தங்களுடைய நடவடிக்கைகளை அயல் நாட்டவர்களுக்கு எதிராக முடுக்கி விட்டனர். இறுதிக் கட்டமான மூன்றாவதில் திறமையற்ற ஊழலான அதிகார வர்க்கத்திலிருந்தும், அதிகாரிகளிடமிருந்தும் முறையாக விடுபட முயன்றனர். சுருங்கக்கூறின் இது மேலை நாட்டு செல்வாக்கிற்கு எதிரான இயக்கமாகும். மேலும் மக்களின் ஏழ்மை, துன்பத்திலிருந்து அவர்களை விடுவிக்க ஏற்பட்ட இயக்கமாகும்.

**பாக்சர் கலகத்தின் தோல்விக்குக் காரணங்கள்**

புகழ் வாய்ந்த இந்தக் கிளர்ச்சியானது அரசாங்க ஆதரவு இருந்தும் தோல்வியடைந்தது என்பது மிகவும் பரிதாபத்திற்குரியதாகும்.

1. இந்தப் போராட்டமானது மாநிலங்களில் மட்டும் நடைபெற்றதாகும். தென் மாநிலங்கள் இதைப் புறகணித்து விட்டன. இது நாடு தழுவியதாக அமையவில்லை என்பது இதன் தோல்விக்கு முக்கிய காரணம் ஆகும்.
2. சீனத்துருப்புகள் ஒருங்கிணைந்து செயல்படவில்லை. இந்த இயக்கத்திற்கு ஆதரவு தருவதில் பேராசிரியரோ அரைமனதாகவும் குறைமனதாகவும் இருந்தார். சீனப்படைக்கு வலிமை பொருந்திய தலைமை இல்லை.
3. பாக்சர்கள் குருட்டுதனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அவர்கள் தவறான வழிகளில் செயல்பட்டனர். ஆக்கபூர்வமான திட்டங்களை முன் வைத்து மக்களைக் கவர்ந்து இருப்பார்களேயானால் அந்தக் கிளர்ச்சியின் போக்கு வேறுவிதமாக அமைந்திருக்கும். மஞ்சுக்களை தங்கள் ஆட்சியில் மேலும் 11 ஆண்டுகள் நீடித்திருக்க முடியாது.
4. பாக்சர்களை நன்முறையில் வழிநடத்தும் அளவிற்கு தலைவர்கள் அங்கில்லை. மக்களைக் கவரும் மாபெரும் தலைவர்கள் அவர்களிடம் அப்போது தோன்றவில்லை.
5. கிளர்ச்சி தோல்வி அடையக் காரணம் மேலை நாட்டு உயர்தரமான கூட்டுப்படைகளின் செயல் வேகமாகும். மிக முன்னேற்றமான போர் நுணுக்கம், துப்பாக்கிகளின் பயன், நல்ல தந்திரம் ஆகியவை அவர்களின் வெற்றிக்குப் பெரிதும் உதவின. ஆகவே மேலை நாட்டவர் மிக எளிதில் கலவரத்தை அடக்கிவிட்டார்கள்.

**பாக்சர் இயக்கத்தின் விளைவுகள்**

1. பாக்சர் ஒப்பந்தத்தின் விளைவாக சீனா மேலும் அவமானப்பட்டது. மேலும் பல சலுகைகளை சீனா அயல்நாடுகளுக்கு அளிக்க வேண்டி

இருந்தது. பெரும் இழப்பீட்டுத் தொகை கொடுக்க ஏற்றுக் கொண்டதால் அதன் பொருளாதாரம் மேலும் பாதிக்கப்பட்டது.

2. பாக்சர் கலவரம் மஞ்சுக்களின் வீழ்ச்சியை விரைவுபடுத்தியது. மக்களின் வெறுப்பு நாடெங்கிலும் தோன்றி அவ்வம்சத்தை 1911-ல் பதவியிலிருந்து இறக்கியது.
3. மேலை நாடுகள் சீன மக்கள் மனம் அறிந்து அதன் வழி செயல்படலாயின. சீனாவின் அழிவை பாக்சர் கலவரம் தடுத்து நிறுத்தியது.
4. பாக்சர் கலகம் மஞ்சுக்களை சீர்திருத்தப் பாதையில் அழைத்துச் சென்றது. அச்சீர்திருத்தங்கள் பெரும்பாலும் பழமையின் பாற்பட்டவையாகும். பொதுவாக ஒரு மாற்றத்தின் ஆரம்பாக அவைகள் அமைந்தன.

**தோவேஜர் பேரரசி சூசி**

'பழைய புத்தர்' என்று அழைக்கப்பட்ட தோவேஜர் பேரரசி ஷீன் பெங் என்ற பேரரசரின் ஆசைநாயகி ஆவார். ஷீன் பெங் 1851 முதல் 1861 வரை ஆட்சி புரிந்தவராவார். 1861-ம் ஆண்டில் ஜொஹோல் என்ற இடத்தில் அவர் இறந்த போது தோவேஜர் ஆட்சியைப் பிடிக்கும் திறமையைப் பெற்றிருந்தார். தந்திரத்தின் மூலம் கைப்பற்றிய ஆட்சியை, தான் 1908-ல் இறக்கும் வரையில் ஏறக்குறைய 48 ஆண்டு காலம் பராமரித்து வந்தார். அவருடைய ஆட்சிக்காலத்தில் துங்சி, குவாங்சு என்ற இரு சிறுவர்கள் பேரரசர்களாக இருந்து வந்தனர். அவர்களுக்கு இந்த அம்மையார் பாதுகாப்பாளராக இருந்து வந்தார். மஞ்சு அரசு அவையில் அவர் வலிமை பொருந்தியவராக விளங்கினார்.

**சூ-சியின் கொள்கைகளும் கோட்பாடுகளும்**

அறிவு நுட்பமும் முடிவு எடுக்கும் மனப்பாங்கும் அவரிடம் இல்லாமல் இல்லை. ஆனால் அடிப்படையிலேயே அவர் அறியாமையில் உழன்றவர், பழமைவாதி, குறுகிய மனப்பாங்கு உள்ளவர் சுயநலமிக்கவர். தன் நாடு, தன் வம்சம் ஆகியவற்றைவிட தன்னுடைய நலமே பெரிதெனக் கொண்டவர். கன்பூசியத் தத்துவத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர். அவர் அனைவரின் மனப்பாங்கினையும் எளிதில் அறியும் திறமை கொண்டவர்.

ஆனால் குள்ள நரித்தந்திரம் கொண்டவர், எதையும் ஆதாயத்தோடு நோக்கும் பக்குவம் பெற்றவர். அவர் எப்போதும் தன் அதிகாரத்தையும் நிலையையும் வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளவில்லை. தன்னுடைய நம்பிக்கைக்கு உரியவர்களின் துணையுடன் திரைமறைவில் இருந்து கொண்டு தன் காரியங்களை செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டவர்.

**1861-ல் ஏற்பட்ட திடீர் ராணுவ நடவடிக்கையில் சூ-சியின் பங்கு**

1861-ஆம் ஆண்டில் ஜொஹேலில் தஞ்சம் புகுந்த பேரரசர் ஷீன் பெங் இறந்து போனார். அவருடைய மனைவிக்கு வாரிசு எதுவும் இல்லை. அவருடைய ஆசைநாயகியான சூசி என்பவளுக்கு ஒரு ஆண் குழந்தை உண்டு. பேரரசர் இறப்பதற்கு முன்பு அவருடைய வாரிசாக அந்த ஆறுவயதுக் குழந்தை நியமிக்கப்பட்டான். அப்போது பாதுகாவலர் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அது அவனுடைய குழந்தைப் பருவத்தில் ஆட்சி புரிந்து வந்தது. ஆனால் சூசி இளவரசன் சூங் என்பவருடன் சேர்ந்து கொண்டு திடீர் புரட்சியில் இறங்கி பாதுகாவலர் குழுவினைத் தூக்கி எறிந்தாள்.

அதன்பின் அவளும் சூங்கும் இணைந்து பகர ஆளுநர்களாக இருந்து வந்தனர். அவ்விருவரும் பட்டுத்திரையின் பின்னால் இருந்து கொண்டு அரச

காரியங்களை கவனித்து வந்தனர். நாளடைவில் சூசியே அரசின் உண்மையான தலைவராக விளங்கினார்.

### தன் வலிமைப்படுத்தும் இயக்கத்தில் சூ-சியின் பங்கு

துங்சி காலத்திய தன்வலிமைப்படுத்தும் இயக்கத்தினை சூஹ்சி ஆதரித்தார். அவர் சீனாவை நவீன அரசாக மாற்ற வேண்டும் என்பதற்காக ஆதரிக்கவில்லை. அவர் பழமையைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவும் தன் பதவியைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் ஆதாரித்தாரே அன்றி வேறில்லை. உள்நாட்டுக் கிளர்ச்சியினை அடக்கி அயல்நாட்டுப் பேராதிக்கத்தைக் கட்டுப்படுத்தவே அவர் அவ்வாறு செய்தார்.

### சூ-சியும் நூறு நாள் சீர்திருத்தமும்

காங் யு வியினால் பெரிதும் கவரப்பட்ட பேரரசர் குவாங்க நூறு நாள் சீர்திருத்தங்களை வெளியிடலானார். கன்பூசியக் கோட்பாட்டின் அடிப்படையிலான பத்தாம் பசலி அரசை தற்கால அரசாக மாற்ற ஏராளமான ஆணைகள் வெளியிடப்பட்டன. புதிய நிர்வாக முறையினை ஏற்படுத்த அவசியமற்ற பதவிகள் நீக்கப்பட்டன. அதன் விளைவாக மஞ்சு பிரபுக்கள் தங்கள் பதவிகளையும், செல்வாக்கையும் இழந்தனர். சிவில் சர்வீஸ் தேர்வில் பின்பற்றப்பட்ட ‘எட்டுக்கால் கட்டுரை’ யானது நீக்கப்பட்டது. இதனால் முழுமையாக கன்பூசிய செல்வாக்கு நிர்வாகத்திலிருந்து அகற்றப்பட்டது. பாதிக்கப்பட்ட அதிகாரிகள் தோவேஜர் பேரரசியை நாடித் தலையிடச் செய்தனர். அவரே பழமைவாதியாகையால் எல்லாச் சீர்திருத்தங்களையும் எதிர்க்கலானார்கள்.

1861-ம் ஆண்டிலிருந்து 37 ஆண்டுகள் பேரரசி தோவேஜர் அரசின் முழு அதிகாரம் பெற்று விளங்கினார். அவருடைய நம்பிக்கைக்கு உரியவர்கள் பங்கு

பெற்றிருந்த பெரும் அவையின் முடிவுகள் அரசியாருக்கு அவ்வப்போது தெரிவிக்கப்பட்டது. அவரது பார்வையிலிருந்து எதுவுமே தப்பியது கிடையாது. எந்த கன்பூஷியக் கோட்பாட்டின் அடிப்படையில் தன் பதவியும் செல்வாக்கும் பதிந்திருந்ததோ அது வேரோடு பிடிங்கப் பட்டபோது அவர் ராணுவத்தின் துணை கொண்டு மீண்டும் அப்பதவிக்கு வரலானார்.

**பாக்சர் கலவரத்தில் சூ-சியின் பங்கு**

ஆரம்பத்தில் பாக்சர் கலவரம் மஞ்சுக்களுக்கும், அயல் நாட்டவர்களுக்கும் எதிராக ஆரம்பிக்கப்பட்டது. அக்கலவரத்தினர் மஞ்சுக்களைப் பதவியிலிருந்து அகற்ற வேண்டும் என்றும், அவர்கள் இறைவன் விருப்பப்படி ஆட்சியை நடத்தவில்லை என்றும் கூறினார். ஆனால் பேரரசி சாமர்த்தியமாக அவர்களுக்கு உதவி செய்து, அவர்களை அயல் நாட்டவர்களுக்கு எதிராக முடுக்கி விட்டார். ஒரு பக்கம் அயல் நாட்டவரின் செல்வாக்கு மண்டலங்களாக நாடு பிரிந்து செல்வதைக் கண்டார். மற்றொரு பக்கம் சீர்திருத்த இயக்கங்களால் நாடு மேலைமயமாதலை அவர் கண்டார். பீகிங்கிலிருந்த அயல்நாட்டு தூதர்கள் மிகவும் மோசமாக நடந்து வந்தனர்.

எனவே கலவரத்தை அவர்கள் பக்கம் திருப்பலானார். பாக்சர்களின் மாயவித்தைகளிலும், தந்திரங்களிலும் நம்பிக்கை கொண்ட அவர் பாக்சர்களுக்கு நல்லாதரவினையும், ஆசியையும் ரகசியமாக வழங்கினார். பின்னர் வெளிப்படையாக அவர்களை ஆதரித்தார். பேரரசியின் ஆதரவு பெற்ற பாக்சர்கள் மிகத் தீவிர நடவடிக்கையில் இறங்கினார். குறுகிய காலத்தில் வடசீனா முழுவதிலும் வன்முறை தலைவிரித்தாடியது.

1900-ம் ஆண்டு ஜுன் மாதம் அயல்நாடுகளை எதிர்த்து அரசாங்கம் போரில் ஈடுபட்டது. பீகிங்கிலிருந்த அயல்நாட்டுத் தூதரகங்களை

முற்றுகையிடும்படி பாக்சர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதைக் கண்ட அந்நாடுகள் கூட்டுப்படையொன்றை ஜெர்மன் தளபதி லால்டர்சி என்பவர் தலைமையில் உருவாக்கினார். அந்தக் கூட்டுப்படை சீனாவை அடைந்து டியன்சின் நகரைக் கைப்பற்றியது. பீகிங்கில் தங்கள் கொடியை நாட்டியது. பேரரசி தோவேஜர் மாறு வேடத்துடன் அங்கிருந்து ஓட்டம் பிடித்தார்.

**சீனாவை சீர்திருத்த முயற்சித்தல்**

பாக்சர் கலவரம் அவருக்கு ஏற்பட்ட ஒரு கசப்பான அனுபவமாகும். வரலாறு காணாத அளவுக்கு அழிவைத் தேடித்தந்ததற்கு அவர் வெட்கமும், வேதனையும் அடைந்தார். அயல்நாட்டினரால் ஏற்படட அவமானத்தை நீக்க முற்பட்டவருக்கு மேலும் அவமானமும், தலைக்குனிவும் ஏற்பட்டன. இறுதியில் சீனாவை சீர்திருத்தங்கள் மூலம் தன்னிலைக்குக் கொண்டுவர விரும்பினார். தன் பதவியையும், செல்வாக்கையும் காப்பாற்றிக் கொள்ள அதுதான் ஒரே வழி என எண்ணினார். அதன்படி சீர்திருத்தங்களை வெளியிட்டார். அவருடைய சீர்திருத்தங்களில் கல்வி, ராணுவம், கப்பற்படை, அரசாங்க அமைப்பு முறை அபினியை ஒழித்தல் போன்ற பலவித துறைகள் இடம் பெற்றன. சமூக, பொருளாதார அமைப்பில் அவர் மேற்கொண்ட சீர்திருத்தங்கள் மிகவும் சொற்பமானவை.

**சூ-சியின் மரணம்**

தன்னுடைய 73வது வயதில் தோவேஜர் நோய்வாய்ப்பட்டார். மூன்று மாதங்களுக்குள்ளாகவே அவர் (1908ஆம் ஆண்டில்) மரணம் அடைந்தார். அவருடைய மரணத்திற்கு முதல் நாள் பேரரசர் குவாங்க என்பவரும் மாண்டு போனார். அவருக்கு அரசி சூசி தான் இறப்பதற்கு முன் விஷம் வைத்ததாகக் கூறப்படுகிறது.

## 1911-ம் வருட சீனப் புரட்சி

1900-ல் தொடங்கி தோல்வியைத் தழுவியது பாக்ஸர் கலவரம் அதனையொட்டி 1901-ஆம் ஆண்டு செப்டம்பர் 7-ஆம் நாள் பாக்ஸர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் பின்னர் சீனாவில் உள்நாட்டு வரலாறு ஒரு மரத்தில் உருவான இரு கிளைகளென தழைக்கலாயிற்று. 1902 முதல் 1908 வரை சீனாவில் உருவான சீர்திருத்தங்கள் என்னும் கிளை அவற்றுள் ஒன்று. அச்சீர்திருத்தங்களுடன் பின்னிப்பிணைந்து அதனைத் தாழ்வுறச் செய்துவிட்டு 1911-ல் வெளியிட்ட சீனப்புரட்சி என்பது மற்றொரு கிளையாகும். முன்னர் கூறப்பட்ட சீர்திருத்தக் கிளையானது வளர்ச்சி பெறுமுன்னரே குறுகிய காலத்தில் வெட்டப்பட்டுவிட்ட போதிலும் சீனப் புரட்சி என்ற கிளையானது பல காரணங்களால் மேலும் உட்கிளைகள் பலவற்றுடன் செழிப்புற்றுப் படர்ந்து வளர்ந்தது.

### புரட்சிக்கான காரணங்கள்

#### 1. மஞ்சு வம்சம்

கி.பி. 1644 முதல் 1911 வரை சீனாவில் ஆட்சிபுரிந்த மஞ்சு வம்சமே 1911 ஆம் ஆண்டுச் சீனப்புரட்சிக்குப் பெருமளவில் காரணமாகும். 1. மஞ்சு வம்சத்தவர் வெளிநாட்டினரெனக் கருதினமையால் அவர்கள் மீது சீனர்களுக்கு வெறுப்புணர்வு இருந்து வந்தது. 2. மஞ்சு ஆட்சியாளர்களின் திறமையின்மை காரணமாக 19-ஆம் நூற்றாண்டில் சீனாவில் ஐரோப்பிய நாட்டவர்களின் ஊடுருவல்களை அவர்களால் தடுக் முடியவில்லை. 3. ஐரோப்பிய வர்த்தகர்கள் சீனாவுடன் வாணிபத்தில் வளம் பெற்ற போது சீனப் பொருளாதாரம் சுரண்டப்படுவதை மஞ்சு வம்சத்தினரால் தடுக்கமுடியவில்லை. 4. நூறு நாள் சீர்திருத்தம், பாக்ஸர் கலவரம் போன்றவை சீனாவில் மாறுதல்களைத்

தோற்றுவிக்கவில்லை. அதற்குக் காரணம் மஞ்சு அரசர்களின் இயலாமையும், திறமை இன்மையுமே ஆகும்.

5. இவ்வாறு வலிமையற்ற மஞ்சு வம்சத்தினர் சீனாவைச் சீர்திருத்தங்கள் மூலம் மாற்றியமைக்கத் தலைப்பட்டபோது அதற்கான காலம் எப்போதோ கடந்துவிட்டிருந்தது. 6. அவர்களால் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் புதுமைத் தாகத்தால் உந்தப்பட்டு இருந்த சீன மக்களின் தாகத்தைத் தணிக்கக்கூடிய அளவினதாகவும் இருக்கவில்லை. 7. பேரரசர் குவாங்-ஷீ மரணமடைந்த பின்னர் 1908 நவம்பர் 14-ல் வலிமையும், திறமையுமுடைய பேரரசி தோவேஜர் சூஸியும் மரணமடைந்தார். எனவே, அவ்விருவருடைய மரணங்களும் சீனாவில் மாற்றங்களை ஏற்படுத்த சீனப்புரட்சியாளர்களை வீறுகொண்டெழச் செய்தது.

**2. சீனாவில் காணப்பட்ட நிலை**

1. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் உருவான நூறுநாள் சீர்திருதத்தங்கள், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுந்த பாக்ஸர் இயக்கம், ஆகியன சீனர்களைப் புரட்சிப் பாதையில் கொண்டு செலுத்தின. 2. சீனாவில் மேல்நாட்டினருடன் அண்டை நாட்டவரும் தமது ஆதிக்கத்தையும், பொருளாதாரத் திட்டங்களையும் செயல்படுத்த முனைந்த களமாகத் திகழ்வதை விரும்பாமையால் புரட்சிகளில் ஈடுபடலாயினர். 3. 1894-95-ல் நடந்த சீன-ஜப்பானியப் போர், 1904-1905-ல் நடைபெற்ற ரஷ்ய-ஜப்பானியப் போர் ஆகியவற்றில் ஜப்பான் வெற்றி பெற்ற போது சீனா ஜப்பானுக்கு ஓர் போர்க்களமாகவே விளங்கியது. எனவே சீனர்கள் தம்மைப் பலப்படுத்திக் கொள்ளுதலின் பொருட்டு புரட்சி செய்யலானார்கள் 4. பல அயல்நாட்டவரும் சீனாவைப் பல வழிகளில் சுரண்டி அதனைப் பேரிழப்பிற்கு உள்ளாக்கிய போது

சீனர்கள், சீனாவைச் சீராக்கி செழிப்படையச் செய்யக்கூடிய ஓர் ஒப்பற்ற தலைமையின் கீழ் முன்னேற்றமடைவதற்கான வழிகளைக் காணுதல் என்ற அடிப்படையில் புரட்சியை விரும்பினார்கள்.

**3. இயற்கையின் சீற்றம்**

ஏற்கனவே பல வழிகளில் இன்னல்களுக்கு உள்ளாக்கப் பட்டிருந்த சீனா இயற்கையின் சீற்றங்களுக்கும் உள்ளான போது சீனப்புரட்சி தவிர்க்க முடியாததாயிற்று. 1. 1910-11ஆம் ஆண்டுகளில் சீனாவில் ஏற்பட்ட பெருவெள்ளம். காரணமாகப் பொருட்சேதம், பயிர்ச்சேதம் ஆகியவற்றுடன் உயிர் சேதமும் ஏற்பட்டன. பஞ்சம் தலைவிரித்தாடியது. ஆனால் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் அரசு வாளாவிருந்தது. எனவே மக்கள் அரசினை மாற்றத்தக்க வகையில் இயற்கையின் சீற்றங்களுக்கு ஈடாக ஆத்திரம் அடைந்து மாற்றங்களை உருவாக்கப் புரட்சி செய்யலானார்கள். 2. சீனாவில் பெருகி வந்த மக்கள் தொகையும் புரட்சிக்கு வித்தாக அமைந்தது. 1885-ஆம் ஆண்டில் 377 மில்லியன் மக்களைக் கொண்டிருந்த சீனாவின் மக்கள் தொகை 1911-ம் ஆண்டில் மேலும் மில்லியன்கள் கூடின போது தேவைகள் பெருகின. வெள்ளம், பஞ்சம் ஆகியவற்றுடன் பெருகி வந்த மக்கள் தொகையும் சீனாவில் பசி, பட்டினி, பஞ்சம், வறுமை ஆகியவற்றுக்கு காரணமானது. எனவே அக்கொடுமைகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளுதலின் பொருட்டு புரட்சி ஏற்பட்டது.

**4. சமயக் கோட்பாடுகள்**

ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்த சமயப்பரப்பு ஊழியர்களால் சீனாவில் கிறிஸ்தவ சமயம் பரப்பப்பட்டபோது கன்பூஷியஸ் மற்றும் புத்தர் போன்றோரால் போதிக்கப்பட்ட கருத்துக்கள் பழமையானவை எனக் கருதப்பட்டன. எனவே

அவை மறையத் தொடங்கின. எனவே புதுச் சமயக் கோட்பாடுகளால் ஈர்க்கப்பட்டுப் பழமையை மறந்ததால் தான் தமக்குப் பல இன்னல்கள் வந்தன என்று கருதியபோது மாற்றங்களை விரும்பி அவற்றைப் பெறுவதற்கான வழிகளில் ஈடுபட்ட போது அவை புரட்சியாக மலர்ந்தன.

**5. வெளிநாட்டவர்கள் தொடர்புகள்**

1. உள்நாட்டில் மேலைநாட்டினர் குறியேறிய போது அவர்கள் தம்முடைய கருத்துக்களைச் சீனாவில் பரப்பினார்கள். 2. வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பிய சீனர்கள் அந்தந்த நாடுகளில் நிலவிய சமத்துவம், சகோதரத்துவம், பொருளாதார மேன்மை, கல்வி மேம்பாடு ஆகியவற்றால் ஈர்க்கப்பட்டனர். அதனால் அவற்றினடிப்படையில் தமது நாட்டிலும் மாற்றங்களை உருவாக்க அவர்கள் முயன்றதில் வியப்பொன்றுமில்லை.

**6. பொருளாதார நிலை**

1. அயல்நாட்டவரின் வாணிபச் சலுகைகள், பொருளாதாரப் போட்டிகள், வர்த்தகச் சீர்கேடுகள், அரசின் ஈடுபாடின்மை போன்ற பாதையில் கொண்டு செலுத்தின. 2. அயல்நாட்டவர் பலருக்குப் பல நேரங்களில் பல்வேறு காரணங்களுக்காகக் கொடுக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையினால் மக்களின் வளம் பாதிப்பிற்குள்ளாக்கப் பட்டபோது புரட்சியே தமது சிக்கல்களுக்கு வழிவகுக்குமென மக்கள் எண்ணலாயினர்.

**7. தனிநபர்களின் பங்கு**

சீனாவில் சீரற்ற நிலை காணப்பட்டுச் சின்னாபின்னமானதோர் இரங்கத்தக்க சூழ்நிலை உருவான போது தனிநபர்களும், ரகசியக் கழகங்களும் மக்களை இன்னல்களிலிருந்து மீட்கக்கூடிய வகைகளில் செயல்பட்டபோது புரட்சி வெடித்தது. 1898-ல் குவாங் யூ வெய், 1905-ல் பேராசிரியர் த்வாகெர் சூஸி

ஆகியோா் சீா்திருத்தங்களைக் கொண்டு வந்த போது அவற்றின் பலனை முழுமையாகப் பெறமுடியாத மக்கள் மேலும் புரட்சியில் ஈடுபடலானாா்கள். ஜப்பானியப் புரட்சிக் கருத்துக்களும் முன்னேற்றக் கோட்பாடுகளும் சீனா்களை விழிப்படையச் செய்தன. குறிப்பாக டாக்டா். சன்யாட்சென் என்பவா் அத்தகைய புரட்சிக் கருத்துகளையெல்லாம் ஒன்றாகத் திரட்டி 'துங்-மிங்-ஹீயி' (Tung-Ming-Hui) என்ற புதிய அமைப்பினை உருவாக்கினாா். அவருடைய அயரா உழைப்பினால் ஆரம்பகாலத் தோல்விகள் பலவற்றுக்குப் பின் இறுதியில் 1911-ல் புரட்சியை வெடிக்கச் செய்வதில் வெற்றி கண்டாா்.

**8. பத்திரிக்கைகளின் பங்கு**

சீனாவில் நடத்தப்பட்ட பத்திரிக்கைகள், வார இதழ்கள் மற்றும் இலக்கிய நூல்கள் ஆகியன அக்காலச் சீனா்களின் தேவைகளைப் பூா்த்தி செய்யப்பாடுபட்டன. அவை அனைத்துமே சீனா் நலன் மற்றும் மேம்பாடு என்ற கருத்தினை வலியுறுத்தின. செய்தித்தாள்களுள் லியாங்-ஸீ-செள என்பவரால் நடத்தப்பட்டு வந்த 'பொதுமக்கள் கருத்து'(Public Opinion)'புதிய மக்களுடைய பத்திரிக்கை (New Peoples Magazine) மற்றும் 'தேசீய மனவெழுச்சி' (National Spirit) ஆகிய செய்தித்தாள்கள் முக்கியமானவையாயிருந்தன.

இப்பத்திரிக்கைகள் மூலமாக மஞ்சு வம்சத்திற்கு எதிரான கருத்துக்கள் பறைசாற்றப்பட்டன.

**9. இருப்புப் பாதைகள் தேசீய மயமாக்கல்**

1911-ஆம் ஆண்டில் இருப்புப் பாதையினை அடிப்படையாகக் கொண்டு, சீன அரசு மேற்கொண்ட செயல் ஒன்று சீனப்புரட்சியை வெடிக்கச் செய்தது. 1911-ஆம் ஆண்டில் ஆரம்பத்தில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு போன்ற நாடுகளின் வங்கிகளிலிருந்து சுமாா் ஆறு மில்லியன் டாலா்களைக் கடனாகப்

பெற விரும்பி அதற்கு ஈடாகச் சீனாவில் ஏற்கனவே செயல்பட்டு வந்த இருப்புப்பாதைகள் அடமானமாக வைக்கச் சீன அரசு முற்பட்டது. அதற்காக இருப்புப் பாதைகள் ஏற்படுத்துகையில் உள்நாட்டு மக்களுடன் செய்து கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தங்கள் தடைசெய்யப்பட்டன.

**புரட்சியின் ஆரம்பம்**

**ஷீசுவான் நிகழ்ச்சி**

ஷீசுவான் (Szechuan) மாநிலத்தில் அரசு நடவடிக்கைகளுக்குப் பெருமளவில் எதிர்ப்புகள் தோன்றின. அங்கு வாழ்ந்த சீனப் பங்குதாரர்கள் தமக்குக் கொடுக்கப்பட்ட உரிமைகள் தேசியமயமாக்கல் கொள்கை மூலம் பாதிக்கப்படுவதாக ஓர் மனுவின் மூலம் அரசுக்குத் தெரிவிக்க முற்பட்டனர். அதே சமயம் இருப்புப்பாதைப் பாதுகாப்புக் குழு வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்தது. எனவே அரசப் பிரதிநிதி அரசின் கொள்கைகளை எதிர்த்த பலரை கைது செய்தார். மக்கள் அதனைக் கடுமையாகச் சாடினார்கள். அரசு அதனை ஒடுக்கத் துப்பாக்கிச் சூடு நடத்தியது. அதனையொட்டி கான்டனில் நடைபெற்ற கிளர்ச்சியில் 72 பேர் உயிழந்தனர். இதனைத் தொடர்ந்து புரட்சித் தீ பல இடங்களுக்கும் பரவிக் கொளுந்துவிட்டு எரியலாயிற்று.

**ஹான்கௌவில் கிளர்ச்சி**

கான்டனில் உயிரிழந்தவர்களுக்கான நினைவுச் சின்னத்தருகில் தேசிய இளைஞர் விழா கொண்டாடப்பட்டது. அது மக்களிடையே விழிப்பு உணர்வைத் தோற்றுவித்தது. அவ்வடிப்படையில் 1911-ஆம் ஆண்டு அக்டோபர் 10-ஆம் நாள் ஹான்கௌ என்னுமிடத்தில் வெடிகுண்டு ஒன்று வெடித்தது. அவ்வெடிவிபத்து

எதிர்பாராத விதமான ஒரு செயலான போதிலும் அது புரட்சித் தீயை மேலும் வளரச்செய்தது.

**தென் மாநிலங்களில் புரட்சி**

ஹான்கெள நிகழ்ச்சிக்குப்பின் ஒரு மாதத்திற்கு உள்ளாகவே தென்சீன மாகாணங்களில் புரட்சித்தீ வேகமாகப் பரவியது. அவர்கள் ஜப்பானிய முறையில் பயிற்சிபெற்ற படைத்தலைவரான லீ-யுவான்-ஹீங் என்பவரைக் கட்டாயப்படுத்திப் புரட்சியாளர்களின் தலைவராக்கினார்கள். வெளிநாடுகளிலிருந்து அவர்களுக்கு ஆதரவாகக் கிடைத்த பணத்தைக் கொண்டு தமது பொருளாதாரச் சிக்கலைப் புரட்சிக்காரர்கள் சமாளித்துக் கொண்டனர்.

இந்நிலையில்தான் அரசு அரசியலமைப்புக் கோட்பாடுகளை வெளியிட்டு மிகக்குறைந்த அளவில் கட்டுப்படுத்தப்பட்ட மன்னர் ஆட்சியை அறிவித்தது. மேலும் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்த யுவான்-ஷிகேயை மீண்டும் படைத் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளுமாறு அரசு கேட்டுக்கொண்டது. பாராளுமன்றத்தைக் கூட்டுதல், பொறுப்புடைய அமைச்சரவையை ஏற்படுத்துதல், அரசியல் கைதிகளை மன்னித்தல், படைப் பொறுப்புகளை அவரிடம் ஒப்படைத்தல் போன்ற அவருடைய வேண்டுகோள்களை அரசு ஏற்றுக் கொண்ட பின்னர் அவர் தேசியச் சட்டமன்றத்தின் பிரதமராக்கப்பட்டார்.

இதற்கிடையில் 1912 ஜனவரி 11-ல் நகர் புரட்சித் தலைவரான லீ யுவான்-ஹீங் என்பவர் வசமாயிற்று. அதே நேரத்தில் 1912 ஜனவரி முதல் நாள் நான்கிங் நகரில் டாக்டர் சன்யாட்சென் தற்காலிகமாக உருவாக்கப்பட்டிருந்த குடியரசின் தலைவராக அறிவிக்கப்பட்டிருந்தார். எனவே சீனப்புரட்சிக்குப் பின் 1912-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சீனாவின் வடபகுதி யுவான்-ஷிகேயின் கட்டுப்பாட்டிலும், தென்பகுதி சன்யாட் சென் கையிலுமிருந்தன.

**உடன்பாடும் மஞ்சுகள் பதவி நீக்கமும்**

யுவான் ஷிகே புரட்சியாளர்களுக்கும், மஞ்சு பிரிவினருக்கும் இடையில் உடன்பாடு ஏற்படச் செய்வதில் முக்கியப் பங்கேற்க வேண்டியவரானார். புரட்சியாளர்கள் தேசிய அமைப்பு ஒன்றினை நிறுவி அதன் மூலம் எதிர்காலத்தில் எத்தகைய அரசு அமைக்கப்பட வேண்டுமென்பதைத் தீர்மானிக்க வேண்டுமெனக் கூறினர். புரட்சியாளர்களுக்கும் அரச ஆதிக்கப்பிரிவினருக்கும் இடையில் எவ்விதமான உடன்பாடும் ஏற்படவில்லை.

இறுதியில் யுவான்ஷிகே மஞ்சு வம்சா வழியினரைக் குடியரசுவாதிகளின் விருப்பத்திற்கிணங்கப் பதவி விலக ஏற்பாடு செய்தார். பேரரசர் முடிதுறந்து அதன் பின்னர் யுவான் குடியரசு அரசியலமைப்பை ஏற்றுக் கொள்வதாயிருந்தால் தாம் தன்னுடைய குடியரசுத்தலைவர் பதவியினை விட்டுக்கொடுத்து விடுவதாக சன்யாட்சென் அறிவித்தார். அதன் பின்னர் 1912 பிப்ரவரி 12-ஆம் நாள் மன்னர் பூயுவான் ஷிகேயிடம் ஒப்படைத்து விட்டுப் பதவி விலகினார்.

அதற்குப்பின் டாக்டர் சன்யாட்சென் தாம் வைத்திருந்த நான்கின் அரசின் தலைமைப் பதவியை விட்டுக்கொடுத்தார். அவருடைய வேண்டுகோளின்படி புதிய சட்டமன்றமானது யுவான்ஷிகேயைத் தனது தலைவராக்கியது. குடியரசுக் கொள்கைகளை முடிந்த அளவு வளர்க்கப் பாடுபடுவதாக உறுதிமொழி எடுத்துக்கொண்டு யுவான் ஷிகே தலைவரானார். இவ்வாறு புரட்சி மக்களுக்குச் சாதகமாக முடிவடைந்தது.

**விளைவுகள்**

1. சுமார் 267 ஆண்டுகள் காலமாகச் சீனாவை ஆண்டு வந்த மஞ்சு வம்சத்தினரின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

2. புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டுப் பாராளுமன்ற அமைப்புடன் கூடிய குடியரசு தோற்றுவிக்கப்பட்டது.
3. ஆரம்பத்தில் அக்குடியரசு ஓரளவுக்குத் தள்ளாடிய போதிலும் படிப்படியாக வலுப்பெற்றுப் பழமையை நீக்கி புதுமைக் கோட்பாடுகளைப் புகுத்திச் சீனாவைப் புத்துணர்வு பெறச்செய்தது.
4. மஞ்சு வம்சம், வெளிநாட்டு ஆதிக்கம் மற்றும் வழிவழியாக வந்த பழக்கவழக்கங்கள் ஆகியவற்றுக்குப் படிப்படியாக முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.
5. சீனாவில் குழப்பங்கள் நீக்கப்பட்டு அமைதி உருவாக்கப்பட்டது.
6. தேசீய உணர்வினைத் தோற்றுவித்த இப்புரட்சியானது சீனாவை மூன்றாவது உலக சக்தியாக உருவாக்க வழிகோலியது.
7. துங் மிங் ஹீயி என்ற புரட்சிப் பிரிவினரது கட்சியானது கொமின் டாங் கட்சியாக மாறியது. அவ்வமயம் சியாங் கே ஷேக் தலைமையேற்று சீனாவை ஒருமைப்படுத்த வகை செய்தார்.
8. மக்களாட்சி, தேசீயம் மற்றும் சமதர்மம் (ளுயபெ-ஆஎை-ஊாரஎ) ஆகிய கோட்பாடுகள் மக்கள் மனத்தில் நிலைநாட்டப்பட்டு சீன வரலாற்றில் ஒரு திருப்பு முனையை இப்புரட்சி உருவாக்கியது.

**டாக்டர் சன்யாட் சன்**

சீனப்புரட்சியின் தந்தையென்றும், நவசீனச் சிற்பியென்றும் பலவாறாகப் பாராட்டப்பட்ட சன்யாட்சென் 1886-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ஆம் நாள் குவான்டுங் மாநிலத்திலுள்ள சாய்ஹீங் என்னும் சிற்றூரில் ஏழைக் குடியானவரொருவரின் மகனாகப் பிறந்தார். தைசியோங் என்பது அவரது இயற்பெயர். இளமைக்காலந்தொட்டே அவர் சீன வரலாற்றை

அறிந்துகொள்வதிலும் சீனாவில் நடைபெற்ற தைப்பிங் கிளர்ச்சி பற்றித் தெரிந்து கொள்வதிலும் பேரார்வம் காட்டினார். தமது 13-வது வயதில் ஹவாய்த் தீவிலுள்ள ஹொனலூலூ நகரிலுள்ள கிறிஸ்தவப் பள்ளிக்குச் சென்றார். ஏற்கனவே அவரது சகோதரர் அந்நகருக்குக் குடிபெயர்ந்திருந்தார். எனவே அவர் அங்கு சென்று தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் கல்வி பயில முடிந்தது.

அச்சமயம் அவர் மேலை நாட்டுக் கல்வி மற்றும் நாகரீக மோகத்தால் ஈர்க்கப்பட்டார். ஆங்கில மொழியுடன் அம்மேல்நாட்டு மக்களின் அறிவாற்றலையும் நுணுக்கமாகப் புரிந்து கொண்டார். 1883-ல் அங்கு தமது கல்வியை முடித்துக் கொண்டு ஹாங்காங்கிற்குச் சென்று மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். மருந்து மற்றும் அறுவை சிகிச்சையில் ஈடுபாடுமிக்குடையவரான அவர் 1892-ஆம் ஆண்டில் டாக்டரானார். ஆலிஸ்மெமோரியல் மருத்துவமனையில் பணியாற்றினார். மருத்துவராக அவர் பணிபுரிந்த போதிலும், அந்நியக் கட்டுப்பாட்டில் சிக்கித்தவித்துக் கொண்டிருந்த சீனாவின் துயரங்களைப் பற்றிய அவருடைய சிந்தனைகள் சுழன்று வந்தன. மிக இளவயதினராக இருந்த போது அவருடைய 19-ஆம் வயதிலேயே அவர் எழுதிய சுயசரிதையில் நாட்டின் மீது அவர் கொண்டிருந்த பற்றுதலை வெளிப்படுத்தினார்.

**நோக்கம்**

1. மஞ்சு வம்சத்தினரின் ஆட்சியைப் பதவி நீக்கம் செய்தல்
2. நவீன குடியாட்சியுடன் கூடிய தேசீய சீனாவை உருவாக்குதல்.
3. பிரச்சாரத்தின் மூலம் மக்கள் மனத்தை மாற்றி புரட்சியொன்றின் வாயிலாகச் சீர்திருத்தத்தைச் சீனாவில் உருவாக்குதல்.

1885 முதல் மேற்கண்ட நோக்கங்களை உடையவரான அவர் தமது மருத்துவமனையைத் தம்முடைய பிரசாரத் தலைமையிடமாகக் கொண்டார். தாம் வழங்கக்கூடிய மருந்துகளையே மக்களுக்கு அளிக்கப்பட்ட தேசீய உணர்வைத் தரும் மருந்தாகக் கருதினார்.

**சன்யாட் சென்னின் பணிகள்**

அவருடைய கருத்துக்களைச் செயல்படுத்தக் கூடிய வாய்ப்பு அவருக்கு 1894-95-ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த சீன – ஜப்பானியப் போரின் போது கிட்டியது. அப்போரில் சீனா அடைந்த தோல்வி அவருக்கு ஆதரவாக இருந்தது. 1894-ஆம் ஆண்டில் தமது கொள்கைகளைச் செயல்படுத்தக்கூடிய வகையில் 'ஷிங் கங் ஹீயி' என்ற சீன மறுமலர்ச்சிக் கழகத்தைத் தோற்றுவித்தார். அவ்வமைப்பின் ஆதரவுடன் 1895-ல் காண்டனில் முதன்முறையாக ஒரு புரட்சியை ஆட்சியாளர்களுக்கு எதிராக தொடங்கினார். தேசியம் மற்றும் மக்களாட்சி ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் எழுந்த முதற்புரட்சியானது ஒடுக்கப்பட்டது. அவர் சிறைப்படுத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார்.

அவரால் உருவாக்கப்பட்ட மறுமலர்ச்சிக் கழகத்தின் கிளைகள் ஹொனலூலூ மற்றும் யோகோ ஹமா என்ற இடங்களிலிருந்து செயல்பட்டு மேலும் அவரது கருத்துக்களைப் பரப்ப வழிகளை மேற்கொண்டன. 1900-த்தில் தொடங்கிய பாக்ஸர் இயக்கம் அடக்கப்பட்ட போதிலும் சன்யாட்செனின் செல்வாக்கு மேலும் ஓங்கி வளரலாயிற்று.

**டுங் மெங் ஹீயி அமைக்கப்படுதல்**

அதன் பின்னர் சன்யாட்சென் தம்முடைய கொள்கைகளை மேலும் வலியுறுத்தக்கூடிய வகையில் தீர்க்கமான சிந்தனைகளில் ஈடுபட்டார்.

அரசியலமைப்புக்கு உட்படுத்தப்பட்ட ஆட்சியினை உருவாக்குதல் என்ற தனது கொள்கைக்கு ஆதரவு தேடக்கூடிய வகையில் பல வெளிநாடுகளிலும் ஆதரவைத் திரட்டினார். மேலும் 1905-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் புதியதோர் புரட்சிக் கழகத்தைத் தோற்றுவித்தார். அதில் பல்வேறு இரகசியக் கழகங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டிருந்தன. அது 'பொதுகூட்டுச் சங்கம்' அல்லது 'கூட்டுச்சமுதாயம்' அல்லது டுங் மெங் ஹீயி (Tung Meng Hui) என்றழைக்கப்பட்டது. அவருடைய கொள்கைகளுக்குப் புதுவடிவம் வழங்கிய அவ்வமைப்பு புதியதோர் சகாப்தத்தைத் தொடங்கி வைத்தது.

மஞ்சு வம்சத்தை ஒழித்தல், தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுத் தலைவர், பாராளுமன்றம் ஆகியவற்றை உள்ளடக்கிய குடியரசு அமைப்பினைச் சீனாவில் உருவாக்குதல், தேசிய அப்படையில் மக்கள் இறைமையை நிலைநாட்டுதல், நிலவுடைமைதனைச் சமமானதாக ஆக்குதல் ஆகிய முக்கிய நோக்கங்களைக் கூட்டுச் சமுதாய அமைப்பு கொண்டு விளங்கியது. நம்பிக்கை ஒளியெனத் திகழ்ந்த அந்த அமைப்பின் மூலம் மாற்றங்கள் ஏற்படவேண்டுமெனக் கருதிய அவர், குறிப்பிட்ட காலத்திற்கு ராணுவ ஆட்சிதனை ஏற்படுத்தி, படிப்படியாக அரசியல் அதிகாரங்களை விரிவடையச் செய்து அரசியலமைப்புக்கு உட்படுத்தப்பட்ட அரசினை நிறுவத்திட்டமிட்டார்.

ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்சு போன்ற ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்த சீன மக்களிடமெல்லாம் தமது இயக்கத்திற்கு ஆதரவு தேடினார்.

**சீனக்குடியரசு உருவானதில் சென்னின் பங்கு**

1911-ஆம் ஆண்டில் நடைபெற்ற சீனப்புரட்சி வெற்றி பெற்று மஞ்சு வம்சத்தினரின் ஆட்சி முற்றுப் பெறச் செய்யப்பட்டபோது தென் சீனப் பகுதியிலிருந்த நான்கிங்கைத் தலைநகராகக் கொண்டு குடியரசுச் சீனா

தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் அதே நேரத்தில் பீகிங்கைத் தலைநகராகக் கொண்டு விளங்கிய வடசீனப் பகுதிக்கு யுவான் ஷிகே 1911, நவம்பர் எட்டாம் நாள் தலைமை அமைச்சரானார். போட்டியிடுவதற்கு இது தருணமல்ல எனக்கருதிய சன்யாட்சென் சுயநல நோக்கின்றி சீனாவின் நலனில் நாட்டங் கொண்டவராய் தாம் வகித்துவந்த குடியரசுத் தலைவர் பதவியை 1912 பிப்ரவரி 12-ஆம் நாள் யுவான் ஷி ஹேவுக்கு விட்டுக் கொடுத்தார். யுவான் ஷிகே இணைக்கப்பட்ட சீனாவின் செயல் பட்டு வந்த பல இரகசிய அமைப்புகளின் கோட்பாடுகளையெல்லாம் ஒருங்கிணையச் செய்து கொமின் டாங் கட்சியை சன்யாட்சென் உருவாக்கினார். அது ஒழுங்கான அமைப்புடைய கட்சியாயிற்று.

**கோமின்டாங் கட்சித் தலைவராக சன்யாட்சென்**

1915ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவரான யுவான் ஷிகே சீனக் குடியரசினை வலிமை பெறச் செய்வதற்கு மாறாகச் சுயநல நோக்குடன் செயல்படலானார். மன்னராட்சியில் நாட்டங்கொண்டிருந்தார். எனவே சென் மீண்டும் யுவானை எதிர்க்க வேண்டியவரானார். அதனால் புரட்சிக் கனல் மீண்டும் வெளிப்பட்டது. 1916-ஆம் ஆண்டில் யுவான் காலமானார். ஆனால் சீனா உள்நாட்டுக் குழப்பத்திற்கு உள்ளாகியிருந்தது. போராட்டங்கள் 1921 வரை தொடர்ந்து காணப்பட்டன. ஆவ்வாண்டில் சென்சியூமிங் என்ற புரட்சியாளர்கள் புரட்சியின் எதிரிகளைக் கட்டுப்படுத்தியமையால் ஓய்ந்து அமைதியான நிலைக்கு நாடு திரும்பலாயிற்று.

இந்நேரத்தில் 1914 முதல் 1919 வரை நடைபெற்ற முதல் உலகப்போரும் 1917-ல் ரஷ்யாவில் ஏற்பட்ட போல்ஷ்விக் புரட்சியும் டாக்டர் சென்னின் கருத்தைப் பெரிதும் கவர்ந்தன. ரஷ்யாவின் பொதுவுடமைக் கோட்பாடுகள் அவரை ஈர்த்தன. அதனால் 1922-ல் ரஷ்யாவுடன் ஓர் உடன்படிக்கையைச்

செய்து கொண்டார். அதன் விளைவாக ரஷ்யா சீனாவுக்கு ஆலோசகர்களையும், தேவையான உதவிகளையும் தர முன் வந்தது. அவ்வாண்டில் ரஷ்யப்பிரதிநிதியான அடால்ப் ஜோபி என்பவர் சீனாவுக்கு வந்தார். அவர் சீனாவிற்குப் பொதுவுடமைக் கொள்கைகள் பொருந்தாதவையென்ற தனது கருத்தைத் தெரிவித்தார். அதன் காரணமாக சன்யாட்சென்னின் கொமின்டாங் கோட்பாடுகள் வலுப் பெறக் கூடிய வாய்ப்புகள் மேலும் பெருகின.

**மீண்டும் தென் சீனக் குடியரசின் தலைவராதல்**

1922-ஆம் ஆண்டிலே சன்யாட்சென்னுக்கும் தளபதி சென்சுங்மிங்கிற்குமிடையில் அரசியடிப்படையில் கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கலாயின. அப்போது ஏற்பட்ட குழப்பங்கள் சிக்கல்கள் காரணமாக சன்யாட்சென் ஷாங்கைக்கு ஓட வேண்டியவரானார். அங்கு தன்னுடைய ஆதரவாளர்களின் துணையைப் பெற்று தளபதி சென்னை வெற்றி கண்டார். அதன் விளைவாக 1923-ல் டாக்டர் சன்யாட்சென் மறுமுறை தென்சினக் குடியரசின் தலைவரானார். அப்போது தான் போர்டின் என்பவரின் தலைமையின் கீழ் ரஷ்ய ஆலோசனைக்குழு ஒன்று சீனாவுக்கு வந்து சேர்ந்தது.

1923-ல் வந்த போர்டின் குழுவின் ஆலோசனைகளின் பேரில் ரஷ்யாவுடனான தொடர்புகளை அதிகரித்தார். சீனப் பொதுவுடமைக் கட்சியுடன் தொடர்புகளை பெருக்கினார். தொழிலாளர் விவசாயிகள் போன்ற உழைக்கும் வர்க்கத்தினருக்கு அதிக ஆதரவினை நல்கினார். கொமின் டாங் கட்சி பல செயல் திட்டங்களைக் கொண்டு வலிமையுடன் செயல்பட வகை செய்யப்பட்டது. திறமையான படையமைப்பு ஒன்றின் துணையுடன் மட்டுமே வலிமை மிக்க ஒன்றித்த சீனக் குடியரசினை 'வாம்போ படைக்கழகம்' (Whampac Miltary Academy) ஒன்றை உருவாக்கினார்.

பல வழிகளிலும் தன்னுடைய நிலையை மீண்டும் வலுப்படுத்திக் கொண்ட பின்னால் பீகிங்கிற்குச் சென்று மைய அரசின் தலைவராக இருந்த டுவான் என்பவருடன் பேச்சு நடத்திச் சீனாவை இணைக்க முயன்றார். ஆனால் அவருடைய எண்ணம் ஈடேறு முன்பாக 1925 மார்ச் 12-ஆம் நாள் சன்யாட்சென் காலமானார்.

**சன்யாட்செனின் மூன்று தத்துவங்கள்**

‘நவீன சீனாவின் தந்தை’ என்று போற்றப்பட்ட சென் தம்முடைய அருஞ்செயல்களனைத்திற்கும் ‘மக்களின் மூன்று தத்துவங்கள்’ என்ற கோட்பாட்டுகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தார். அவற்றினைச் செயல்படுத்துதல் மூலமே சீனாவில் சீரானதொரு அரசியலமைப்பினை உருவாக்க முடியுமெனக் கண்டார். மூன்று தத்துவங்கள் என்பவை ‘மின் சூ சூயி’ அல்லது ‘தேசீயம்’‘மின் சுவான் சூயி’ அல்லது ‘மக்களாட்சி’ மற்றும் ‘மின் செங் சூயி’ அல்லது ‘மக்கள் நல் வாழ்வு’ என்பனவேயாகும்.

1. **தேசியம் : Nationalism – Min Tsu**

தேசீயம் எனப்பட்ட இக்கோட்பாட்டைச் செயல்படச் செய்து மக்களிடையே விழிப்புணர்வைத் தட்டியெழுப்பி அயல் நாட்டவரின் ஆதிக்க வெறி, பொருளாதாரச் சுரண்டல் ஆகியவற்றால் நலிந்து கொண்டிருந்த சீனாவைச் சீருடையதாக்கச் செய்ய விழைந்தார்.

சீனாவில் காணப்பட்ட இனவேறுபாடுகள், உள்நாட்டினர், வெளிநாட்டினர் என்ற பாகுபாடுகள் ஆகிவற்றைக் களைந்து சீனர், மங்கோலியர், திபெத்தியர், மஞ்சுகள் என்ற பாகுபாடுகளற்ற ஒருங்கிணைந்த சமுதாயத்தை உருவாக்கித் தேசீயத்தை வளர்க்க முற்பட்டார்.

**மக்களாட்சி : Democracy – Min Chuan**

சன்யாட்சென்னின் உன்னதமான கருத்துக்களில் ஒன்று 'மின் சுவான் சூயி' எனப்பட்ட மக்களாட்சி என்பதாகும். அவருடைய மக்களாட்சிக் கோட்பாடுகள் மேற்கு நாடுகளின் குடியரசுக் கொள்கைகள், சுவிட்சர்லாந்தின் அரசியலமைப்பு ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டிருந்தன. தேர்தல்களில் கலந்து கொள்ள, பொது வாக்கெடுப்பு நடத்த, சட்டமியற்ற, தவறிழைக்கும் சட்டமன்ற வாக்கெடுப்பு நடத்த, சட்டமியற்ற, தவறிழைக்கும் சட்டமன்ற உறுப்பினர்களைத் திரும்ப அழைத்துக் கொள்ள உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அதிகாரப் பங்கீட்டுக் கோட்பாடு செயல்பட வேண்டும் என்பன அவருடைய அடிப்படை மக்களாட்சிக் கொள்கைகளாகும்.

**3. மக்கள் நலன் : Peoples Livelihood –Min – Sheng**

மக்கள் நல்வாழ்வு என்ற பொருளுடைய இக்கோட்பாட்டின் மூலம் மக்களின் வாழ்க்கை வளம்பெற மேற்கொள்ளப்பட வேண்டிய கருத்துக்கள் விளக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன. இக்கோட்பாடு பொருளாதாரப் பின்னணியை உடையதாயிற்று. பங்கீடு அடிப்படையில் நிலத்தைப் பங்கிட்டுப் பொருளாதாரத் தன்னிறைவு பெற முயற்சித்தல், மூலதனக் கட்டுப்பாட்டின் மூலம் முற்றுரிமைக்கு முடிவு கட்டுதல் ஆகிய இரண்டு கொள்கைகளின் மூலம் மக்களின் தேவைகள் நிறைவு செய்யப்பட்டு நாட்டில் அவர்கள் நிலை உயர்த்தப்பட வேண்டுமென சன்யாட்சென் எண்ணினார்.

**மதிப்பீடு**

கடினமான, தளர்ச்சியற்ற, தோல்வி கண்டு துவண்டுவிடாத மனப்பக்குவம் காரணமாகப் படிப்படியாக அரசியலில் உயர்நிலையைச் சென்றடைந்த அவர் கிளைடு குறிப்பிட்டபடி 'சன்யாட்சென்னிஸம்' என்று தனிமைப்படுத்திக்

குறிப்பிடுமளவிற்கு தம்முடைய தத்துவங்களை வெளியிட்டார். தலைசிறந்த தேசியவாதியாக, நாட்டின் நலங்கருதித் தன்னுடைய சொந்த நலன்களை ஒதுக்கி வைத்துச் செயல்படக் கூடியவராகத் திகழ்ந்த சன்யாட்சென், து. ஞ. ஹால் என்பவர் வர்ணித்ததைப் போல், சீனாவின் நெப்போலியனாகவும், லெனினாகவும், ஜார்ஜ் வாஷிங்டனாகவும் விளங்கி அந்நாட்டிற்குப் புதுப்பொலிவையும், பெருமையையும் தேடித்தந்து அந்நாட்டின் தந்தையெனப்பட்டார்.

**மஞ்சு வம்ச வீழ்ச்சிக்கான காரணங்கள்**

கி.பி. 1644 முதுல் 1911 ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகள் காலமாகச் சீன அரசியலில் சிக்கித் தவித்த மஞ்சு வம்சம் 1911-ஆம் வருட சீனப் புரட்சியினால் முழுமையாகக் கவிழ்க்கப்பட்டது. பல்வேறு முக்கிய நிகழ்ச்சிகளையும், பலதரப்பட்ட அரசியல் சிக்கல்கள், தோல்விகள் ஆகியவற்றையும் மஞ்சு வம்சம் தன் ஆட்சியின் போது சந்தித்தது.

**மஞ்சு வம்சத்தினரின் குணவியல்புகள்**

**1. தற்பெருமை**

மஞ்சு ஆட்சியாளர்கள் தம்மைப் பற்றி உயர்வான எண்ணம் கொண்டு தற்பெருமையைப் பெருமளவில் கொண்டு விளங்கினார்கள். சீனாவுடன் பல வழிகளிலும் தொடர்பு கொள்ள முற்பட்ட மேலை நாட்டினரைக் காட்டுமிராண்டிப் பிரிவினர் என்றும், பண்பாட்டு மேம்பாடற்ற பிரிவினர்கள் என்றும் எண்ணி ஒதுக்க நிலையைப் பெருமளவில் மேற்கொண்டனர். அதனால் வேகமாக முன்னேறி வந்து கொண்டிருந்த படைக்கருவிகள், படைக்கலப் பண்புகள் ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பினை இழந்து விட்டார்கள்.

எனவே சிக்கல்கள் ஏற்பட்டு போரிட வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்ட போது அவர்களது படையமைப்புகளில் காணப்பட்ட வலுவின்மை வெளிப்படுத்தப்பட்டது.

**2. குறுகிய மனப்பான்மை**

பேராசிரியர் தோவேஜர் சூஸியின் தெளிவான தலைமையின் கீழிருந்த மஞ்சு ஆட்சியாளர்கள் வளர்ச்சிக்கூறுகளை மேற்கொள்ளவில்லை. மேலை நாட்டினர் சீனாவினைப் பங்கு போட்டுக் கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்துடனிருந்த போது சீனா துண்டாடப்படும் நிலையேற்பட்டது. ஆனால் தமக்கிடையிலான போட்டிகள் காரணமாக மேலை நாட்டவரின் போக்கு மாறுபட்ட நிலையை அடைந்த போது மஞ்சு வம்சத்தினர் தமக்கிருந்த உண்மை அபாயத்தை உணரத் தவறிவிட்டனர். அதாவது சமூக பொருளாதார மற்றும் அரசியல் சீர்திருத்தங்களை ஏற்படுத்தி மக்களை ஒருமைப்பாடடையச் செய்து தம்வசம் இழுத்துக் கொள்ளத் தவறிவிட்டார்கள். இத்தகைய அறியாமையால் எழுந்த குறுகிய மனப்பான்மை அவர்களது தோல்விக்கு முக்கிய காரணமாகும்.

**3. சீர்திருத்தங்கள் மீது ஈடுபாடின்மை**

சீனர்கள் தம்முடைய நாட்டின் பல துறைகளிலும் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கருதினர். தைப்பிங் கிளர்ச்சி பாக்ஸர் இயக்கம் போன்றவை சீன மன்னர்களின் கண்களைத் திறக்கவில்லை. மக்களுடன் இணைந்து செயலாற்றி அவர்களது சீர்திருத்தத் தாகத்தை தணிப்பதற்குப் பதில் பழமைப் பற்றுடையவர்களாக முன்னேற்றங்கட்கு எதிர்ப்புகளைத் தெரிவித்தனர்.

**4. மன்னர்களின் மதிப்பின்மை**

மக்கள் நலனில் நாட்டமும், பேரன்பும் கொண்ட பேரரசு மக்களிடம் மதிப்புடையதாயிருத்தல் இயல்பு, மன்னரைத் கடவுளின் மைந்தரெனக்கருதிய சீனாவிலும் இதேநிலை காணப்பட்டது. மன்னரின் இறைமை அந்நாட்டில் போற்றிக் காக்கப்பட்டது. இந்தத் தன்மை காரணமாகவே மேலைநாட்டவா் சீனப் பேரரசரை அணுக முடியாத நிலை ஆரம்பத்தில் காணப்பட்டது. ஆனால் படிப்படியாகச் சீனாவில் மேல்நாட்டு ஆதிக்கம் குழப்பம் நிலவிய போது மக்கள் கடவுள் தங்களுடைய நாட்டைக் கைவிட்டுவிட்டாா். எனவும் அதனால் மஞ்சு மன்னா்கள் தலைகுனிய வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டதெனவும் நம்பினா். அதன் விளைவாக மக்கள் மஞ்சு மன்னரை வெறும் மனிதரெனவே மதிக்கலாயினா். இவ்வாறு மக்கள் மனத்தை விட்டகன்ற மஞ்சு வம்சம் வீழ்ச்சியடைந்தது.

**5. ஆட்சியாளா்களின் திறமையின்மை**

மக்களின் மனதில் நீங்காது நிலைபெற ஒரு ஆட்சிக்கு அடிப்படைத் தேவையான திறமையானது மஞ்சு ஆட்சியாளா்களிடம் காணப்படவில்லை. வலிமை மிக்க, திறமையான ஆட்சியை அவா்கள் நிறுவவில்லை. மைய மற்றும் மாநில அரசுகளுக்கிடையில் தொடா்புகள் சீரானதாக இருக்கவில்லை.

ஆட்சியாளா்களுக்கு மட்டும் துணைபுரியக் கூடியதாயிருந்த நாட்டின் சட்டங்களுக்கு மக்கள் மத்தியில் மதிப்பில்லை. இத்தகைய ஆட்சிமுறைக் குறைபாடுகளைக் களைய முடியாத மஞ்சு வம்சம் வீழ்ச்சியடைந்தது.

**2. மைய அரசின் வலிமையின்மை**

பரந்து விரிந்து பெரும் பரப்பளவினைக் கொண்டிருந்த சீனாவில் ஆட்சி முறையைச் சீராகக் கண்காணிக்கத் தக்க அளவினதாக மஞ்சுகளின் மைய ஆட்சி வலிமையானதாயிருக்கவில்லை. ஆட்சித்துறையின் மையக்கூறாகத்

திகழ்ந்த மன்னர் மற்றவர்களுக்குத் தம்முடைய ஆணைகளைப் பிறப்பிப்பதற்குப் பதில் தமது பணியாளர்களின் சொற்படி நடக்கும் அளவிற்கு இருந்தார். நாடு நலிவுற்று அந்நியரின் அடக்குமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டபோது மைய அரசு கீழ்நிலைப் பிரிவுகளின் ஆதரவோடு அவற்றின் உதவியையும் பெறத் தவறிவிட்டது.

மாகாணங்கள் தன்னாட்சி பெற்ற அமைப்புகளெனச் செயல்பட்ட போது மைய அரசு அவற்றைக் கட்டுப்படுத்த இயலவில்லை. எடுத்துக்காட்டாக அபினிப்போர்களின் போது பல சீன மாகாணங்களும் ஒருமித்த வழியில் ஒன்றுபட்டுச் செயல்படவில்லை.

**6. அயல்நாட்டவர் தொடர்புகள்**

அபினிப் போர்களுக்குப் பின் சீனா தனது ஒதுக்க நிலையிலிருந்து விடுபட்டபோது சீனமக்கள் வெளிநாட்டவருடன் பல வழிகளில் தம்முடைய தொடர்புகளை வலுப்படுத்திக்கொள்ள முற்பட்டார்கள். வெளிநாட்டினரும் சீனாவிற்குள் வந்து தங்கிய போது தமது எண்ணங்கள், கருத்துக்கள், கோட்பாடுகள் ஆகியவற்றைச் சீன மக்களிடம் பரப்பினார்கள். அவை சீனர்களிடையே ஒரு விழிப்புணர்வைத் தோற்றுவித்தன.

**7. சீர்திருத்தவாதிகள்**

சீனாவின் உள்நாட்டுக் குழப்பங்களும் சிக்கல்களும் அமைதியற்றதோர் நிலையை அந்நாட்டில் உருவாக்கிய போது டுங்-மெங்-ஹுயி போன்ற இரகசிய அமைப்புகள் அவற்றிலிருந்து நாட்டை மீட்பதற்கான வழிகளை மேற்கொள்ளலாயின. டாக்டர். சன்யாட்சென் போன்றோர் சீர்திருத்தக் கோட்பாடுகளில் நம்பிக்கையுடையவர்களாகச் செயல்பட்டனர். குடியரசு அமைப்பினைத் தோற்றுவிப்பதற்காக தலைமைப் பதவியையும் பேரரசரின்

பிரதிநிதியென விளங்கிய யுவான் ஷி கேயிடம் விட்டுத்தர சன்யாட்சென் முன் வந்த போது மக்களுக்கு மஞ்சு ஆட்சியாளர்கள் மீது எத்தகைய வெறுப்புணர்வு இருந்தது என்பது தெளிவாகின்றது.

**8. சமயப்பரப்பு ஊழியர்களின் பணிகள்**

இத்தகைய செயல்களால் விழிப்புணர்வு பெற்ற சீனர்கள் மஞ்சு வம்சத்தவர்களின் மீது வெறுப்பினைக் காட்ட ஆரம்பித்தார்கள்.

**4. பேரரசி தோவாஜர் சூசியின் மரணம்**

பழமைப் பற்றுதல் வன்மைக் கோட்பாட்டில் நம்பிக்கை ஆகியவற்றை உடையவரான தோவாஜர் சூஸி தமது தனித்த ஆற்றலால் அரசியல் செல்வாக்குப் பெற்றவராகவும் விளங்கினார். அவருடைய சுயநலன் காரணமாக தொடர்ச்சியாக மஞ்சு வம்சத்தில் இள வயதினரையே ஆட்சியாளர்களாக நியமித்துத் தம்மை பகர ஆளுநராகக் கொண்டு தமது ஆட்சியுரிமையைத் தக்க வைத்துக் கொண்டிருந்தார். சீனாவில் மன்னராட்சி மறையுமானால் தாம் வலிமையிழக்க நேரிடும் என்பதை நன்குணர்ந்திருந்தார். உள்நாட்டு, வெளிநாட்டுச் சிக்கல்கள் சீனாவை நெருக்கடிகளுக்கு உட்படுத்திய நேரங்களில் தன்னுடைய தனிப்பட்ட பேராற்றல் காரணமாக மஞ்சு வம்சம் சிதைவுறாதவாறு, கட்டிக்காத்தார்.

அவர் காலத்தில் சீனாவில் காணப்பட்ட நெருக்கடிகள் பலவற்றுக்கிடையில் மஞ்சு வம்சம் வீழ்ச்சியுறாது காப்பாற்றப்பட்டது. ஆனால் 1908-ல் ஏற்பட்ட அவருடைய மரணம் மஞ்சுகளின் வீழ்ச்சியினை விரைவுபடுத்தியது.

அவர் மரணமடைந்த மூன்றாண்டுகட்கு உள்ளாகவே 1911-ஆம் ஆண்டில் மஞ்சு வம்சமானது சீனப்புரட்சி காரணமாக வீழ்ச்சியடைந்தது.

### 5. தொழிற் செறிவின்மை

எல்லாவற்றிற்கும் மேலாக மூன்று நூற்றாண்டுகட்கு மேலாகச் சீனாவில் ஆட்சி புரிந்த மஞ்சு வம்சம், நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக விளங்கக்கூடிய பொருளாதாரக் கூறாகிய தொழிற்சாலைகளைப் பெருக்கவில்லை. அதன் காரணமாக வேலையின்மை, தொழிற்செறிவின்மை, வர்த்தகச் சீர்குலைவுகள், அயல்நாட்டு வாணிபச் செலுத்து நிலைச் சிக்கல்கள் ஆகிய பொருளாதாரக் குறைபாடுகள் காணப்பட்டன. வெளிநாட்டினரும் சீனாவில் தம்முடைய நலன்களுக்கு கந்த தொழிற்சாலைகளையே உருவாக்கினார்கள்.

இதன் விளைவாகச் சீனாவில் முக்கியமான குடிசைத் தொழிலாகிய பட்டு உற்பத்தித் தொழில் பாதிப்பிற்கு உள்ளாயிற்று. அயல்நாட்டவரால் சீனாவில் தோற்றுவிக்கப்பட்ட சர்க்கரை சுத்தம் செய்யும் தொழிற்சாலை, தோல் பதனிடும் தொழிற்சாலை போன்றவைகளும் சீனப் பொருளாதாரத்திற்குப் பெருந்தொல்லைகளாக விளங்கின. மேலும் உள்நாட்டின் பல பகுதிகளையும் இணைக்கக்கூடிய வகையில் இருப்புப்பாதைகள் பலவற்றை அயல்நாடுகள் சீனாவில் உருவாக்கிய போது அவை சீனப் பொருளாதாரத்தைச் சுரண்டுவதற்கே வழிகோலின. ஆவை மஞ்சுவின் வீழ்ச்சிக்கு வித்திட்டன.

### 6. அயல்நாட்டுக் கோட்பாடுகள்

மஞ்சு ஆட்சியாளர்களும் மக்களின் மன எழுச்சிகளுக்கேற்பத் தம்மை மாற்றிக் கொள்ளத் தவறிவிட்ட போது அதுவே அவர்களது அழிவிற்கு ஆரம்பமாயிற்று. அரசியலமைப்புக்கு உட்படாமல், சுயநலநோக்குடன் மஞ்சு வம்சம் செயலாற்றிய போது அது அயல் நாட்டினரால் தம்முடைய ஆட்சிக்கு ஏற்பட்டுக் கொண்டிருந்த அபாயத்தை உணராமல் தன்னுடைய சவக்குழியைத் தானே தோண்டிக் கொண்டது எனலாம்.

ஆழ்ந்த அனுபவம், தொலைநோக்குத் தன்மை, சூழ்நிலைகளின் தன்மைகளை அறிந்து கொள்ளும் நிலை ஆகியவை மஞ்சு வம்ச அரசர்களிடம் காணப்படாமல் அவர்கள் பழமைக் கோட்பாட்டில் பற்றுடையவர்களாக விளங்கிய போது அழிவுப்பாதையை நோக்கியே அவர்கள் செல்ல வேண்டியவர்களாக இருந்தார்கள்.

# அலகு – 4

## யுவான் ஷி-கே

சீனக் குடியரசின் முதல் குடியரசுத் தலைவர் யுவான் -ஷி கே ஆவார். ஆவர் அப்பதவிக்கு வருவதற்கு முன்பு பல பதவிகளை வகித்தார். அவர் கொரியாவின் கடைசி வைஸ்ராய் ஆவார். சீன ஜப்பானியப் போருக்குப் பின் சீனாவில் ஒரு புதிய ராணுவத்தை ஏற்படுத்தியவர் அவரே. மஞ்சுக்களை அரியணையிலிருந்து அகற்றி வரும் அவரே 1911-ஆம் ஆண்டில் ஏற்பட்ட அமைதியான புரட்சிக்கும் அவர் காரணமாக விளங்கினார். அவர் குடியரசின் தலைமைப் பொறுப்பினை ஏற்றபோதிலும், அவர் மனத்தளவில் குடியரசுக் கொள்கையினைப் பெற்றிருக்கவில்லை. அவர் வடபுலத்திலிருந்து வந்த ஒரு இராணுவ வீரர், அரசியல் தந்திரி, குறுகிய மனம் கொண்டவர், பழமையில் பற்றுக் கொண்ட அதிகாரி, அவர் புதிய கருத்துக்களைக் கொண்டிருந்தும் பழமைக்கு முதலிடம் அளித்தார். சந்தர்ப்பவாதி, அரசியல் துறையில் ஆர்வமும், உண்மையில் ஆதாயமும் தேட விரும்புபவராக விளங்கினார்.

## யுவானின் ஆரம்பகால அரசியல் வாழ்வு

யுவான் கொரியாவில் சீனப்பிரதிநிதியாக 1882-ஆம் ஆண்டில் லி ஹங் சங் என்பவரால் நியமிக்கப்பட்டார். அத்துடன் அவருக்குக் கொரியாவின் ராணுவத்திற்கு பயிற்சி அளிக்கும் பொறுப்பும் அளிக்கப்பட்டது. அவர் ஜப்பானின் திட்டங்களை வெற்றிகரமாக முறியடிப்பதிலும், கொரியாவின் அரசவையில் ஜப்பானிய செல்வாக்கைக் கட்டுப்படுத்துவதிலும் திறம்பட செயல்பட்டார்.

பாக்சர் கலவரத்தின் போது அவர்கள் அரசவையின் ஆதரவு பெற்றிருந்ததால் தனித்து நின்றார். ஆனால் அக்கலவரத்தை அடக்க முயற்சி

செய்து மேலை நாட்டவர்களின் நல்ல எண்ணத்தைப் பெற விரும்பினார். அதனால் புரட்சிக்குப் பின் அவர் ராணுவப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு பீகிங்கிற்கு மாபெரும் ஆலோசகர் பதவிக்கு மாற்றப்பட்டார். அங்கு அவர் அயல்நாட்டு அமைச்சராகப் பணியாற்றினார்.

**மஞ்சு அரசாங்கத்தில் உயர் அதிகாரத்தைப் பெறுதல்**

1909-ஆம் ஆண்டில் அவர் அதிகாரத்திலிருந்து நீக்கப்பட்டார். அத்துடன் அரசாங்கத்திலிருந்தும் வெளியேற்றப்பட்டார். 1911-ஆம் ஆண்டுப் புரட்சியின் போது மஞ்சு வம்சத்திற்கு ஏற்பட்ட வாழ்வா அல்லது சாவா என்ற மரணப் போராட்டத்தின் காலக்கட்டத்தில் அவர் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அப்பதவியை ஏற்றுக் கொள்வதற்கு அவர் சில நிபந்தனைகளை விதித்தார். அந்த நெருக்கடியான கட்டத்தில் மஞ்சு அரசாங்கத்தால் யுவான் கடற்படை, ராணுவம் ஆகியவற்றின் பேரரசு ஆணையாளராக அமர்த்தப்பட்டார். அதற்கு அடுத்த மாதம் அவர் பேரமைச்சரானார்.

**யுவானின் நோக்கங்கள்**

யுவாங் மஞ்சு வம்சத்தைப் பாதுகாக்க வேண்டுமென விரும்பினார். அதுவும் அரசியல் அமைப்பு அடிப்படையிலான முடியாட்சியாகத் திகழ வேண்டுமென எண்ணினார். ஆட்சியாளர்கள் இதை ஏற்றுக் கொள்ள வேண்டுமானால் அதற்குப் புரட்சியின் முன்னேற்றம் அவசியம் என்றார். எனவே தன் படையினரைப் புரட்சிக்காரர்கள் மீது ஒரு போதும் ஏவியதில்லை. இதற்கிடையில் புரட்சிக்காரர்கள் நான்கிங்கைக் கைப்பற்றி யுவானின் தங்கள் தலைநகராக ஆக்கிக் கொண்டார்கள்.

**அமைதிப் பேச்சு வார்த்தைகள்**

தன்னுடைய தலைசிறந்த இராணுவத்தின் பக்க பலத்தினால் யுவான் புரட்சிவாதிகளிடம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடலானார். லி யுவான் ஹாங் என்பவர் புரட்சி மாநிலங்களிலிருந்து ஒரு பிரதிநிதிகள் குழுவை அழைத்து வந்தார். அயல் நாட்டிலிருந்து அப்போது சீனாவுக்கு திரும்பி வந்த டாக்டர் சென் தற்காலிகத் தலைவராகப் பொறுப்பேற்றார். பேரரசுக் கொள்கையினரும் குடியரசுவாதிகளும் நிதிப்பற்றாக்குறையால் துன்பப்பட்டுக் கொண்டிருந்ததால் இருசாரரும் முற்பட்டனர். நாடு ஒன்று பட நல்லாட்சி மலர நாட்டை விட்டு மஞ்சுக்களை விரட்ட டாக்டர் சென் தாமாகவே முன் வந்து பதவியிலிருந்து விலகி யுவானை தலைவராக்க விரும்பினார்.

**உடன்பாடு ஏற்படுதல்**

1912-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12-ம் நாள் மஞ்சுவம்சம் பதவியிலிருந்து விலகியது. பேரரசர் தன்னுடைய அதிகாரத்தை நான்கிங்கின் அரசிடம் மாற்றுவதற்குப் பதிலாக யுவானிடம் மாற்றினார். பேரரசருக்கு உதவிப்பணம் தரவும் உறுதி அளிக்கப்பட்டது. அரண்மனை பாதுகாவலர்களை வைத்துக் கொள்ள அவர் அனுமதிக்கப்பட்டார். மஞ்சுக்களின் தனிப்பட்ட சொத்துக்களையும் அவர்களுடைய மூதாதையர்களின் கோவில்களையும் பாதுகாக்க வழி செய்யப்பட்டது.

மஞ்சுக்கள் பதவி விலகிய பின் டாக்டர் சென் தலைவர் பதிவியிலிருந்து விலகி, ஒன்றுபட்ட சீனாவின் தலைவராக யுவானை இருக்கச் செய்தார். யுவானின் செயல்களை புரட்சிவாதிகள் சந்தேகப்பட்ட போதிலும் கூட அவரை அகற்றுவதற்கு அவர்களால் தொடர்ந்து போராட முடியவில்லை.

**கோமின் டாங்குடன் மோதல்**

வலிமை பெற்ற குடியாட்சியினால் தான் சீனாவின் பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் என யுவான் நம்பினார். ஆகையால் தன்னுடைய தலைவர் பதவியை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஒரு புதிய வம்சத்திற்கு வழிகோலலானார். இந்த எண்ணங்களை யுவான் பெற்றிருந்ததால் அவருக்கும் சன் யாட்சென்னுக்கும் பகைமை ஏற்பட்டது. ராணுவ வலிவும் பொலிவும் பெற்று விளங்கிய பீகிங்கைத் தலைநகராக அடைய யுவான் விரும்பினார். ஆனால் பொறுப்பேற்ற போது அவர் நான்கிங்லிருந்து ஆட்சி செய்வதாக ஒப்புக் கொண்டார். அவர் தேசிய அவையை நாடி தலைநகரை பீகிங்கிற்கு மாற்ற முயன்ற போது அவரது செயல்கள் ராணுவ வல்லாட்சிக்கு வழிவகுக்கும் என புரட்சிவாதிகள் ஐயம் கொண்டனர். சன் யாட்சென், அவரது கோமின்டாங் கட்சி ஆகியவற்றின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் யுவான் தன் வழியில் செல்லலானார்.

பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளின் வங்கியாளர்களின் உதவியுடன் யுவான் கடன் திரட்ட முற்பட்டார். இதை டாக்டர் சென்னின் கட்சி விரும்பவில்லை. அந்தக்கடன் மூலம் அவர் நிதித் துறையில் பெரும் அதிகாரத்தைப் பெற்றார். தென் சீனாவில் சிவில், ராணுவத் துறைகளில் மிக முக்கியமான பதவிகளில் தன்னுடைய ஆதரவாளர்களை அமர்த்தினார். இச்செயல்கள் புரட்சிவாதிகளின் ஐயத்தை உறுதிப்படுத்திவிட்டன. 1913-ஆம் ஆண்டில் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது. யுவானைப் பதவியிலிருந்து தூக்கி எறியுங்கள் என தன்னுடைய ஆதரவாளர்களிடம் கூறினார். டாக்டர் சென் ஆனால் அக்கிளர்ச்சி

அடக்கப்பட்டது. கோமின்டாங் கட்சியின் மிக முக்கியத் தலைவர்கள் ஜப்பானில் தஞ்சம் புகுந்தனர்.

**அரசியலமைப்பு ஒப்பந்தம்**

1914-ஆம் ஆண்டில் கோமின்டாங் கட்சி அடக்கப்பட்டதுடன் சீனாவின் முதல் குடியரசு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. யுவான் மேலும் வலிமை பெற்று விளங்கினார். ஆவர் தவறான முறையில் மீண்டும் தலைவராகப் பத்து ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தேசிய சபையைக் கலைத்தார். அதன் இடத்தில் ஆலோசனை கூற அரசியல் அவையை ஏற்படுத்தினார். புதிய அரசியலமைப்பின் படி தலைவர்கள் ஏராளமான அதிகாரத்தைப் பெற்றார்.

உண்மையாகவே 1914-ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியலமைப்பு ஒப்பந்தம் தலைவரை வல்லாட்சியாளராக மாற்றியது. வி ஹாங் சாங் என்பவர் கூற்றுப்படி 1914-ஆம் ஆண்டு மே மாதம் வெளியிடப்பட்ட அரசியல் அமைப்பு ஒப்பந்தத்தினால் தலைவர் சகல அதிகாரங்களையும் பெற்று வல்லாட்சியாளராக மாறினார்.

தன் பதவியை வலிமைப்படுத்திக் கொண்டு அவர் மக்களின் பேச்சு சுதந்திரத்தையும் கருத்துச் சுதந்திரத்தையும் வெகுவாகக் குறைத்தார்.

**மங்கோலியாவில் கிளர்ச்சி**

சீனாவில் ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு ரஷ்யாவானது மங்கோலியாவில் பிரிந்து செல்ல முயன்றது. சீனக் குடியரசிற்கு எதிராக ஏற்பட்ட சுதந்திர இயக்கங்களில் இதுவே முதலாவதாகும். உள் மங்கோலியாவில் சீனர்கள் ஆக்கிரமிப்பு மூலம் குடியேறுவதை மங்கோலியப் பிரபுக்கள் வெறுத்தனர். ரஷ்ய உதவியுடன் மங்கோலியர்கள் உர்கா என்ற

இடத்தில் சுதந்திர அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தினார்கள். மங்கோலியாவின் வெளிப்பகுதிகளில் சுயாட்சியை யுவான் அங்கீகரிக்க வேண்டியிருந்தது.

**திபெத்தில் கிளர்ச்சி**

மங்கோலியாவைப் பின்பற்றி திபெத்திலும், கிளர்ச்சி ஏற்பட்டது. திபெத்தியர்கள் தங்கள் நாட்டிலிருந்து சீனப்படைப் பிரிவினரை விரட்டி அடித்தனர். திபெத்தில் தன் அதிகாரத்தை நிலைநாட்ட யுவானால் முடியவில்லை. ஆகவே அவர் மூவர் மாநாட்டில் கலந்து கொண்டு ஒரு உடன்பாட்டிற்கு ஒப்புக் கொண்டார். அதில் பிரிட்டன், சீனா, திபெத் ஆதிய மூன்று நாடுகள் கலந்து கொண்டன. அம்மாநாடு 1914-ஆம் ஆண்டு நடைபெற்றது. அந்த உடன்பாட்டின் விதிகளின்படி,

1. திபெத்தின் மேற்குப் பகுதிக்கு தன்னாட்சி வழங்கப்பட்டது.
2. லாசாவில் சீனா தன்னுடைய தூதரை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.
3. கிழக்கு திபெத்தில் சீனாவின் அதிகாரம் நிலைநாட்டப் பட்டது.

**யுவானின் முடியாட்சிக் கனவு**

குடியரசுத் தலைவர் பதவியுடன் யுவான் திருப்தி அடையவில்லை. அவர் மன்னராக முடிவு செய்தார்.

உள்நாட்டுத் தொல்லைகளைப் பொருட்படுத்தாமல் யுவான் புதிய வம்சம் ஒன்றை ஏற்படுத்துவதில் முன்னோக்கிச் சென்றார். தன்னுடைய உண்மையான ராணுவத்தின் ஆதரவும், அமைதியான குடியானவர்களின் ஒத்துழைப்பும் அவருக்குக் கிடைத்தது. குடியாட்சியில் அதிருப்தி அடைந்த கன்பூஷிய அமைப்பிலான அதிகாரிகள் முடியாட்சியை நிலைநாட்ட ஆதரவு அளித்தனர். மேலை நாட்டவர்களும் தங்களின் செல்வாக்கை நிலைநாட்டிக் கொள்ள

யுவானின் வலிமையைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்தனர். ஆதலால் அவர்களும் அவருடைய முடியாட்சியை ஆதரிக்கலானார்கள்.

இவ்வாறு ஆதரவு இருந்ததால் அவர் 1916-ஆம் ஆண்டில் அரியணை ஏற முடிவு செய்தார். ஐரோப்பா முதல் உலகப்போரில் ஈடுபட்டிருந்த நேரத்தில் யுவான் பீகிங்கில் மாவட்டப் பிரதிநிதிகளின் யுவானை மன்னராக இருக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். யுவான் அதை ஏற்றுக் கொண்டார்.

**ஜப்பானின் 21 கோரிக்கைகள்**

1914 ஆம் ஆண்டின் முதல் உலகப்போர் ஏற்பட்ட போது ஐரோப்பிய நாடுகள் எல்லாம் அதில் ஈடுபட்டன. சீனா நடுநிலைமை வகிக்க முயற்சித்தது. ஆனால் அது இறுதியில் போரில் ஈடுபடும்படி கட்டாயப்படுத்தப்பட்டது.

மஞ்சுக்களுக்குப் பின் யுவான் முடிமன்னராக விரும்பினார். ஆனால் புரட்சிவாதிகள் அதை எதிர்த்தனர். அதன் விளைவாக உள்நாட்டில் தொல்லைகள் ஏற்பட்டன. யூனானில் புரட்சி ஏற்பட்டது. யுவான் அதை அடக்க ஒரு படையை அனுப்பினார். அவர் தனது முயற்சியில் வெற்றி பெறவில்லை. மற்ற மாநிலங்களிலும் அது பரவியது. கியாங்சியின் ஆளுநர் ஒரு புரட்சியைத் துவக்கினார். புல மாநிலங்கள் தங்கள் விடுதலையை அறிவித்தன. நிலைமை கட்டுக்கடங்காமல் சென்றது.

இச்சூழ்நிலையில் ஜப்பான் தன்னுடைய புகழ் வாய்ந்த 21 கோரிக்கைகளை சீனா மீது திணித்தது. 1915-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அக்கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. ஜப்பானின் உதவி போரின் போது மேலை நாடுகளுக்குத் தேவைப்பட்டதால், அவைகள் வாளா இருந்துவிட்டன. யுவான் சிலவற்றை ஏற்றுக் கொண்டார். சிலவற்றை விவாதத்திற்கு பின் ஏற்றுக்கொள்ள தள்ளி வைத்தார். சிலவற்றை ஏற்றுக் கொள்ள மறுத்தார்.

அந்த கோரிக்கைகள் 5 வகைப்படும்

1. ஷாண்டுங் மாநிலத்தைப் பற்றியது
2. தெற்கு மஞ்சூரியாவைப் பற்றியது
3. ஹுன்யே-பிங் குழுமத்தைப் பற்றியது
4. சீனத்துறைமுகங்களைப் பற்றியது.
5. பிற கோரிக்கைகள் (நாலாவிதமானவை)

இந்த கோரிக்கைகள் ஜப்பானிய அமைச்சர் கியோகி என்பவரால் யுவானிடம் சமர்ப்பிக்கப்பட்டன. சிலவற்றை ஏற்றுக் கொள்வதைத் தவிர யுவானுக்கு வேறு வழியில்லை. இச்செயலை சீனர்கள் வெறுத்தனர்.

**யுவானின் திட்டங்கள் தோல்வி அடைதல்**

தன் பதவியைத் தக்க வைத்துக் கொள்ள அவர் ஜப்பானின் ஒத்துழைப்பை நாடினார். ஆனால் ஜப்பான் யுவானின் முடியாட்சியை ஆதரிக்கவில்லை. அதற்கென இருந்த ஆக்கிரமிப்புக் கொள்கையில் அது ஆர்வம் காட்டியது. இதற்கிடையில் நாட்டில் அமைதி, ஒழுங்கு சீர்கெட்டது. பல மாநிலங்கள் தங்கள் விடுதலையை அறிவித்தன. புரட்சிக்காரர்கள் மென்மேலும் செல்வாக்குப் பெற்றனர். 1915-ஆம் ஆண்டு மே மாதம் 12-ஆம் நாள் விடுதலை பெற்ற மாநிலங்களின் பிரதிநிதிகள் காண்டனில் ஒன்று கூடினர். அவர்கள் தங்கள் குடியாட்சி ஒன்றை நிலவியதாக அறிவித்தனர். அப்புதிய குடியரசு வலிமையற்றதாயிருந்தால் அயல் நாடுகளின் ஆதரவு கிட்டவில்லை.

யுவான் இக்கட்டான நிலையில் தள்ளப்பட்டார். மைய ஆட்சியும் வலிமை குன்றி காணப்பட்டது. அங்கு வெளிநாட்டு ஆபத்தும் உள்நாட்டுக் குழப்பமும் குடி கொண்டது. சிக்கலான நேரத்தில் பல மாநிலங்கள் சுதந்திரம் பெற்றதோடு, யுவானுக்கு நெருக்கமான தளபதிகளான துவான் - சிஜுயி, பெண்குவோ சாங்

பிரிந்து சென்றனர். ஆதரவாளர்களால் ஏமாற்றப்பட்டு, அவமானம், வெறுப்பு, துன்பம் இவைகளால் ஆட்கொள்ளப்பட்ட யுவான் திடீரென 1919-ல் இறந்து போனார்.

**மதிப்பீடு**

யுவானின் வாழ்க்கையைப் பற்றிக் கூறும் போது லாங் சி என்பவர் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் எவ்வித பாகுபாடும் செய்யாதவர் என்றும், கத்திமுனையில் எல்லாம் பொன்னாக மாற்ற முடியும் என்றும் கருதியவர் என குறிப்பிட்டுள்ளார். அவரது அரசியலமைப்பின் கோமாளித்தனம் தவறான முறையில் பாராளுமன்றத்தில் நுழைந்தது. அவரது ஊழல், பயமுறுத்தல், கொலை, அடிமைத்தனம் ஆகியவை அவரது ஆளுமைக்கும், ஒழுக்கத்திற்கும் பங்கம் ஏற்படுத்தின. பின்னால் வரப்போகும் ஆண்டுகளில் அமைதியின்மையும், ஒழுக்கமின்மையும் ஏற்பட அவைகள் அடிக்கல் நாட்டின. குடியாட்சிக்கு அவர் செய்த துரோகம் மன்னிக்க முடியாத அரசியல் பாவமாகக் கருதப்படுகிறது. அது அவரது பெருமைக்கும் இழுக்கைத் தேடித்தந்தது.

**இருப்பத்தோரு கோரிக்கைகள்**

சீனாவின் பொருளாதார வளத்தின் மீதும், அரசியல் இறைமையின் மீதும் வெளிப்படையாக குறி வைக்கப்பட்ட ஆக்கிரமிப்பு அம்பாக இருபத்தோரு கோரிக்கைகள் அமைந்திருந்தன. இந்த கோரிக்கைகளினால் சீனா மீது ஜப்பான் தன் பேராதிக்கத்தைத் திணிக்கும் செயலைக் காண முடிந்தது. உள்நாட்டுச் சிக்கலாலும், யுவானின் அரசியல் சந்தர்ப்பவாதங்களாலும், உலகப் போரின் பீதியினாலும் சீனாவின் நிலைமை மிகவும் மோசமாகக் காணப்பட்டது. இச்சூழ்நிலையில் ஜப்பான் சீனாவில் நுழைந்து ஆதாயம் தேட முற்பட்டது.

**ஜப்பானின் 21 கோரிக்கைகள் சீனாவிடம் வைக்கப்படுவதற்குரிய சூழ்நிலைகள்**

1914-ஆம் ஆண்டு முதல் உலகப் போர் ஏற்பட்டது. அதில் ஐரோப்பிய நாடுகள் பலவும் ஈடுபட்டன. சீனா நடுநிலைமை வகிக்க முயற்சித்தது. இறுதியில் அது போரில் ஈடுபடும்படி கட்டாயப்படுத்தப் பட்டது. சீனாவில் ஆதிக்கம் செலுத்த ஜப்பான் இப்போரை பயன்படுதிக் கொள்ளும் என்று ஒரு சமயம் யுவான் குறிப்பிட்டார். மஞ்சுக்களுக்குப் பின் அரியணை ஏறி முடியாட்சியை நிலை நாட்ட வேண்டுமென்று யூாவன் திட்டமிட்டிருந்தார்.

புரட்சிவாதிகள் முடியாட்சியை மீண்டும் கொண்டு வருவதை எதிர்த்தார்கள். அதன் விளைவாக உள்நாட்டுத் தொல்லைகள் ஏற்பட்டன. யூனானில் புரட்சி வெடித்தது. யுவான் அதை அடக்க படை ஒன்றை அனுப்பினார். ஆனால் அவர் அம்முயற்சியில் வெற்றி பெறவில்லை. மற்ற மாநிலங்களும் அதைப் பின்பற்றின. டயாங்சியின் ஆளுநரும் புரட்சியை ஆரம்பித்தார். பல மாநிலங்கள் தங்கள் விடுதலையை அறிவித்தன. நிலைமை கட்டுக்கடங்காமல் சென்றது. இந்தக் குழப்பமான சூழ்நிலையில் ஜப்பான் தன்னுடைய புகழ்பெற்ற 21 கோரிக்கைகளை வெளியிட்டது.

1914-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஜப்பான் ஜெர்மனியில் குத்தகைப் பகுதியான ஷாண்டுங்கை எடுத்துக் கொண்டது. இந்த ஆக்கிரமிப்பை யுவானால் தடுக்க முடியவில்லை. 1915-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சீனா மீது ஜப்பான் தன்னுடைய 21 கோரிக்கைகளை வைத்தது. அக்கோரிக்கைகளை சீனா ஏற்றுக் கொள்ளுமேயானால் அது ஜப்பானின் குடியேற்ற நாடாகக் கருதப்படும் என்பது உறுதி. ஜப்பானின் உதவி தேவை என்பதால் போரின் போது மேலைநாடுகள் அவ்விஷயத்தில் தலையிடவில்லை. இந்த சமயத்தில் சீனா ஒன்றுபட்டு தன் தலைவர் பின்னால் செயல்படலாயிற்று. அக்கோரிக்கைகள் விபரம் பின்வருமாறு.

1. ஷாண்டுங்கில் இதுவரை ஜெர்மனி அனுபவித்து வந்த உரிமைகளை ஜப்பான் அனுபவிக்க சீனா ஒப்புதல் அளிக்க வேண்டும்.
2. ஷாண்டுங்கிலிருந்த முக்கிய துறைமுகங்களையும், நகரங்களையும் ஜப்பானுக்குத் திறந்து விடப்பட வேண்டும்.
3. லியோடுங், டெய்ரன், உள் மங்கோலியா ஆகிய இடங்களில் ஜப்பான் பெற்றிருந்த உரிமைகள் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.
4. ஹோப்பேயிலிருந்த ஹான்யே மிங்கின் இரும்பு எ.்.குத் தொழிற்சாலை, சியாங்சிலிருந்த பிங்ஷியாங் நிலக்கரி சுரங்கத் தொழிற்சாலை ஆகியவற்றல் ஜப்பான் பங்கு பெற சீனா ஒப்புதல் அளிக்க வேண்டும்.
5. சீனக் கடற்கரையிலிருந்து துறைமுகம் எதுவையும் வேறு எந்த நாட்டிற்கும் குத்தகைக்கு விடக்கூடாது.
6. சீனாவின் அரசியல், நிதி, ராணுவத்துறைகளில் ஜப்பானின் ஆலோசகர்கள் இடம் பெற வேண்டும்.
7. சீனாவில் முக்கிய நகரங்களில் இருந்த காவல்துறை சீன-ஜப்பானிய மேற்பார்வையில் வைக்கப்படுதல் வேண்டும்.
8. சீனாவின் ஆயத உற்பத்தி சாலையை இரு நாடுகளும் இணைந்து கவனித்தல் வேண்டும்.
9. வூச்சுங்கிலிருந்து நான்சாங் வரையிலான இருப்புப்பாதைக்கான செலவு நிதியை அளிக்கும் உரிமையை ஜப்பானுக்கு அளிக்க வேண்டும்.
10. ஷாண்டுங்கிலுள்ள முக்கிய இடங்களில் ஜப்பானியர்கள் வாணிபம் செய்யவும், தங்கி வாழவும் சீனா அனுமதி தருதல் வேண்டும்.
11. ஆர்தர் துறைமுகம், தெற்கு மஞ்சூரியா ஆகியவற்றின் குத்தகைக்காலம் 99 ஆண்டுகள் நீடிக்கப்படுதல் வேண்டும்.

12. தெற்கு மஞ்சூரியா, உள்மங்கோலியா ஆகிய இடங்களில் உள்ள ஜப்பானியர்கள் குத்தகைக்கு நிலம் பெறவும், சொந்தமாக நிலம் வாங்கவும் உரிமை பெறுதல் வேண்டும்.
13. தெற்கு மஞ்சூரியா, உள்மங்கோலியாவின் கிழக்குப் பகுதி ஆகிய இடங்களில் ஜப்பானியர்கள் தங்கு தடையின்றி செல்லவும், வாணிபம் செய்யவும் சுதந்திரம் அளிக்கப்படுதல் வேண்டும்.
14. தெற்கு மஞ்சூரியா, உள்மங்கோலியாவின் கிழக்குப் பகுதி ஆகிய பகுதிகளின் வரிப் பாதுகாப்பிற்கு எதிராக மூன்றாவது நாட்டில் கடன் வாங்கும் போது சீன அரசாங்கம் ஜப்பானிய அரசாங்கத்திடம் ஆலோசனை பெற வேண்டும்.
15. சீனாவின் உட்பகுதிகளில் உள்ள ஜப்பானிய மருத்துவமனைகள், திருச்சபைகள், பள்ளிகள் ஆகியவைகள் நிலம் பெற்றுக் கொள்ள உரிமை வழங்கப்படுதல் வேண்டும்.
16. ஜப்பானியர்கள் புத்தமதத்தைப் பரப்ப சீனர்கள் ஒப்புதல் வழங்க வேண்டும்.
17. தெற்கு மஞ்சூரியா, உள் மங்கோலியாவின் கிழக்குப் பகுதி ஆகிய இடங்களில் இருந்த ஜப்பானியர்களின் சுரங்க உரிமைகளை சீனா ஏற்றுக்கொள்ள வேண்டும்.
18. மேற்கண்ட இரண்டு இடங்களில் ஜப்பானிய ஆலோசகர்களின் உதவியை சீனா நாட வேண்டும் என அது கோரியது.
19. ஜப்பானின் அனுமதியின்றி சீனா ஹான்-யே-பிங் கம்பெனியின் உரிமைகளையும், சொத்துக்களையும் விற்கக்கூடாது.

20. அதன் அனுமதியின்றி கம்பெனியின் வெளியில் ஹான்யேபிங்கின் சொந்த கனிவளங்கள் செயல்படக்கூடாது.

21. புகின் என்ற இடத்தில் ஜப்பான் இருப்புப்பாதை கட்டுவதையும், கனிவளங்களைப் பயன்படுத்திக் கொள்வதையும் அனுமதிக்க வேண்டும்.

**கோரிக்கைகளின் தன்மை**

1. ஷாண்டுங்கைப் பற்றியது.
2. மஞ்சூரியா, உள் மங்கோலியாவைப் பற்றியது.
3. ஹான்-யே பிங் கம்பெனியைப் பற்றியது. சீனாவும், ஜப்பானும் இணைந்து செயல்படுதல் வேண்டும்.
4. சீனத் துறைமுகங்களை குத்தகைக்கு விடுவது சார்பாக மூன்றாவது நாடு அங்கு வருதல் கூடாது.
5. நாலாவிதமானவை - சீனாவின் உள்நாட்டு நிர்வாகத்தில் ஜப்பானின் ஆதிக்கம்.

**சீன எதிர்ப்பு**

ஜப்பானின் 21 கோரிக்கைகளைக் கேள்விப்பட்ட சீன மக்கள் சீற்றம் கொண்டனர். இயற்கையாகவே ஜப்பானியர்களை எதிக்கலாயினர். செய்தித்தாள்கள் அக்கோரிக்கைகளை புறக்கணித்தன. ஜப்பானிய எதிர்ப்பு உணர்ச்சியைத் தூண்டின. ஜப்பானிய ஆபத்தை எதிர்க்க யுவானுக்கு 19 ஆளுநர்கள் ஆதரவு வழங்கினர். அவர்கள் அதைத் தடுக்க முற்பட்டனர். தேசிய மீட்சி நிதி திரட்டப்பட்டது. தங்களைத் தயார் செய்து கொள்ள எல்லோரும் நிதி அளித்தனர். நாடெங்கிலும் போராட்டங்கள் நடைபெற்றன. ஜப்பானியப் பொருள்கள் பகிஷ்காரம் செய்யப்பட்டன. ஜப்பானிலிருந்து சீன மாணவர்கள் தாயகம் திரும்பினர்.

**யுவானின் கீழ்ப்படிதல்**

ஜப்பானிய வற்புறுத்தலை தடுக்க எல்லாக்கட்சிகளும் யுவானின் தலைமையில் அணி திரண்டன. ஆனால் எந்த ஒரு ராணுவத் தாக்குதலையும் சீனாவால் சமாளிக்க முடியாதென யுவான் உணர்ந்தார். தூரக்கிழக்கு நாடுகளில் வல்லரசு சமநிலையைப் பாராமரித்து வந்து ஜப்பானின் ஆக்கிரமிப்பை உண்மையாக தடை செய்த ஐரோப்பிய வல்லரசுகள் ஐரோப்பா கண்டத்தில் வாழ்வா, சாவை என்ற போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன. யுவானின் நிலையும் ஆட்டம் கண்டிருந்தது.

சில கோரிக்கைகளையாவது ஏற்றுக்கொள்ளாமல் இருக்க முடியாது என யுவான் உணர்ந்தார். 1915-ஆம் ஆண்டு மே மாதம் ஜப்பான் வலியுறுத்தல் தாங்காமல் முதல் 4 பிரிவுகளில் கண்ட கோரிக்கைகளை அவர் ஏற்றுக்கொண்டார். ஐந்தாவதைத் தள்ளி வைத்தார். சட்ட மன்றத்தின் ஆலோசனையில்லாமல் அவர் ஜப்பானுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். இறுதி ஒப்பந்தத்தில் ஐந்தாவது பிரிவிலுள்ள கோரிக்கைகள் பிறகு ஆலோசிக்கப்பட வைக்கப்பட்டது. முழுமையாக நிராகரிப்பதில்லை என முடிவு செய்யப்பட்டது.

**யுவான் கீழ்ப்படிந்ததால் ஏற்பட்ட விளைவு**

எதிர்பாராத அழிவினால் ஏற்படும் பயத்தையும் அதன் விளைவாக தேசியம் வெடித்து எழும் நிலையினையும் இருபத்தோரு கோரிக்கைகள் ஏற்படுத்திவிட்டன என்று இமானுவேல் சூ என்பவர் குறிப்பிட்டுள்ளார். மக்களை இச்செய்தி வெகுவாக பாதித்தது. எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போல் இது அமைந்துவிட்டது. வெளியில் பெரும் வல்லரசுகளை எதிர்ப்பது உள்நாட்டில் துரோகிகளை வெளியேற்றுவது என மக்கள் உறுதி பூண்டனர். ஜப்பானை

திருப்திப்படுத்த யுவான் மேற்கொண்ட கொள்கையை சீன மக்கள் எதிர்த்தனர். வெறுத்தனர். யுவானில் செல்வாக்கு வெகுவாகக் குறைந்தது, அவரது வலிமையற்ற நிலை மக்களுக்குப் புலப்பட்டது. மக்கள் அவர் மீது கொண்டிருந்த நம்பிக்கையை இழந்தனர். சீனர்கள் மீது ராஜதந்திர வெற்றியை ஜப்பான் பெற்ற போதிலும் அதன் ஆக்கிரமிப்புப் பசி தீரவில்லை.

**சீனாவும் முதல் உலகப் போரும்**

1914-ஆம் ஆண்டில் முதல் உலகப்பேர் தொடங்கியபோது தன்னுடைய உள்நாட்டு அரசியலில் காணப்பட்ட குழப்பமான சூழ்நிலைகள் காரணமாக நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றுவதே சரியெனச் சீனா கருதியது. 'முக்கூட்டு நேச உடன்பாடு' மற்றும் 'மூவரசு ஒப்பந்தம்' ஆகியவற்றைச் செய்து கொண்டிருந்த நாடுகள் சீனாவின் பொருளாதாரத்தைச் சீர்கேட்டிற்குள்ளாக்கியிருந்தன. அரசியல் சூறாவளி, பொருளாதாரப்புயல் ஆகியவற்றால் தாக்குண்ட சீனா தன்னைப் பேரில் ஈடுபடுத்த வேண்டாமென அந்நிய நாடுகளைக் கேட்டுக்கொண்டது. ஜப்பானின் நெருக்குதல்களும் தன்னைப் பாதிக்குமென உணர்ந்த யுவான் அமெரிக்காவைச் சீனாவின் நடுநிலையை ஏற்குமாறு வேண்டினார். ஆனால் ஜெர்மனியைத் தவிர பிறநாடுகளில் சீனாவின் கருத்தினை ஏற்கத் தயாராக இருக்கவில்லை.

**சீனா போரில் ஈடுபடக் காரணங்கள்**

கிழக்காசியப் பகுதிகளில் ஜெர்மனியின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தித் தன்னுடைய நிலையை வலுப்பெறச் செய்வதே ஜப்பானின் நோக்கமாக இருந்தது. எனவே சீன ஜப்பானியக் கடற்கரை பகுதிகளிலிருந்து வெளியேறுமாறு ஜெர்மனிக்கு ஜப்பான் கட்டளை பிறப்பித்தது. தனது சீனக் குத்தகைப் பகுதியான சௌவை, ஜெர்மனி ஜப்பானிடம் விட்டுவிட வேண்டுமெனக்

கட்டாயப்படுத்தப்பட்டது. அத்துடன் ஆங்கில ஜப்பானிய உறவைப் பயன்படுத்தி சீனப்பகுதி வழியாக ஊடுருவிச் சென்று ஷாண்டுங்கிலிருந்த ஜெர்மானியரை விரட்டவும் ஜப்பான் முனைந்தது.

தூரக்கிழக்கில் அமைதியை நிலை நாட்டி ஷாண்டுங்கை சீனாவுக்குத் திருப்பித்தருவதே தன்னுடைய நோக்கமென ஜப்பான் அறிவித்தது. ஆனால் தன்னுடைய வாக்கினைக் காப்பாற்றாமல் சீனாவின் கீழான நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு சீனாவின் மீது தன்னுடைய 21 கோரிக்கைகளைத் திணித்தது. தன்னுடைய சூழ்நிலைகள் காரணமாக அவற்றை ஏற்றுக்கொண்ட சீனா ஜப்பானின் ஆதிக்கத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளும் பொருட்டு முதல் உலகப் போரில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று.

**போரில் சீனா இறங்குதல்**

சீனாவிலிருந்த அமெரிக்கத் தூதுவர், ஜப்பானிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்றால், சீனா அமெரிக்காவுடன் இணைந்து போரில் ஈடுபட வேண்டுமெனக் கூறினார். ஷாண்டுங் சிக்கல், பொருளாதாரச் சீர்குலைவுகள் ஆகியவற்றுக்குத் தீர்வு காண விரும்பிய சீனா, தன்னுடைய பாராளுமன்றத்தின் எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாமல் மேற்கு நாடுகளின் ஆதுரவுடன் 1917 ஆகஸ்டு 14 ஆம் நாள் போரில் குதித்தது. இருப்பினும் அது கீழ்க்கண்ட நிபந்தனைகளை விதித்திருந்தது.

1. பாக்ஸர் கிளர்ச்சியின் விளைவாகச் சீனா ஜெர்மனிக்குத் தர வேண்டியதிருந்த இழப்பீட்டுத்தொகை தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.
2. நேச நாடுகள் பலவற்றுக்கும் சீனா கொடுக்க வேண்டியதிருந்த இழப்பீட்டுத் தொகைகளனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டு அதன் மூலம் கிடைக்கக்கூடிய

வருவாய் சீனாவின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தப்பட வேண்டும்.

3. சீனா, ஆஸ்திரியாவுக்குத் தரவேண்டியிருந்த இழப்பீட்டுத் தொகையைத் தள்ளுபடி செய்யவும் நேச நாடுகள் முன்வந்தன.
4. சீன ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்களின் மீதான சுங்கவரியைத் தம் விருப்பம் போல் மாற்றியமைக்கச் சீனா அனுமதி பெற்றது.
5. பாக்ஸர் கிளர்ச்சிகளின் போது சீனாவுக்குள் அனுப்பப்பட்ட படைகளை அயல்நாடுகள் திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும்.
6. ஜெர்மனி மற்றும் ஆஸ்திரியா, ஹங்கேரி ஆகிய நாடுகளுக்கு டியென்ட்ஸீன் மற்றும் ஹான்ஹௌ ஆகிய பகுதிகளில் வழங்கப்பட்டிருந்த சலுகைகளை நிபந்தனையேதுமின்றித் திரும்பப் பெற்றக் கொள்ளச் சீனா அனுமதிக்கபட வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளை நேச நாடுகள் முழுமையாக ஏற்கவில்லை. அதற்குமாறாக நிபந்தனை இல்லாமல் சீனா போரில் இறங்கினால் அந்நாடு பாதுகாக்கப்படுமென நேசநாடுகள் அறிவித்தன. சீனப் பாராளுமன்றம் இதனை எதிர்த்தது. ஆனால் நேச நாடுகளுடன் சேர்ந்து போரிட்டால் அந்நாடுகளிடமிருந்து பெருந்தொகையைக் கடனாகப் பெற்று சீனாவின் பொருளாதாரக் சிக்கல்களைத் தீர்த்து விடலாமென அப்போதைய சீனப் பிரதமர் டுவான் ஷி ஜீயி, யுவான் ஷி கேக்குப் பின்னால் குடியரசுத் தலைவரான லீ யுவான் ஹங்கின் சொல்லுக்குக் கட்டுப்படவில்லை.

அவ்விரு பிரிவினருக்குமிடையில் கருத்து வேறுபாடுகள் வளர்ந்தன. அவ்வமயம் டுவான் போர் பிரபுக்களின் துணையை நாடினார். அவர்கள் குடியரசுத் தலைவரைப் பதவி நீக்கம் செய்தார்கள். தன்னைக் குடியரசுக்

காவலர் என்றழைத்துக்கொண்ட டுவான் மீண்டும் தம்மைப் பிரதமராக ஆக்கிக்கொண்டு ஜெர்மனிக்கெதிரான நேச நாடுகளுடன் இணைந்து போரில் குதித்தார். அப்போது ஜப்பான், பிரிட்டன், பிரான்சு முதலிய நாடுகள் சீனாவைத் துரப்புச்சீட்டாக பயன்படுத்தி ஜெர்மனியைப் பலமிழக்கச் செய்க் கருதின. 1917-ல் அமெரிக்கா போரில் குதித்த போது, அதுவும் தனக்குச் சாதகமாக அமையுமெனச் சீனா கருதியது. எவ்விதமான ஆதாயத்தையும் எதிர்நோக்காமல், உள்நாட்டில் காணப்பட்ட சிக்கல்களையும் ஆராய்ந்து பாராமல் சீனா போரில் ஈடுபட்டது.

**விளைவுகள்**

முதல் உலகப் போரின் போது 1,75,000 சீனர்கள் பிரான்சு, மெஸபட்டோமியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் நேச நாடுகளுக்கு ஆதரவாகப் போரில் ஈடுபடுத்தப்பட்டார்கள். அதனால் எவ்வித நன்மையையும் அடையாத சீனா பலவித விளைவுகளையும் சந்திக்க வேண்டியதாயிற்று.

1. சீனாவின் வரிக்கோட்பாடுகளில் மாறுதல்கள் ஏற்பட்டது 1901-ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி சீனாவின் வரிகோட்பாடுகளில் மாற்ற முடியாமலிருந்த ஏற்றுமதி இறக்குமதி பொருட்களின் மீதான சுங்கவரியானது 5 விழுக்காடு என அறிவிக்கப்பட்டது.
2. சீனாவில் ஆஸ்திரியா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் கொண்டிருந்த உடமைப் பகுதிகளின் மீது சீனா தன்னுடைய ஆதிக்கத்தை மீட்டுக் கொண்டது. சீனாவிற்கு அந்நாடுகள் தர வேண்டிய பணபாக்கிகளுக்காக அவற்றினுடைய சீனச் சொத்துக்களைச் சீனா தன் வசப்படுத்திக் கொண்டது.
3. பாக்ஸர் ஒப்பந்தப்படி ஜெர்மனி, ஆஸ்திரியா ஆகிய நாடுகளுக்குச் சீனா தரவேண்டியதாயிருந்த இழப்பீட்டுத் தொகைகள் தள்ளுபடி செய்யப்பட்டன.

4. தம்முடன் இணைந்து பணியாற்றியமைக்காக நேசநாடுகளுக்குச் சீனா தரவேண்டிய இழப்பீட்டுத் தொகைகளை ஐந்தாண்டு காலத்திற்கு நிறுத்தி வைக்க நேசநாடுகள் ஒப்புக்கொண்டன. மேலும் பாக்ஸர் கிளர்ச்சிகளின் போது சீனா நேச நாடுகளுக்குத் தருவதாக ஒப்புக் கொண்டிருந்த இழப்பீட்டுத் தொகையையும் தள்ளுபடி செய்ய நேச நாடுகள் முன்வந்தன.

5. சுங்கவரி அதிகரிப்பு, கடன் தொல்லைகளின்றும் விடுவிக்கப்பட்ட தற்காலிக விடுதலை ஆகியவற்றினால் நலிவுற்றிருந்த சீனப் பொருளாதார நிலைகள் மீண்டும வலுப்பெற சாத்தியக் கூறுகள் ஏற்பட்டன.

6. டீயென்சீன், ஹான்ஹௌ ஆகிய பகுதிகளில் நேச நாடுகள் கட்டுப்படுத்தப்பட்டிருந்த ரஷ்யா-மஞ்சூரியா இருப்புப் பாதையில் சீனாவுக்கு சில உரிமைகளும், சலுகைகளும் கிடைத்தன.

7. போர் முடிவுற்றவுடன் மேற்கொள்ளப்பட்ட சமாதானப் பேச்சு வார்த்தைகளின் போது சீனாவும் ஜப்பானுக்குச் சமமாகப் பங்கேற்க வகை செய்யப்பட்டது. மேலும் ஜப்பானின் ஆதரவோடு சீனாவின் வளர்ச்சிக்குத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

8. மேற்கூறப்பட்ட சில சலுகைகளைப் பெற்ற சீனா தானும் சில சலுகைகளை நேசநாடுகளுக்கு விட்டுத்தர வேண்டியதாயிற்று. ஏற்கனவே போர்ப் பணியாளர்களைப் பெற்ற நேச நாடுகள் சீனாவின் தேவைக்கு அதிகமாக இருந்த உணவுப் பொருட்கள், உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றைப் பெற்றுக்கொண்டன.

9. சீனாவின் பொருளாதார வசதிகளைப் பெருக்கிக் கொடுத்த ஜப்பான் சீனாவின் மூலம் தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டது.

10. ஜெர்மனியின் வலிமையும் ஆதிக்கமும் சீனாவில் கட்டுப்படுத்தப்பட்டதால் பிரிட்டன், ஜப்பான் போன்ற நாடுகள் சீனாவிடமிருந்து மூலப்பொருட்கள், தாதுப்பொருட்கள், வாணிபச் சலுகைகள் ஆகியவற்றைப் பெற்று தம்மை மேலும் வளரச் செய்து கொண்டன.

**அமைதிப் பேச்சுவார்த்தையில் சீனா**

போரில் ஈடுபடச் சீனா ஒப்புக்கொண்டமைக்காக முதல் உலகப் போர் முடிவுற்றதும் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தைகளில் சீனாவையும் சேர்த்துக் கொள்ள நேசநாடுகள் ஒப்புக்கொண்டன. ஆனால் சீனா அப்பேச்சு வார்த்தைகளில் பங்கேற்ற போது சீனாவில் திடமான அரசு காணப்படாததால் சீனா நிலையாக எதனையும் சாதிக்க முடியவில்லை. மேலும் ஜப்பானுடன் ஒப்பிட்டு நோக்கும் போது சீனா வலிமையேற்ற நாடாகத் திகழ்ந்தது. அத்துடன் சீனா அயல்நாடுகளை நம்பியே செயல்பட வேண்டிய நிலையிலுமிருந்தது. எனவே சீனாவுக்கு ஆதாயம் ஏதும் கிட்டவில்லை.

பேச்சு வார்த்தைகளின் போது ஷான் டுங் பகுதியைத் தன்னிடம் ஒப்படைத்து விட வேண்டுமெனச் சீனா வலியுறுத்தியது. தொடர்ந்து அயல்நாட்டுப் படைகள் சீனாவிலிருந்து வெளியேற வேண்டுமெனவும் கூறியது. அமெரிக்கா இதனை ஒப்புக்கொண்டது. ஆனால் ஷான்டுங்கில் ஜப்பானின் ஆதிக்கத்தை ஆதரிக்க மறுத்த மற்ற நாடுகள் அக்கருத்துக்களை ஏற்க மறுத்தன. எனவே சீனாவின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக ஷான்டுங், டிஸிங்டௌ ஆகிய பகுதிகளில் ஜப்பானியர் செல்வாக்கு மேலோங்கிக் காணப்பட்டது. ஜப்பானின் பேச்சுக்கே பிறநாடுகள் மதிப்பளிக்கத் தொடங்கின. இச்செயல்கள் சீனர்களுக்கு ஆத்திரத்தோடு வெறுப்பு உணர்வையும் ஊட்டின. சீன அரசியலில்

காணப்பட்ட ஒற்றுமையின்மை காரணமாகச் சீனாவின் நிலை இரங்கத்தக்கதாகவே இருந்தது.

ஷான்டுங்கில் சீனா இழப்புகளுக்கு உள்ளாக்கப்பட்ட போதிலும், ஜெர்மனிக்குச் சீனா தரவேண்டியதாயிருந்த இழப்பீட்டுத் தொகைகள் தள்ளுபடி செய்யப்பட்டன. 1921-ஆம் ஆண்டு மே மாதம் சீனாவும் ஜெர்மனியும் செய்து கொண்ட ஒப்பந்தப்படி ஜெர்மனி சீனாவில் கொண்டிருந்த சலுகைகள் அனைத்தையும் இழந்தது. சீனாவின் ஒப்புதலுடன் நல்லுறவு வாணிபத்தை மட்டுமே ஜெர்மனி மேற்கொள் வேண்டியதாயிற்று. சீனச் சட்டங்களை மதித்து நடக்கவும், ஜெர்மனி ஒப்புக்கொண்டது. ஜெர்மனியின் கட்டுப்பாட்டிலிருந்த சீனப்பகுதிகள் ஜப்பானின் கைகளுக்கு மாற்றப்பட்டன. எனவே முதல் உலகப்போருக்குப் பின்னர் சீனாவில் ஜப்பானிய எதிர்ப்பு இயக்கங்கள் வலுப்பெற்று உள்நாட்டுக் குழப்பங்கள் தோன்றின. ஆனால் முதல் உலகப் போருக்குப் பின்னரே சர்வதேச அரங்கில் சீனாவுக்கு ஓரிடம் கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**மே நான்காம் நாள் இயக்கம்**

1. முதல் உலகப் போர் முடிவுற்றபின் அமைதி உடன்பாடு காணும் பொருட்டு பாரிசு மாநாட்டிற்குச் சென்ற சீனப் பிரதிநிதிகள் ஏமாற்றத்திற்குள்ளாயினர். அவர்களது கருத்துக்கள் ஏற்கப்படவில்லை. மேல்நாடுகள் சீனாவினை எண்ணிப் பாராமல் ஷான்டுங் பகுதியை ஜப்பானுக்கு விட்டுக்கொடுக்க முன்வந்தன. அயலவரின் ஆதிக்கப்பிடிகளின்றும் விடுவிக்கப்பட்டு சீரானதோர் நிலையை எட்டிவிடலாம் என்று கருதிய சீனாவின் எண்ணம் பகல் கனவாயிற்று. இது சீன மக்களை ஏமாற்றத்திற்குள்ளாக்கியது.

அவர்கள் நம்பிக்கைத் துரோகம் செய்து விட்ட மேல்நாடுகளை வெறுக்கலானார்கள்.

2. அந்நியப் பண்பாடுகளின் மீது வெறுப்புணர்வுகள் எழுந்த நேரத்தில் சீனாவில் வளர்ந்து வந்த இலக்கிய ஈடுபாடு,தேசீயப் பண்பாட்டைக் கட்டிக்காக்க வேண்டுமென்ற மனவுணர்வை இளைஞர்களிடம் தோற்றுவித்தன.
3. முதல் உலகப்போருக்குப் பின்னால் சீனப் பொதுமக்கள் பெருமளவிற்கு துன்புற்றார்கள். அரசுப் பிரிவினர் தமது பொறுப்புகளைத் தவறாகப் பயன்படுத்த விழைந்தார்கள். நிலச்சுவான்தார்களின் ஆதரவுடன் தம்முடைய பொருள்வளத்தைப் பெருக்கிக் கொள்ள முற்பட்டனர். அதே நேரத்தில் விவசாயிகளுக்குத் தேவையான பொருட்கள் கிடைக்காத காரணத்தால் விவசாயிகளும் இன்னல்களுக்கு உட்படுத்தப்பட்டார்கள். வரிச்சுமையும் பெருகியது. விவசாயச் சிக்கல்களைப் போல் குடிசைத் தொழில்களில் ஈடுபட்டிருந்தவர்களுக்கும் அரசு உதவி கிட்டவில்லை. அதனால் குடிசைத் தொழில்களும் நலிவுற்று நசியலாயின.
4. மஞ்சுக்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் சீனாவில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களுக்கான காரணங்களைக் கண்டு ஆராய்ந்து தீர்க்கமான வலிமை மிக்க, சிறப்பான அரசியலமைப்பினை உருவாக்கிச் சீனாவை முன்னேற்றமடைந்த ஒரு நாடாக ஆக்க வேண்டுமென்ற ஆக்கபூர்வமான எண்ணம் மக்களிடம் தோன்றியது.
5. இவ்வியக்கம் தோன்றுவதற்கு அறிஞர்களும் உறுதுணையாக இருந்தார்கள். கல்வித்துறையில் நாட்டமுடையவர்களான சீனர்கள் மேல்நாட்டு அமைப்பு முறைகளை நீக்கிவிட்டுச் செயல்பட

முடியாதென்பதை நன்கு உணர்ந்தார்கள். பழமையும், புதுமையும் இணைந்த ஓர் சமுதாயமே மேம்பட்டுக் காணப்படுமென அவர்கள் கருதினார்கள்.

6. பதவிமோகம் காரணமாகத் தமக்குள் போராடிக் கொண்டு மக்களை இன்னல்களுக்கு ஆளாக்கிக் கொண்டிருந்த குடியரசு பிரிவினர் முடியாட்சிப் பற்றுடையோர் ஆகியோரிடையே ஏற்பட்ட பிணக்குகளைத் தீர்த்து அரசியலைத் தெளிந்ததோர் நீரோடையாக்க வேண்டுமென எண்ணிய சீன இளைஞர்கள் மே நான்காம் நாள் இயக்கத்தைப் பிரபலபடுத்தினார்கள்.

**இயக்கத்தின் துவக்கம்**

சீன மாணவர்களும் ஆசிரியர்களும் 1919-ஆம் ஆண்டு மே நான்காம் நாள் பீகிங் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறி ஜப்பானிய எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கினார்கள். ‘சீன இறைமை காக்கப்பட வேண்டும்’ காட்டிக் கொடுப்பவர்களைத் தண்டியுங்கள். ‘ஜப்பானியப் பொருட்களைப் புறக்கணியுங்கள்’ என்ற கோஷங்களை எழுப்பினர்.

சீனப் பண்பாட்டைப் பாதுகாத்தல், ஜப்பானின் 21 கோரிக்கைகளை திரும்பப்பெறச் செய்தல். சீனாவுக்கும், சீனர்களுக்கும் தீங்கிழைத்துத் துரோகம் செய்வோரைத் தண்டித்தல் ஆகிய நோக்கங்களைக் கொண்டிருந்த இவ்வியக்கத்தினால் ட்ஷோ ஸின் லின், ஷாங் ட்சுங் ஷியாங் போன்ற அமைச்சர்களையும் லூட்சுங் யூ என்ற பணப் பொறுப்பு அதிகாரியையும் பதவி நீக்கம் செய்து கடுந்தண்டனைக்கு உட்படுத்த வேண்டுமென்றார்.

படிப்படியாக பீகிங்கிலிருந்து இவ்வியக்கம் பிற பகுதிகளுக்கும் பரவியது. ட்ஷினான், ஷான்டுங் ஆகிய பகுதிகளிலும் ஜப்பானியப் பொருட்கள் நிராகரிக்கப்பட்டன. தொடர்ந்து வந்த ஜூன் மூன்றாம் நாளில் கான்டனில்

ஏறத்தாழ 20,000 ஆலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். அது காட்டுத்தீ போல் பிற பகுதிகளுக்கும் வேகமாகப் பரவியது. அரசு மக்களின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்து மேலே குறிப்பிட்ட அமைச்சர்களையும் பதவி நீக்கம் செய்தது.

**இயக்கத்தின் போக்கு**

அதன்பின் அரசியல் மாற்றங்களுடன் தமது பழம்பெருமைகளையும், பண்பாட்டினையும் நிலை நாட்ட சீனர்கள் முயன்றனர். சென் டூ ஷி யூ என்பவரால் வெளியிடப்பட்ட 'நியூ யூத்' (New Youth) என்னும் செய்தித்தாளும் மக்கள் மனத்தில் மாற்றத்தை ஊட்டின. கன்பூஷியஸின் கோட்பாடுகள் எதிர்க்கப்பட்டன. பழம் குடும்பக்கோட்பாடுகள், பெண்களின் இழிநிலை ஆகியன வெறுக்கப்பட்டன. இவ்வியக்கத்தினர் மேற்கு கிழக்கு நாடுகளிடையே ஒரு இணைப்பை உருவாக்க முற்பட்டனர். மேல் நாட்டுத் தத்துவங்கள், பண்பாடு, இலக்கியங்கள் ஆகியவை சீனாவில் செல்வாக்குப் பெற்றன. புதுமைப் பொலிவு வரவேற்கப்பட்டது.

இலக்கியத்துறையில் மாற்றங்கள் தென்படலாயின. மேல் நாட்டு இலக்கியங்கள் சீன மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. யென்பூ, லீஷி போன்றோர் மொழிபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டார்கள். சார்லஸ் டார்வின், மாண்டெஸ்க்யூ ஜான் ஸ்டுவர்ட்மில் போன்ற பலதரப்பட்ட அறிஞர்களின் நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டன.

எளிமையான பேச்சுவழக்கிலுள்ள சொற்களே இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டன. 'விழிப்புணர்வு' (The Awakening), அறிவுச்சுடர் (The Lamp of Knowledge) போன்ற புதிய நடையில் எழுதப்பட்ட தனி நூல்கள் வெளிவந்தன. பேராசிரியர் சென்டூஷியூ பீகிங் பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவுப்

பேராசிரியராக நியமிக்கப்பட்டார். பொதுவுடமைக் கோட்பாடுகளுக்கு அவர் விளக்கமளித்தார்.

ஷென்டு ஷியு என்பவர் மக்களின் உரிமைகள், தொழில் மேம்பாடு, சமதர்மம், மார்க்ஸீயக் கோட்பாடுகள் ஆகியவற்றைத் தெளிவுபடுத்தினார். கன்பூசியசின் தத்துவங்கள் அக்கால நடைமுறைக்கு ஒவ்வாது என்பதைச் சுட்டிக்காட்டி மக்களின் மனத்தில் பகுத்தறிவு எண்ணங்களுக்கு வித்திட்டார்.

**இயக்கத்தின் தன்மை**

தேசியக் கோட்பாடுகளின் அடிப்படையாக எழுந்த மே நான்காம் நாள் இயக்கம் குறிப்பாகச் சீனாவை அந்நிய ஆதிக்கப் பிடிகளிலிருந்து விடுபடச் செய்யும் நோக்குடன் அந்நிய ஆதிக்கம், சுரண்டல்கள் ஆகியவை தெளிவாக வெளிப்படுத்தப்பட்டன. அறிஞர்களின் தூண்டுதல்கள் ஈடுபாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் எழுந்த இவ்வியக்கம் ஓர் விழிப்பு உணர்வுடன் கூடிய இயக்கமெனக் கூறினால் மிகையாகாது.

இந்த இயக்கம் படிப்படியாகத் தொழிலாளர் மத்தியிலும் பரவ ஆரம்பித்த போது மாபெரும் மக்களியக்கமாக அது உருப்பெற்றது. மேலும் இவ்வியக்கம் கொமின்டாங் கட்சியிலும் மாறுதல்களை ஏற்படுத்திற்று. சீனாவில் பொது உடமைக் கோட்பாடுகள் மலர்வதற்கோர் அடித்தளத்தை இவ்வியக்கம் அமைத்துத் தந்தது எனலாம். புதுமைக் கருத்துக்களைப் புகுத்த வேண்டும் என்ற நோக்குடன் உருவான இவ்வியக்கத்தால் நவீன சீனாவைத் தோற்றுவிக்க வேண்டிய சாத்தியக்கூறுகள் வெளிப்பட்டன. அதே நேரம் கன்பூசியக் கோட்பாடுகளுக்குச் சாவுமணி அடிக்கப்பட்டது.

அப்போதைய பொருளாதார, சமூக, அரசியல் பிரிவுகளின் மீதான வெறுப்புணர்வின் மீதெழுந்த ஓர் இயக்கமாகவே மே நான்காம் நாள் இயக்கம்

தோன்றியது. மே நான்காம் நாள் இயக்கம் காரணமாக மேல் நாட்டவர் சீனாவைப் பற்றிப் புரிந்து கொள்ள வாய்ப்புக் கிட்டியபோது சீனர்களும் மேல்நாட்டுக் கோட்பாடுகளைப் பின்பற்ற விழைந்தனர். அதற்கு உறுதுணையாக விளங்கக் கூடிய வகையில் அப்போது கூட்டப்பட்ட ‘வாஷிங்டன் மாநாடு’ துணைபுரிந்தது.

**வாஷிங்டன் மாநாடு**

முதல் உலகப் போர் முடிவடைந்த நேரத்தில் அப்போரில் தான் அடைந்த தோல்வி காரணமாக ஜெர்மனி சீனாவின் மீது கவனத்தைச் செலுத்தவில்லை. போல்ஷ்விக் புரட்சியில் ரஷ்யாவின் கவனம் திருப்பப்பட்டிருந்தது. பிரான்சு நாடு ஐரோப்பிய விவகாரங்களிலேயே ஆழ்ந்த கவனத்தைக் கொண்டிருந்தது. எனவே அவர்கள் சீன விவகாரங்களில் நாட்டமற்றிருந்தனர். அச்சமயத்தில் தான் பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் சீனப் பகுதிகளில் தங்களுடைய கவனத்தைச் செலுத்தலாயின. அதன்படி அமெரிக்காவின் கருத்துக்களின்படி 1921 ஆம் ஆண்டு நவம்பர் 12-ஆம் நாள் தொடங்கி 1922 பிப்ரவரி 6ஆம் நாள் வரை வாஷிங்டன் மாநாடு நடைபெற்றது.

**மாநாட்டின் நோக்கம்**

அமெரிக்காவுடன் ஜப்பான், பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி, ஹாலந்து, பெல்ஜியம், போர்ச்சுக்கல், இத்தாலி ஆகிய நாடுகள் இம்மாநாட்டில் பங்கேற்றன. தூரகிழக்கு நாடுகளில் முதல் உலகப் போருக்குப் பின்னர் ஏற்பட்ட சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதே இம்மகா நாட்டின் அடிப்படை நோக்கமாக இருந்ததெனலாம். இம்மாநாட்டின் விளைவாக சுமார் ஆறு உடன்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 13 தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இம்மாநாட்டின் மூலம் தன்னுடைய நிலையை உலகுக்கு எடுத்துக்காட்ட ஒரு நல்வாய்ப்பு சீனாவுக்குக் கிட்டியது. இம்மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய அமெரிக்கப் பிரதிநிதியான அமெரிக்கச் செயலர் ஹியூக்ஸ் (Hughes), பிரிட்டன் பிரதிநிதி ஆர்தர்பால், ஜப்பானிய பிரதிநிதி டோமோஸாபுரோகடோ ஆகிய மூவரும் மாறுபடுடைய பல கருத்துக்களைக் கொண்டிருந்ததால் அம்மகாநாடு பல நோக்கங்களைக் கொண்டிருந்தது. முதலில் பிரிட்டன் ஜப்பானுடன் 1902-ல் மேற்கொண்ட ஆங்கில-ஜப்பானிய உடன்பாட்டினை நீக்க வேண்டுமெனக் கருதியது.

**மாநாட்டில் ஜப்பானின் நிலை**

ஆனால் அதற்கெதிராக ஜப்பான் அனைத்து நாடுகளடங்கிய ஒரு மகாநாட்டைக் கூட்டித் தம்முடைய கருத்துக்களுக்கு ஆதரவு தேட முற்பட்டது. ஜப்பானின் பலம் தூரகிழக்கு நாடுகளில் பெருகியது. ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகள் ஜப்பானை எதிர்த்தது ஜப்பானை தனித்து ஆதாயம் தேட முற்படச்செய்தன. அதே நேரத்தில் பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் புதியதொரு கூட்டுறவை உருவாக்குதலின் மூலம் சீனாவுடனான தடையில்லா வாணிபத்தைப் பெருக்கிக் கொள்ளவும் ஜப்பான் முனைந்தது.

பிரிட்டனுடனான உறவுகளைப் புதுப்பித்துக் கொண்டு, தன்னுடைய தனிப்பட்ட, பலத்தினை மட்டும் நம்பியிராமல், ஜெர்மானிய எதிர்ப்புகளைச் சமாளிப்பதே தனக்கு உதந்ததொரு செய்கையென ஜப்பான் கருதியது. முதல் உலகப்போரில் ஜெர்மனிக்கெதிராக நேச நாடுகள் அடைந்த வெற்றியும் ஜப்பானின் அச்சத்தை அதிகரித்தன. சீனாவில் ஜப்பானுக்குப் படிப்படியாகப் பெருகி வந்த எதிர்ப்புணர்வுகளுடன் சீனாவின் பொருளாதாரம் சிறிது, சிறிதாக வலிமை பெற்று வந்த போது அதனைக் கண்காணிக்கக்கூடிய வகையில் அது

பங்கு பற்றி மாநாட்டில் தானும் பங்கேற்க ஜப்பான் முற்பட்டதில் புதுமையொன்றுமில்லை.

அதனால் கிழக்கு ஆசியப் பகுதிகள் அமைதியை நிலைநாட்டித் தன்னுடைய நிலையைப் பலப்படுத்திக் கொள்ளும் நோக்குடன் ஜப்பான் இம்மகாநாட்டில் பங்கேற்க முன் வந்தது.

**மாநாட்டில் அமெரிக்காவின் நிலை**

அமெரிக்காவின் நிலை மற்ற இரு நாடுகளையும் விட மாறுபட்டுக் காணப்பட்டது. மஞ்சூரியப் பகுதிகளில் ஜப்பானின் ஆதிக்கம் பெருகி வருவதை அமெரிக்கா விரும்பவில்லை. ஜப்பான் சீனாவை சுரண்டுவதையும் அமெரிக்கா எதிர்த்தது. இத்தகைய பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண அமெரிக்கா வாஷிங்டன் மாநாட்டின் அவசியத்தை வற்புறுத்தியது. அதன் மூலம் ஹவாய், பிலிப்பைன்ஸ் ஆகிய இடங்களில் தமக்கிருந்த வாணிபத் தலங்களைப் போல் சீனாவிலும் வாணிபத்தலங்களை ஏற்படுத்திக் கொள்ளலாமென அமெரிக்கா கருதியது. மேலும் ஆங்கில ஜப்பானிய உடன்பாட்டுடன் தம்மையும், பிரான்சையும் இணைத்து நான்கு வல்லரசு உடன்படிக்கையை ஏற்படுத்த வேண்டுமென்ற உள்நோக்குடன் அமெரிக்கா வாஷிங்டன் மாநாடு கூட்டப்பட வேண்டுமென்றது.

**மாநாட்டில் சீனாவின் நிலை**

எல்லாவற்றுக்கும் மேலாகச் சீனாவும் இத்தகைய மாநாடொன்று கூட்டப்பட வேண்டுமென்பதைப் பேராவலுடன் எதிர்பார்த்தது. 1911-ஆம் ஆண்டுப் புரட்சியின் விளைவாகச் சீன மக்கள் மனத்தில் தேசீயத் தீ கொளுந்துவிட்டு எரியலாயிற்று. சீன மக்கள் அயலவரின் கட்டுப்பாட்டிற்குச் சீனாவில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்பதில் ஆழ்ந்த கவனம் செலுத்தினர். அதன் மூலம் தமது பொருளாதாரம் மற்றும் அரசியலமைப்பு ஆகியவற்றை வலிமையுடையனவாகச்

செய்ய விரும்பினர். அதனால் தான் ஜப்பானின் 21 அம்சக் கோரிக்கைகளை சீனர்கள் வெறுத்தனர். மே நான்காம் நாள் இயக்கமும் இக்கோட்பாட்டின் அடிப்படையிலேயே எழுந்தது. இத்தகைய சூழ்நிலையில் வாஷிங்டன் மாநாடு கூட்டப்பட்டது. சீனாவுக்கோர் வரப்பிரசாதமாக அமைந்தது. சீனா அவ்வாய்ப்பினை நழுவவிடாமல் தானும் அம்மாநாட்டில் பங்கேற்றது.

**மாநாட்டில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள்**

1921-ஆம் ஆண்டு நவம்பர் 12-ஆம் நாள் ஹியூக்ஸ் என்ற அமெரிக்க செயலரின் தலைமையில் தொடங்கிய அம்மாநாடு படைபலக் குறைப்பு என்பதைத் தன் முக்கியக் கருத்தாகக் கொண்டிருந்ததுடன், பொதுவான தீர்மானங்களை உருவாக்குவதுடன் அதற்காக உருவாகப் பணிபுரிதலைத் தம்முடைய நோக்கமாகக் கொண்டிருந்தது. தூரகிழக்கு நாடுகளில் அமைதியை உருவாக்குதல் மற்றொரு முக்கிய நோக்கமாகும்.

ஏற்கனவே கூறிய ஆறு உடன்படிக்கைகள், 13தீர்மானங்கள் ஆகியவை நிறைவேற்றப்பட்டதுடன் இரண்டு தனிப்பட்ட உடன்படிக்கைகள் மாநாட்டின் நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டனவாக நிறைவேற்றப்பட்டன. இவற்றுள் 'ஐந்து வல்லரசுகள் கப்பற்படை ஒப்பந்தம்' (Five Power Naval Pact),'நான்கு வல்லரசுகள் உடன்படிக்கை' (Four Power Treaty),'ஒன்பது வல்லரசுகள் உடன்படிக்கை' (Nine Power Treaty) முதலியவை முக்கியமானவை.

**1. ஐந்து வல்லரசுகளின் கப்பற்படை ஒப்பந்தம்**

பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான், பிரான்சு, இத்தாலி ஆகிய நாடுகள் தமக்குள் ஐந்து வல்லரசுகள் உடன்படிக்கையைச் செய்து கொண்டன. கப்பல் வாணிபப் போட்டிகளின் காரணமாக எழுந்த சிக்கல்களுக்குத் தீர்வு காணும் நோக்குடன் எழுந்ததே இவ்வுடன்படிக்கை ஆகும். கோட்டைகள்

கட்டிக்கொள்ளுதல், கப்பற்படைத் தளங்களை அமைத்தல் போன்றவற்றில் உடன்படிக்கை நாடுகளுக்கிடையில் ஓர் வல்லமைச்சமன்பாடு காக்கப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

1921-ல் மேற்கொள்ளப்பட்ட இவ்வுடன்படிக்கையானது 1936-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை செல்லுபடியாகுமென அறிவிக்கப்பட்டது. இதன் விளைவாக கப்பல்களில் கொள்ளவு வரையறுக்கப்பட்டது. அமெரிக்கா 5,25,000 டன்கள், பிரிட்டன் 5,25,000 டன்கள், ஜப்பான் 3,15,000 டன்கள், பிரான்சு 1,75,000 டன்கள், இத்தாலி 1,75,000 டன்கள் கொள்ளும் கப்பல்களைக் கட்டலாமென ஒப்புக்கொண்டன. ஜப்பானிய பகுதிகளில் கருத்தினைப் பிறநாடுகள் ஏற்றுக்கொண்ட பின்னர்தான் ஜப்பான் இவ்உடன்படிக்கையை ஒப்புக்கொண்டது.

இவ்வுடன்படிக்கையின் வாயிலாக ஜப்பான் பல நன்மைகளைப் பெற்றது. மேல்திசை நாடுகள் ஜப்பானியப் பகுதிகளில் கோட்டைகள், தளங்கள் ஆகியன அமைப்பதில்லையென ஒப்புக்கொண்டதால் ஜப்பானின் பாதுகாப்பு அதிகரித்தது. குறிப்பாக மேல்நாட்டவர்களின் தலையீடுகள் ஏதுமின்மையால் ஜப்பான் தன்விருப்பம் போல் சீனப் பகுதிகளில் செயல்பட வாய்ப்பு கிட்டியது. மத்திய பசிபிக் பகுதியிலும், ஹாங்ஹாங்கிலும் பிரிட்டன் தன்னுடைய கப்பற்படைப் பலத்தைப் பெருக்குவதின்றும் தடைசெய்யப்பட்டது.

அதே நேரத்தில் சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய இடங்களில் பிரிட்டன் பெற்றிருந்த ஆதிக்கங்களில் வேறெந்த நாடுகளும் தலையிட இயலவில்லை. அயல்நாட்டவர்களின் தாக்குதல்களிலிருந்து ஜப்பான் தன்னைப் பாதுகாத்துக் கொண்டது.

**2. நான்கு வல்லரசுகள் உடன்படிக்கை**

பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நான்கு நாடுகள் இவ்வுடன்வடிக்கையை செய்து கொண்டன. 1921-ஆம் ஆண்டு டிசம்பர் 13-ஆம் நாள் செய்து கொள்ளப்பட்ட நான்கு வல்லரசுகள் உடன்படிக்கை 10 ஆண்டுகள் காலத்திற்குச் செல்லும்படியாகுமென அறிவிக்கப்பட்டது. கீழ்க்கண்டவை அதன் முக்கியக் கூறுகளாகும்.

அ. உடன்படிக்கை நாடுகள் பசிபிக்கடல் பகுதியில் ஒவ்வொருவர் உரிமைகளையும் மதிக்க வேண்டும். ஒரு நாட்டின் கடல் சூழ்ந்த நிலப்பரப்பு மற்றும் டொமினியன் அந்தஸ்து ஆகியவற்றையும் அனைத்து நாடுகளும் மதிக்க வேண்டும்.

ஆ. ராஜதந்திர உறவுமுறையில் ஏற்றுக்கொள்ளப்படாத உறவு முறைகளை கூட்டுமாநாட்டின் மூலம் ஏற்றுக் கொள்ள வேண்டும். பசிபிக்கடல் பகுதியில் ஏற்படக்கூடிய சிக்கல்களை உறுப்பு நாடுகள் பேச்சு வார்த்தைகள் மூலம் அமைதியான முறையில் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

இ. ஏதாவது ஒரு நாடு ஆக்கிரமிப்புக் கோட்பாட்டினைப் பின்பற்றினாலோ, அச்சுறுத்தல்களில் ஈடுபட்டாலோ மற்ற நாடுகள் தமக்குள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள உரிமைகள் வழங்கப்பட்டன.

மேலே சொல்லப்பட்ட கருத்துக்களை நான்கு வல்லரசுகளும் ஒப்புக்கொண்டன. அதனால் வாஷிங்டன் மாநாடு வெற்றிப்பாதையில் சென்றது. சர்வதேச சங்கத்தில் அங்கத்தினராகச் சேராத அமெரிக்கா இவ்வுடன்படிக்கையை ஏற்றுக்கொண்டதால் பிற நாடுகள் அதனைக் கலந்தாலோசித்தபின்பே தம்முடைய கருத்துக்களைச் செயல்படுத்தத் தலைப்பட்டன. மேலும் ஆங்கில-ஜப்பானியக் கூட்டுறவினால் உருவாக்கப்பட்டிருந்த ஆதிக்கப்போர் அபாயங்கள்

இவ்வுடன்படிக்கை காரணமாகத் தகர்த்தெறியப்பட்டன. ஜப்பான், தனது ஆதிக்கத்தை பெருக்கிக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தைக் கைவிட்டுவிட வேண்டிய கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டது.

**3. ஒன்பது வல்லரசுகள் உடன்படிக்கை**

வாஷிங்டன் மாநாட்டின் முக்கிய செயல்களில் 1923-ஆம் ஆண்டு பிப்ரவரி 6- ஆம் நாள் கையெழுத்தான ஒன்பது வல்லரசுகள் உடன்படிக்கையும் ஒன்றாகும். மாநாட்டில் பங்கேற்ற நாடுகளனைத்தும் இதில் கையொப்பமிட்டன. இவ்வுடன்வடிக்கையின்படி சீனாவின் இறைமை, விடுதலை, ஆட்சிமுறையில் நேர்மை ஆகியவை மதிக்கப்பட வேண்டுமென ஒப்புக்கொள்ளப்பட்டது. சீனாவில் சம உரிமையுடன் கூடிய வாணிப சர்ந்தர்ப்பங்கள் இவ்வொத்த நாடுகள் அனைத்துக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்து ஏற்கப்பட்டது.

மாநாட்டில் சீனா சமர்ப்பித்த கோரிக்கைகள்

ஒன்பது வல்லரசுகள் உடன்படிக்கை கையெழுத்தாவதற்கு முன்னர் சீனா தன்னுடைய பொதுநலன்களினடிப்படையில் தனது விருப்பங்களையும் கருத்துக்களையும் பத்து அம்சங்கள் கொண்டதொரு கோரிக்கையாக மாநாட்டின் முன் சமர்ப்பித்தது. அக்கோரிக்கைகள் முழுமையாக ஏற்கப்படவில்லை. இருந்தபோதிலும் அம்மாநாட்டில் பங்கேற்ற அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, ஜப்பான், இத்தாலி, நெதர்லாந்து, போர்ச்சுக்கல், சீனா ஆகிய நாடுகள் சீனாவைப் பலப்படுத்தக்கூடிய செயல்களை நடைமுறைப்படுத்த ஒப்புக்கொண்டன. சீனாவில் பிறநாடுகளின் செல்வாக்கு மண்டலங்கள் கட்டுப்படுத்தப்பட்டன.

அந்நிய நாட்டினர் சீனாவில் ஏற்படுத்தியிருந்த அஞ்சலகங்கள் வானொலி நிலையங்கள், படைமுகாம்கள் ஆகியவற்றை நீக்கிவிட வேண்டுமென இம்மாநாடு

முடிவு செய்தது. சீனா அந்நியரின் தேவையற்ற கட்டுப்பாடுகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள முழு வாய்ப்பு கிடைத்தது.

**ஷான்டுங் சிக்கல் தீர்க்கபடல்**

வாஷிங்டன் மாநாட்டின் போது அம்மாநாட்டு நடவடிக்கைகளில் சேர்க்கப்படாத செயல்களும் நடைபெற்றன. அவற்றுள் முக்கியமான ஒன்று சீனாவுக்கும் ஜப்பானுக்குமிடையிருந்து வந்த ஷான்டுங் சிக்கலாகும். ஷான்டுங் சிக்கலைச் சீனாவும், ஜப்பானும் தீர்த்துக் கொண்டன. கடுமையான சர்ச்சைகளுக்குப்பின் இச்சிக்கல் தீர்க்கப்பட்டது. அதனால் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி ஷான்டுங் குத்தகைப் பகுதிகள் அனைத்தையும் ஜப்பான் சீனாவிடம் திருப்பியளித்தது. அப்பகுதியில் ஜெர்மனி பெற்றிருந்த பகுதிகளையும் சீனா மீட்டுக் கொண்டது. ஆனால் ஜப்பான் ஷான்டுங் பகுதியில் செலவிட்டிருந்த தொகையைத் தந்துவிட சீனா ஒப்புக்கொண்டது. இருப்பினும் ஜப்பான் சீனா மீது திணித்திருந்த 21 கோரிக்கைகளைத் திரும்பப் பெற மறுத்து விட்டது. இதனால் ஷான்டுங் சிக்கல் உடனடியாகத் தீர்க்கப்படாமல் 1929-ல் தான் முடிவுற்றது.

**மாநாட்டின் முக்கியத்துவம்**

சர்வதேச அடிப்படையிலான பல சிக்கல்களுக்கு இம்மாநாடு தீர்வு கண்டது. படைக்குறைப்பு பற்றி நிலையான முடிவுகள் ஏற்கப்பட்டன. அமெரிக்க-பிரிட்டன்-பிரெஞ்சு கடற்படைப் போட்டிகள் தவிர்க்கப்பட்டன. பசிபிக்கடல் பகுதியில் அமைதியான சூழ்நிலை உருவாயிற்று. சீனாவுக்கு இழைக்கப்பட்ட தவறுகள் திருத்தப்பட்டதுடன் அந்நாட்டின் முழு இறைமை ஏற்கப்பட்டது. இம்மாநாட்டில் பங்கேற்றதால் பிறநாடுகளுக்குச் சமமான அந்தஸ்தை சீனா பெற்றதெனலாம். அந்நாட்டின் பொருளாதாரம் அந்நாட்டு

மக்களின் விருப்பப்படி வளர்ச்சியடைவதற்கான வாய்ப்புகள் கிடைத்தன. அமெரிக்காவின் புகழும் செல்வாக்கும் ஓங்கின. பிரிட்டன் ஜப்பானுடனான கப்பற்படையின் அளவு கட்டுப்படுத்தப்பட்ட போதிலும் அயல்நாட்டவர் ஜப்பானில் தடை செய்யப்பட்டமையால் ஜப்பான் பாதுகாப்புடன் தன் ஆதிக்கக் கோட்பாட்டைப் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றது.

ஷான்டுங் பகுதியில் தனக்கு ஏற்பட்ட இழப்பினை மஞ்சூரியப் பகுதியில் தம்மை வளர்த்துக் கொண்டு ஜப்பான் ஈடுகட்டிக் கொண்டது. பல நாடுகளுடனும் நல்லுறவைப் பெற்ற ஜப்பான் தனது தன்னிறைவுக் கோட்பாட்டில் ஆழ்ந்த கவனம் செலுத்தலாயிற்று. தன்னுடைய மக்கள் தொகைப் பெருகத்தைத் தனது பொருளாதார முன்னேற்றத்திற்காக ஜப்பான் நன்முறையில் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்புப் பெற்றது.

சுருக்கமாகச் சொன்னால் வாஷிங்டன் மகாநாட்டின் விளைவாகச் சீனாவும் ஜப்பானும் மட்டுமே மறைமுகமாகப் பல வாய்ப்புக்களைப் பெற்று முன்னேறின. அதன்பின்பு ஜப்பான் மஞ்சூரியாவில் பெற்ற ஆதிக்கம் காரணமாக மீண்டும் பூசல்கள் தோன்றின. வாஷிங்டன் மகாநாட்டின் நோக்கமும் சிதைவுற்றது.

**கோமின்டாங் கட்சியின் எழுச்சியும் வீழ்ச்சியும்**

1911-ஆம் ஆண்டுப் புரட்சியினை வெற்றிகரமாகக் கொண்டு வந்த துங் மெங் ஹுூய் என்ற ரகசிய அமைப்பிலிருந்து எழுச்சி பெற்றது தான் கோமின்டாங் கட்சி எனலாம். மஞ்சு வம்சம் தூக்கி எறியப்பட்ட பின் டாக்டர் சன் யாட் சென் இந்த அமைப்பு பிற ரகசிய சங்கங்களை இணைந்து தேசிய மக்கள் கட்சி அல்லது கோமின்டாங் என்பதை ஏற்படுத்தினார். யுவான் ஷி கே தன் செல்வாக்கை நிலை நாட்டுவதைக் கண்டு கோமின்டாங் கட்சி அவரை முதல் பராளுமன்ற கூட்டத்தில் கடுமையாக எதிர்த்தது. யுவானுடனான போராட்டத்தின்

ஆரம்பத்தில் டாக்டர் சென் குறைந்த வெற்றியைப் பெற்றார். இறுதியாக கோமின்டாங் கட்சி பீகிங் அரசாங்கத்திலிருந்து விடுபட்டு சீனக் குடியரசை காண்டனின் நிறுவியது. அதன் தலைவராக டாக்டர் சென் விளங்கினார்.

**தேசிய கட்சியின் தோற்றத்திற்கான காரணங்கள்**

இக்காலத்தில் கோமின்டாங் கட்சியின் எழுச்சிக்கு சில சாதகமான சூழ்நிலைகள் ஏற்பட்டன. முதல் உலகப்போரில் 21 கோரிக்கைகள், 1917ஆம் ஆண்டு ரஷ்யப் புரட்சி, பாரிசு மாநாட்டில் ஏற்பட்ட ஏமாற்றம் ஆகிய அனைத்தும் வலுவான தேசப்பற்றை ஏற்படுத்தியது. நாட்டுப்பற்று கொண்ட ஏராளமான மாணவர்கள் அக்கட்சியில் சேர்ந்தனர். 1920ஆம் ஆண்டில் கோமின்டாங் கட்சியுடன் பிற அரசியல் நிறுவனங்களும் நெருங்கி வர ஆரம்பித்தன. சோவியத் நாட்டின் புரட்சியினைப் பின்பற்றி சீன அறிஞர்கள் சீனப் பொதுவுடமைக் கட்சியினை ஏற்படுத்தினார்கள். ரஷ்யர்களும் அதை விரும்பினார்கள். ஏனெனில் கோமின்டாங் கட்சியின் மூலம் பொதுவுடமைக் கோட்பாட்டைக் பரப்பிக்கொள்ளலாம் என்பதே அதற்குக் காரணமாகும்.

**சோவியத் ரஷ்யாவுடன் கூட்டு**

ஆரம்பத்தில் கோமின்டாங் கட்சி சோவியத் ரஷ்யாவுடன் மாறுபட்ட கருத்தினைக் கொண்டிருந்தது. கட்சியின் ஒரு பிரிவினர் மாஸ்கோவின் செயலை விரும்பவில்லை. மற்றொரு பிரிவினர் அதைப் அதிகரித்து சுயதேவைப் பூர்த்தியடைந்தால் மக்கள் நல்வாழ்வு வாழ்வர் எனக் கருதப்பட்டது.

**கட்சியின் நடவடிக்கைகள்**

வர்க்கப் போரட்டம் மற்றும் பொருளாதாரத் தீர்மானிப்புத் தத்துவம் ஆகியவை பொதுவாகக் கொமின்டாங் பிரிவினரால் குறிப்பாக சன்யாட்சென்னால் எதிர்க்கப்பட்டன. ஆயினும் ஆதிக்கக் கோட்பாடுகளை எதிர்க்க ரஷ்யாவின்

உதவி தேவை என்பது நன்கு உணரப்பட்டதால் சீனாவின் உழவர்கள், தொழிலாளர்கள் ஆகியோருக்கு ரஷ்யக் கோட்பாடுகளின் அடிப்படையில் பல உதவிகள் வழங்கப்பட்டன. ஆதிக்கக் கோட்பாடு, நிலமானிய அமைப்புமுறை ஆகியவற்றைத் தூக்கியெறிந்து விட்டு நிலையான அரசியல் மற்றும் பொருளாதார அமைப்புகளை மேற்கொள்ள வகை செய்யப்பட்டன. சுங்கவரி, பாதுகாப்புவரி போன்றவற்றுள் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. நவீன விஞ்ஞான முறையிலான விவசாயம் வலியுறுத்தப்பட்டது.

விவசாயப் பெருங்குடி மக்கள், நகரத்தொழிலாளர், இளைஞர்கள், மாணவர்கள் ஆகியோரனைவரும் ஒருமித்துச் செயல்பட்டுச் சீனாவை மாற்றியமைக்கத் துணைநிற்க வேண்டுமெனக் கட்சியின் மூலமாக சன்யாட்சென் அறைகூவல் விடுத்தார். ரஷ்யாவுக்கும் சீனப் பொதுவுடமையாளர்களுக்கும் இடையில் இணக்கக் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன.

மக்களின் இறைமை வலியுறுத்தப்பட்டது. இதனைச் செயல்படுத்தக்கூடிய வகையில் தான் வலிமை மிக்க படையமைப்பினை உருவாக்கும் நோக்குடன் ரஷ்யத் தளபதி ப்ளோச்சர் என்பவரின் துணையுடன் தேசியப் படையமைப்பு உருவாக்கப்பட்டது. அதற்குப் பயிற்சியளிப்பதற்காகவே வாம்போ படைப் பயிற்சிக் கழகம் 1924-ல் சியாங்கே ஷேக் தலைமையில் உருவாக்கப்பட்டது.

வலிமையான அரசியலமைப்பினைத் தோற்றுவிக்க 'மத்திய செயற்குழு' (Central Executive Committee) ஒன்று உருவாக்கப்பட்டது. ஆட்சி முறையினை அமைப்பதில் இவ்வமைப்பு அனைத்து அதிகாரங்களையும் கொண்டு விளங்கியது. ஆரசியலில் தேசியம், வலிமையான நாடு ஆகிய கொள்கைகளையுடைய வலதுசாரிப் பிரிவினர், பொதுவுடைமைக் கோட்பாடுகள் மற்றும் சமூகப் பொருளாதார மாற்றங்கள் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டிருந்த இடதுசாரிப்

பிரிவினர் என்ற இரு சாரார் அக்கட்சிக்குள் இருந்தார்கள். அவர்கள் கட்சிக்குள்ளிருந்தே கட்சியின் வளர்ச்சிக்குத் தடையாயிருந்து வந்த புற்றுநோயாகச் செயல்பட்ட போது அவர்களில் ஒரு பிரிவினர் கான்டனிலிருந்து ஷாங்காய்க்குச் சென்று 'வெண்கொமின்டாங்' (White Kuomintang) என்ற அமைப்பினை உருவாக்கினார்கள்.

இந்நிலையில் கொமின்டாங் கட்சியின் வளர்ச்சி கண்டு பொறாமை கொண்ட படைமானிய பிரபுக்கள், ஆதிக்கப்பிரிவினர் ஆகியோர் இணைந்து செயல்படலாயினர். கான்டனில் பிறநாட்டவரின் ஆதரவுடன் போட்டி அரசு ஒன்றினை அவர்கள் அமைத்தனர். ஆனால் சன்யாட் சென்னின் பெருமை, மதிப்பு காரணமாக 1924-லிலேயே பீகிங்கில் ட்செளகூன் என்னும் போர் பிரபுக்களின் தலைவர் பதவிநீக்கம் செய்யப்பட்டார். அதன் பின்பு பீகிங் சென்று கட்சியினைக் கட்டுபடுத்தி வலிமை உடையதாக அவர் வைத்திருந்தார். இருப்பினும் கொமின்டாங் கட்சியின் தலைமைத் தளபதியான சன்யாட்சென் 1925-ஆம் ஆண்டு மார்ச் 12-ஆம் நாள் காலமான போது கட்சியை நடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பு பொரோடின், வாங்ஷிங் வெய், சியாங்கே ஷேக் ஆகியோரிடம் விடப்பட்டது.

**டாக்டர் சென்னின் இறப்பு**

1925-ஆம் ஆண்டு டாக்டர் சென் இறந்து போனார். அவர் இழப்பு பேரிழப்பாகும். அதன் பின் இரண்டு ஆண்டுகளில் பேராதிக்க பேராபத்தும், நாட்டை ஐக்கியப்படுத்த ஏற்பட்ட ராணுவ நடவடிக்கைகளையும் கோமின்டாங்கை ஒன்றுபடுத்தின. பொதுவுடைமைக் கட்சி, தான் பெற்றிருந்த சிறந்த நிர்வாகத்திலும் வலிமையான பிரச்சார இயந்நதிரத்தாலும் செல்வாக்கு பெற்று விளங்கியது.

**சியாங் கே ஷேக்**

டாக்டர் சென் இறந்த பிறகு கோமின்டாங் கட்சியினை மூவர் நடத்தி வந்தனர். அவர்களில் வாங் சிங் - வெய் என்பவர் இடது சாரிகளின் தலைவராவார். போரோடின் என்பவர் ரஷ்ய ஆலோசகராவார். அவர் கட்சியின் தலைவராவார். மூவரில் இளைஞரான சியாங் மிகவும் திறமையான இராணுவத்தலைவரானார்.

**சீனாவை ஐக்கியப்படுத்துதல்**

சோவியத் ரஷ்யாவிலிருந்து திரும்பியது சியாங் கே-ஷேக் வாம்போவா இராணுவக் கழகத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். அக்கழகம் கோமின்டாங் கட்சியின் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்து வந்தது. டாக்டர் சென் இறந்தவுடன் கோமின் டாங் கட்சியின் தானைத் தளபதியாக சியாங் பொறுப்பேற்றார். சியாங் ஒரு மிதவாதி, அவர் எப்போதும் தீவிரக் கொள்கையில் நாட்டம் கொண்டவர் இல்லை. கட்சியில் முன்னிலைக்கு வரும் அளவுக்கு நல்ல திறமையினை பெற்றிருந்தார்.

1915-ஆம் ஆண்டு அவர் குவாங்டுங், குவாங்சி ஆகிய இரு பகுதிகளையும் கோமின்டாங் கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். 1926-ஆம் ஆண்டில் சியாங் யாங்டிசி பள்ளத்தாக்கின் இராணுவ தளபதிகளை முறியடித்து சிறப்புமிகு வெற்றி கண்டார். நாட்டில் ஐக்கியம் சியாங்கினால் இரண்டு கட்டங்களில் அடைய நேர்ந்தது. முதலாவது கட்டத்தில் தேசியப்படை ஹான்கௌ நகரைக் கைப்பற்றியது. தேசியவாதிகளின் தலைநகரமானது காண்டனிலிருந்து அங்கு மாற்றப்பட்டது. இரண்டாவது கட்டத்தில் தேசிய படையானது 1928-ஆம் ஆண்டில் ஜூன் மாதம் நுழைந்தது.

**பொதுவுடைமைவாதிகளின் செல்வாக்கு வளர்தல்**

இதற்கிடையில் கோமின்டாங் இரண்டு பிரிவாக பிரிந்தது. அப்படிப் பிரிந்தவர்கள் வலதுசாரிகள், பொதுவுடைமைவாதிகள் எனப்பட்டனர். இது சீன வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். பொதுவுடைமைவாதிகளின் கிளர்ச்சி பிரபுக்களுக்கு எதிராக குடியானவர்களைத் தூண்டிவிட்டது. தொழிற்சங்கங்களில் பொதுவுடைமைவாதிகளின் கை ஓங்கியிருந்தது. அவர்கள் முதலாளித்துவத்தைச் சாடினர். முதலாளித்துவப்பிரபுக்களும் செல்வந்தர்களான நடுத்தரவர்க்கத்தினரும் இதைக்கண்டு அச்சமுற்று அவர்களை தடுக்க முற்பட்டனர். அவர்கள் சியாங்கை மலை போல் நம்பினர். ஆவரிடம் ராணுவ அதிகாரம் இருந்தது. எனவே தீவிரவாதிகளை அவரால் அடக்க முடியும் என்று அவர்கள் எண்ணினர். முதலாளிகளும், பிரபுக்களும் சியாங்கை நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டனர். சீனப்புரட்சியின் முதன்மையான தலைவனாக ஆகலாம் என்ற பேரவாவில் அவர் இடது சாரிகளை ஒடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

**ஆதிக்கப் போட்டியில் சியாங்கின் வெற்றி**

1927-ல் கட்சியில் இறுதிப்பிளவு ஏற்பட்டது. கோமின்டாங்கின் இடதுசாரிகளும், பொதுவுடமைவாதிகளும் சீன தேசியவாதிகளின் புரட்சியை சமூகப்புரட்சிக்கு அழைத்துச் சென்றனர். பொதுவுடமைவாதிகளின் மிகத் தீவிரப் பிரச்சாரமானது நாடெங்கிலும் வேலைநிறுத்தம், கலகம் ஆகியவற்றை தோற்றுவித்தது. அவர்கள் சியாங்கிற்கு ஷாங்காய் நகரின் பெரும் செல்வந்தர்களின் துணை கிட்டியது.

இதற்கிடையில் இடதுசாரிகளின் தலைவர் வாங்கிற்கும், பொதுவுடைமைவாதிகளுக்கும் சண்டை ஏற்பட்டது. கோமின்டாங்கை

பொதுவுடைமை வாதிகள் கைப்பற்ற முயற்சிக்கிறார்கள் என்று அறிந்த வாங் அவர்களை வாகான் என்ற இடத்திலிருந்து வெளியேற்றலானார். வாங் சியாங்குடன் சேர்ந்து கொண்டு பணியாற்றியதால், சியாங் 1928-ல் கோமிடாங்கின் தலைவரானார்.

1928-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் சியாங் தன்னுடைய வடமுனைப் படையெடுப்பை முடிப்பதில் முனைந்து நின்றார். சியாங்கின் தலைமையிலான தேசியப்படை பீகிங்கைக் கைப்பற்றியது. ஒரு புதிரான வெடிகுண்டு விபத்தில் கொல்லப்பட்டார். அவர் இறந்தபின் அவரது மகன் (மூன்று கிழக்கு மாநிலங்களை ஆண்டு வந்தவர்) ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு கோமின்டாங் கொடியை ஏற்றுக்கொண்டார். இவ்வாறு சீனாவானது சியாங்கே ஷேக்கின் ராணுவ நடவடிக்கை மூலம் ஒன்றுபடுத்தப்பட்டது.

**நான்கின் அரசாங்கம்**

சியாங்கே ஷேக் நான்கிங்கை தமது கோமின்டாங் அரசின் தலைநகராகக் கொண்டார். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட பன்னிரெண்டு மேலைநாடுகள் நான்கிங் அரசாங்கத்தை அங்கீகரித்தன. அந்தப் புதிய குடியரசானது டாக்டர் சென்னின் முதலாவது கோட்பாடான தேசியம் என்பதை அடைவதில் வெற்றி பெற்றது. இரண்டாவது கொள்கையை உடனடியாகச் செயல்படுத்துவதாக கோமின்டாங்கட்சி அறிவித்தது. அக்கொள்கை தான் மக்களாட்சியாகும். மக்கள் நலம் பேணுதல் என்ற மூன்றாவது கொள்கையை அதற்குப்பின் அமல் செய்வதாக அறிவித்தது.

**கோமின்டாங்கிற்கும் பொதுவுடைமைவாதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட போராட்டம்**

தளபதிகளின் ஆட்சி ஆரம்பித்ததிலிருந்து வேறு எந்த அரசாங்கமும் நான்கிங் அரசாங்கத்தைப் போல் சீனாவின் பெரும் பகுதிகளை தன்கீழ் கொண்டு வரவில்லை எனலாம். காப்புவரியில் தன்னாதிக்க மீட்சி, விசேஷ பிரதேச உரிமைகளை ஒழித்தல் ஆகியவற்றை பெற்றதன் விளைவாக தேசியப் பெருமை பெருகியது.

உட்பகுதிகளில் பொதுவுடைமையினர் வலிவோடும் பொலிவோடும் விளங்கினார்கள். யாங்டிசிக்குத் தெற்கே மத்திய சியாங்சியில் மாவோவின் தலைமையில் சோவியத் குடியரசை நிறுவ அவர்கள் முற்பட்டனர். அறிவாளிகளும், குடியானவர்களும் அவர் பக்கம் அலையென திரண்டுவந்தனர். பொதுவுடைமைவாதிகள் உயர்ந்த ஊதியம் பெறவும் தங்கள் பணி நிலையினை சீராக்கி கொள்ள பலவும் பல சங்கங்களை நிறுவினர்.

அவர்கள் பெரும் நிலப்பரப்புகளைப் பறிமுதல் செய்து நிலமற்றவர்களுக்கு பகிர்ந்து அளித்தனர். அவர்களது கட்டுப்பாட்டுக்குள் இருந்த இடங்களில் நிலவரி குறைந்தது. கூட்டுப்பண்ணை முறையைப் புகுத்தினர். இந்த நல்ல சீர்திருத்தங்கள் பொதுவுடமைவாதிகளின் செல்வாக்கை மேன்மேலும் வளர்த்தன.

**நீண்ட நடைப்பயணம்**

சீனப் பொதுவுடைமையினை முறியடிக்க, கோமின்டாங் படை அவர்களின் மைய இடமான சியாங்சியைத் தாக்கியது. பொதுவுடமைவாதிகள் தோற்கடிக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்டனர். இது தான நீண்ட நடைப்பயணத்தின் தொடக்கமாகும். தங்களைச் சூழ்ந்து கொண்டிருந்த கோமின்டாங்கின்

படைகளை எதிர்த்துப் போராடி ஏறக்குறைய 6000 மைல்கள் சீன தென்மேற்குப் பகுதியில் பல இடர்பாடுகளுக்கு இடையில் பல இடங்களில் சண்டையிட்டு அவர்கள் பின்னோக்கி சென்றனர். இறுதியாக அவர்களில் சொல்லொணாத் துன்பங்களுக்கு உள்ளாகிப் பிழைத்த 20,000 பேர் மாவோவின் தலைமையில் 1935-ல் ஷென்சியின் வடபகுதியில் வந்து சேர்ந்தனர். அங்கு அவர்கள் தங்கள் நிலையினை வலிமைப்படுத்திக் கொண்டு நெருங்கி வந்த ஜப்பானிய ஆபத்தையும் முறியடிக்க முற்பட்டனர். நீண்ட நடைப்பயணம் உண்மையிலேயே ஒரு மாபெரும் சாதனையாகும். அதற்கு மாவோவின் தலைமையே காரணம் ஆகும். சியாங் செஞ்சேனையை அழிப்பதில் தோல்வியே கண்டார். இதுவே அவர் நிலைமையை சீர்குலையச் செய்தது.

**ஜப்பானிய ஆக்கிரமிப்பு**

சீனாவில் வலுவான அரசாங்கம் ஏற்படுவதை ஜப்பான் விரும்பவில்லை. அவ்வாறு ஏற்பட்டால் தன் பொருளாதாரத்திற்கு அது தீங்காக முடியும் என எண்ணியது. தன் பொருளாதார ஆதிக்கத்தைக் காத்துக்கொள்ள ஜப்பான் 1931-ல் மஞ்சூரியாவைக் கைப்பற்றியது. அதற்குப் பின் அது சீனாவின் வடகிழக்குப் பகுதிகளைப் பிடிக்கப்போவாதாக பயமுறுத்தியது. இச்சூழ்நிலையில் சியாங் முன்னெச்சரிக்கையாக செயல்படலானார். ஜப்பானுடன் மோத கோமின்டாங் விரும்பவில்லை. ஆகவே அவர் 1933-ஆம் ஆண்டு மே மாதம் தோங்கு ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்படி போர் நிறுத்தம் ஏற்பட்டது. சீனப்பெருஞ்சுவர் வரை விலகிப் போவதாக ஜப்பானிய துருப்புகள் ஒப்புக்கொண்டன. இந்த சமரசக் கொள்கையானது சீன தேசியவாதிகளுக்கு பிடிக்கவில்லை.

**அரசியல் ஐக்கியத்திற்கான முயற்சி – சியான நிகழ்ச்சி**

சீனப்பொதுவுடைமையினர் ஜப்பானை தந்திரமான முறையில் 1932-ல் தாக்க முற்பட்டனர். அந்தச் சமயத்தில் சியாங் பொதுவுடைமையினரை நசுக்க முற்பட்டார். ஜப்பானை முறியடிக்க வேண்டி இருப்பதால் உள்நாட்டுப் போரைத் தவிர்த்து பொதுவுடைமையினரை அடக்குவதை நிறுத்தக் கோரினர். சியாங் அவர்களது கோரிக்கையை ஏற்கவில்லை. அத்துடன் தேசியவாதிகள் நாட்டின் பாதுகாப்பிற்காக கொண்டு வந்த கருத்தினையும் ஒதுக்கித் தள்ளினார். வெளிப்படையான தந்தி, கடிதம் ஆகியவற்றின் மூலம் செங்காவலர்கள், நாட்டின் தந்தி, கடிதம் ஆகியவற்றின் மூலம் செங்காவலர்கள், நாட்டின் பாதுகாப்பை வலியுறுத்தினர். அவர்களது பிரச்சாரத்தை உதறித் தள்ளி விட்டு சியாங் அவர்களை நசுக்கும் பொருட்டு சியான் என்ற இடத்திற்குச் சென்று ஷென்சியிலுள்ள அவர்களது பகுதிகளை அழிக்க முற்பட்டார்.

1936-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அன்று சியாங், சியான் என்ற இடத்தில் தன் நாட்டு மக்களால் பிடிபட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவர்கள் அவரை பொதுவுடமையினரின் நாட்டுப் பாதுகாப்பிற்கான கருத்தை ஏற்றுக் கொள்ளும்படியும், ஜப்பானை முறியடிக்க ஒன்று சேர வேண்டும் என்பதை ஒத்துக்கொள்ளும் படியும் வற்புறுத்தினர். சியாங்கின் உயிர் ஆபத்தில் இருந்தது. மா-சே-துங் சமூகமான பேச்சில் ஈடுபட சூ என் லாய் என்பவரை சியானுக்கு அனுப்பினார். ஓர் ஒப்பந்தமானது கொண்டு வரப்பட்டது. அதன்படி மாவோவின் பொதுவுடைமைப் படைகள் தேசிய அரசாங்கததின் கீழ்க்கொண்டு வர ஒப்புக் கொள்ளப்பட்டது.

வன்முறையில் தற்போதுள்ள அரசாங்கத்தை வீழ்த்தி சோவியத் பாணியிலான அரசாங்கத்தை ஏற்படுத்துவதையும் அவர்கள் கைவிட்டு விட்டதாக

அறிவித்தனர். 1936-ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் நாளன்று சியாங் விடுவிக்கப்பட்டார். நான்கிங் அரசாங்கம் ஜப்பானை முறியடிக்க முழு முயற்சியினை எடுத்துக் கொண்டது. அத்துடன் அது சமூக, பொருளாதார சீர்திருத்தங்களையும் மக்களாட்சியினையும் அளிப்பதாக வாக்குறுதி அளித்தது.

பொதுவுடைமைவாதிகளுக்கும், சியாங்கிற்கும் ஏற்பட்ட இந்த ஒப்பந்தத்தை சீனர்கள் வரவேற்றனர். இந்த இரண்டு கட்சிகளும் மீண்டும் இணைந்தன. ஆனால் அந்த ஐக்கியம் இரண்டே ஆண்டுகள் தான் நீடித்தது. அப்போது 1937-ல் ஏற்பட்ட சீன ஜப்பானிய போரில் நன்கு எதிர்த்து நிற்க முடிந்தது.

**1937- 45 வரையிலும் நடைபெற்ற சீன-ஜப்பானியப் போர்**

கோமின்டாங்- பொதுவுடைமைவாதிகளின் கூட்டால் ஜப்பானுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. அந்த ஐக்கியத்தினை முறியடிக்க அது முற்பட்டது. பொதுவுடைமையிலிருந்து விடுபட ஜப்பான் சியாங்கிற்கு உதவ முன்வந்தது. ஆனால் சியாங் தன் நாட்டுப்பற்றுக்கும், நாட்டிற்கும் குந்தகம் ஏற்படாமல் உண்மையாக நடந்து கொண்டார். ஆகவே ஜப்பானியப் படையெடுப்பாளர்களை கடுமையாகத் தாக்கினார். ஜப்பானியர்கள் வேகமாக முன்னேறி பல நகரங்களையும், சீனாவில் பெரும்பகுதிகளையும் கைப்பற்றினர். தலைநகரம் வீழ்ந்தது. அரசாங்கம் சுங்கிற்குப் பின் வாங்கியது. போரின் போது அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளிடமிருந்து சீனா தாராள உதவியினைப் பெற்றது. ஜப்பானுடனான இந்த போர் இரண்டாம் உலகப்போருடன் இரண்டறக் கலந்துவிட்டது.

**கோமின்டாங்கின் வீழ்ச்சி**

கோமின்டாங் அரசாங்கம் ஜப்பானை எதிர்த்து திறம்படச் செயல்பட்டது. நாட்டின் புணரமைப்புக்கும் அது மிகவும் பாடுபட்டது. போரின் துவக்கத்தில்

சில சீர்த்திருத்தங்களைச் செய்ததோடு கோமின்டாங் கட்சியின் அரசாங்கம் வலிமைக் குன்றிக் காணப்பட்டது. திறமையற்று காணப்பட்டது. ஊழல் மலிந்து காணப்பட்டது. ஆங்கிலேய அமெரிக்க உதவியைச் சார்ந்திருந்தது. ஏகாதிபத்தியவாதிகளின் கைப்பாவையாக சியாங் மாறிவிட்டார் என்று பொதுவுடைமைவாதிகள் பிரச்சாரம் செய்ய இது பயன்பட்டது. தகுந்த நேரத்தில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளாததால் கோமின்டாங் பேராதரவு தேடிக் கொள்ளத் தவறிவிட்டது. இராணுவ நடவடிக்கைகளாலும், அடக்கு முறைகளாலும் தன் காலத்தைக் கழித்தது. அலுவலகங்களினல் புரையோடிக் கொண்டிருந்த ஊழலை அறவே ஒழிக்க முடியவில்லை. இவைகள் எல்லாம் அதன் பெருமைக்கு சிறுமை தந்தன. இறுதியாக ஜப்பான் நேசநாடுகளால் தோற்கடிக்கப்பட்டாலும் போருக்குப் பின் கோமின்டாங் சிதறி, சின்னாபின்னமாகி காணப்பட்டது.

# அலகு– 5

## சியாங் கே ஷேக்

சீன வரலாற்றில் சிறப்பானவர்களெனக் கருதப்படுபவர்களுள் ஒருவரான சியாங்கே ஷேக் 1887-ஆம் ஆண்டு அக்டோபர் 31-ஆம் நாள் செக்கியாங் மாநிலத்திலுள்ள பெங்ஹீவா என்ற கிராமத்தில் ஒரு எளிய குடும்பத்தில் பிறந்தார். தன்னுடைய ஒன்பதாவது வயதில் தந்தையை இழந்துவிடட சியாங் தனது தாயின் அரவணைப்பில் வளர்ந்தார். ‘என்னுடைய தாயின் அன்பு மற்றும் சகிப்புத்தன்மை ஆகிய பண்புகளாலேயே எனது குடும்பம் முற்றிலும் அழியாது காக்கப்பட்டது’ என்று அவரே புகழ்ந்துரைக்குமளவிற்குத் தன் தாயிடம் அன்பு கொண்டிருந்தார். சீனா பலவகையான சிக்கல்களால் சிதறுமளவிற்குத் தாக்குண்டிருந்த போது அவருடைய வாழ்வு வறுமையினால் வாடிக் கொண்டிருந்தது.

## ராணுவக் கல்வி

சீனாவைச் செம்மைப்படுத்திச் சீராக்கக் கூடியவரென அவரால் நம்பப்பட்ட டாக்டர் சன்யாட்சென்னின் கோட்பாடுகளால் பெரிதும் கவரப்பட்டார். நாட்டுத்தொண்டில் நாட்டம் கொண்டிருந்த சியாங் தன்னுடைய ஆரம்பகாலக் கல்வி முடித்ததும், பாவோடிங் என்ற இடத்தில் உருவாக்கப்பட்டிருந்த இராணுவப் பள்ளியில் சேர்ந்து பயிற்சி பெற்றார். தான் ஓர் போர் வீரராக மாறி நாட்டினைக் காக்க வேண்டுமென்ற பெரு விருப்பங்கொண்டிருந்த அவர் யுவான் ஷிகேயுடன் 1907-ஆம் ஆண்டில் தன்னுடைய ராணுவக் கல்வியறிவைப் பெருக்கிக் கொள்ளும் நோக்கோடு ஜப்பானுக்குச் சென்றார். படைப்பயிற்சிக் கல்லூாயீல்

பயிலும் போது டாக்டர் சன் யாட் சென்னின் நட்பு அவருக்குக் கிடைத்தது. அதனால் அவரது உள்ளத்தில் தேசியக்கலை கொளுந்து விட்டு எரியலாயிற்று.

## தேசப்பற்று

அந்நிய ஆட்சியாளர்களான மஞ்சுக்களின் கட்டுப்பாடுகளிலிருந்து சீனாவை விடுவித்து மக்கள் மனத்தில் தேசிய வித்தினை ஊன்றி தேசிய அரசினை நிறுவ வேண்டுமென்ற தணியாத வேட்கையுடையவராயிருந்த அவர் 1911-ல் புரட்சிப் படையில் சேர்ந்தார். 1913-ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஷாங்ஹாயிலிருந்த டாக்டர் சன்யாட்சென்னின் கீழ் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றார். கருத்துக் கருவூலமாய் நாட்டுப்பற்றில் சிகரமெனத் திகழ்ந்த சென்னுடன் சியாங் கொண்டிருந்த தொடர்பு காரணமாக அவருடைய நோக்கங்களைச் சிறப்பாகச் செயல்படுத்த வாய்ப்புகள் கிட்டின. ஆயினும் 1921 வரை சீனாவின் அரசியல் தன்மைகளின் விளைவாக சியாங் அரசியலிருந்து விலகி வர்த்தகத்தில் ஈடுபட்டார்.

## கோமின்டாங் கட்சியின் தலைவராக சியாங்

இருப்பினும் 19020-ல் கொமின்டாங் கட்சியின் வளர்ச்சி மீண்டும் தொடங்கிய போது சியாங்கே ஷேக் டாக்டர் சென்னின் நம்பிக்கைக்குப் பாத்திரமான வலதுகரமென விளங்கினார். 1923-ல் டாக்டர் சொன்னால் மாஸ்கோவுக்கு அனுப்பப்பட்டார். அங்கு ட்ராட்ஸ்கியின் அரசியல் கோட்பாடுகளால் கவரப்பட்ட அவர் படைப்பயிற்சியும் பெற்றார். ரஷ்யாவின் படையமைப்பு முறைகளைத் தெரிந்து கொண்டு படைப் பயிற்சி பெற்றுத் திரும்பிய அவர் 1924-ல் வாம்போ என்னுமிடத்தில் உருவாக்கப்பட்டிருந்த படைப் பயிற்சிக் கழகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

## கோமின்டாங் படைத்தளபதியாக சியாங்

1925-ல் டாக்டர் சென் மரணமடைந்த போது அவருடைய அரசியல் வாரிசான சியாங் கொமின்டாங் படையின் தளபதியானார். ஒற்றுமை, ஒருமைப்பாட்டுணர்வு ஆகியவற்றில் அசையாப் பற்றுறுதிக் கொண்டிருந்த அவர் கடுமை மிக்க பணியான வடசீன தென்சீன மாநிலங்களின் இணைப்பினைச் செயல்படுத்த விழைந்தார்.

## கோமின்டாங் கட்சியைப் பயப்படுத்துதல்

தன்னுடைய தனித்த ஆற்றலால் சுமார் 60,000 பேர்களடங்கிய பெரும் படையொன்றினை உருவாக்கி 1925-ஆம் ஆண்டு இறுதிக்குள்ளாகவே யிவாங்டுங், ஹிவாங்ஷி ஆகிய வட மாநிலங்களைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார். தொடர்ந்து ஹீனுலிருந்து யாங்ட்ஸி நதி வழியாக முன்னேறி 1926-ல் யாங்ட்ஸி பள்ளத்தாக்கு முழுவதையும் கொமின்டாங் ஆதிக்கத்திற்குட்படுத்தினார். இந்நிலையில் கொமின்டாங் கட்சிக்குள் வலது சாரி, இடது சாரி பிரிவினர்களிடையே பிளவுகள் தோன்றின. 1927-ல் சியாங்கே ஷேக்கின கை ஓங்கியது. ஷாங் ஹாய், நான்கிங் ஆகிய பகுதிகள் அவர் கீழ் வந்தன. பொதுவுடமைப் பற்றாளர்களான இடதுசாரிப் பிரிவினர் ஒடுக்கப்பட்டனர். கட்சிக் கட்டுப்பாடுகள் நிலைநாட்டப்பட்டன. நான்கிங் தேசியவாதிகளின் தலைமை இடமாக்கப்பட்டது. 1927-ல் அவர் டாக்டர் சன்யாட்சென்னின் மைத்துனியைத் திருமணம் செய்து கொண்டார். தனது கட்சிப் பதவியை விட்டு விலகினார்.

## சீனாவை தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருதல்

1927-ஆம் ஆண்டில் மீண்டும் கொமின்டாங் கட்சியில் கடும் பிளவுகள் தோன்றின. பொதுவுடைமைப் பிரிவினர் தம்முடைய கடுமையான பிரச்சாரங்கள்

தேசியவாதிகளை எதிர்த்தனர். வேலை நிறுத்தங்கள், கிளர்ச்சிகள் தொடர்ந்தன. இந்நிலையில் இடதுசாரிப் பிரிவினருக்கிடையிலேயே கருத்து வேறுபாடுகள் தோன்றியபோது சியாங் அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை. 1927 நவம்பர், டிசம்பர் மாதங்களில் இடதுசாரிப் பிரிவினருக்கிடையிலான சிக்கல்களால் தன்னுடைய வனவாசத்தைத் துறந்து மீண்டும் அரசியலில் புகுந்தார். கொமின்டாங் படைத் தளபதியானார். அவ்வாண்டிலேயே ஹாங்கௌ கொமின்டாங் வசமாயிற்று. அப்போது பொதுவுடமையாளர்களும் இடதுசாரிப் பிரிவினரும் மேலும் வலுப்பெறத் தலைப்பட்டனர்.

ஆனால் வங்கி உடமையாளர்கள், வணிகர்கள் ஆகியோர் இடது சாரிப் பிரிவினர் மீது கொண்டிருந்த வெறுப்பு காரணமாக ஜப்பான் சியாங்கே ஷேக்கிற்கு மறைமுகமாக உதவி செய்தது. கடும் முயற்சிகளுக்குப் பின் 1928 ஜூன் மாதத்தில், பீகிங், கொமின்டாங் படையினர் வசமாயிற்று. சீனா சியாங்கின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. நான்கிங் சீனாவின் தலைநகரென அறிவிக்கப்பட்டது.

## சியாங் தலைமையில் நான்கிங் அரசு

1928-ல் நான்கிங் சீனாவின் தலை நகரானதும் சியாங்கே ஷெக் சீன அரசில் பல மாறுதல்களை உருவாக்கத் தலைப்பட்டார். கொமின்டாங் கட்சியின் மத்தியக்குழு கூடி கீழ்கண்ட கருத்துக்களின் அடிப்படையில் அரசு அமைய வேண்டுமெனத் தீர்மானித்தது.

1. கொமின்டாங் கட்சி மட்டுமே ஆட்சியின் முழுப்பொறுப்பினை ஏற்க வேண்டும்.

2. கொமின்டாங் கட்சியின் நிர்வாகக் குழுவினரை உள்ளடக்கிய மத்திய அரசியல் குழு அமைக்கப்பட்டு அவ்வமைப்பே கட்சியோடு அரசின் நிர்வாகத்தையும் நடத்திச் செல்ல வேண்டும்.
3. மத்திய அரசியல் மற்றும் ஆட்சிக்குழு தலைவர் அரசின் தலைவராகச் செயல்பட வேண்டும்.
4. ஆட்சிமுறையானது யுவான் (Yuvan) என்பட்ட துறை (Department)கள் மூலம் நடத்திச் செல்லப்படும். நிர்வாகம், சட்டயமியற்றல், நீதி, தேர்வுகள் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கென ஐந்து துறைகள் அமைக்கப்பட வேண்டும்.
5. மாநிலங்கள், மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட தலைவர்களின் கீழ் இயங்கக்கூடிய மாநிலக் குழுக்களால் ஆட்சி செய்யப்பட வேண்டும்.

**1931-ம் வருட அரசியலமைப்பு**

மேற்கூறப்பட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் தேசிய மக்கள் குழு புதிய அரசியலமைப்பு ஒன்றினை உருவாக்கியது. அவ்வரசியலமைப்பில் ஆட்சிமுறைக் கோட்பாடுகள் தெளிவாக வரையறுக்கப்பட்டன. மத்திய மற்றும் மாநில அரசுகளின் பணிகள் விரிவாக்கப்பட்டன,

இப்புதிய அரசியலமைப்பின்படி மக்களின் இறைமையானது ஏற்கப்பட்டது. 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்ற கோட்பாடு உருவாக்கப்பட்டது. இனம், பால் மற்றும் சமயப்பாகுபாடுகள் இன்றி ஒருமைப்பாடுடையநிலை ஏற்பட வகை செய்யப்பட்டது. மக்களின் சொத்து உரிமை ஏற்கப்பட்டது. பல சிறப்பியல்புகளுடன் சீனாவின் ஒற்றுமையை உருவாக்க முற்பட்ட இவ்வரசியலமைப்பின் மக்களின் பிரதிநிதிகள் பற்றிய பேச்சு காணப்படவில்லை.

தேசிய ஒருமைப்பாட்டினை உருவாக்க வேண்டும் என்ற முக்கிய நோக்கம் காரணமாகப் பிரதிநிதித்துவ அமைப்பு பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்ககூடும்.

**உள்ளாட்சிச் சீர்திருத்தங்கள்**

அரசியலமைப்பில் அடிப்படைச் சீர்திருத்தங்கள் பல மேற்கொள்ளப்பட்ட பின்னர் நான்கிங் அரசினால் பல சீர்திருத்தங்கள் ஏற்கப்பட்டன.

**1. பொருளாதாரம்**

சீனப் பொருளாதாரத்தைச் சீராக்க வேண்டுமென்பதற்காக டி-உய்-சுங் (Ti-Wi-Shung) என்பவரைத் தலைவராகக் கொண்ட பொருளாதாரத்துறை உருவாக்கப்பட்டது. அரசின் செலவுகளைக் குறைப்பதற்கான வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டன. வெளிநாட்டவர்களின் செல்வாக்கைக் குறைத்து தேசிய வருவாயைப் பெருக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. வெளிநாட்டுப் பொருளாதார மேதைகளின் துணையுடன் சீனாவின் நாணயத் துறையைச் சீரமைப்பதற்காக ஒரு தனிப்பட்ட குழு அமைக்கப்பட்டது. சாதி, இன, சமயப் பாகுபாடுகள் களையப்பட்டு சொத்துரிமை மக்களுக்கு வழங்கப்பட்டது. இவ்வாறாகச் சீனப் பொருளாதாரம் சீராக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**2. பொதுப்பணிகள்**

நாட்டின் பலபாகங்களை இணைத்து ஒரு ஒருங்கிணைப்பைத் தோற்றுவிக்க இருப்புப்பாதைகள் அதிகரிக்கப்பட்டன. ஏற்கனவே உள்ள பாதைகளை விரிவாக்கம் செய்யவும். புதிய பாதைகளை அமைக்கவும் நடுவணரசுக்குக் கட்டுப்பட்டிருக்கக்கூடிய ஒரு தனி ரயில்வேத்துறை உருவாக்கப்பட்டது. அத்துறையானது சாலைகளை பராமரித்தல், புதிய சாலைகளை உருவாக்குதல் ஆகிய பணிகளையும் மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டது.

மக்களின் பொதுச்சுகாதாரத்தைப் பாதுகாக்கப் பல வழிகள் மேற்கொள்ளப்பட்டன. அபினி உண்ணுதல் தடுக்கப்பட்டது. ஆலைத் தொழிலாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட்டன.

**3. சட்டத்துறை**

சட்டத்துறையைச் சீர்படுத்த தனிப்பட்டதொரு குழு அமைக்கப்பட்டது. வழிவழியாக வந்த குற்றம் மற்றும் கொலை வழக்குச் சட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டன. மேற்கத்திய நாடுகளின் சட்டமுறைகள் மேற்கோள்களாகப் பின்பற்றப்பட்டன. சட்ட அமைப்பு முறைகள் மாற்றப்பட்டதுடன் நீதிமன்றங்களின் அமைப்பு முறைகளிலும் மாற்றங்கள் உண்டாக்கப்பட்டன. இவ்வாறு நீதித்துறை சிறப்புடன் இயங்க வகை செய்யப்பட்டது.

**சியாங்கும் பொதுவுடமையாளர்களும்**

தேசியச் சீர்திருத்தங்கள் கொமின்டாங் கட்சியையோ அல்லது சியாங்கோ ஷேக்கையோ காப்பாற்ற முடியவில்லை. உண்ண உணவின்றிப் பொருளாதாரச் சீர்கேடுகளால் நலிவுற்றுக் கிடந்த சீனர்கள் தம்முடைய பசியைக் களைவதைத்தான் பிரதான நோக்காகக் கொண்டனரேயன்றிச் சீர்திருத்தங்களுக்குச் செவிசாய்க்க முற்படவில்லை. இந்நிலையில் பொதுவுடமைத் தத்துவம் அவர்களை கவர்ந்ததில் வியப்பில்லை. இத்தகைய சிக்கல்களால் வலிமை பெற முடியாது. தவித்துக் கொண்டிருந்த சியாங்கே ஷேக். கொமின்டாங் கட்சியின் குறைபாடுகளாலும் துயரங்களுக்கு உள்ளாக்கப்பட்டார். கட்சியிலிருந்த இடதுசாரிப் பிரிவினர் தமது தலையாளர் மீது அதிருப்தி கொண்டனர். கொமின்டாங் பிரிவினர்களுக்கிடையில் காணப்பட்ட உட்பூசல்கள், வலுவின்மை ஆகியன ஷேக்கிற்கு எதிராகவே இருந்தன.

இந்நிலையில் மேலைநாட்டவரின் துணையுடன் பொதுவுடமைக் கட்சியை ஒடுக்க சியாங்கே ஷேக் விழைந்தார். 1930-க்கும் 1934-க்கும் இடைப்பட்ட காலத்தில் சுமார் ஆறு லட்சம் வீரர்கள் பொதுவுடமையாளருக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டனர்.

1934-ல் சியாங் 'புதுவாழ்வு இயக்கம்' (New Life Movement) என்னும் இயக்கத்தைத் தொடங்கினார். பொதுவுடமைப் பிரிவினரைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்ட அவ்வியக்கமானது சீனாவின் உள்நாட்டு முன்னேற்றம்,தேசியம், சமமான வாழ்க்கை ஆகிய கொள்கைகளைக் கொண்டிருந்தது. நாட்டு பற்றுக்காக உயிரையும் தியாகம் செய்யத்தயங்கலாகாது எனக் கூறிய அவர் தேசிய ஒருமைப்பாடு காக்கப்பட வேண்டுமென்பதையும் வலியுறுத்தினார். ஆனால் இத்தகைய முயற்சிகளால் அவரால் பொதுவுடமையினரைக் கட்டுப்படுத்தமுடியவில்லை.

**சியாங்கும் ஜப்பானும்**

பொதுவுடமையினரின் செல்வாக்கு உயர்ந்து கொண்டிருந்த அந்நேரத்தில் தான் ஜப்பான் 1931-ல் மஞ்சூரியாவைக் கட்டுப்படுத்தி வடகிழக்குச் சீனப்பகுதியில் தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநாட்ட முற்பட்டது. ஆனால் அப்போது ஜப்பானுடன் போரிட்டால் அது தற்கொலைக்கு ஒப்பாகும் என சியாங் கருதியதால் அமைதிக் கோட்பாட்டைப் பின்பற்ற விழைந்தார். 1933 மே மாதத்தில் ஜப்பானுடன் தாங்கூ போர் நிறுத்த ஒப்பந்தத்தை (Tangku Truce) சியாங் செய்து கொண்டார். சீனப் பெருஞ்சுவர் போர் ஓய்வு எல்லைக்கோடாக நிர்ணயிக்கப்பட்ட போதிலும் சியாங்கின் வலுவற்ற தன்மை ஜப்பானைத் தொடர்ந்து ஆக்கிரமிப்புக் கொள்கையைப் பின்பற்றச் செய்தது. அத்துடன்

சியாங்கே ஷேக் தனது ஆதரவாளர்களான லீ-டுங்-ஜென், பைசுங்-ஹஸி என்ற தளபதிகளின் சேவையை இழக்க வேண்டியவரானார்.

1932-ஆம் ஆண்டில் சியாங்கின் பொதுவுடமை எதிர்ப்புக் கொள்கையின் விளைவாகப் பொதுவுடமையினர் ஜப்பானுக்கு எதிராகப் பிரகடனம் செய்தனர். தமக்குள்ளிருக்கக்கூடிய கருத்து வேறுபாடுகளை எல்லாம் மறந்து பொது எதிரியை எதிர்க்குமாறு சியாங்கிற்கு பொதுவுடமையினர் வேண்டுகோள் விடுத்தனர். அதனைப் புறக்கணித்துவிட்டு சியாங் தன்னிச்சைப்படி செயல்படலானார்.

இதன் விளைவாக 1936-ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் நாள் பொதுவுடமைத் தளபதியான சுன்-மிங்-ஷோயூ என்பவரால் கைது செய்யப்பட்டார். அப்போதும் தலைமைப் பொறுப்பேற்று ஜப்பானுக்கெதிராகப் போராடும்படி வேண்டிக்கொள்ளப்பட்டார். அவர் மறுத்து விட்டார். மாசேதுங்கினால் அனுப்பப்பட்ட சூயென் லாய் என்பவருடன் பேச்சுவார்த்தை நடத்தும்படி சியாங் நகருக்கு சியாங்கே ஷேக் கொண்டுவரப்பட்டார். அங்கு அவரிடம் எட்டுக் கோரிக்கைகள் வழங்கப்பட்டு அவற்றை அவர் ஏற்காவிடின் உயிருக்கு ஆபத்து விளையுமென எச்சரிக்கப்பட்டார். கடுஞ்சோதனைகட்கு உள்ளான சியாங்கே ஷேக் அவற்றை நிராகரிக்க முடியாமல் ஏற்க வேண்டியவரானார். கீழ்காணும் எட்டுக் கோரிக்கைகளை அவர் ஏற்றுக் கொண்டார்.

1. அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய அரசு புதுப்பிக்கப்பட வேண்டும்.
2. உள்நாட்டுப் போருக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு அனைவரும் ஒன்று திரண்டு பொது எதிரியான ஜப்பானின் சீன ஆக்கிரமிப்பினைத் தடுக்க வேண்டும்.

3. கைது செய்யப்பட்டுள்ள பொதுவுடமையாளர்கள் விடுதலை பெற வேண்டும்.
4. அரசியல் கைதிகளனைவரையும் நிபந்தனைகளின்றி விடுதலை செய்தல்.
5. மக்களுக்கு அரசியல் உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.
6. மக்கள் சட்டமியற்ற உரிமைகளைப் பெற வேண்டும். அதாவது மக்கள் இறைமை ஏற்கப்பட வேண்டும்.
7. டாக்டர். சன்யாட் சென்னின் உயிலில் சொல்லப்பட்ட கருத்துக்கள் முழு உருவம் பெற்றனவாய் அமுலாக்கப்பட வேண்டும்.
8. தேசியவாதிகள் மாநாடு ஒன்று கூட்டப்பட வேண்டும்.

இத்தகைய கோரிக்கைகளை அவர் ஏற்றுக் கொண்டதால் 1936-ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் நாள் விடுதலை செய்யப்பட்டார். அவருக்கும் பொதுவுடமையினருக்கும் உடன்பாடு ஏற்பட்டது.

**சீனப் பொது உடமைக் கட்சி**

1917-ஆம் ஆண்டில் ரஷ்யாவில் ஏற்பட்ட போல்ஷ்விக் புரட்சி சீன அறிஞர்களைப் பெரிதும் பாதித்தது. 1918-ஆம் ஆண்டு பீகிங் பல்கலைக்கழக பேராசிரியர்களை விதவோ, சவோ, சென்துசியு ஆகியயோர் முதலில் மார்க்சீயக் கோட்பாட்டை ஆராயும் குழுவினை ஏற்படுத்தினர். இரண்டாண்டுகளுக்குப் பின் 1920-ஆம் ஆண்டில் செப்டம்பர் மாதம் சியு என்பவர் சோவியத் நமட்டின் செயல்களின் உதவியால் சீனப் பொதுவுடைமைக் கட்சியினை ஏற்படுத்தினார். மா. சேதுங், லி. சவோ சி, சு என்லாய், சு தே ஆகியோர் அக்கட்சியினை ஆரம்பித்தவர்களில் முக்கியமானவர்கள் ஆவார்கள்.

**தொடக்க கால வரலாறு**

தொழிலாளர் நல அரசை ஏற்படுத்துவதுதான் சீனப் பொதுவுடமைக் கட்சியின் முக்கிய நோக்கமாகும். இது ரஷ்யப் பொதுவுடைமைக் கட்சி மாஸ்கோவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது ரஷ்யர்களின் சொற்படி அக்கட்சி சீனாவிலிருந்த கோமின்டாங்கின் நட்புறவுடன் 1923 முதல் 1927 வரை இருந்து வந்தது. அப்போது அது தன் உறுப்பினர்களின் எண்ணிக்கையினை அதிகமாக்கிக் கொண்டு வலிவும், பொலிவும் பெற்று விளங்கியது. கட்சியை நன்கு வளர்த்துக் கொண்டது. செஞ்சேனையையும் அது ஏற்படுத்திக் கொண்டது. சியாங் கே ஷேக்கின் தேசியப் படைகள் திடீரென்று சீனப் பொதுவுடைமையினைத் தாக்கியதால் அக்கட்சியினருக்கும் கோமின்டாங் கட்சிக்கும் பிளவு ஏற்பட்டது.

**ரஷ்யப் பொதுவுடைமையினரின் ஆதிக்கம் 1921 – 1927**

1921 லிருந்து 1927 வரை சீனப் பொதுவுடைமையினரின் வளர்ச்சியில் ரஷ்யப் பொதுவுடைமையினரின் ஆதிக்கம் அதிகம் தலைகாட்டியது. அதற்கு ‘கோமின்டாங்’ செல்வாக்கு என்று பெயர். அதன் செயலரான வாதின்ஸ்கி சீனாவின் பொதுவுடைமைக்கட்சி தோன்றுவதற்கு சென்னுக்கு மிகவும் உதவி செய்தார். சோவியத் புரட்சிக்குப் பின் ரஷ்யா தனித்து விடப்பட்டது. அது மேலை நாட்டினரின் பேராதிக்கத்திற்கு அணி சேர்க்க விரும்பியது. அப்போது மேலை நாட்டவரின் எதிர்ப்பு உணர்ச்சி சீனாவில் மிகுந்து காணப்பட்டது. ஆகவே ரஷ்யார்கள் சீனப்பொதுவுடைமையினை கோமின்டாங்குடன் சேர்ந்து மேலை நாட்டவரை எதிர்க்கத் தூண்டியது.

**மாசேதுங்கின் எழுச்சி**

1927-ஆம் ஆண்டிலிருந்து 1930-ஆம் ஆண்டு வரை பொதுவுடைமைக் கட்சி பல கிளர்ச்சிகளில் ஈடுபட்டு தோல்வி கண்டது. 1927-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பொதுவுடைமைக் கட்சி ஒரு ராணுவப் புரட்சி ஒன்றை ஏற்படுத்தியது. அதைத் தொடர்ந்து ஹுனாவில் குடியானவர் புரட்சி ஒன்றும் ஏற்பட்டது. அது மா சே துங்கின் தலைமையில் நடைபெற்றது. அவைகள் தோல்வியில் முடிந்தன. மாசேதுங் கியாங்சிங்கிற்கு வந்து சேர்ந்தார். அங்கு சீன சோவியத்தை ஏற்படுத்தினார்.

சூ தேயின் உதவியால் கிபாங்சியில் செஞ்சேனை உருவாக்கப்பட்டது. அந்த கரடு, முரடான பகுதியிலிருந்து மிக உயர்ந்த கோமின்டாங்கின் படைகளை மாவோ எதிர்க்கலானார். 1934-ஆம் ஆண்டில் அவர் கியாங்சியிலிருந்து ஷென்சி வந்தடைந்தது வரை பல இன்னல்களையும், இடர்ப்பாடுகளையும் அடைந்தார். மா சே துங்கும் அவருடன் சேர்ந்த 70,000 ஆதரவாளர்களும் ஏறக்குறைய 6000 மைல்களை கடக்கும் வரை பல இடங்களில் போரிட்டு, தொல்லைகள் பல அடைந்து அங்கு வந்து சேர்ந்தனர். இந்த நிகழ்ச்சி தான் புகழ்பெற்ற ‘நீண்ட நடைப்பயணம்’ என்று அழைக்கப்படுகிறது. மா சேதுங் இவ்வாறாக கட்சியின் தலைமையிடத்தை ஷென்சிக்கு மாற்றினார். அப்போது அவர் கட்சியின் நிகரற்ற தலைவராக விளங்கினார்.

**பொதுவுடைமையினர் ஆட்சியின் ஆரம்பகாலம்**

நாட்டில் விடுதலைக்கு கோமின்டாங்குடன் பொதுவுடைமையினர் இணைந்து செயல்பட வேண்டும் என்ற ரஷ்யரின் சொற்படி அவர்கள் செயல்பட்டனர்.

1927-ஆம் ஆண்டில் பொதுவுடைமைக்கட்சியும் கோமின்டாங்கும் பிரிந்து நின்றன. கோமின்டாங் பொதுவுடைமைவாதிகளை நசுக்க முற்பட்டது. ஆகவே அவர்கள் யூனான், சியாங்கி ஆகிய மலைப்பகுதிகளில் தஞ்சம் புகுந்தனர். அங்கு அவர்கள் விவசாயக் கூட்டமைப்புகளை ஏற்படுத்தினர். பெரும் நிலச்சுவான்தாரர்களின் நிலங்களைப் பறிமுதல் செய்தனர்.

அவர்கள் அதைப் பகிர்ந்தளித்தனர். விலைகள் கட்டுப்படுத்தப் பட்டன. விலைகள் குறைக்கப்பட்டன. இராணுவத்திற்கு இளைஞர்கள் சேர்க்கப்பட்டனர். அவர்களைக் கொண்டு செஞ்சேவை உருவாக்கப்பட்டது. விடுதலை பெற்ற பகுதிகளில் சட்டமன்றங்களை ஏற்படுத்தினர். வாக்குமூலம் அதன் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் ஷென்சிக்கு வந்தடைந்தவுடன் சில சீர்திருத்தங்களை மேற்கொண்டனர். சீரான வரி விதிப்புக் கொள்கையைப் பின்பற்றினர்.

**புதிய மக்களாட்சிக் கோட்பாடு**

மா சேதுங் ஷென்சியன் போராட்டக்களத்திலிருந்து தன்னுடைய புதிய மக்களாட்சிக் கோட்பாட்டை உருவாக்கினார். சீனா முழுமையான சமதர்ம ஆட்சிக்குத் தயாராகவில்லை என்பதை மாவோ உணர்ந்தார். அரசுக்குச் சொந்தமான தனிப்பட்ட கூட்டுறவு முறையிலான நிறுவனங்கள் இணைந்த கலப்புப் பொருளாதாரத்தை அவர் வெளியிட்டார். அதாவது சொந்தமான தனிப்பட்ட கூட்டுறவு முறையிலான நிறுவனங்கள் இணைந்த கலப்புப் பொருளாதரத்தை அவர் வெளியிட்டார். அதாவது அதில் தொழிலாளர் குடியானவர்கள் நடுத்தர மக்கள் ஆகியோர் பங்கு பெறுதல் வேண்டும் என்றார். அதுவே புதிய மக்களாட்சிக் கோட்பாடாகும். நாளடைவில் நிலமானிய நடுத்தரவர்க்கக் கூறுகள் அகற்றப்பட்டுவிடும் என்றார்.

**ஜப்பானின் ஆக்கிரமிப்பு**

1931-ஆம் ஆண்டில் ஜப்பான், மஞ்சூரியா மீது படையெடுத்த போது சீனர்கள் ஜப்பானியர்களை வெறுத்தனர். ஆகவே இந்த ஜப்பானிய எதிர்ப்பு உணர்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டு சீனப் பொதுவுடைமையினர் 1932-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் அதன் மீது போர் தொடுத்தனர். அவர்கள் பல கூட்டங்களில் ஜப்பானிய எதிர்ப்பு உணர்வைத் தூண்டினர். நாடெங்கிலும் அவர்கள் மீதான வெறுப்பு பரவலாயிற்று. 'ஜப்பானியர்களுக்கெதிரான சீனர்களின் ஐக்கியம்' என்ற கோஷத்தை மாவோ எழுப்பினர். ஜப்பானியர்களை முறியடிக்க பொதுவுடைமையினர் கோமின்டாங்குடன் ஒத்துழைத்தனர். ஆகையால் சியாங் கே ஷேக் பொதுவுடைமைவாதிகளை நசுக்கிய பிறகே ஜப்பானை முறியடிக்க வேண்டுமென முடிவு செய்தார். சியானில் சிறை வைக்கப்பட்டு உயிருக்கு ஆபத்து வந்ததை உணர்ந்த பிறகே ஷேக் அவர்களது ஒத்துழைப்பை ஏற்றுக் கொண்டார்.

ஜப்பானியர்கள் பல இடங்களைப் பிடித்து முன்னேறிய போது கோமின்டாங் பொதுவுடைமை ஆகிய கட்சிகளின் படைகள் பின்தங்கியே இருந்தன. கொரில்லா தந்திரத்தைப் பின்பற்றிய பொதுவுடைமையினர் ஜப்பானியர்களுக்கு எல்லையில்லாத் தொல்லைகளைத் தந்தனர். அதன் மூலம் பல வெற்றிகளை எட்டினர். அப்போது தேசிய தேசிய கொரில்லாப் படையினரையும் தங்களுடன் அவர்கள் சேர்த்துக் கொண்டனர். ஜப்பானியர்கள் சரணடைந்த போது விடுதலை பெற்ற பகுதிகள் பொதுவுடைமையினர் வசம் வந்து சேர்ந்தது.

**செஞ்சேனையின் வளர்ச்சி**

சியாங்கின் ஆட்சியல் செஞ்சேனை நன்கு சீரமைப்படும் என்ற காரணத்தால் செஞ்சேனை தேசியப்படைகளுடன் ஒத்துழைத்தது. இத்தகைய உறவினா்களிடையே கூட அது தன் தனித்தன்மையினை நில நாட்டி வந்தது. சூதேவியின் தலைமையில் அடிப்படையினா் அரசியல் அறிவு பெற்றனா். நல்ல திறமையினையும் பெற்றனா். அப்படை மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை முறையே

1. ஒழுங்கான ராணுவம்
2. நன்கு பயிற்சி பெற்ற கொரில்லாப் படைகள்
3. விவசாயிகளின் ராணுவம்

ஆகும்.

**உள்நாட்டுப் போர்**

கோமின்டாங், பொதுவுடைமையினரின் கூட்டை சீனா்கள் வரவேற்றனா். ஆனால் அவா்களிடையே சந்தேகம் குடிகொண்டிருந்தது. மஞ்சூரியாவை வென்றபின் ஜப்பானியா்கள் 1937 ஆம் ஆண்டில் முழுமையான படையெடுப்பில் ஈடுபட்டனா். அனைத்து முக்கிய நகரங்களும், செய்தித் தொடா்பு நிலையங்களும் ஜப்பானியா்கள் முன் விழுந்தன. 1938-ஆம் ஆண்டில் சியாங்கின் தலைமையில் மக்களின் அரசியல் அவை நிறுவப்பட்டது. அதன்படி ஜப்பானியா்களை விரட்டுவது, தேசியச் சீரமைப்பு மேற்கொள்வது என்பது முடிவு செய்யப்பட்டது. பொதுவுடைமையினா் அந்த அவையை தங்களின் கட்சிப் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்துகின்றனா் என்று அவா்கள் அவரைக் குறை கூறினா். இவ்வாறு மாறி மாறிக் குறை கூறிக்கொண்டனா். 1939-இல் இரண்டு கட்சிகளுக்கும் இடையில் வெளிப்படையான மோதல் ஏற்பட்டது. 1941-ஆம்

ஆண்டு ஜனவரியில் திடீரென கோமின்டாங் கட்சியினர் தென்அன்வெயில் இருந்த பொதுவுடைமைக் கட்சியினரைத் தாக்கினர். அதில் 5000 செஞ்சீனர் படுகொலை செய்யப்பட்டனர். ஜப்பானின் தோல்வி தவிர்க்க முடியாது என்பதை உணர்ந்த இருதரப்பினரும் மோதிக் கொள்ளலானார்கள்.

**பயனற்ற அமெரிக்கத் தலையீடு**

பேர்ல் துறைமுக நிகழ்ச்சிக்குப் பின் அமெரிக்க பசிபிக்கில் போரிட்டுக் கொண்டிருந்தது. ஜப்பானுடன் சீனா போரில் ஈடுபட்ட போது அமெரிக்கா சீனாவிற்கு ஏராளமான உதவியினைச் செய்து வந்தது.

அமெரிக்க அதிபர் ட்ருமன் என்பவர் தளபதி மார்ஷலை சீனாவிற்கு சமரசம் செய்ய அனுப்பினார். மார்ஷல் இருதரப்பினரையும் பேச்சு வார்த்தைக்குக் கூட்டினாலும் பயனேதும் ஏற்படவில்லை. தேசியவாதிகள் எந்தவிதச் சலுகைகளையும் பொதுவுடைமையினருக்கு அளிக்க முன்வரவில்லை. கியாங்கிற்குத் தொடர்ந்து அமெரிக்க உதவி கிட்டும் என உறுதி அளிக்கப்பட்டது.

தொடர்ச்சியான அமெரிக்க உதவி பெற்றிருந்தும் தேசியவாதிகளால் வெற்றி காணமுடியவில்லை. பொதுவுடைமைவாதிகள் அவர்கள் எதிர்த்து உறுதியாக நிற்க முடிந்தது. இவ்வாறு மார்ஷலின் பணி தோல்வியில் முடிந்தது.

**பொதுவுடைமை கட்சியின் வெற்றி**

அமெரிக்க அணு குண்டுகள் வீசப்பட்டு ஹிரோஷிமா, நாகசாகி நகரங்கள் நாசமாக்கப்பட்ட பின் ஜப்பான் 1945-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் சரணடைந்தது. ஜப்பானால் விடப்பட்ட நிலப் பகுதிகளை எடுத்துக் கொள்வதில் தேசியவாதிகளும், பொதுவுடைமைவாதிகளும் போட்டி போட்டனர்.

மஞ்சூரியாவிலும், அவ்விரு தரப்பினருக்கும் பகைமை மூண்டது. போட்டியின் ஆரம்பகட்டத்தில் நன்கு பயிற்சி பெற்ற இராணுவ வீரர்களைப் பெற்றிருந்ததால் தேசியவாதிகள் பல வெற்றிகளைப் பெற்றனர். அவர்கள் வடமேற்கு சீனா, ஷென்சியிலுள்ள பொதுவுடைமையினர் தலைமையிலான யூனான் ஆகியவற்றைப் பிடித்துக் கொண்டனர்.

எனினும் பொதுவுடைமையனரின் ஒற்றுமை ஒழுங்கை அவர்களால் குலைக்க முடியவில்லை. நகரங்களிலிருந்து வெளியேறப்பட்ட அவர்கள் கிராமங்களில் பிடிப்பை ஏற்படுத்திக் கொண்டனர். அங்கெல்லாம் தேசியப்படைகளக்குத் தொல்லை கொடுக்கலானார்கள். அவர்களின் செய்திப் போக்குவரத்தைத் துண்டித்தனர். செஞ்சோலை அல்லது செம்படை தற்போது ‘மக்களின்படை’ என்று அழைக்கப்பட்டது. அது வலிவோடும் பொலிவோடும் போரிட்டது. அமெரிக்க உதவி கிட்டிய போதும்கூட அவர்களால் பொதுவுடைமையினரின் நிலையான ராணுவப் பிரிவுகள் பொதுவுடைமையினரின் முன் சரணடைந்தன.

**இரண்டாம் சீன-ஜப்பானியப் போர்**

1931-ஆம் ஆண்டில் ஜப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றிய பின் இரண்டு நாடுகளுக்கும் இடையில் பெரும் மோதல் ஏற்பட்டது. நன்கு சீரமைக்கப்பட்ட தலைவர்கள் இல்லாத சீனர்கள் அயல்நாட்டவரின் ஆக்கிரமிப்பை கடுமையாக எதிர்ப்பதில் முனைந்து நின்றனர். ஜப்பானிலும் ராணுவத்தளபதிகள் வெற்றி பெற்றனர். அதன் விளைவாக சீன ஜப்பானியப் போர் ஏற்பட்டது. 1941-ஆம் ஆண்டில் ஜப்பான் பெர்ல் துறைமுகத்தைத் தாக்கிய போது அப்போர் இரண்டாம் உலகப் போருடன் இடண்டறக் கலந்துவிட்டது. இப்போர் ஜப்பானியர்களால் ஒரு ‘நிகழ்ச்சி’ என்றே அழைக்கப்படுகிறது.

**காரணங்கள்**

**1. ஜப்பானிய மன்றோக் கொள்கை**

மஞ்சூரியாவைப் பிடித்து ‘மஞ்சுகோ’ என்ற பொம்மை அரசை நிறுவிய ஜப்பான் சிறுகச் சிறுக தனது ஆதிக்கத்தை வட சீனா முழுவதிலும் பரப்ப முயற்சித்தது. இதன் பின்னர், ஜப்பான் தன்னுடைய அயலுறவுக் கொள்கையை அறிவித்தது இக்கொள்கைதான் ‘ஜப்பானிய மன்றோ கொள்கை’ என்று குறிப்பிடப்படுகின்றது.

இக்கொள்கையின்படி தூரக்கிழக்கு நாடுகளில் அமைதி காப்பது ஜப்பானின் பொறுப்பாகும். அந்நிய நாடுகளின் ஆதிக்கத்திலிருந்து சீனாவை மீட்பதும், சீனாவின் அரசியல் ஒருமைப்பாட்டையும் பொருளாதார வளர்ச்சியையும் காப்பதும் தன்னுடைய தலையாய கடமையென ஜப்பான் அறிவித்தது. அதே போலக் கிழக்காசியப் பகுதிகளிலும் அமைதியைக் காக்கும் பொறுப்பும் ஜப்பானின் கடமை எனவும் அறிவித்தது. ஜப்பானுக்கு எதிராகச் சீனாவைத் தூண்டுகின்ற பணியிலோ மற்றும் கிழக்காசியப் பகுதிகளில் அமைதிக் குலைவு ஏற்படுத்த எந்த நாடுகள் முயன்றாலும், அதை ஜப்பான் கண்டிப்பாகத் தடுக்கும் என்றும் விளங்கியது. இக்கருத்துக்கள் பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குச் சிறப்பாக அறிவிக்கப்பட்டன.

**2. சீனாவின் மறுப்பு அறிக்கை**

இதற்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில் சீனாவும் ஓர் அறிக்கையை வெளியிட்டது. உலகின் எப்பகுதியிலும் அமைதி காக்கும் பணியை எந்த ஒரு நாடும் தன்னுடைய தனிப் பொறுப்பாக ஏற்றுக் கொள்ள முடியாது. சீனாவின் நட்புறவு நாடாகக் கருதும் எந்த நாடும் சீனாவின் வளர்ச்சியைக் கண்டு அச்சமடையத் தேவையில்லை என்பது போன்ற கருத்துக்களை வெளியிட்டுச்

சீனா தனது எதிர்ப்பை அறிவித்தது. ஜப்பானின் இத்தகைய கட்டுப்பாட்டுக் கொள்கையின் அடிப்படைக் காரணம், சீனாவின் வளர்ச்சியில் மேலை நாடுகள் பங்கேற்க முனைந்தது.

**3. சீன ராணுவ பெருக்கம்**

பன்னாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பொருளாதார நிபுணர் குழு, சீனாவின் பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்களை வகுத்துத் தர முன்வந்தது. அமெரிக்க நாடுகள் சீனாவின் விமானப்படை வளர்ச்சியிலும், விமானப் போக்குவரத்து வளர்ச்சியிலும் பெருமளவுக்கு உதவியது. இதன் பயனாகச் சீனாவின் ராணுவம் மேலைட்டு முறையில் புதுப்பிக்கப்பட்டது. சீனா முழுவதையும் தன்னாதிக்கத்தில் கொண்டு வர வேண்டும் என்ற கனவை நனவாக்க முயன்று கொண்டிருந்த ஜப்பான், மேலைநாட்டு உதவியுடன் வளர்ந்து வரும் சீனாவைக் கண்டு அஞ்சியதில் வியப்பில்லை.

**4. சீனா மீது ஜப்பான் விகித்த மூன்று கோரிக்கைகள்**

இந்நிலையிலும் தனது ஆதிக்க வளர்ச்சியின் மூலம் சீனாவை அடிபணிய வைக்கும் நோக்கத்துடன் ஜப்பான் சீனாவிற்கு மூன்று கோரிக்கைகளை அனுப்பியது. இதை ஹிரோதா என்ற முதலமைச்சர் வெளியிட்டதால் ஹிரோதாவின் மூன்று கொள்கைகள் (The Hirota – Three Point Policy, 1936) என்றும், சீனாவில் புதிய ஆதிக்கக் கொள்கைகள் (நேற முசனநச  ைஊாயைெ) என்றும் வரலாற்றில் இது இடம் பெறுகின்றது. இக்கொள்கைகளின்படி 1. சீனா, மஞ்சுகோ அரசை அங்கீகரித்து, அதன் வளர்ச்சிக்கு உதவ வேண்டும் 2. சீனாவின் வடபகுதியில் கம்யூனிஸ்டுகளை அழிக்கவும், மேலை நாடுகளின் செல்வாக்கினை அடியோடு நீக்கவும் ஜப்பான் தனது முழு ஒத்துழைப்பும் வழங்கும். 3. ஜப்பானின் பொருளாதாரக் கொள்கைகளின் அடிப்படையில்

ஜப்பான், மஞ்சுகோ, சீனா ஆகிய மூன்று நாடுகளும் வளர்ச்சியடைய வேண்டும். சீனாவின் கோமின்டாங் அரசு ஜப்பானின் இப்புதிய கொள்கைகளை ஏற்று, ஜப்பானின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை.

**5. சீனாவில் ஜப்பானிய எதிர்ப்பியக்கம்**

தன்னாதிக்க கொள்கைகளுக்குச் சீனா அமைதியாக அடிபணிய மறுப்பதைக் கண்டு வெகுண்ட ஜப்பான், படைப்பலம் கொண்டு அடி பணியச் செய்ய முயன்றது. வட சீனாவில் தேசிய அரசிற்கு எதிப்புகள் உருவாக்கப்பட்டன. வடசீனாவின் ஐந்து மாநிலங்களில் (Hopei, Chahar, Suiyuan, Shansi and Shantung) கலகங்கள் தோன்றின. இக்கலகங்கள் காரணமாகக் காட்டி, ஜப்பான் வடசீனப் பகுதிகளில் தன்னாதிக்கத்தை நிறுவியது. இதன் விளைவாக ஜப்பானிய எதிப்பியக்கம் சீனாவில் தீவிரமடைந்தது.

**6. ஜப்பானால் சீனாவுக்கு ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்பு**

வடசீனாவில் ஆட்சியுரிமை பெற்ற பகுதிகள் ஏற்படுத்தப்பட்டதால் ஜப்பானியப் பொருள்கள் கள்ளக்கடத்தல் மூலமாகச் சீனாவிற்கு ஏராளமாகக் கொண்டுவரப்பட்டன. ஏற்கனவே மஞ்சூரியாவையும் வடசீன மாநிலங்களையும் இழந்தததினால் ஏராளமான வருவாயை இழந்திருந்த சீனா, ஜப்பானின் ஆதரவினால் நடைப்பெற்று வந்த கள்ளக் கடத்தல் மூலமாகச் சீனாவிற்கு ஏராளமாகக் கொண்டுவரப்பட்டன. ஏற்கனவே மஞ்சூரியாவையும், வடசீனா மாநிலங்களையும் இழந்ததினால் ஏராளமான வருவாயை இழந்திருந்த சீனா, ஜப்பானின் ஆதரவினால் நடைப்பெற்று வந்த கள்ளக்கடத்தல் மூலமாகப் பெருநட்டத்திற்கு உள்ளானது.

சுங்கவரி வருமானம் இதனால் மிகக் குறைந்தது. இத்துடன் இதுவரை சீனாவில் தடைசெய்யப்பட்டு வந்த போதை மருந்தை தன்னாட்சிக்குட்பட்ட

பகுதிகளில் தயாரிப்பதிலும் (Nacotic drugs) அம்மருந்துகளைச் சீனா முழுவதிலும் விற்பனை செய்வதிலும் கொள்ளை இலாபம் கண்டது ஜப்பான், ஜப்பானியப் பொருள்கள் ஏராளமான அளவில் கள்ளக்கடத்தல் மூலமாகச் சீனாவிற்குள் நுழைந்து மலிவாக விற்கப்பட்டதால் சீனாவின் உற்பத்திப் பொருள்களின் விற்பனை மிகக் குறைந்தது. சீனாவின் நலிவுற்ற பொருளாதாரம் ஆட்டங்கண்டது.

ஜப்பானின் இத்தகைய நடவடிக்கைகளால் சீனாவின் பொருளாதார வளர்ச்சி தடைபடுவதைக் கண்ட கோமின்டாங் அரசு, ஜப்பானுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி முடிவு காண விழைந்தது. ஆனால் ஜப்பானிய அரசு 'ஹிரோதாவின் புதிய ஆக்கக் கொள்கை'யை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும் எனவும், இராயுவம் உட்படச் சீனாவின் அனைத்து ஆட்சி துறைகளிலும் ஜப்பானிய ஆலோசகர்களை அனுமதிக்க வேண்டுமென்றும் ஜப்பான் வற்புறுத்தியது. இதற்கிடையில் சீனாவில் பெரும் அரசியல் மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. கம்யூனிஸ்டுகளை அடியோடு ஒழிப்பதையே தனது முக்கியக் கொள்கையாகக் கொண்டிருந்த சியாங்-கே-ஷேக், ஜப்பானியரின் ஆக்கிரமிப்புக் கோரிக்கைகளைக் கூட ஏற்று அமைதி காண விரும்பினார்.

**7. சீனாவில் தோன்றிய ஜப்பானிய தீவிர எதிர்ப்புணர்ச்சி**

இந்நிலையில்தான் தீவிர ஜப்பானிய எதிர்ப்புணர்ச்சி சீனாவெங்கிலும தோன்றி வளர்ந்தது. ஜப்பானியரைச் சீன மண்ணிலிருந்து விரட்டியடிப்பதையே அடிப்படைக் கொள்கையாகக் கொண்டு செயலாற்றி வந்த சீன கம்யூனிஸ்டுகளுக்கெதிராக அனுப்பப்பட்ட கோமின்டாங் படையும் கலகம் செய்தது. இக்கலகத்தை அடக்கி, படையினரிடையே உருவான கோமின்டாங்

எதிர்புணர்வைகளையும் நோக்கத்துடன் சியான் நகர் நோக்கிச் சென்ற சியாங் தன்னுடைய படையதிகாரிகளாலேயே கடத்திச் செல்லப்பட்டார்.

கம்யூனிஸ்டுகளுக்கு எதிராகத் தொடர்ந்த உள்நாட்டுப் போரை நிறுத்தி விட்டு, அதே கம்யூனிஸ்டுகளுடன் இணைந்து ஜப்பானியரை எதிர்க்க முடிவு செய்த பின்னர்தான் சியாங் விடுதலை செய்யப்பட்டார். கம்யூனிஸ்டுகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றி பெற்றன. ஷியாங் கே ஷேக்கின் தலைமையில் ஜப்பானிய எதிர்ப்பியக்கத்தில் கம்யூனிஸ்டுகளும் முழுமூச்சுடன் உழைக்க முன்வந்தனர். இதனால் சியாங்கின் பெருமை உயர்ந்தது. அவரின் தலைமையில் இணைந்து வலிமை பெற்ற புத்துயிர் பெற்ற சீனா ஜப்பானியரை எதிர்க்கத் தயரானது.

**8. சீனாவின் மீது ஜப்பானியப் படைகளின் தாக்குதல்கள்**

இவ்வாறு அரசியலில் ஏற்பட்ட எதிர்பாராத மாறுதல்களினால் ஹிரோதாவின் புதிய ஆதிக்கக் கொள்கைகளைச் சீனா முழுவதுமாக ஏற்க மறுத்து மாறுதல் கோரியது. ஜப்பானும் புத்துயிர் பெற்ற சீனாவின் துடிப்பை உணர்ந், பேச்சுவார்த்தைகள் மூலம் அமைதி காண முன் வந்தது. இப்பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருந்த போதே, ஜப்பானியப் படைகள் ஜப்பானிய அரசின் ஆணையின்றியே வலிந்து தாக்குதல்கள் தொடங்கின. சீனப் படைகள் இத்தாக்குதல்களை முறியடித்தன. ஜப்பானியப் படைகளின் இந்த வரம்பற்ற செயல் பேச்சு வார்த்தைகளின் மூலம் அமைதி காண விழையும் அடிப்படையைத் தகர்த்தன.

**9. ஜப்பானின் ராணுவ பேராதிக்கக் கொள்கை**

ஏற்கனவே ஜப்பான் ஜெர்மனியுடன் செய்து கொண்ட கம்யூனிச எதிர்ப்பு ஒப்பந்தத்திற்கு (Anti-Comintern) ஜப்பானில் கடும் எதிர்ப்பிலிருந்தது. இந்த

எதிர்ப்புகளினால் ஹிரோதாவின் அமைச்சரவை வீழ்ந்தது. படையினர் ஆதிக்கம் பெற்றனர். பின்னர் கோனாயி (Konoye)யின் தலைமையிலான அமைச்சரவை படையினரின் கைப்பாவையாக மாறியது. படையினர் ஆதிக்கம் பெற்றவுடனே சமாதனப் பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்பட்டன. பேச்சுவார்த்தைகள், மாநாடுகள், உடன்படிக்கைகள் கைகள் அனைத்துமே துப்பாக்கியின் துணையால் தான் முடிவு செய்யப்பட வேண்டும் என்ற வெறியுணர்வு தலை தூக்கியது.

சீனா முழுவதும் ஜப்பானியரின் கைவசமாக வேண்டும் என்ற எண்ணத்தில் ஜப்பானிய ராணுவத் தலைவர்கள் செயல்பட்டனர். கிழக்காசிய நாடுகளின் ஒப்பற்றத் தலைவனாக ஜப்பானை அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஜப்பான் கனவு கண்டது. இதை நிறைவேற்றும் பொருட்டுத்தான் ‘ஆசியா ஆசிரியருக்கே’ என்ற கொள்கையையும் தீவிரமாகப் பரப்பியது.

**10. போருக்கான உடனடி காரணம்**

தென் மஞ்சூரிய இருப்புப் பாதையில் வெடித்த குண்டு மஞ்சூரியா முழுவதையும் ஜப்பான் வெற்றிக் கொள்ள வாய்ப்பை அளித்தது. அதே போல மற்றொரு மிகச் சிறிய நிகழ்ச்சி இரண்டாவது சீன ஜப்பானியப் போரையும் துவக்கியது. 1937-ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஏழாம் தேதி, பீப்பிங் நகரின் தென்மேற்கில் ஒன்பது கல் தொலைவிலிருந்த மார்கோபோலோ பாலத்திற்கருகில் (Marco Polo Bridge, New Lukouchiao Railway Station) அத்துமீறி நுழைந்த ஜப்பானியப் படைகளின் மீது சீனப்படையினர் சுட்டனர். இச்சிறு நிகழ்ச்சியின் விளைவாகச் சீனா ஜப்பானியப் போர் ஆரம்பமானது. இந்நிகழ்ச்சியைக் காரணமாகக் கொண்டு பெரும் ஜப்பானியப் படை சீனாவிற்குள் நுழைந்து போரைத் துவக்கியது. இப்போர் முறைப்படி அறிவிப்புச் செய்யப்படாத போர் (Undeclared

War) என்றும், ஜப்பானிய வரலாற்றில் ‘சீன நிகழ்ச்சி’ (China affair or China Incident) என்றும் குறிப்பிடப்படும்.

ஜூலை 29ஆம் தேதிக்குள்ளாக பீப்பிங்கும், டியன்சினும் ஜப்பானியர் வசமாயின. இதற்கிடையில் ஜப்பானியத் தலைமை அமைச்சர் கோனோயி, பேரரசரின் ஆணைக்கிணங்கப் பேச்சுவார்த்தைகளின் மூலம் அமைதி காண முன் வந்தார். பலமுறை இம்மாதிரி நடத்திய அமைதிப் பேச்சுவார்த்தைகளின் பயனற்ற முடிவைக் கண்டு கசப்புற்ற சீன அரசு தன் சுதந்திரத்தைக் காக்க ராணுவத்தைப் பயன்படுத்துவது என்று முடிவு செய்தது. எனவே, போர் தொடர்ந்து நடைபெற எதுவாயிற்று. இவ்வாறு தொடங்கிய போர் இறுதியாக இரண்டாம் உலகப் பெரும் போருடன், இணைந்து ஜப்பானியரின் அழிவிற்குக் காரணமாக அமைந்தது.

**போரின் போக்கு**

இப்போரின் நிகழ்ச்சிகளை எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். 1. ஆகஸ்டு 13 ஆம் நாள் ஷாங்காய் நகர் தாக்கப்பட்டதிலிருந்து தேசிய சீனாவின் தலைநகரான நாங்கிங் நகரின் வீழ்ச்சி டிசம்பர் 15, 1937 வரை 2. நாங்கிங் நகர் வீழ்ந்ததிலிருந்து, காண்டன் மற்றும் ஆங்கோவ் (Hankow) நகர் வீழ்ச்சி வரை – அக்டோபர், 1938. 3. ஆங்கோவ் நகரிலிருந்து சீன அரசு ஷெச்சுவான் மாநிலத் தலைநகரான சுங்கிங் நகரில் (Handow to Chungking in Szechuan Province) தஞ்சமடைந்ததற்குப் பின்னர் நடந்த போர் நிகழ்ச்சிகள்.

**அ. போரின் முதல் கட்டம்**

போரின் முதல் கட்டமாக யாங்ட்சி நதியின் முகத் துவாரத்தில் அமைந்திருந்த ஷாங்காய் நகர் மீது ஜப்பானிய முப்படைகளும் பயங்கரத் தாக்குதல்களைத் தொடங்கி, சியாங்கின் படைகளின் வீரமிக்க தாக்குதல் ஜப்பானியப் படைகளின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஜப்பானிய விமானப் படைகள் பெருஞ்சேதத்தை விளைவித்துக் கொண்டிருந்தன. இரண்டு மாதக் கடுந்தாக்குதல்களுக்குப் பின்னர் 1937 நவம்பர் மாதத்தில் ஷாங்காய் நகர் வீழ்ந்தது. இதன் பின்னர் தேசிய சீனாவின் தலைநகரான நாங்கிங் நகரை நோக்கி ஜப்பானியப் படைகள் பாய்ந்தன. ஒரு மாதத்திற்குள்ளாகவே (டிசம்பர் 15, 1937) நாங்கிங் நகரும் ஜப்பானியர் வசமானது, சீனாவின் தலைநகர் ஆய்கோ நகருக்கு மாற்றப்பட்டது.

நாங்கிங் நகரின் வெற்றிப் பெருமிதத்தில் நுழைந்த ஜப்பானியப் படைகள் கொலை, கொள்ளை, தீ வைத்தல், கற்பழித்தல் போன்ற கொடுமையான செயல்களில் ஈடுபட்டனர். ஜப்பானியருக்குப் பலமான எதிர்ப்பு உருவாகியது. சீனத்தலைநகரைக் கைப்பற்றிய அதே நேரத்தில் மற்றொரு ஜப்பானியப் படை பீப்பிங் நகரிலிருந்து வடக்கில் உள்ள பகுதிகள் அனைத்தையும் மங்கோலியா உட்பட வெற்றி பெற்று பீகிங்கில் தற்காலிக சீன அரசு ஒன்றையும் நிறுவியது. இவ்வாறு போரின் முதற்பகுதியில் ஜப்பானியர், வியத்தகு வெற்றிகள் பல பெற்றாலும், சியாங்-கே-ஷேக்கின் சீனப்படைகள் முழுவதுமாக அழிக்கபடவில்லை.

**ஆ. போரின் இரண்டாம் கூட்டம்**

போரின் இரண்டாவது கட்டம் துவங்குவதற்கு முன்னர் ஜெர்மானிய தூதுவர் போர் நிறுத்த முயற்சிகளை மேற்கொண்டார். அவரது முயற்சிகள்

பலனளிக்காமல் போகவே ஜப்பான் தனது தாக்குதல்களைத் தொடங்கியது. நான்கிங் நகரைக் கைப்பற்றிய ஜப்பானியப் படைகள் சீனாவின் புதுத்தலைநகராகிய ஆங்கோவை நோக்கி விரைந்து முன்னேறின. இப்படைகளுக்கு உதவியாக வடக்கிலிருந்த ஜப்பானியப் படைகள், மஞ்சள் நதிப் பள்ளத்தாக்கில் ஜப்பானியர் எதிர்பாராத வண்ணம் சீனாவின் கம்யூனிஸ்டுப் படைகள் (8th Route Army) முதன் முதலாக ஜப்பானியப் படைகளைத் தையர் சுவாங் (Tater Chuang) என்னுமிடத்தில் சந்தித்து, வடக்கிலிருந்தும், நடுவிலிருந்தும் ஆங்கோ நோக்கிச் செல்லும் படைகள் இணையா வண்ணம் தடுத்து நிறுத்தப்பட்டது.

இருப்பினும் ஆங்கோ நகரமும் வீழ்ந்தது. சீனாவின் தலைநகர் சுங்கிங்கிற்கு மாற்றப்பட்டது. இரண்டாவது உலகப் பெரும் போரை முடிவுறும் வரை போர்க்காலத் தலைநகரமாக இந்நகரே இருந்து வந்தது. ஆங்கோ நகரைப் பிடிப்பதற்கு ஜப்பானியர் பல்லாயிரக்கணக்கான வீரர்களைப் பலி கொடுக்க வேண்டியிருந்தது. ஜப்பானிய விமானப் படை சீனாவில் பெரும் அழிவையும், இழப்பையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தது. ஆங்கோ நகர் பிடிபடுவதற்குள் காண்டன் நகரமும் ஜப்பானியர் வசமாயிற்று. ஜப்பானியர் ஆங்கோ நகரைக் கைப்பற்றியதோடு போரின் இரண்டாவது கட்டம் 1938-ல் முடிவுற்றது.

தோல்வி மேல் தோல்வி கண்டு, அஞ்சியோடிய சியாங்-கே-ஷேக்கின் அரசு அழிக்கப்படவில்லையெனினும், ஜப்பானியத் தாக்குதலால் பிளவுண்டது. சீனாவின் தோல்வியால் மனந்தளர்ந்த சிலர், சிறப்பாக வாங்-சிங்-வி (Wang Ching Wei) என்பவர், ஜப்பானுடன் போரை நிறுத்தி, அமைதி காணுவதுதான் சீனாவை அழிவிலிருந்து காக்கும் ஓரே வழி என்று நம்பினார். வாங்-சிங்-வி என்பவர்

கோமின்டாங் கட்சியில் சியாங்-கே-ஷேக்கிற்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணக்கூடிய சிறப்புப் பெற்றவர்.

இந்நிலையில் வாங்-சிங்-வி ஜப்பானுடன் அமைதிப் பேச்சு வார்த்தைகளைத் தொடங்க முன்வந்தார். கோமின்டாங் கட்சியின் எதிர்ப்புகளை மீறி இவர் செயல்பட முனைந்த போது கட்சியினின்றும் நீக்கப்பட்டார். நாட்டுத் துரோகக் குற்றமும் இவர் மீது சாட்டப்பட்டது. இவைகளிலிருந்து தப்பி, ஜப்பானியர் வசமிருந்த பகுதிக்குள் ஓடிவிட்டார். இவ்வாறு கோமின்டாங் கட்சிக்குள்ளேயே பிளவு ஏற்பட்டாலும், சியாங்கின் பெருமை குன்றவில்லை. சீன மக்களின் பேராதரவு சியாங்கிற்கு கிடைத்தது.

**போரின் விளைவுகள்**

**1. சீனாவில் காணப்பட்ட பிளவு**

இந்நிலையில் சீனா இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. முதல் பகுதி கோமின்டாங்கின் ஆட்சிக்குட்பட்ட பகுதி. இப்பகுதி வடக்கில் பீகிங் நகரிலிருந்து, ஆங்கோ வழியாகத் தெற்கில் காண்டன் வரை, வரையப்பட்ட கோட்டிற்கு மேற்கில் இருந்த மாநிலங்கள், இவை சுதந்திர சீனா (Free China) எனவும், இரண்டாவது கோட்டிலிருந்து கிழக்கில் கடல்வரை உள்ள சீனப் பகுதிகள் ஜப்பானிய ஆதிக்கத்திற்குட்பட்ட பகுதிகள் என்றும் பிளவுப்பட்டிருந்தது. கோமின்டாங்கின் ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதியில் கம்யூனிஸ்டுகள் செல்வாக்குப் பெற்றிருந்த பகுதிகளும் உண்டு.

சுங்கிங் நகரில் சியாங்கின் மை அரசு செயல்பட்ட அதே நேரத்தில் தெற்கில் ஏனான் (Yenan) நகரை மையமாகக் கொண்ட கம்யூனிஸ்டுகளின் ஆட்சியும் நடைபெற்றது. இவ்வாறு சீனா பிளவுண்டு கிடந்ததால் ஜப்பானிய எதிர்ப்புகள் மிகவும் குறைந்திருந்தன.

**2. சீனாவில் ஜப்பானிய ஆட்சிமுறை**

தான் வெற்றி பெற்ற பகுதிகளில் ஜப்பான் பொம்மை அரசுகளை நிறுவியது. கோமின்டாங்கிலிருந்து பிரிந்து, தப்பியோடிய வாங்-சிங்வியின் தலைமையில் நாங்கிங் நகரில் போட்டிச் சீன அரசு ஒன்றை ஜப்பான் ஏற்படுத்தியது. இதைப்போலவே வடக்கிலும் பொம்மை அரசுகள் நிறுவப்பட்டன.

**3. சீனர்கள் பின்பற்றிய அழிவுக்கொள்கை**

இவ்வாறு சீனாவின் பெருநிலப்பகுதியைப் போர் தொடங்கிய பதினான்கு மாதங்களுக்குள் ஜப்பான் கைப்பற்றிவிட்டதால், அதன் தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்குமான மூலப் பொருள்களைக் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து சுரண்டிச் சென்று ஜப்பான் வளம் பெற்றது. ஆனால் சீனப்படையினர் 'அழிவுக் கொள்கையின்' படி, தோற்றோடும் போது அப்பகுதிகளில் இருந்த பயன்தரக்கூடிய பொருள் அனைத்தையும், இயந்திரங்கள், உணவுப் பொருள்கள் பெரிய நிலையங்கள் ஆகியவற்றை அழித்துச் சென்றிருந்தனர்.

**4. ஜப்பானின் ராணுவ ஆதிக்க பேராசை**

வெகு எளிதாகச் சீனாவின் பெரும் பகுதியை வென்றுவிட்ட ஜப்பான், ஆதிக்க வெறி அதிகரித்தது கிழக்காசிய நாடுகள் அனைத்தினையும் வெல்ல வேண்டும் என்ற பேராசைக் கொண்டது. கிழக்காசிய நாடுகள் அனைத்தும் தனது கைப்பாவையானால், தனது பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்திப் பெரும் பயனடைய முடியும் என்று ஜப்பான் கனவு கண்டது. சீனாவின் முதுகெலும்மைப ஒடித்து விட்டதாலும், ஐரோப்பிய நாடுகள் ஹிட்லர் - முசோலினியின் ஆதிக்க வெறியிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள முழு மூச்சுடன் செயல்படுவதாலும், கிழக்காசிய விவகாரங்களில் அவர்கள் தன்னைத்

தடைசெய்ய வாய்ப்பில்லை என்பதை ஜப்பான் நன்குணர்ந்திருந்தது. அமெரிக்கா ஒன்று மட்டும் தான் ஜப்பானுக்குப் போட்டியாக வரக்கூடும்.

**5. ஜப்பான் வெளியிட்ட புதிய கிழக்காசியக் கொள்கை**

இதனை நன்குணர்ந்த ஜப்பான் 'புதிய கிழக்காசிய ஆதிக்கக் கொள்கை'யை நவம்பர் 3, 1938-ல் வெளியிட்டது. இதன்படி ஜப்பானின் தலைமையில் மஞ்சுகோ நாங்கிங் அரசு (ஜப்பானிய ஆதிக்கத்திற்குட்பட்ட சீனா) ஆகிய அரசுகள் இயங்கும். இதனால் ஜப்பானின் ஆதிக்கநிலை கிழக்காசியப் பகுதிகளில் உறுதிப்படும் என ஜப்பான் நம்பியது.

இப்புதிய ஆதிக்கக் கொள்கையை கடைப்பிடித்த ஜப்பான் சீனாவிலிருந்த ஐரோப்பியர்களின் வர்த்தகம், மற்றும் தொடர்புகள், செல்வாக்கு, உரிமைகள் அனைத்தையும் அழிக்க முற்பட்டது. பிரான்சு, பிரிட்டன் ஆகிய நாடுகளின் உரிமைகளைத் தடுத்தது. அதனுடைய உறவு நாடான ஜெர்மனி கூட ஜப்பானின் இக்கொள்கைக் கட்டுப்பாட்டிலிருந்து தப்பிக்க இயலவில்லை. ஆனால் பிரிட்டனும், அமெரிக்காவும் ஜப்பானியரை எதிர்க்கத் தொடங்கின. அமெரிக்கா, ஜப்பானுடன் செய்து கொண்டிருந்த வர்த்தக உடன்படிக்கைகளை ரத்து செய்தது.

**சீனாவும் இரண்டாம் உலகப்போரும்**

தூரக்கிழக்கு அரங்கில் 2-ம் உலகப்போர் நடைபெறுவதற்குக் காரணம் ஜப்பானின் பேராதிக்கப் பசியே எனலாம். ஏற்கனவே ஜப்பான் ரோம், பெர்லின், டோக்கியோ அச்சின் உறுப்பினராகும். அது ஜெர்மனி, இத்தாலியுடன் சேர்ந்து கொண்டு கம்யூனிச எதிர்ப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது. 1830-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் கம்யூனிச எதிர்ப்பு ஒப்பந்தம் இராணுவ ஒப்பந்தமாக மாற்றப்பட்டு அமெரிக்காவிற்கு எதிராக முடுக்கிவிடப்பட்டது. ஐரோப்பாவின்

எல்லா வல்லரசுகளும் 'வாழ்வா சாவா' என்ற போரில் ஈடுபட்டிருந்த போது அமெரிக்கா மட்டும் தூரக் கிழக்கில் ஆர்வம் காட்டியது அதுதான் ஜப்பானின் ஆதிக்க ஆசைக்கு அணை போட்டு தடுக்க முற்பட்டது எனலாம்.

இந்தோ சீனாவை ஜப்பான் கைப்பற்ற முற்பட்ட போது அதைக் கண்டித்தது. அதன் மூலம் ஜப்பான் அமெரிக்காவின் இறக்குமதி சரக்குகளுக்கு கட்டுப்பாடுகள் விதித்தது. குறிப்பாக இரும்பு, எஃகு இயந்திரச் சாலைகள் அதில் அடங்கும். சீனா அமெரிக்காவின் உதவி பெறும் வகையில் நிலவார மசோதா திருத்தப்பட்டது. இதனால் ஜப்பானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையில் தகராறு ஏற்பட்டது. உடனடியாக ஜப்பான் அமெரிக்காவினுடனான வாணிப ஒப்பந்தத்தை நிராகரித்தது. ஆகவே அமெரிக்காவும் தன் நாட்டிலிருந்த ஜப்பானின் சொத்துக்களை விலக்கிக்கொள்ள ஆணையிட்டது. அதே நேரத்தில் இரு சாராரும் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டனர். ஆனால் ஜப்பான் ஹவாயிலிருந்த அமெரிக்கக் கப்பற்படைத் தளமான பேர்ல் துறைமுகத்தைத் தாக்கி அழித்தது. அதுவே அமெரிக்கா மீது போர் தொடுப்பதற்கான அறிவிப்பாகும். இவ்வாறு தூரக்கிழக்கில் 2-ஆம் உலகப்போர் ஆரம்பமாயிற்று.

**சீனாவும் நேச நாடுகளும்**

1937-ஆம் ஆண்டு ஜூலை மாதம் போர் ஆரம்பித்தது. 1944-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பேர்ல் துறைமுகத்தினை ஜப்பான் தாக்கியது வரையில் சீனா தனித்தே போரிட்டது. அது பிற நாடுகளின் அனுதாபத்தையும், தார்மீக ஆதரவையும் பெற்றது. மேலை நாடுகளிலிருந்து சிறு சிறு கடன் தொகைகளைப் பெற்று வந்தது. 1939-ஆம் ஆண்டில் செப்டம்பர் மாதம் ஐரோப்பாவில் போர் ஏற்பட்ட போது போரில் திருப்பம் ஏற்பட்டது. ரஷ்யா,பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவை ஜப்பானை முறியடிக்க முற்பட்டன.

அமெரிக்க ஜப்பானிய உறவில் விரிசல் ஏற்பட்ட போது சீனா அதற்கு உதவ முன்வந்தது.

ஜப்பான் பேர்ல் துறைமுகத்தைத் தாக்கியதால் சீனப் போரிலும் மாற்றம் ஏற்பட்டது. ஆங்கிலேய– அமெரிக்கப் படைகள் ஜப்பானை முறியடிக்க முற்பட்டன. ஜப்பானும் அவர்களுக்கு எதிராக அச்சு நாடுகள் பக்கம் சேரலாயிற்று. ஆகவே போர் ஆசியாவிலும் பரவியது. இவ்வாறு போர் உலகம் முழுவதிலும் ஆக்கிரமிப்புக்கும், சர்வாதிகாரத்திற்கும் எதிராக நடைபெறலாயிற்று.

**இரண்டாவது உலகப் போரில் சீனாவின் பங்கு**

1941-ஆம் ஆண்டு உலகம் முழுவதிலும் பரவிய போர் சீனாவிற்கு அவ்வளவாக நலம் பயப்பதாக இல்லை. அதற்குரிய காரணங்களாவன

1. சீனாவிற்கு உடனடியாக உதவி செய்வதாக பிரிட்டனும், அமெரிக்காவும் உறுதியளித்த போதும் அவைகளால் அதைச் செய்ய முடியவில்லை. அவர்களது போர்த் தந்திரத்தின்படி ஐரோப்பிய அரங்கு போரில் முதலிடம் பெற்றது. அவர்களது முழுக்கவனமும் அங்கு செலுத்தப்பட்டது. ஜப்பானின் பிடியில் சிக்கிய சீனாவின் இக்கட்டான நிலையும் அவர்களுக்குத் தெரியும். அவர்களால் ஏதும் செய்ய முடியாத நிலை. எனினும் உதட்டளவு உதவியே செய்ய முடிந்தது.
2. 1941-ஆம் ஆண்டில் ரஷ்யாவும், ஜப்பானும் ஆக்கிரமிப்பு இல்லாமல் இருக்க ஓர் உடன்பாடு செய்து கொண்டன. ஆகவே வெளிப்படையாக சீனாவிற்கு உதவ அது முன்வரவில்லை. ஜப்பானுடன் எந்தவொரு மோதலும் இல்லாமல் இருக்க ரஷ்யா மிகவும் எச்சரிக்கையாகவே செயல்பட்டது.

3. சீனாவின் கடலோரப் பெரும்பகுதிகள் ஜப்பான் வசம் ஆனதாலும், பசிபிக் தீவுகளும் அதன் வசம் இருந்ததாலும் நேசநாடுகள் சீனாவிற்கு உதவி செய்யத் திணறின.
4. சீனாவைத் தொடர்புபடுத்திய எல்லா கடற்கரை வழிகளும் மூடப்பட்டன. அமெரிக்காவின் விமானங்கள் இமயமலையைத் தாண்டி ஓரளவு உதவி செய்து வந்தன. பின்னர் புகழ் வாய்ந்த "லேடோ சாலை' கட்டப்பட்டது. அதன் மூலம் சீனாவிற்கு உதவி அளிக்கப்பட்டது.
5. 1945-ஆம் ஆண்டில் அமெரிக்கா 500 மில்லியன் டாலர் உதவியினை சீனாவிற்கு அனுப்பி வைத்தது. அமெரிக்கப் போர் அமைச்சர் கூறியது போல நாங்கள் செய்த உதவியின் மூலம் சீனர்கள் முழுமையான ஆக்கிரமிப்பைத் தடுத்திடவும் இனிமேல் தடுக்கவும் முடிந்தது என்பது உண்மையேயாகும்.
6. ஜோசப் ஸ்டில்வெல் என்ற அமெரிக்க மொழி அதிகாரி பீகிங்கிலிருந்து சுங்கின் என்ற இடத்திற்கு அனுப்பப்பட்டார். அவர் சியாங்கின் இராணுவத் தலைமையதிகாரியாகப் பணியாற்றினார்.
7. இரண்டாவது உலகப்போரில் சீனா பாதுகாப்பு முனையிலே இருந்து வந்தது. அது வெற்றிகரமாக ஜப்பானின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தியது. அதன் தலைமையகம் சுங்கிற்கு மாற்றப்பட்டது. ஜப்பானின் கவனம் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பக்கம் திரும்பியதால் சீனா தற்காலிகளமாக ஜப்பானிய கடும் தாக்குதலிலிருந்து விடுபட்டது.
8. இக்காலகட்டத்தில் கோமின்டாங் கட்சிக்கும் சீனப் பொதுவுடைமைக் கட்சிக்கும் இடையில் நல்லுறவு நிலவவில்லை. அவைகளுக்கு

இடையில் பொறாமை, சந்தேகம், பயம் குடிகொண்டதால் ஜப்பானுக்கு எதிராக நன்கு செயல்பட முடியவில்லை.

9. 1943-ல் ஏற்பட்ட கெய்ரோ மாநாட்டில் சியாங்கே ஷேக் அதிபர் ரூஸ்வெல்ட்டுடனும், பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் உடனும் தூரக்கிழக்கின் போர்த் தந்திரம் பற்றி ஆராய்ந்தார். கெய்ரோ அறிவிப்பு முதன்முதலில் ஜப்பானை எவ்வித நிபந்தனையுமின்றி சரண் அடையும்படி கோரியது. மேலும் 1834-ஆம் ஆண்டிலிருந்து இது வரையில் ஜப்பான் ஆக்கிரமித்த பகுதிகள் திருப்பி அளிக்கப்படவேண்டும் என்றது.

10. 1945-ஆம் ஆண்டில் ஏற்பட்ட போர்ஸ்டம் அறிவிப்பு ஜப்பானைப் பணிந்து போ இல்லையேல் அழிந்து போவாய் என்றது. ஜப்பான் அதைச் செவிமடுக்காததால் முதல் அணுகுண்டு ஆகஸ்டு திங்கள் 6-ஆம் நாளில் ஹீரோஷிமாவின் மீது வீசப்பட்டது. இரண்டு நாட்கள் கழித்து ரஷ்யா போரில் ஈடுபட்டது. ஆகஸ்ட் 9-ஆம் நாளில் ஜப்பானியப் பேரரசர் நிபந்தனையின்றி சரண் அடைந்தார். சரணடைந்த கையொப்பமானது டோக்கியோ வளைகுடாவில் அமெரிக்காவால் மிஸௌரியில் (கப்பலின் பெயர்) மாற்றப்பட்டது.

எட்டு ஆண்டுகள் நடைபெற்ற போருக்குப் பின் சீனா வெற்றியுடன் வெளிவந்தது. சீனாவின் பெருமை உயர்ந்தது. அதன் பன்னாட்டு உறவு பலப்படப் பாராட்டப்பட்டது. 1945-வரை நீண்ட நாட்களாக சீனா போரிட்டது. அது ஆக்கிரமிப்புக்கும் சர்வாதிகாரத்திற்கும் நடைப்பெற்ற போராகும். அது ஐக்கிய நாடுகளின் அவையிலும் பெரும் வல்லரசு நாடுகளின் பக்கமும் அமரும் வாய்ப்பினைப் பெற்றது.

**போரின் விளைவுகள்**

1. மேலை நாடுகளின் நெருக்கடியிலிருந்தும் பொருளாதாரக் கட்டுப்பாட்டிலிருந்தும் சீனா விடுபட்டது. விசேஷப் பிரதேச உரிமைகள் பற்றிய உடன்படிக்கைகளும் அகற்றப்பட்டன. ஐ.நாவின் அதற்கு இடமளிக்கப்பட்டது. பாதுகாப்பு அவையில் இடம் பெற்றதோடு 'ரத்து அதிகாரத்தையும்' பெற்றது.
2. போரில் தீவிரமாக ஈடுபட்டிருந்த தேசிய அரசாங்கம் நிலை குலைந்ததால் அதன் எதிர்ப்புகளை குறிப்பாகப் போருக்குப் பின் சமாளிக்க முடியவில்லை எனலாம்.
3. சீனாவின் பற்றாக்குறை வரவு செலவுத்திட்டம் அதிகமாகிக் கொண்டே சென்றது. அதனால் பணவீக்கம் ஏற்பட்டது. அது இராணுவத்தைப் பாதித்தது. நிர்வாகம் சீர்குலைந்தது. மக்கள் வாழ்க்கையைப் பாதித்தது. நடுத்தரவர்க்கத்தினர் பாதிக்கப்பட்டனர்.
4. எட்டு ஆண்டுகள் துன்பப்பட்டதால் மக்கள் உள்ளம் சோர்ந்தனர். அவர்கள் அமைதியைத் தவிர வேறு எதையும் நாடவில்லை.
5. தீர்க்கப்படாத பொதுவுடைமையினர் சிக்கல் மீண்டும் தலை தூக்கியது. அவர்களது பொது எதிரியான ஜப்பான் முறியடிக்கப்பட்டதால் மீண்டும் போட்டி, பொறாமை தலைதூக்கியது. மாவோவின் தலைமையில் பொதுவுடைமையினர் கோமின்டாங்கை எதிர்த்தும் போரிட்டனர். அதன் விளைவு உள்நாட்டுப் போராகும். அது பொதுவுடைமையினரின் வெற்றியில் போய் முடிந்தது,

**மாசே துங்**

**இளமைக் காலம்**

சீனப் பொதுவுடைமைக் கட்சியின் சிற்பியான மாசே துங் 1893-ஆம் ஆண்டு டிசம்பர் 23-ஆம் நாள் ஹீனான் மாநிலத்திலுள்ள ஒரு சிற்றூரில் ஏழைக் குடியானவரொருவரின் மகனாகப் பிறந்தார். தனது மகன் ஒரு விவசாயி ஆக வளரவேண்டுமென மாசே துங்கின் தந்தை எண்ணிய போது மாவோவின் கவனம் படிப்பதில் சென்றது. உள்ளூர் பள்ளியில் அவர் சேர்ந்த போதிலும் குடும்பத்தின் பொருளாதாரநிலை காரணமாக அவர் முழுமையாக படிக்கமுடியவில்லை.

இருப்பினும் படிக்க வேண்டுமென்ற ஆர்வத்தால் உந்தப்பட்டு தமது 15-ஆவது வயதில் வீட்டைவிட்டு வெளியேறினார். பகலில் கடினமாக உழைத்த அவர் இரவு நேரங்களைக் கற்பதற்குச் செலவிட்டார். காங்யூவெய், லியான், ஸீஸெளா ஆகியோரின் எழுத்தாற்றலால் பெரிதும் கவரப்பட்டார். வாஷிங்டன், வால்டேர்,ரூசோ, நெப்போலியன் போனபார்ட் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளால் ஈர்க்கப்பட மாசே துங் தம் காலத்திய சீனாவுக்கும் அத்தகைய தலைவர்கள் தேவையென்பதை உணர்ந்தார்.

மாசேதுங்கை கவர்ந்த கோட்பாடுகள்

ஐரோப்பிய எழுத்தாளர்களின் சிந்தனைகளும் அவரது உள்ளுணர்வைத் தட்டியெழுப்பின் வாங்-சிங்-வெய் என்பவரைத் தொகுப்பாளராகக் கொண்ட ‘மின்பௌ’ என்ற செய்தித்தாள் அவரது மனத்தின் அடித்தளத்தில் சமுதாயம் பற்றிய கோட்பாட்டினைத் தோற்றுவித்தது. தொழிலாளர்களின் வாழ்க்கையை பெரிதும் நேசித்த மாசே துங் தொழிலாளர்களையே நாட்டின் ஆக்க மூலங்களென உணர்ந்தார்.

பேரரசர்கள், படைமானிய பிரபுக்கள், செல்வந்தர்கள் ஆகியோரைப் பற்றி விளக்கப்பட்ட போது சமுதாயத்தின் முதுகெலும்பென விளங்கிய விவசாயிகள்,தொழிலாளர்கள் ஆகியோரைப் பற்றித் தெளிவாக ஏதும் மக்களுக்கு உணர்த்தப்படவில்லை என்பது அவருடைய உள்ளுணர்வை உறுத்தியது. இக்கருத்துக்களே அவரைப் புதிய மக்களாட்சிக் கோட்பாடுகளில் நம்பிக்கை கொள்ளுமாறு தூண்டின.

**புதிய மக்கள் சங்கம் நிறுவப்படுதல்**

1917-ஆம் ஆண்டில் தமது தாயின் மரணத்திற்குப் பின் மஞ்சுகளை எதிர்ப்பதற்கென 'புதிய மக்கள் சங்கம்' ஒன்றை நிறுவினார். அவ்வியக்கம் பின்னர் மாசேதுங்கிற்குத் துணை நின்ற பல தலைவர்களை உருவாக்கியது. 1918 செப்டம்பரில் அவர் பீகிங் பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் கருத்துக்களில் கவனம் செலுத்தினார். 1919-ஆம் ஆண்டு வசந்த காலத்தில் லீ டௌ ஸௌவின் 'மார்க்கீயசிந்தனைக்குழுவில் உறுப்பினராயினர்.

**பொதுவுடைமைக் கட்சியில் முக்கிய பொறுப்பேற்றல்**

1920-ஆம் ஆண்டில் தம்முடைய கருத்துக்களுக்கேற்பச் செயல்திறம், சிந்தனைவளம், புரட்சித் திட்டங்கள் ஆகியவற்றை ஒருங்கே அமையப் பட்டிருந்த ஒரு குடியானவப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். 1920-ஆம் ஆண்டில் தான் முதன்முறையாக மார்க்சின் கொள்கைகளின் அடிப்படையில் தொழிலாளர் அமைப்பொன்று புதிதாக உருவாக்கப்பட்டது. மாசே துங், லியூ ஷெ ஸீ, சூயென்லாய் போன்றவர்களைக் கொண்ட சீனப் பொதுவுடைமைக் கட்சி 1921-ல் உருவாக்கப்பட்டது. அக்கட்சியின் முக்கியத் தலைவர்கள் பன்னிரெண்டு பேரில் ஒருவரான மாவோ ஹீனான் பொதுவுடைமைக் கட்சியின் செயலாளரானார். ஹீனான் பொதுவுடைமைப் பாசறை ஆயிற்று.

**முதல் கிளர்ச்சி**

பொதுவுடைமைவாதிகளுக்கு 1927-ஆம் ஆண்டு ஒரு இக்கட்டான ஆண்டாகும். அதே சமயத்தில் அது மாவோவின் அரசியல் வாழ்வில் ஒரு திருப்பு மையமாகும். வான் என்ற இடத்தில் பொதுவுடைமைவாதிகளுக்கு எதிராக 'வெண்மைப் பயங்கரம்' கட்டவிழ்ந்து விடப்பட்டது. ஆயிரக்கணக்கான பொதுவுடைமைனுனா் கருணையின்றி கொன்று குவிக்கப்பட்டனர்.

1927-ஆம் ஆண்டில் சீனப் பொதுவுடைமைக் கட்சி விவசாயிகளைக் கிளர்ந்து எழும்படி ஒரு சிறப்பு மாநாட்டைக் கூட்டியது. கிராமப்புற விவசாயிகளின்பால் மிக்க ஆர்வம் கொண்ட மாவோ ஹுனான் தகியாங்கி பகுதிகளில் சீன சோவியத்துக்களை ஏற்படுத்தினார். அதே ஆண்டு இலையுதிர்க் காலத்தில் அவர் அறுவடைக் கிளர்ச்சியினை ஆரம்பித்தார். அது தோல்வியில் முடிந்தது. ஆனால் கட்சி வட்டாரத்தில் அது அவருக்கு நற்பெயரை ஏற்படுத்தியது.

பின்னர் சூ தேயின் உதவியால் புகழ்மிக்க 'செஞ்சேனையை அமைத்தார். அது சீனாவில் பொதுவுடைமையினை ஏற்படுத்த பெரும் பங்காற்றியது. 1930-ஆம் ஆண்டில் அப்பகுதியில் மட்டும் ஏறக்குறைய 15 இடங்களில் செஞ்சேனையின் தளங்கள் நிறுவப்பட்டன. 1931-ஆம் ஆண்டு முடிவில் சீனப்பொதுவுடைமைக் கட்சி மாவோவின் தலைமையில் சீன சோவியத் குடியரசை ஏற்படுத்தியது.

**நீண்ட நடைப்பயணம் 1931**

1930-க்கும் 1932க்கும் இடையில் கோமின்டாங் கட்சி நான்கு படையெடுப்புகளை ஹுனாய், கியாங்சி தளங்களுக்கு எதிராக நடத்தியது. ஜெர்மனியின் பயிற்சி பெற்ற அவர்களது படைகள் செஞ்சேனைகால்

தோற்கடிக்கப்பட்டன. செஞ்சேனை கொரில்லாப் போர் முறையில் திறமை பெற்று விளங்கியது. அவரது தந்திர முறைகள் பின்வரும் நான்கு கோஷங்களில் காணப்படுகின்றன.

1. பகைவர்கள் முன்னோக்கி வரும்போது நாம் பின்வாங்குவோம்.
2. பகைவர்கள் நின்று தாக்கும் போது அவர்களைத் தொல்லைப்படுத்துவோம்.
3. பகைவர்கள் சண்டையைத் தவிர்க்கும் போது அவர்களை தொடர்வோம்.
4. பகைவர்கள் புறமுதுகு காட்டும்போது அவர்களைத் தொடர்வோம்.

1938-ம் ஆண்டில் ஐந்தாவது படையெடுப்பு நடைபெற்றது அது அவர்களது பொருளாதாரத்தை நசுக்கவே அனுப்பப்பட்டது. அரை மில்லியனுக்கு மேலாக படைவீரர்கள் கலந்து கொண்டனர். செஞ்சேனையினர் ஒரு கூண்டுக்குள் அடைபட்டது. போல ஒரு இரும்பு வளையம் போன்ற பொருளாதார தடைக்குள் சிக்குண்டு தவித்தனர். அதை உடைத்தெரியும் திறன் பெற்றிருந்தார். மாவோ, அத்தடையை மீறி தன் புகழ்பெற்ற நீண்ட நடைப்பயணத்தை அவர் தொடங்கினார். அவர்கள் வழியில் பல பெரும் ஆறுகளைக் கடந்து வந்தனர். பெரும் மலைகளைத் தாண்டி வந்தனர். 11 மாநிலங்களைக் கடந்து 6000 மைல்களை நடந்தே கடந்து வந்தனர். உண்மையிலேயே அது வரலாற்றின் ஒரு வியத்தகு சாதனையாகும்.

**மாவோவின் எட்டு அம்சக் கொள்கை**

1. பயன்படுத்தப்பட்ட பொருளுக்கு மாற்றுப் பொருளை வைத்தல்
2. பாயைச் சுருட்டி குடியானவர்களிடம் ஒப்படைத்தல்.
3. மனிதாபிமானத்துடன் முடிந்த உதவியைச் செய்தல்
4. கடன் வாங்கிய பொருள்களைத் திருப்பி தருதல்

5. நாசமான பொருள்களை மீண்டும் கொணர்தல்.
6. குடியானவர்களிடம் எல்லாவற்றிலும் உண்மையாக நடந்து கொள்ளல்.
7. தாங்கள் வாங்கிய எல்லாப் பொருள்களுக்கும் பணம் செலுத்துதல்.
8. துப்புரவாக இருத்தல், மக்கள் வசிக்கும் இல்லங்களுக்கு வெகுதொலைவில் கழிப்பிடங்களை அமைத்தல்.

**உள்நாட்டுப் போர் 1945 – 49**

ஜப்பான் சரணடைந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து மீண்டும் பொதுவுடைமையினருக்கும் கோமின்டாங்கினருக்கும் பொறாமை போட்டி ஏற்பட்டது. மீண்டும் சீனாவில் உள்நாட்டுப் போர் குடிகொண்டது. அதில் மாவோ பிரமிக்கத்தக்க வெற்றியினைப் பெற்றார். கோமின்டாங்கினார் தோல்வி கண்டனர். அவர்கள் சீனாவை விட்டு விரட்டப்பட்டனர். 1949-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் சீனமக்கள் குடியரசு ஏற்படுத்தப்பட்டது.

**புதிய மக்களாட்சி**

**மாவோவின் கொள்கைகள்**

தொடர்ச்சியான போராட்டங்களுக்கிடையில் 1940-ஆம் ஆண்டின் பேராசிரியர் சென் என்பவரின் கருத்துக்களிலிருந்து எடுக்கப்பட்ட ‘புதிய மக்களாட்சி’ என்னும் தலைப்பில் ஒரு புத்தகத்தை வெளியிட்டுத் தம்முடைய கோட்பாடுகளை விளக்கினார். சுமார் எண்பது பக்க அளவில் வெளியிடப்பட்ட அந்நூல் சீனாவின் புதிய அரசியல் கோட்பாட்டுச சித்தாந்தமாக விளங்கியதென்றால் மிகையாகாது. சமதர்மக் கோட்பாடுகளின் அடிப்படையில் சீனா பொருளாதாரத் தன்னிறைவு பெறவில்லை என்ற கருத்து அதன் மூலம் விளக்கப்பட்டது. சமுதாய மாற்றம், பொருளாதார மேம்பாடு ஆகியவற்றுக்கு விவசாயிகளின் ஒருங்கிணைப்பு அவசியமென உணர்த்தப்பட்டது.

நாட்டுடமை,கூட்டுறவு, தனிநபர் சொத்துரிமை போன்றவற்றை உள்ளடக்கிய கலப்புப் பொருளாதாரமே சீனாவின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமையுமென அவர் விளக்கினார்.

இவ்வாறு மாஸேதுங்கின் புதிய மக்களாட்சிக் கோட்பாடுகளால் சீனப் பொதுவுடமைக் கட்சிக்குப் பொதுமக்களின் ஆதரவு வெகுவாகக் கிட்டியது. உழைக்கும் வர்க்கத்தினருக்கு முக்கியவத்துவம் வழங்கிய இப்புதிய மக்களாட்சிக் கோட்பாடு பெரும்பான்மையினருக்கு அரசியலில் பங்கேற்க வாய்ப்பளித்ததெனலாம். உழைக்கும் வர்க்கத்தினர் பிறரால் சுரண்டப்டுவதினின்றும் தடுக்கப்படக்கூடிய வாய்ப்பினை அம்மக்களாட்சி வழங்கியது.

**சீனமக்கள் குடியரசு உருவாக்கப்படல்**

1945 ஆகஸ்டு 14-ல் ஜப்பான் இரண்டாவது உலகப்போரில் தோல்வியுற்று சரணடைந்த பின்னர் மீண்டும் சீனாவில் பொதுவுடைமையாளர்களும், தேசியவாதிகளும் ஆதிக்கப் போட்டிகளில் ஈடுபடலானார்கள். ஆரம்பத்தில் பல வெற்றிகளைப் பெற்ற தேசியவாதிகள் படிப்படியாகத் தோல்வியினை தழுவலானார்கள். மாவோவின் மக்களாட்சிக் கோட்பாடுகளால் மக்கள் ஈர்க்கப்பட்டார்கள். பண்பாட்டு மாற்றங்களுடன் செல்வந்தரின் ஆதிக்க ஒடுக்கமும், சீனாவில் மாறுதல்களைத் தோற்றுவித்தன. செஞ்சேனையின் பெயர் ‘மக்கள் விடுதலைப்படை’ என்று மாற்றப்பட்டது.

சியாங்கே ஷேக் தலைமையில் இயங்கிய தேசிய அரசு பார்மோசாவிற்கு மாற்றப்பட்டது. அமெரிக்கா அவர்களை ஆதரித்தது. ஆயினும் பொதுவுடைமைக் கட்சியினர் ‘சுங்-ஹுவா-ஜென் மின் குங் ஹோஹிவா’ என்ற

சீன மக்கள் குடியரசு (People’s Republic of China) என்னும் புது அரசினை உருவாக்கினார்.

**மாவோவின் நிர்வாகம்**

**புதிய அரசியலமைப்பு**

சீன மக்கள் குடியரசு உருவாக்கிய அரசியலமைப்பானது பொதுஉடமைச் சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. சீன மக்கள் மத்திய அரசின் அடிப்படைச் சட்டங்கள், சீன மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டுச் சட்டங்கள், சீன மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டுச் சட்டங்கள், அச்சட்டங்களின் அடிப்படையிலான பொதுத் திட்டங்கள் ஆகியவற்றை அவ்வரசியலமைப்பு உள்ளடக்கியிருந்தது. 1954-ஆம் ஆண்டு செப்டம்பர் 21-ஆம் நாள் புதிய அரசியலமைப்பு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

ஒருமுகப்படுத்தப்பட்ட ஒழுங்கமைப்புடன் வலிமையுடைய தாக்கப்பட்ட பொதுவுடமைக் கட்சியானது அரசின் அனைத்து அங்கங்களையும் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. ஒரு முக்கிய ஆயுதங்களான பத்திரிக்கைகள், வானொலி மற்றும் திரைப்படம் ஆகியன கட்சிக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டன. படைத்துறை ஒழுங்குபடுத்தப்பட்டதுடன், கல்வித்துறையும் சீராக்கப் பட்டது. அவை அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. முழுமை பெற்ற மக்களாட்சியாக செயல்பட வேண்டுமென்ற நோக்குடன் மக்களனைவரும் அரசியலில் பங்கேற்க வகை செய்யப்பட்டது. குறிப்பாகப் பொதுமக்களுக்குத் தல ஆட்சி முறையில் அதிக வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

**விவசாயம்**

பொருளாதாரத்தின் அடிப்படைக் கூறாக விளங்கிய விவசாய முன்னேற்றத்தில் புதிய அரசு ஆழ்ந்த கவனம் செலுத்தியது. உணவுத் துறையில் தன்னிறைவு பெறச் செய்வதே விவசாயப் பெருக்கத்திற்கான அடிப்படையாகக் கருதப்பட்டது. துண்டாடப்பட்டுக் கிடந்த நிலங்கள் இணைக்கப்பட்டுக் கூட்டுறவு விவசாயமுறை அரசினால் அங்கீகரிக்கப்பட்டது. உற்பத்தியாளர் கூட்டுறவுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. மூன்று கட்டங்களாக விவசாயத் துறையில் மாற்றங்கள் ஏற்படுத்த வழிகள் மேற்கொள்ளப்பட்டன. முதல் பகுதியில் விவசாயத் துறையில் மாற்றங்கள் ஏற்படுத்த வழிகள் மேற்கொள்ளப்பட்டன. முதல் பகுதியில் விவசாயத் தொழிலாளர்கள், இரண்டாம் பகுதியில் உற்பத்தியாளர்கள், மூன்றாம் பகுதியில் அனைத்து விவசாயப் பணிகளையும் அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருதல் என்ற அடிப்படையில் செயல்முறைகள் மேற்கொள்ளப்பட்டன.

**ஆட்சிப்பிரிவுகள்**

கலப்புப் பொருளாதார ஏற்பாட்டிற்குப்பின் சமுதாய அடிப்படையினை பொதுவுடமையாளர்கள் 1958-ல் மாற்றியமைத்தனர். அதன்படி சீனா சிறுசிறு அரசியல் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டு மக்களுக்குத் தல ஆட்சியில் வாய்ப்பளிக்கப்பட்டது. சீனா 24000 கம்யீன்களாகப் பிரிக்கப்பட்டது. அவை குடும்பங்கள் பலவற்றை உள்ளடக்கியவைகளாக அமைக்கப்பட்டன. ஒவ்வொரு கம்யூனிலும் 1000 முதல் 10,000 குடும்பங்கள் இருந்தன. அவை உற்பத்தி, பகிர்வு மற்றும் ஆட்சிப்பணி ஆகியவற்றைக் கொண்டு செயல்படுமாறு அமைக்கப்பட்டன. இவ்வமைப்பு பொதுவுடமைக் கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவமாகிய அனைவருக்கும் அனைத்தும் என்பதை உள்ளடக்கியது.

**பண்பாட்டுப் புரட்சி**

சீனாவின் வளர்ச்சியை நிலையுடையதாகச் செய்யும் பொருட்டு மாசேதுங் 'பண்பாட்டுப் புரட்சி' (Cultural Revolution)யை உருவாக்கினார். போராட்டங்கள் வாயிலாக எண்ணங்கள், பண்பாடு மற்றும் வழக்காறுகள் ஆகியன தோற்றுவிக்கப்படும். ஒரு சமுதாயம் பின்னோக்கிச் சென்று பழைய நிலையான வளர்ச்சியற்ற நிலைக்குச் செல்லாமல் தடுக்கப்பட வேண்டுமானால் அது தொடர்ச்சியான போராட்டங்களால் மட்டுமே இயலுமென மாசேதுங் கருதினார். எனவே தமது சிந்தனைகளுக்கு உயிரூட்டக் கூடிய வகையில் பழமையான எண்ணங்கள், பண்பாடு, கருத்துக்கள், வழக்கங்கள், வழக்காறுகள் ஆகியவற்றுக்கெதிரான ஒரு போராட்டமாக மாசேதுங் கலாச்சாரப் புரட்சிக்கு வித்திட்டார். அதன் மூலம் தம்முடைய எண்ணங்களை நடைமுறைக்குக் கொண்டு வரவும் முற்பட்டார்.

அவ்வாறு செய்தால் சந்தர்ப்பவாதிகள், குழப்பங்கள் மூலம் அரசியலில் திருப்பங்களை உண்டாக்க முனைவோர் ஆகியோரை அரசியல் பதவிகளிலிருந்து நீக்கிவிடாலாமென அவர் கருதினார். இந்த அடிப்படையில் 1966-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் எட்டாம் நாள் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் மத்தியக்குழு 'பொதுமக்களை நம்புங்கள், அவர்களது முயற்சிகளுக்கு மதிப்பளித்து அவர்களைச் சார்ந்திருங்கள், அச்சத்தை தவிருங்கள், குழப்பங்களைக் கண்டு அச்சமடையாதிருங்கள் என அறிவித்தது. பதவிப் போராட்டத்தின் சக்தியாக எரிமலையெனக் குமுறும் மாணவர் உலகம் ஏவிவிடப்பட்டது.

**மதிப்பீடு**

தம்முடைய சொந்த முயற்சி காரணமாகச் சீனாவின் முன்னணித் தலைவரான மாவோவின் பதவி காலத்தில் எந்த ஒரு பேரரசரும் கூடப்

பெற்றிராத அளவிற்கு வரம்பற்ற அதிகாரங்களைப் பெற்றிருந்தார். அவருடைய அரசியல் சித்தாந்தங்கள், வலிமை மிக்க கோட்பாடுகள், திடமான திட்டங்கள் மூலமாகச் சீனாவில் கட்டுப்பாடு மிக்க ஆட்சியொன்றினை ஒரு நூற்றாண்டு காலத்திற்குப்பின் மாசேதுங் உருவாக்கினார். சிறப்பான படையமைப்புடன் கட்டுப்பாடுடைய நவீன சீனாவின் தோற்றத்திற்கு அவரே காரணமென்றால் அது மிகையன்று. அவரது அறிவியல் கோட்பாடுகள் அடிப்படையில் எழுந்த தத்துவங்கள் சீனாவிற்குச் சிறப்புகளையூட்டின எனக் கூறுதலும் பொருத்தமே.

**பண்பாட்டுப் புரட்சி**

சீனாவில் தோன்றிய பாட்டாளி மக்களின் மாபெரும் பண்பாட்டுப் புரட்சி பெரியதொரு சமூக, அரசியல், கலாச்சார மாறுதலாகக் கருதப்படுகிறது. 1963-ல் எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகியோரைக் குறை கூறியதன் மூலம் ஏற்பட்ட சிறு பொறி விரைவில் பெரும் தீயாக மாறி எஞ்சியிருந்த முதலாளித்துவ சமூகப் பண்பாடுகளை எரித்து சாம்பலாக்கி சீனாவை மாவோ சிந்தனை மலர்ப்பூங்காவாக மாற்றியது. 1949-ல் ஏற்பட்ட அரசியல் புரட்சியைத் தொடர்ந்து 1963-ல் சமூகப்புரட்சி ஏற்பட்டு அரசியல் மாற்றங்கள் சமுதாய மாற்றங்களுக்கு வழி வகுத்தது. அதாவது அரசியலில் மாற்றங்கள் சமுதாய மாற்றங்களுக்கு வழி வகுத்தது. அதாவது அரசியலில் ஏற்படுத்தப்பட்ட சோஷலிச சமுதாயத்தின் அடித்தளத்திலும் ஊடுருவி அங்குள்ள பூர்ஷுவா பழக்க வழக்கங்களையும் சிந்தனைகளையும் அடியோடு ஒழிப்பதை நோக்கமாக கொண்டிருப்பதாகப் பறை சாற்றப்பட்டது. அதே சமயத்தில் மாவோவின் அரசியல் எதிரிகளை ஒழித்துக் கட்டுவதையும் மாவோவின் கோட்பாடுகளை நிலை நாட்டுவதையும் உண்மை நோக்கங்களாகக் கொண்டிருந்தது.

## பண்பாட்டுப் புரட்சி தோன்றிய சூழ்நிலைகள்

1. **'பெரும் முன்னோக்கிக் தாவல் மற்றும் கம்யுன்' இயக்கங்களின் தோல்வி**

போதிய விளம்பரங்களுடன் தொடங்கப்பட்ட பெரும் முன்னோக்கித் தாவல் (Great Leap Forward) இயக்கம் தோல்வியில் முடிந்தது. அதன் குறி இலக்குகள் எட்டாக் கனியாகவே இருந்தன. உறுதியான நம்பிக்கையுடனும் உயரிய இலட்சியத்துடனும் தொடங்கப்பட்ட கம்யூன்கள் உருப்படியான பலன்களைத் தரவில்லை. துரிதமாக சோஷியலிச இலட்சியத்தை அடைந்து விடலாம் என்ற துடிப்புடன் போடப்பட்ட குறுக்கு வழிகள் குழப்பத்தில் முடிவுற்று, ஏமாற்றங்களும் அவநம்பிக்கைகளுமே மிஞ்சின. அதனால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளையும், அரசியல் அதிருப்திகளையும் மறைப்பதற்கும் மறக்கடிப்பதற்கும் புதியதொரு 'கோஷம்' தேவைப்பட்டது.

2. **மாவோவின் கொள்கைகளிலும், தலைமையிலும் ஏற்பட்ட ஏமாற்றம்**

இந்த குழப்ப சூழ்நிலைகளைக் கண்ட சில உயர்மட்டத் தலைவர்கள் மாவோவின் கோட்பாடுகளைக் குறை கூற ஆரம்பித்தனர். 'கொரில்லாப் போர் மனப்பான்மையுடன் நாட்டை நடத்திச் செல்கிறார், நடைமுறைக் கொவ்வாத காலத்திற்கேற்காத கோட்பாடுகளைச் செயல்படுத்துகிறார்' எனக் கண்டனர். நாட்டை சோஷலிசப்பூங்காவாக மாற்ற அவர் கடைப்பிடித்த விரைவான குறுக்கு வழி நடவடிக்கைகள் 'டான்குயிக் ஷாட்' செயல்களைப் போல் நகைப்பூட்டுவதாக இருப்பதாகக் கருதினர். ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஒரு சிலர் மறைமுக மாவோ எதிர்ப்புக் கொள்கைகளைக் கொண்டிருந்தனர்.

### 3. ரஷ்யஸ்டாலின் ஒழிப்புக் கொள்கையின் எதிரொலி

1965-ல் அகில உலக கம்யூனிஸ்ட் தலைமைக் கேந்திரமான மாஸ்கோவில குருஷேவ் ஸ்டாலின் ஒழிப்புக் கொள்கையை பிரகடனப் படுத்தினார். தனி நபர் வழிபாடு மற்றும் தவறான கோட்பாடுகள் கண்டிக்கப்பட்டன. கூட்டுத் தலைமை வலியுறுத்தப்பட்டது. இது சீனாவிலும் எதிரொலிக்கத் தொடங்கியது. ரஷ்ய நடவடிக்கைகளுக்கேற்ப சீன கம்யூனிஸ்ட் கட்சி சீரமைக்கப்பட்டது. மாவோ வழிபாடு கைவிடப்பட்டது. இப்புதிய மாற்றங்கள் மாவோ ஆதரவாளர் முகாமில் சலசலப்புகளை உண்டு பண்ணின.

### 4. சீன, ரஷ்யப் பிளவு

இதற்கிடையில் சீன ரஷ்யத் தலைவர்களிடைய ஏற்பட்ட கோட்பாட்டுப்பிளவு சீனாவைப் பெரிதும் பாதித்தது. கம்யூனிஸ்ட் உலகில் மாஸ்கோவின் தலைமை அதிகாரத்தைத் தொடங்கினார். ரஷ்யத் தலைவர்களை நவீன திரிபுவாதிகள் எனக் குறை கூறினார். மார்க்ஸிய கம்யூனிஸத்திற்கு சரியான விளக்கம் கூறத் தகுதியற்றவர்கள் எனச் சாடினார். இக்கோட்பாட்டுக் குளறுபடியைத் தொடர்ந்து ரஷ்யா தான் சீனாவிற்கு அளித்து வந்த பொருளியல், தொழில்நுட்ப உதவிகளை திரும்ப பெற்றுக் கொண்டதும், எல்லைத் தகராறும் மோதல்கள் நிகழ்ந்ததும் இரு நாடுகளுக்கிடையில் நிலவிய சுமூக உறவைக் கெடுத்தது.

### 5. முதலாளித்துவ சாலையில் செல்பவர்களின் தோன்றல்

கூட்டுத்தலைமை என்ற கோட்பாட்டின்படி சீரமைக்கப்பட்ட சீன கம்யூனிஸ்ட் கட்சிப் பொறுப்பில் புதியவர்கள் அமர்ந்திருந்தனர். குடியரசுத் தலைவரான லியூஷாவோ-சி கட்சியின் செயலாளரான டெங்ஷியோபிங் ஆகியோர் மாவோவின்

கோட்பாடு சீனாவின் நலனுக்கு உகந்தது அல்ல என்று உறுதியாகக் கருதினர். தீவிர கம்யூனிஸப் பாதையிலிருந்து அல்ல என்று உறுதியாகக் கருதினர். தீவிர கம்யூனிஸ பாதையிலிருந்து சற்று நெகிழ்ந்து கொடுக்கும் தாராளக் கோட்பாடு வழியில் செல்ல முயன்றார். இவர்களைத் தான் பின்னர் மாவோவின் ஆதரவாளர்களின் ‘முதலாளித்துவ சாலையில் செல்பவர்கள்’ என வர்ணித்தனர்.

### 6. கலை, இலக்கிய வட்டத்தில் வலதுசாரி கருத்துக்களின் மறுமலர்ச்சி

கலைஞர்கள் மீண்டும் பழைய சமூக அரசியல் கருப்பொருட்களின் அடிப்படையில் புதிய படைப்புகளைப் படைக்கத் தலைப்பட்டனர். பண்டைய வரலாற்றுச் சிறப்புகள் போற்றப்பட்டன. பண்டைய உயர்பண்புகளான மனிதவியல் உணர்ச்சிகள், நற்பணிபுரியும் அரசு ஆகியவை சிறப்பிக்கப்பட்டன.கன்பூசியஸ் கருத்தரங்குகள் பெறலாயின. இவையனைத்தும் மாவோவின் ஆதரவாளர்களுக்கு பண்டையப் பண்பாட்டுச் சிறப்புகளை மீண்டும் நிலைநாட்ட செய்யப்படும் திட்டமிட்ட முயற்சிகளாகத் தோன்றின. எனவே கம்யூனிஸ்ட் உணர்வுகளை சமுதாயத்திலும் புதிப்பிக்க புரட்சி தேவை எனவும் உணர்ந்தனர்.

### பண்பாட்டுப் புரட்சியின் தொடக்கம்

‘விடுதலைப்படை (Liberation Army) என்ற நாளிதழ் புரட்சியின் முதல் வெடியை வெடித்தது. 1965 நவம்பர் இதழில் பீகிங் கல்கலைக் கழகப் பேராசிரியர்களின் முதலாளித்து சார்பான இலக்கியப் படைப்புகளைக் கண்டித்து கட்டுரை வெளியிடப்பட்டது. இக்கண்டனத்தைத் தொடர்ந்து ‘முதலாளித்துவ சாலைகளில் செல்பவர்களை’ எதிர்த்து போர்க்குரல் எழுப்பப்பட்டது. 1966 ஜூனில் ஷாங்கை நகரத்துச் சுவர்களையும் தாக்கி சுவரொட்டிகள் காணப்பட்டன. ஆகஸ்டில் கட்சியின் எட்டாவது குழுவின் பதினோராவது கூட்டத்தில் பண்பாட்டு

ரீதியில் புரட்சி தேவை என தீர்மானம் இயற்றப்பட்டது. இத்தீர்மானம் அப்புரட்சிக்கு பதினாறு அம்சத் திட்டமொன்றையும் வரைந்தது முதலாளித்துவ சாலையில் செல்வோரையும் கண்டித்தது. இவ்வாறு பண்பாட்டுப் புரட்சிக்கு பச்சைக்கொடி காட்டப்பட்டது.

**புரட்சியின் போக்கு**

**1. 'நான்கு பழமைகள்' ஒழிக்கப்படல்**

முதலாளித்துவ சமூக அமைப்பில் உள்ள பழைய பழக்கவழக்கங்கள், செயல்முறைகள், கலாச்சாரங்கள், எண்ணங்கள் ஆகியவை ஒழிக்கப்பட வேண்டும். புதிய புரட்சிகரமான சமுதாயத்திற்கே எண்ணங்களும் புகுத்தப்பட வேண்டும்.

**2. கட்சியில் களையெடுப்பு**

பண்பாட்டுப் புரட்சியின் முதல் பணியாக அப்புரட்சிக் கோட்பாடுகளை எதிர்த்த கட்சிப் பிரமுகர்கள், தலைவர்கள், இலக்கிய கர்த்தாக்கள் கண்டனம் செய்யப்பட்டு கட்சியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டனர். குறிப்பாக மாவோவின் அரசியல் எதிரிகள் களையெடுக்கப்பட்டனர். அவர்களுள் முக்கியமானவர்கள் சீனக்குடியாட்சித் தலைவர் யூஷாவோசி, கட்சிச் செயலாளர் டெங்ஷியோ-பிங், டெங்ஷியோ-பிங், பீகிங் நகர மேயர் பென்சென் ஆகியோராவர்.

**3. பண்பாட்டு புரட்சிக் குழுக்கள் நிறுவப்படல்**

1966 நவம்பரில் பதினேழு உறுப்பினர்கள் அடங்கிய மத்திய பண்பாட்டு புரட்சிக்குழு நிறுவப்பட்டது. அதற்குத் தலைவராக மாவோவின் தனிச் செயலாளரான சென் போட்டாவும் முதுல் உதவித்தலைவராக மாவோவின் மனைவி சியாங் சிங்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இக்குழுவின் பியாவோ தலைமையில் உள்ள ராணுவக்குழுவுடன் இணைந்து செயல்பட்டது.

இவர்களனைவரும் மாவோவின் தலைமையின் கீழ் அவரது வழிகாட்டலின்படி இயங்கினர்.

4. **சுவரொட்டிகள்**

பண்பாட்டுப் புரட்சிக் காலத்தில் மக்களின் எண்ணங்களுக்கு ஒரு வடிவம் கொடுத்து பொதுமக்கள் கருத்தினைப் பிரதிபலிக்கும் வண்ணம் பெரிய சுவரொட்டிகள் முக்கிய நகரங்களில் ஒட்டப்பபடடன. அவற்றில் புரட்சிவாசகங்கள் காணப்பட்டன. முதலாளித்துவ சாலையில் செல்பவர்கள் அடையாளம் காட்டப்பட்டனர். முதல் சுவரொட்டி பீகிங் பல்கலைக் கழக முதல்வரைக் குறை கூறும் வண்ணம் அமைந்திருந்தது. மாவோ இதன் வாசகங்களைப் புகழ்ந்ததோடு அவற்றைச் செய்தித்தாட்களில் பிரசுரிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். பின்னர் மாவோ தலைமையகத்தைத் தாக்குங்கள் எனத் தலைப்பிட்ட சுவரொட்டியைத் தயாரித்தார். இத்தகைய சுவரொட்டிகள் மக்களிடையே தீவிர உணர்ச்சிகளைக் கிளறியதோடு எளிய செய்திப் பரப்புக் கருவியாகவும் விளங்கின.

5. **செங்காவலர்கள்**

பண்பாட்டுப் புரட்சி இயக்கத்தின் ஈட்டி முனைகளாக விளங்கியவர்கள் செங்காவலர்கள் ஆவர். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்களில் புரட்சி ஆர்வம் கொண்டவர்கள் செங்காவலர் அணியில் சேர்ந்தனர். 'நான்கு பழமைகளை' ஒழிப்பதில் தீவிரமாக ஈடுபட்டனர். சிறிய செந்நிறப் புத்தகமான 'மாவோ சிந்தனைகள்' இவர்களது வேத நூலாக விளங்கியது. ரயில்களிலும் பேருந்துகளிலும் இவர்கள் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். நாடெங்கும் சென்று சமுதாயத்தில் உள்ள பழைய முதலாளித்துவப் பண்புகளை அகற்றினர். பழமைப் பற்றினைச் சாடினர்,

பெரிய சுவரொட்டி வாசகங்களைத் தயாரித்தனர். தனியார் அலுவலகங்களைத் தாக்கினர், நகரங்களுக்கும், தெருக்களுக்கும் கூட புதிய பெயர்களைச் சூட்டினர். அயல்நாட்டுப் பழக்கவழக்கங்கள், உடைகள் கண்டிக்கப்பட்டன.

**6. மக்கள் விடுதலைப் படை**

பண்பாட்டுப் புரட்சியின் உயிர் நாடியாகச் செங்காவலர்கள் விளங்கினார்கள் என்றால் மக்கள் விடுதலைப்படை அதன் உறுதுணை காவலாக நின்றது. லின் பியாவோ தலைமையில் உருவான அப்படைக்கு தனிச் சீருடையோ, முகாமோ கிடையாது. மக்களோடு மக்களாகக் கலந்து நின்ற இப்படை விவசாயப் பண்ணைகள் அமைத்தனர். ஆலைகளை நடத்தினர். பண்பாட்டுப் புரட்சிக் புரட்சிக் கருத்துக்களைப் பரப்புவதைக் கடமையாகக் கொண்ட அப்படை அப்படை வீரர்கள் மாவோவின் தலைமையையும், கோட்பாட்டையும் ஏற்றுக் ஏற்றுக் கொண்டனர்.

**7. அதிகாரத்தைக் கைப்பற்றுதல்**

எல்லா நிறுவனங்களிலுமுள்ள பிற்போக்காளர்களை விரட்டி அவர்களின் அதிகாரத்தைக் கைப்பற்றி அதில் மாவோவின் ஆதரவாளர்களை அமர்த்துதல் புரட்சியின் இறுதிக்கட்டமாக நடைபெற்றது. 1968 செப்டம்பருக்குள் மாவோ ஆதரவாளர்கள் 29 மாநிலங்கள், பிராந்தியர்கள் நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றனர். அங்கெல்லாம் அவற்றை நிர்வகிக்க புரட்சிக் குழுக்கள் நிறுவப்பட்டன.

**பண்பாட்டுப் புரட்சியின் முடிவு**

1969 ஏப்ரலில் கட்சியின் ஒன்பதாவது மாநாடு கூட்டப்பட்டது. அது மாசேதுங்கை கட்சியின் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தது. லின்

பியாவோ துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மாவோவின் சிந்தனைகள் கட்சியின் கோட்பாடுகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

**பண்பாட்டுப் புரட்சியின் முக்கியத்துவம்**

1. கலாச்சாரப் புரட்சியாகத் தோன்றிய இந்நிகழ்ச்சி களையெடுப்புப் புரட்சியாக மாறி, செங்காவலர்களின் பெயர் மாற்றப் போராட்டமாக நீண்டு இறுதியில் அரசியல் ஆதிக்கப் போராட்டமாக முடிவுற்றது. மாவோவின் தலைமை ஆதிக்கத்தை எதிர்த்த அனைவரும் ஒழித்துக்கட்டப்பட்டனர். மாவோவின் ஆதிக்கம் உறுதியாக நிரந்தரமாக நிலைநாட்டப்பட்டது.
2. இப்புரட்சி சீனக் கம்யூனிஸத்தின் தனித்தன்மையைப் பறைசாற்றியது. கம்யூனிஸக் கோட்பாடுகளுக்கு விளக்கமளிக்கும் ஏக போக உரிமையை மாஸ்கோவிடமிருந்து பறித்தது. ரஷ்யப் பாணியிலான கம்யூனிஸ்ட் தலைமையும் கொள்கையும் சீனாவில் நுழையாதவாறு செய்துவிட்டது.
3. பொதுமக்களின் அரசியல் ஆர்வத்தை அதிகரித்து இளைஞர்களும் புரட்சி அனுபவம் பெற ஒரு வாய்ப்பளித்தது. புரட்சி சமுதாயத்தின் தகுதி வாய்ந்த வாரிசுகளாக மாறவும் சந்தர்ப்பம் அளித்தது.
4. 'மாவோ' வெறும் தலைவராக மட்டுமின்றி நவீன சீனாவின் தெய்வமாகவும் உயர்த்தப்பட்டார். மாவோ வழிபாடு ஊக்குவிக்கப்பட்டது. மாவோவின் சிந்தனைகள் அடங்கிய 'சிறிய செந்நிறநூல் சீனர்களின் பைபிளாக மாறியது.

**சீனாவின் வெளிநாட்டுக் கொள்கை**

சீனாவில் 1949-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாள் பொதுவுடைமைக் கட்சி ஆட்சிப் பொறுப்பினை ஏற்றது. சமத்துவக் கோட்பாடு, பரஸ்பர உதவிகள், நிலவுடைமை மற்றும் இறைமை ஆகியவற்றுக்கு மதிப்பளித்தலே

தம்முடைய நோக்கமென தமது அரசினை அங்கீகரிக்குமாறு உலக நாடுகளைச் சீனப் பொதுவுடைமை ஆட்சியின் எழுச்சி உலக நாடுகளிடையே ஒரு விழிப்புணர்வைத் தோற்றுவித்தது.

**சீனாவும் சோவியத் ரஷ்யாவும்**

சீன அரசின் வேண்டுகோளுக்குச் செவிமடுத்து 1949-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ஆம் நாள் ரஷ்யா சீனப் பொதுவுடைமை அரசை அங்கீகரித்தது. அதனைத் தொடர்ந்து 1950ஆம் ஆண்டு பிப்ரவரியில் சீன-ரஷ்ய நட்புறவு மற்றும் பரஸ்பர உதவி உடன்பாடு' ஒன்றை அவ்விரு நாடுகளும் செய்து கொண்டன. முப்பது ஆண்டுகட்குச் செல்லுபடியாகுமென அறிவிக்கப்பட்ட அவ்வுடன்பாட்டின்படி சீன மக்கள் குடியரசுக்குத் தம்மால் இயன்ற உதவிகளையெல்லாம் செய்ய ரஷ்யா முன் வந்தது.

சீனாவில் தாம் கொண்டிருந்த நிலவுடமைகள், இருப்புப்பாதை உரிமை ஆகியவற்றையெல்லாம் ரஷ்யா விட்டுக் கொடுத்தது, போர்ட் ஆர்தர், டேரியன் பகுதி ஆகிய இடங்களிலிருந்த தனது படைகளையெல்லாம் ரஷ்யா திரும்ப அழைத்துக் கொண்டது. பொதுவுடைமைச் சீனாவின் பொருளாதார வளர்ச்சிக்கும், ரஷ்யா உதவ முன்வந்தது. சீனப் பொதுவுடைமைச் சமுதாய வளர்ச்சிக்குத் துணை நின்ற ரஷ்யா 'ஐக்கிய நாட்டு அவை'யிலும் மக்கள் சீனாவின் நலன்களுக்காகப் போராடியது. இவ்வாறு 1950 முதல் 1955 வரை ரஷ்ய சீன உறவு நட்புறவு அடிப்படையில் வலிமைமிக்கதாக அமைந்திருந்தது.

1955-ஆம் ஆண்டிற்குப் பின் சீன-ரஷ்ய உறவில் பிளவுகள் தென்படலாயின. ரஷ்யாவில் 1953-ல் ஸ்டாலின் மரணத்திற்குப் பின் ஏற்பட்ட பதவிப் போட்டியில் குருஷேவ் வெற்றி பெற்றார்.

சீனாவின் மீது இணக்கக் கோட்பாட்டைப் பின்பற்ற விரும்பிய குருஷ்ஷேவ் பொதுவுடமைக் கட்சியின் முக்கிய தூணாகத் திகழ ஆரம்பித்தார். 1956 பிப்ரவரி மாதம் நடைபெற்ற ரஷ்யப் பொதுவுடமைக் கட்சியின் 20-ஆவது மாநாட்டில் குருஷ்ஷேவ் மாசேதுங்கின் கொள்கைகளைக் கடுமையாகச் சாடினார். மாசேதுங்கின் மார்க்ஸீயக் கோட்பாடுகள் குருஷேவின் மார்க்ஸீயச் சித்தாந்தங்களுக்கு மாறுபட்டனவாயிருந்தமையால் பிளவுகள் ஏற்படவே வாய்ப்புகள் அதிகமிருந்தன.

இந்நிலையில் 1956-க்கு பின் சீனா, கிழக்கு ஐரோப்பியப் பொதுவுடைமை நாடுகளின் அரசியலில் தீவிரமாக ஈடுபட வேண்டியதாயிருந்தது, அவ்வமயம் வார்சா, புடாபெஸ்ட், மாஸ்கோ ஆகிய தலைநகர்களுக்கெல்லாம் விஜயம் செய்த சீனப் பிரதமர் சௌ யென் லாய், சமதர்மம் மற்றும் பொதுவுடமைக் கோட்பாடுகளைப் பின்பற்றக்கூடிய நாடுகள் சமத்துவ நோக்கோடு செயல்பட வேண்டுமென வலியுறுத்தினார். சீனா, ரஷ்யா ஆகிய இரு நாடுகளின் தலைவர்கள் சமத்துவக் கோட்பாட்டிற்கு ஆதரவு அளித்த போதிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் தாம் கொண்டிருந்த அரசியல் கருத்து வேறுபாடுகள் காரணமாகக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் விவகாரங்களில் சீனா தலையிடுவதை ரஷ்யா விரும்பவில்லை.

இதற்கிடையில் 1959 மார்ச்சில் திபெத்தில் நடைபெற்ற சீன எதிர்ப்புச் கிளர்ச்சி கடுமையாக ஒடுக்கப்பட்டது. தலாய்லாமா இந்தியாவில் தஞ்சமடைந்தார். சீனா இந்தியாவைக் கடுமையாகத் தாக்கிப் பேசியதுடன் ஆதிக்கக் கோட்பாட்டினா் எனக் குற்றம் சாட்டியது. இதனைக் கண்ணுற்ற குருஷேவ் 1959ல் செய்து கொண்டிருந்த உடன்படிக்கைகளை ரத்து செய்தார். தொடர்ந்து அமெரிக்க ரஷ்ய உறவுகளைச் சீனா கண்டித்ததால் குருஷேவ்

சீனாவிலிருந்த ரஷ்ய ஆலோசகர்களையெல்லாம் திரும்ப அழைத்துக் கொண்டார். சீனாவுக்கு ரஷ்யா வழங்கி வந்த பொருளாதார உதவிகள் நிறுத்தப்பட்டன. இவ்வாறு சீன-ரஷ்ய உறவுகள் சிறிதுகாலம் தடைப்பட்டிருந்தன.

1960-ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெற்ற பெரும் அக்டோபர் புரட்சியின் 43-ஆம் ஆண்டு விழாவின் போது சீன-ரஷ்ய நட்புறவு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. உள்நாட்டுப் பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாகச் சீனா, 1961 ஏப்ரல் ஏழாம் நாள் ரஷ்யாவுடன் வர்த்தக உடன்பாடு ஒன்றினைச் செய்து கொண்டது. ஆயினும் ரஷ்யா தாக்கிய போது சீனா ரஷ்யாவை வெறுப்புடன் நோக்கலாயிற்று.

தொடர்ந்து 1962 அக்டோபர் 20ஆம் நாள் சீனா இந்தியாவைத் தாக்கியபோதும், 1962 அக்டோபர் 22 முதல் 28 வரை ரஷ்யாவும் அமெரிக்காவும் தம்மை கியூபா பிரச்சனையில் ஈடுபடுத்திக் கொண்ட போதும் ரஷ்ய-சீன உறவுகள் சிதைந்தே காணப்பட்டன. ரஷ்யா சீனாவின் இந்தியப் படையெடுப்பினைக் கடுமையாக விமர்சித்துச் சாடியது.

கியூபாவிலிருந்து ரஷ்யா பின்வாங்கினமைக்காகச் சீனா ரஷ்யாவைக் குறை கூறியது. தொடர்ந்து 1963 ஜூலையில் ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் செய்து கொண்ட 'அணு பரிசோதனை தடை உடன்பாடு' (Nuclear Test Ban Treaty) தனைச் சீனா பரிசித்தது. இந்நிலையில் 1964 அக்டோபர் மாதம் 15-ஆம் நாள் ரஷ்யாவில் குருஷ்ஷேவ் பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் சீன-ரஷ்ய உறவு பலப்படுமெனக் கருதப்பட்டது. ஆனால் அது நடைபெறவில்லை. ரஷ்யா அமெரிக்காவுடனான உறவினை

மாற்றியமைத்துக் கொள்ள விரும்பாததால் சீன-ரஷ்ய உறவு சீரடைய வழியொன்றும் காணப்படவில்லை.

1965-ல் வியட்நாம் சிக்கல்களின் போது ரஷ்யாவின் விமானத் தாக்குதல்களுக்குத் தென்சீன விமான நிலையங்களைப் பயன்படுத்த ரஷ்யாவுக்குச் சீனா அனுமதியளிக்க மறுத்துவிட்டது. தொடர்ந்து 1966 மார்ச்சில் நடைபெற்ற ரஷ்யப் பொதுவுடமைக் கட்சியின் 23-ஆவது வருடாந்திரக் கூட்டத்தையும் சீனா நிராகரித்தது. 1969-ஆம் ஆண்டு மார்ச் 2-ஆம் நாள் ஊசூரி நதிப்பகுதியில் ரஷ்யாவும், சீனாவும் எல்லைத் தாவா பற்றி மோதிக்கொண்டன.

அரசியல் கோட்பாடுகளில் ஏற்பட்ட மாறுதல்களுடன் ரஷ்யாவின் அணு ஆயத வளர்ச்சி, போட்டியுணர்வு ஆகியவற்றால் வெறுப்புற்ற சீனா ரஷ்யாவை எதிரியாகவே கருதலாயிற்று. தன்னுடைய முதல் எதிரியான ரஷ்யாவைக் கட்டுப்படுத்த 1971 ஏப்ரலில் சீனா அமெரிக்காவின் கைப்பந்தாட்டக் குழுவினைச் சீனாவுக்கு அமெரிக்க அதிபர் நிக்ஸன் காலத்தில் வரவேற்றது. 'பிங் பாங் அரச தந்திரம்'(Ping Pong Diplomacy) மூலம் சீனா அமெரிக்காவின் ஆதரவைப் பெற்றதால் ரஷ்யாவில் உறவு மேலும் மோசமடையலாயிற்று. இன்றளவும் கொள்கைகள் அடிப்படையில் ரஷ்யாவும் சீனாவும் மாறுபட்ட எண்ணமுடையனவாகவே திகழ்கின்றன.

**சீனாவும் அமெரிக்காவும்**

1950-க்கும் 1970க்கும் இடைப்பட்ட இருபதாண்டுகளில் சீன-அமெரிக்க உறவுகள் சீரற்றே காணப்பட்டன. சீன ரஷ்ய உறவு காரணமாகவும், அமெரிக்காவானது ஜப்பான், பார்மோசா, தென்கொரியா ஆகிய பகுதிகளின் மீது கொண்டிருந்த எண்ணம் காரணமாகவும், சீன அமெரிக்க உறவுகள்

வலுப்பெறவில்லை. 3-வது உலக நாடுகளை ***(Third World Powers)*** அமெரிக்க ஆதிக்கத்திற்கு எதிராகச் சீனா திரட்ட முற்பட்ட போதும் சீனா-அமெரிக்கா பற்றிய தன்னுடைய கொள்கையை மாற்றிக் கொள்ள முற்பட்டது. 1971 ஏப்ரலில் அமெரிக்க கைப்பந்தாட்டக் குழு சீனாவிற்கு அழைக்கப்பட்டு பிங் பாங் அரச தந்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டது. 1971 அக்டோபரில் அமெரிக்கா தேசிய சீனாவுக்கு அது வரை வழங்கி வந்த தன்னுடைய ஆதரவினைத் திரும்ப் பெற்றுக் கொண்டு பொதுவுடமைச் சீனா ஐக்கிய நாட்டவையில் இடம் பெறச் செய்ய வகை செய்தது. 1972 பிப்ரவரியில் அமெரிக்க அதிபர் ஹெரால்டு நிக்ஸன் பீகிங்கிற்குச் சென்றபோது சீன அமெரிக்க நட்புறவு பலப்படலாயிற்று.

**சீனாவும் மூன்றாவது உலகநாடுகளும்**

ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்கா ஆகிய பகுதிகளில் உள்ள நாடுகளுடன் ஆதிக்கக் கோட்பாட்டிற்கெதிராகவும், குடியேற்றக் கோட்பாடுகளைத் தடை செய்யும் நோக்குடனும், சீனா நல்லுறவினை ஏற்படுத்திக் கொள்ள விழைந்தது. ஆதிக்கக் கோட்பாட்டாளர்களுடன் கைகோர்ந்து நிற்கும் நாடுகளுக்கெதிராக அணி திரளும்படி புதிதாக 20ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் விடுதலையுற்ற ஆசிய நாடுகளுக்குச் சீனத் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். 1949-ல் நடந்த 'ஆசிய வாணிபக் கழகங்கள்' மாநாட்டின் வளர்ச்சியுறா நாடுகள் சீனக் கோட்பாட்டுகளினடிப்படையில் பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபடுமாறு அம்மாநாட்டில் பங்கேற்க நாடுகளைக் கேட்டுக்கொண்டது.

1955-ல் பாண்டுங் மாநாட்டில் சீனப்பிரதமர் சௌயென் லாய் 29 நாடுகளின் தலைவர்களுடன் சேர்ந்து பஞ்சசீலக் கோட்பாடுகளை வெளியிட்டார். அதன் மூலம் நடுநிலை நாடுகளின் நட்பினைப் பெறக்கூடிய வாய்ப்பு சீனாவுக்குக்

கிட்டியது. எகிப்துக்கு எதிரான ஆங்கில, பிரெஞ்சு மற்றும் இஸ்ரேலியக் கருத்துக்களையும் சீனா எதிர்க்கலாயிற்று. அராபியர்களின் ஆதிக்க எதிர்ப்புக்கு ஆதரவளித்தது. ஆசியாவில் அமைதியை நிலைநாட்டும் நோக்குடன் இந்தோனேஷியாவுக்குத் துணை புரிந்தது. ஆனால் சீனாவின் இவ்வமைதி மற்றும் கூட்டுச்சேராக் கொள்கை வெகுகாலம் நீடிக்கவில்லை. பல நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களிலும், எல்லைச் சிக்கல்களிலும் சினா தலையிட்டு பாண்டுங் மாநாட்டின் முடிவுகளைக் காற்றில் பறக்கவிடலாயிற்று.

ரஷ்யாவுடன் பூசலுக்கு வழி கொண்ட சீனா படிப்படியாக அமெரிக்கா மற்றும் மூன்றாவது உலக நாடுகளுடனும் தன்னுடைய அமைதிக் கொள்கைகளை மாற்றிக்கொள்ளலாயிற்று. ரஷ்யா, அமெரிக்கா போன்ற வல்லரசுகளைத் தடைசெய்யும் நோக்குடன் மூன்றாம் ஆயுதமாகக் கொண்டு தம்முடைய தலைமையைத் தக்க வைத்துக் கொள்ள முயலுகின்றதெனக் கூறலாம்.

**சீனாவும் இந்தியாவும்**

ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் விழிப்புணர்வுக்கும், ஒருமைப்பாட்டிற்கும் ஒரு வழிகாட்டியென விளங்கும் இந்தியா சீனாவுடன் கொண்டிருந்த நல்லுறவு 1955-ஆம் ஆண்டில் நடைபெற்ற பாண்டுங் மாநாட்டிற்குப்பின் வெகு காலம் நீடிக்கவில்லை. 1956-ல் லடாக் என்னும் இந்தியப் பகுதி வழியாக சிக்கியாங்கிலிருந்து மேற்கு திபெத்திலுள்ள கார்டோக் வரை ஒரு நிரந்தரச் சாலையை சீனா அமைத்தது. 1959-ல் இந்திய எல்லையில் இருந்த லாங்ஜீ என்ற எல்லைக் காவல் நிலையத்தை சீனா தாக்கியது. லடாக்கில் ஒன்பது இந்திய எல்லைக் காவலர்களையும் சீனா கொன்றது. 1962 அக்டோபரில் சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் நேரடித் தாக்குதல்கள் நடைபெற்றன.

ஒரு மாத காலக் கடும் மோதல்களுக்குப் பின் சீனா போரை நிறுத்தியது. அதன் பின்னரும் தொடர்ந்து சீனா தனது இந்திய எதிர்ப்புப் பிரச்சாரங்களைச் செய்து வந்தது. 1963-64-ல் சீனப் பிரதமர் சௌ யென் லாய் இந்தியாவுடனான சீனத் தொடர்பு புதுப்பிக்கப்பட வேண்டுமென்றார். ஆனால் காஷ்மீரச் சிக்கலில் தலையிட்டும், 1965-ல் இந்தோ பாகிஸ்தான் போரில் பாகிஸ்தானை ஆதரித்தும் இந்தியாவின் மீது சீனாவின் எதிர்ப்பினைத் தெளிவாக்கினார்.

1967-ல் சீனா, நாதுலா மற்றும் ஷோலா ஆகிய இந்தியப் படைகளின் மீது படையெடுத்துத் தாக்கியது. ஆனால் பின்வாங்க நேரிட்டது. 1971-ல் பங்களாதேஷ் விடுதலைக்குப் பின் சீனா தன்னுடைய இந்தியா பற்றியக் கொள்கையை மாற்றிக் கொண்டுள்ளது. இந்தியா தன்னுடைய வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு ஏற்ப சீனாவுடன் ஆழ்ந்த யோசனையுடன் செயலாற்றி வருகின்றது. இந்திய-ரஷ்ய நட்புறவு சீனாவை பாகிஸ்தான் அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் நெருக்கமான செயல்படச் செய்துள்ளது.

**சீனாவும் ஐ.நா. சபையும்**

ஐ.நா. சபையின் தொடக்க காலந்தொட்டு தேசியச் சீனா ஐ.நா. சபையில் அங்கம் வகித்து வந்தது. 1949 நவம்பரில் சீனப் பிரதமர் சௌ யென் லாய் மக்கள் சீனாவே உண்மையாக சீன அரசினை உடையதென்றும் அதற்கு ஐ.நா சபையில் அங்கமளிக்க வேண்டும் எனவும் கூறினார். ஆனால் அது ஏற்கப்படாமல் சியாங்கின் கட்டுப்பாட்டில் பார்மோசாவில் இயங்கிய தேசிய சீனாவே ஐ. நா. சுபையில் உறுப்பு நாடாகக் கருதப்பட்டது.

1960-ல் அமெரிக்காகூட மக்கள் சீனா ஐ.நா. சபையில் அங்கம் வகிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தது. எனவே தான் அங்கம் வகிக்காத ஐ.நா. சபையைமக்கள் சீன அரசு பல வகைகளிலும் பரிகசித்தே வந்து. சீன-

ரஷ்ய உறவில் ஏற்பட்ட விரிசல் காரணமாக அமெரிக்கா சீனாவுடன் நெருக்கமான உறவு கொள்ள விழைந்த போது 1971 அக்டோபர் 25-ஆம் நாள் தேசிய சீனா ஐ.நா. சபையிலிருந்து தள்ளி வைக்கப்பட்டு மக்கள் சீனாவுக்கு அவ்விடம் வழங்கப்பட்டது.

அதனால் பாதுகாப்பு சபையில் மக்கள் சீனா நிரந்தர உறுப்பினராயிற்று. ரத்து அதிகார (Veto Power) உரிமையையும் அது பெற்றது. இன்று உலக அரங்கில் பிற வல்லரசுகளுடன் சமமாக வைத்து எண்ணத்தக்கதாகச் சீனா உயர்ந்ததுடன் ஐ.நா. சபையில் உண்மையிலேயே ஒரு சர்வதேச அமைப்பாகச் செயல்படத் தொடங்கியுள்ளதென்பதையும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.